அஷ்டப் பிரபந்தம் தெளிவுரையுடன் 2



வித்துவான் M.நாராயணவேலுப்பிள்ளை

அஷ்டப் பிரபந்தம்

இரண்டாம் பகுதி

முல்லை நிலையம்

அஷ்டப் பிரபந்தம்

(மூலமும் — தெளிவுரையும்)

தெளிவுரை ஆசிரியர்
வித்துவான் M. நாராயணவேலுப்பிள்ளை
(ஓய்வு பெற்ற தமிழாசிரியர்)

பதிப்பாசிரியர்
பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை
(ஓய்வு - தமிழ்ப் பல்கலைக் கழகம்)

முல்லை நிலையம்
சென்னை

முல்லை நிலையம்
43, புதுத் தெரு, மண்ணடி,
சென்னை - 600 001

முதற்பதிப்பு : ஆ[illegible] 1995

முல்லை : 48

நூல் பற்றிய விவரங்கள்

நூற்பெயர்	:	அஷ்டப் பிரபந்தம் (இரண்டாம் பகுதி)
ஆசிரியர்	:	பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்
தெளிவுரை ஆசிரியர்	:	வித்துவான் M. நாராயணவேலுப்பிள்ளை
பதிப்பாசிரியர்	:	பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை
பதிப்புரிமை	:	முல்லை நிலையம்
தாள்	:	10.5.கி. கிராம்
நூலின் அளவு	:	18.5 செ.மீ×12.5 செ.மீ.
பக்கங்கள்	:	iv+272=276
வெளியிவோர்	:	முல்லை நிலையம் 43, புதுத் தெரு மண்ணடி, சென்னை-1
விற்பனை உரிமை	:	பாரி நிலையம் 184, பிராட்வே, சென்னை-108
பொருள்	:	இலக்கியம்
அச்சிட்டோர்	:	ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம் 7/40, கிழக்குச் செட்டித் தெரு, பரங்கிமலை, சென்னை-16.

விலை : ரூ. 55-00

4-1

முன்னுரை

அஷ்டப் பிரபந்தம் பிற்காலத்து எழுந்த சிற்றிலக்கியத் தொகுதிகளுள் சிறந்து விளங்குகிறது. தமிழ் இலக்கியப் பயிற்சியில் புகும் முதற் படியினராலும் புலவர்களாலும் இப் பிரபந்தத் தொகுதி போற்றிக் கற்கப்படுகிறது. இதன் பயிற்சி தமிழ்ப் புலமைக்கு ஓர் அளவு கோலாகும் இது பற்றியே 'அஷ்டப் பிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்' என்று கூறுவர். அந்தாதிச் செய்யுட்களும், யமகம், திரிபு, சிலேடை முதலிய சொல்லணிகளும் இதில் பொதிந்துள்ளன.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் தோன்றிய பின்னர் வைணவச் சார்பாக எழுந்த பிரபந்தத் தொகுதி இது வாகும். இதில் ஆழ்வார்களின் பிரபந்தக் கருத்துக்களும் சொற்களும் சொற்றொடர்களும் நிறைந்துள்ளன.

இதன் ஆசிரியராகிய பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் 'திவ்விய கவி' எனப் போற்றப்படுபவர். அழகிய மணவாளதாசர் என்பது இவருக்கு உரிய மற்றொரு பெயர். இவர் திருமங்கையில் தோன்றியவர் என்றும், கூரத்தாழ்வார் என்னும் ஆசாரியரின் குமாரரும் சீடருமான பட்டரிடம் பஞ்ச சமஸ்காரம் பெற்றவர் என்றும், பட்டரது அருளால் அருங்கலை பயின்றவர் என்றும் கூறுவர். இவரது காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு என்பர்.

இவர் தென்மொழி வடமொழிகளில் வல்லவர். தமது வாழ்நாளின் பெரும் பகுதியைத் திருவரங்கத்தில் கழித்தவர். திருமாலிடம் தீவிர பக்தி பூண்டவர்.

அஷ்டப் பிரபந்தம் என்ற பெயர் நூலாசிரியரால் சூட்டப்பட்டதன்று. எட்டுப் பிரபந்தங்களும் தனித்தனியாகவே எழுதப்பட்டவை. பதிப்பாசிரியர்கள் இவற்றை ஒன்றாகத் திரட்டி, 'அஷ்டப் பிரபந்தம்' என்ற பெயரை வழங்கியிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

அஷ்டப் பிரபந்தத்துள் அடங்கிய நூல்கள் எட்டும் திருப்பதிகளின் அடைவு கருதி இரு பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளன. முதல் பகுதியில் திருவரங்கம் தொடர்பான நான்கு பிரபந்தங்கள் வைக்கப்பட்டுள்ளன. இப் பகுதிப் பாடல் எண்ணிக்கை 363, இரண்டாம் பகுதியில், திருவேங்கடம் தொடர்பான இரு பிரபந்தங்களும், அழகர் அந்தாதியும், நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியும் ஆகிய பிரபந்தங்கள் இடம் பெறுகின்றன. இப்பகுதியில் 427 பாடல்கள் உள்ளன. ஆகவே அஷ்டப் பிரபந்தத்தின் மொத்தப் பாடல் தொகை 790 ஆகும்.

இந்நூலில் செய்யுட்களும், தெளிவுரையும் முக்கிய குறிப்புக்களும் அடங்கியுள்ளன. இக்காலச் சந்ததியார் எளிதில் பொருளுணருமாறு செய்யுட்கள் சந்தி பிரித்தும் சீர் பிரித்தும் எழுதப்பட்டுள்ளன. தெளிவுரையும் கூடுமானவரை எளிமைப் படுத்தப்பட்டுள்ளது. கதைக் குறிப்புகளும் பாடல் பெற்ற திருப்பதிகள் உள்ள இடங்களும் குறிக்கப்பட்டுள்ளன. பலரும் படித்துப் பயன் பெறுவார்களாக.

M. நாராயணவேலுப்பிள்ளை
ஒய்வு பெற்ற தமிழாசிரியர்

உள்ளுறை

1. திருவேங்கட மாலை

காப்பு

1. திண்பார் புகழும் திருவேங் கடமாலை
வெண்பாவில் நூறும் விளம்புதற்குக் — கண்பாராய்
நாராய ணாஅடியேன் நாடும் தமிழ்வேத
பாராய ணாசடகோ பா.

நாராயணனே! என்னால் மிகவும் விரும்பப்படுகிற வேதங்களாகிய திவ்வியப் பிரபந்தங்களைக் கூறியருளியவனே! சடகோபன் என்னும் திருநாமம் உடையவனே! வலிய பூலோகத்தில் உள்ளவர்கள் எல்லாராலும் புகழப்படுகின்ற திருவேங்கடமென்னும் திருப்பதியின் விஷயமான மாலையென்னும் பி[illegible]ரூபமாகச் சொல்லும்படி கிருபை செய்தருள்வாய்.

திருவேங்கடம் உடையான்

2. மூலமே என்றகரி முன்வந்து இடர்தொலைத்து
நீலமே கம்போல நின்றானைப் — பாலாய
வேலைநடு வில்துயிலும் வித்தகனை வேங்கடத்து
மாலையன்றிப் பாடாதுஎன் வாய்.

ஆதிமூலமேயென்று முறையிட்ட கஜேந்திராழ்வானுடைய முன்னிலையில் எழுந்தருளி (அதற்கு முதலையால் உண்டான) துன்பத்தை நீக்கி, நீலநிறமுள்ள மேகம்

போலக் காட்சி தந்து நின்றருளியவனும் பால் மயமான கடலின் நடுவில் யோக நித்திரை கொண்டருள்கிற ஞான சொரூபியுமாகிய திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற திருமாலை அல்லாமல் (வேறொரு கடவுளை) எனது வாயானது பாடித் துதியாது.

அவையடக்கம்

3. ஆழ்வார்கள் செந்தமிழை ஆதரித்த வேங்கடம்என்
தாழ்வான புன்சொல்லும் தாங்குமால் — ஏழ்பாரும்
வெல்லும் கதிர்மணியும் வெம்பரலும் செஞ்சாந்தும்
புல்லும் பொறுத்தமையே போல்.

ஏழு உலகங்களையும் (தமக்கு) விலையாகக் கொள்ளும்படியான ஒளியையுடைய இரத்தினங்களையும் வெவ்விய பருக்கைக் கற்களையும், சிவந்த சந்தன மரங்களையும், புற்களையும் தான் தரிக்கின்ற தன்மையே போல, ஆழ்வார்கள் அருளிச் செய்த செவ்விய தமிழ்ப் பாசுரங்களை அன்புடன் ஏற்றுக்கொண்ட திருவேங்கட மலையானது என்னுடைய மிகவும் இழிவாகிய பாடல்களையும் ஏற்றுக் கொள்ளும்.

நூல

4. பொன்னும் மணியும் பொலிந்தோங்கிப் பார்மகட்கு
மின்னும் மணிமுடியாம் வேங்கடமே — மன்னும்
பரமபத நாட்டினான் பையரவின் சூட்டில்
சிரமபதம் நாட்டினான் சேர்வு. 1

பொன்னும் நவரத்தினங்களும் பொலிந்து (தன்மீது) விளங்கப்பெற்று, தான் உயர்ந்திருத்தலால், பூமிப் பிராட்டிக்கு விளங்குகின்ற இரத்தினமகுடம் போல் இருக்கிற திருவேங்கட மலையானது — நிலைபெற்ற பரமபதம் என்னும் திருநாட்டை உடையவனும், படத்தையுடைய

(காளியன் என்னும்) பாம்பினது முடியில் ஆட்டப் பயிற்சியுடைய திருவடிகளை நிறுத்தி நடனம் செய்தவனுமாகிய எம்பெருமான் (திருவுள்ளம் உவந்து) சேர்ந்திருக்கும் இடமாம்.

5. சோதிமதி வந்துதவழ் சோலைமலை யோடிரண்டாய்
மேதினியாள் கொங்கைநிகர் வேங்கடமே — போதில்
இருப்பாற்கு அடலான் இபம்ஊர்ந்தாற்கு எட்டாத்
திருப்பாற் கடலான் சிலம்பு. 2

ஒளி நிறைந்த சந்திரன் வந்து தவழப் பெற்ற (மிகவும் உயர்ந்த) திருமாலிருஞ் சோலை மலையோடு சேர்ந்து இரண்டாகி, பூமிப்பிராட்டியினது இரண்டு தனங்கள் போன்ற வேங்கடமே! — தாமரை மலரில் இருப்பவனான பிரமதேவனுக்கும் வலிமையையுடைய ரிஷபத்தையும் ஐராவத யானையையும் (முறையே வாகனமாகக் கொண்டு) ஏறிச் செலுத்துபவரான சிவபிரானுக்கும், தேவேந்திரனுககும் எட்டாத திருப்பாற் கடலில் பள்ளி கொண்டிருப்பவனான திருமாலினது திருமலை. அடல் ஆன் - ரிஷபம். (பசுவின் ஆண்)

6. மாலைக்கோ லித்திரியும் வையகத்தோர் தம்பிறவி
வேலைக்கோர் வங்கமாம் வேங்கடமே — சோலைத்
தருமா தரைநட்டான் தண்முல்லை ஆயர்
தருமா தரைநட்டான் சார்பு. 3

மயக்கத்தைத் தம்மிடத்தில் கொண்டு (பல இடங்களிலும்) அலைகின்ற நில உலகத்தில் உள்ளாருடைய பிறபபாகிய கடலுக்கு ஒரு மரக்கலம் போன்ற வேங்கடமே — (தேவந்திரனது நந்தனவனமென்னும்) பூஞ்சோலையிலுள்ள பாரிசாத விருட்சத்தைப் பெரிய பூமியில் கொணர்ந்து நாட்டியவனும் (நீர்வளத்தால்) குளிர்ச்சியான முல்லை நிலத்தில் வசிக்கின்ற இடையர்கள் பெற்ற பெண்களை (கோபஸ்திரீகளை) விரும்பிக் கூடியவனுமாகிய திருமால் (திருவுள்ளம் உவந்து) சார்ந்திருக்கும்

இடமாம். கடற்கு-கடல் கடத்தற்கு. மாதரை-மா+தரை, மால்-மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை முதலியன.

சிலேடை — பிரமனும் திருவேங்கடமும்

7. நாலு திசைமுகமும் நண்ணுதலால் ஒண்கமலம்
மேலுறலால் வேதாவாம் வேங்கடமே — [சால்உறையும்
மண்மயக்கம் தேற்றுவித்தால் மாற்றுதல்போல்
உள்மயக்கம் தேற்றுவித்தான் ஊர். [ஆரியனால் 4

நான்கு திசைகளையும் நோக்கிய நான்கு முகங்கள் பொருந்தி இருத்தலால் (நான்கு திக்கின் இடங்களில் உள்ளாராலும் விரும்பி வந்து சேவிக்கப் படுதலால்) பிரகாசமான தாமரை மலரின் மேல் தோன்றியதனால் (சிறந்த புண்ணிய தீர்த்தங்கள் தன்மேல் தங்கப் பெறுதலால்). பிரமனைப் போன்ற வேங்கடமே — பாத்திரத்தில் பொருந்திய மண்ணோடு கலந்த நீரைத் தேற்றாங் கொட்டையைக் கொண்டு அத்தன்மையை மாற்றித் தெளியச் செய்தல் போல, ஆசாரியனைக் கொண்டு எனது மனத்தின் தடுமாற்றத்தைத் தெளியச் செய்தவனான திருமாலினது வாஸ்தானமாம்.

சிவபிரானும் திருவேங்கடமும்

8. பாணிபிறை கொன்றை பணிசூடி மான்ஏந்தி
வேணி அரனைப்பொருவும் வேங்கடமே —
பீதாம்பரனார் பிரமர்வாழ் அண்டங்கள் [ஆணிநிறப்
மீதுஆம் பரனார் விருப்பு. 5

நீரையும் சந்திரனையும் கொன்றையையும் பாம்பையும் மேற்கொள்ளுதலாலும் மானைத் தரித்தலாலும் சடை முடியையுடைய சிவபிரானைப் போல்கின்ற வேங்கடமே — ஆணிப்பொன் நிறமுள்ள பீதாம்பரம்

என்னும் பொற்பட்டாடையை யுடுத்தவரும் பிரமதேவர் வாழ்கின்ற அண்டங்களுக்கு மேலாகிய பரமபதத்தில் எழுந்தருளி இருக்கிறவரும் ஆகிய திருமால் திருவுள்ளம் உவந்து வந்து எழுந்தருளித் தங்கியிருக்கும் இடம். பாணி-நீர்.

இந்திரனும் திருவேங்கடமும்

9. மால்ஆய் சசிதழுவி வச்சிரம்ஏந் திப்புகர்மா
மேல்ஆய்ப் புரந்தரன்ஆம் வேங்கடமே — நாலாய்க்
கிளர்வாகு மந்தரத்தான் கேட்டுஅமரர் வேட்டுத்
தளர்வுஆகும் அந்தரத்தான சார்பு. 6

மால் என்னும் ஒரு பெயரைக் கொண்டு (பெருமையை உடையதாய்) இந்திராணியைக் கூடி (சந்திரன் தன்மீது பொருந்தப் பெற்று), வச்சிராயுதத்தைக் கைக்கொண்டு (வச்சிர ரத்தினக் கற்களைத் தன்மேல் உடையதாய்) (உத்தம இலக்கணமாகிய) செம்புள்ளிகளையுடைய ஐராவதம் என்னும் யானை மேல் ஏறுதலால் (செம்புள்ளி களையுடைய யானைகள் தன் மேல் தங்கப் பெறுதலால்) இந்திரனை யொத்த வேங்கடமே — நான்காய் விளங்கு கின்ற மந்தரமலை போன்ற தோள்களை உடையவனும் தேவர்கள் (தனது சிறப்பைக்) கேள்வியுற்று (தாம்தாம் சென்றுசேர) விரும்பி, (தமக்கு அது எளிதிற்கிடைத் திடாமையால் தாம்) தளர்ச்சி அடைதற்குக் காரணமான பரமாகாசம் எனப்படுகின்ற பரமபதத்தை உடையவ னாகிய திருமால் சார்ந்து இருக்கும் இடம்.

முருகனும் திருவேங்கடமும்

10. வள்ளிபுணர்ந்து ஆறுமுகம் மன்னிமயில்
[மேற்கொளலால்
வெள்ளிலைவேல் வேள்போலும் வேங்கடமே —
[உள்ளினரைத்
தங்கமலப் பார்வையான் தன்னடியார் மேல் வைக்கும்
செங்கமலப் பார்வையான் சேர்வு. 7

வள்ளி நாயகியோடு கூடி (வள்ளிக் கொடிகள் பொருந்தப் பெற்று). ஆறுமுகம் அமையப்பெற்று, (நதிகள் தன்னிடத்தில் அமையப் பெற்றதாய்) மயிலை வாகனமாகக் கொண்டு அதன்மேல் ஏறுதலால் (மயில்களைத் தன் மேற்கொண்டிருத்தலால்) வெள்ளிய இலை வடிவாகிய வேலாயுதத்தையுடைய முருகக் கடவுளை ஒக்கின்ற வேங்கடமே — (தன்னைத்) தியானித்த அடியார்களை (காம வெகுளி மயக்கங்களாகிய) மும்மலங்கள் பொருந்திய உலகத்தில் இருக்க வைக்காமல் தனது பரமபதத்தில் சேர்த்துக் கொள்பவனும் தனது அடியார்களிடத்து வைக்கின்ற செந்தாமரை மலர் போன்ற திருக்கண்களின் நோக்கத்தை யுடையனுமாகிய திருமால் சேருமிடம்.

மலம் பார்த் தங்க வையான் — எனப் பொருள் கொள்க.

11. புள்அரவம் நீர்அரவம் போர்மா அரவம்அறா
வெள்அரவ வெற்பாகும் வேங்கடமே — ஒள் அரியாய்
மாகனகம் பத்தினார் வாய்கண்கை உந்திபதம்
கோகனகம் பத்தினார் குன்று. 8

பறவைகளின் ஒலியும் அருவிநீர் பெருகிய ஒலியும் போர் செய்கின்ற யானை முதலிய விலங்குகளுன் ஓசையும் நீங்காததாய்ச் சுத்தமான அரவவெற்பென்று ஒரு பெயர் பெற்ற வேங்கடமே — விளங்குகின்ற சிங்க வடிவமாய் ஓங்கிய பருத்த தூணினின்று தோன்றியவரும், வாய் ஒன்றும், கண்கள் இரண்டும், கைகள் நான்கும், நாபி ஒன்றும் பாதம் இரண்டும் ஆகிய பத்துத் தாமரை மலர்களை யுடையவருமாகிய திருமாலினது திருமலை.

பரமபத நாதனது கட்டளையின்படி அவனுக்குப் பல வகைக் கைங்கரியங்களைச் செய்யும் ஆதிசேஷனே இம் மலை உருவானதாலும் மேருமலையினிடமிருந்து ஆதிசேஷனுடனே வாயுவினால் இம்மலை கொணரப் பட்டதனாலும் இதற்கு 'சேஷகிரி' என்ற பெயர் வாய்த்தது

12. துய்ய செம்பொன் கோயில் சுடர்எறிப்பக் கண்
[முகிழ்த்து
வெய்யவன்தேர் மா இடறும் வேங்கடமே —
[ஐயிருநூறு
ஆனமுகப் பாம்பணையார் ஆனிரைப்பின் ஊதிவரும்
கானமுகப் பாம்பணையார் காப்பு. 9

சுத்தமான சிவந்த பொன்மயமான திருக்கோயிலினது காந்தி வீசுதலால் சூரியனுடைய தேரில் கட்டிய குதிரைகள் கண்கள் மூடப்பெற்று அதனால் கால் இடறுதற்குக் காரணமாகின்ற வேங்கடமே — ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேஷனைத் திருப்பள்ளி மெத்தையாக உடையவரும் பசுக் கூட்டத்தின் பின்னே ஊதிக் கொண்டு வருகின்ற சங்கீதம் எல்லாப்பிராணிகட்கும் ஆனந்தகரம் ஆம்படியான திருமால் உயிர்களைப் பாதுகாத்தருளும் இடம்.

13. மாண்டுபிறக் கும்துயர்போய் வைகுந்தம் புக்கவரும்
மீண்டு தொழக் காதலிக்கும் வேங்கடமே —
[பாண்டுமகன்
ஏறுஇரதப் பாகனார் ஏத்தும்அடி யார் நாவில்
ஊறு இரதப் பாகுஅனார் ஊர். 10

இறந்து, மறுபடி இவ்வுலகில் பிறப்பு எடுத்தலால் ஆகிற துன்பம் நீங்கி, ஸ்ரீ வைகுண்ட லோகத்தை அடைந்தவர்களும் (அங்கு நின்று) மீண்டு வந்து வணங்க ஆசைப்படும்படியான வேங்கடமே — பாண்டுவினது குமாரனான அருச்சுனன் ஏறிய தேரைச் செலுத்தும் சாரதியானவரும் தம்மைத் துதி செய்கின்ற அடியார்களுடைய நாக்கில் மேன் மேல் சுரக்கின்ற சுவையுள்ள சர்க்கரைப்பாகு போன்றவரும் ஆகிய திருமாலினது ஊர்.

14. கோலிஒரு நான்கு குலமறையும் நால்திசையும்
வேலிஎன நின்றுஏத்தும் வேங்கடமே — வாலிதனை
நண்பாவை யாதரித்தான் ஞானமுதல் ஆழ்வார்கள்
வெண்பாவை ஆதரித்தான் வெற்பு. 11

ஒப்பற்ற சிறப்புள்ள நான்கு வேதங்களும் நான்கு பக்கங்களிலும் வேலிபோலச் சூழ்ந்து நின்று துதிக்கப் பெற்ற வேங்கடமே — வாலியை நண்பனாகக் கொள்ளாமல் (பகையாகக் கொண்டு) கொன்றிட்டவனும் தத்துவ ஞானத்தையுடைய முதலாழ்வார்கள் மூவரும் இயற்றிய வெண்பாவினாலாகிய பிரபந்தங்களை அன்போடு ஏற்றுக் கொண்டவனுமான திருமாலினுடைய மலை.

வாலிதனை நண்பு ஆவையாது அரித்தான் என்று பிரித்துக் கொள்க.

முதலாழ்வார்கள் வெண்பாவை ஆதரித்தமையை எடுத்துக் கூறினார். அன்றியும் அவர்கள் நூற்றெட்டுத் திருப்பதிகளுள்ளும் திருவேங்கடத்தை மிகுதியாகப் பாராட்டிக் கூறினமையும் காண்க.

15. தெள்ளியதோர் வீடருளும் சீர்கேட்டுப் பொன்
[மலையும்
வெள்ளிமலை யும் பணியும் வேங்கடமே — புள்ளின்
கொடிவா கனத்தான் குளிர்ந்திருண்ட காரின்
வடிவுஆ கன்நத்தான் வரை. 12

தெளிவுள்ளதான ஒப்பற்ற பரமபதத்தைக் கொடுத்தருளுகிற சிறப்பைக் கேள்விப்பட்டு, பொன்மலையான மகாமேருவும் வெள்ளி மலையான கைலாசமும் வணங்கப் பெற்ற வேங்கடமே — பட்சிராஜனான கருடனது வடிவம் எழுதிய கொடியையும், அக்கருடனாகிய வாகனத்தையும் உடையவனும் குளிர்ச்சியுள்ளதாய்க் கறுத்துள்ள மேகத்தினது வடிவம் போன்ற திருமேனியையுடையவனும் ஆகிய திருமாலினது மலை.

16. எப்பூ தலமும் இறைஞ்சித் திசைநோக்கி
மெய்ப்பூ சனைபுரியும் வேங்கடமே — கொப்பூழ்
இலகும்முண்ட கந்தரத்தான் ஈன்றளிக்கும் ஈரேழ்
உலகும் உண்ட கந்தரத்தான் ஊர். 13

நில உலகத்தில் எவ்விடத்தில் உள்ளவரும் திக்கு நோக்கி வணங்கி உண்மையான பூசையைச் செய்யப் பெற்ற வேங்கடமே — திருநாபியில் தோன்றி விளங்கிய தாமரை மலர் அளிக்க தான் பெற்றுப் பாதுகாக்கிற பதினான்கு உலகங்களையும் அமுது செய்த கண்டத்தையுடைய திருமாலினது ஊர்.

17. நோவினையும் நோயினையும் நோய்செய் வினை [யினையும்
வீவினையும் தீர்த்தருளும் வேங்கடமே — மூவினை [செய்
மூவடிவாய்ப் பச்சென்றான் முன்னாள் அகலி
சேவடிவாய்ப்பச் சென்றான் சேர்பு. [கைக்குச் 14

(பிறத்தலால் ஆகின்ற) துன்பத்தையும், (வாழும் நாளில் வருத்தம் செய்கிற) வியாதிகளையும், எல்லாத் துன்பங்களையும் உண்டாக்குதற் காரணமான கருமங்களையும், மரண வேதனையையும் (தன்னை அடைந்தவர்க்கு) நீக்கியருளுகின்ற வேங்கடமே — (படைத்தல், காத்தல், அழித்தல் என்னும்) திரிமூர்த்திகளின் வடிவமாய் (அவற்றுள் தானான வடிவத்தில்) பசுமை நிறத்தை யுடையவனும், முற்காலத்தில் அகலிகை என்னும் பெண்ணுக்குச், சிவந்த தனது திருவடி சித்தியளிக்கும்படி நடந்து அருளியவனுமாகிய திருமால் சேருமிடம்.

சேவடி வாய்ப்பச் சென்றான் என்று பிரிக்க,

18. பித்துமலடு ஊமைமுடம் பேய்குருடு கூன்செவிடு
மெய்த்துயர்நோய் தீர்த்தருளும் வேங்கடமே — [பத்தருக்கு
வந்த துக்கங் காப்பான் மலர்உந் தியின்உலகம்
தந்து அதுக்குஅங் காப்பான் தலம். 15

பைத்தியம் பிடித்தலும் பிள்ளைப் பேறில்லாக் குறையும் பேசாமையும் கைகால்களின் குறைவும், பேய்

பிடித்தலும் கண் தெரியாமையும் உடல்வளைதலும் காது கேளாமையும் ஆகிய உடற்குற்றங்களையும் மற்றும் வருத்தத்தைத்தருகின்ற வியாதிகளையும் (தன்னை அடைந்தார்க்கு) நீக்கியருளுகின்ற வேங்கடமே — தன் அடியார்களுக்கு வந்த துன்பங்களை நீக்கி (அவற்றினின்று அவர்களைப்) பாதுகாப்பவனும் தனது நாபித் தாமரை மவரினின்று உலகத்தை உண்டாக்கி, அவ்வுலகத்தை உண்ணும் பொருட்டு வாய்திறப்பவனுமாகிய திருமாலினது இடமாகும்.

19. வாடப் பசித்த வரியுழுவை வாலாட்டி
மேடத்தைப் பார்த்துறுக்கும் வேங்கடமே—கூடத்துக்
கம்பவள மாவென்றான் காசினிக்கும் [வெண்ணெய்க்கும்
செம்பவளம் ஆவென்றான் சேர்வு. 16

வாட்டம் உண்டாகும்படி பசியடைந்துள்ள உடற்கோடுகளையுடைய புலிகள் (வானத்திற் செல்லுகின்ற ஆட்டின் வடிவமான) மேஷ ராசியைப் பார்த்து, தன் வாலை அசைத்துக் கொண்டு கோபித்து அதனோடு மாறுபடுதற்கு இடனான வேங்கடமே — யானைச் சாலையில் தறியிற் கட்டிவைக்கத்தக்க மதக் கொழுமையுடைய (குவலயா பீடம் என்ற) யானையைக் கொன்று சயித்தவனும் (யுகாந்த காலத்தில்) உலகத்தை உண்ணுதற்காகவும் (கிருஷ்ணாவதாரத்தில்) வெண்ணெயை உண்ணுதற்காகவும் சிவந்த பவளம் போன்ற தனது திருவாய்மலரை ஆவென்று திறந்தவனுமாகிய திருமால் சேர்ந்திருக்கும் இடம்.

இது மலையின் உயர்ச்சியை உணர்த்திய படியாம். இனிவருஞ் செய்யுள்களில் இது போல வருகின்ற வருணனைகளுக்கெல்லாம் இங்ஙனமே கண்டு கொள்க.

20. தாவிவரும் வானரங்கள் தண்குவட்டில் கற்கடகம்
மேவிவரக் கண்டோடும் வேங்கடமே — காவிரிசூழ்
பொன்திருஅ ரங்கத்தான் போதன் சிவன்என்னும்
மற்றுஇருவர் அங்கத்தான் வாழ்வு 17

தாவிக்கொண்டே வருகின்ற குரங்குகள் குளிர்ச்சியான சிகரத்தில் (நண்டு வடிவமான) கர்க்கடக ராசி பொருந்திவர (அதனைப்) பார்த்து, அஞ்சி ஓடுதற்கு இடனான வேங்கடமே — காவேரி நதி சூழ்ந்த அழகிய திருவரங்கம் என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருப்பவனும் (திரிமூர்த்திகளுள்) பிரமன் சிவன் என்னும் மற்றை இருவரையும் தனது அங்கத்தில் உடையவனுமாகிய திருமால் எழுந்தளியிருக்கும் இடம்.

21. ஒண்சிந்து ரத்தைவெறுத்து ஊடும் பிடிவேழம்
விண்சிங்கம் கண்டு அணைக்கும் வேங்கடமே—
[எண்சிந்தைக்கு
ஓரா இருந்தான் ஒருநாள் விதுரனுக்கு
வாரா விருந்தான் வரை. 18

ஒளியுள்ளதாகிய ஆண் யானையை வெறுத்துப் பிணங்குகின்ற பெண்யானையானது வானத்தில் வருகின்ற சிங்கவடிவமான சிங்கராசியைப் பார்த்து (அச்சங்கொண்டு ஆண்யானையைத் தானே வலியச் சென்று) தழுவுவதற்கு இடமான வேங்கடமே —(உலகத்தாருடைய) எண்ணுகின்ற மனத்துக்கு அறியப்படாமல் இருந்தவனும் ஒரு நாளில் விதுரனுக்கு வருதற்கு அரிய விருந்தினனாய் வந்தவனுமாகிய திருமாலினது திருமலையாம்.

22. மாதுமடக் கன்னிகழை வந்தணுகக் கம்பத்தின்
மீதுநடப் பாள்ஒக்கும் வேங்கடமே—ஊதுகுழல்
பாலன்பால் ஆக்குவித்தான் பஞ்சவர்க்கா
காலன்பால் ஆக்குவித்தான் காப்பு. [நூற்றுவரைக் 19

அழகையும் மடமையையும் உடைய இளம் பெண் வடிவமான கன்னியாராசி மூங்கிலுக்கு நேராக வந்து பொருந்தும்போது (நாட்டிய) கழைக் கோலின்மேல் ஏறிக் கூத்தாடும் வகையை ஒத்தற்த இடமான வேங்கடமே — தான் ஊதுகின்ற வேய்ங்குழலின் இனிப இசையினிடத்து — அன்பினால் பசுக்கள் தன்னைச் சுற்றிலும் ஒருங்கு திரளும்படி செய்தவனும் பஞ்ச பாண்டவர்களுக்காகத் துரியோதனாதியர் நூறு பேரையும் யமனிடத்திற் சேர்ப்பித்தவனுமாகிய திருமால் (உயிர்களைப்) பாதுகாக்கும் இடம்.

23. மன்னு குடிக்குறவர் வானூர் துலாத்திடையே
மின்னு மணிநிறுக்கும் வேங்கடமே — என்னுள்
அரவிந்தப் போதுஅகத்தான் அன்பால் அழைத்த
கரவிந்தப் போதகத்தான் காப்பு. 20

(குறிஞ்சி நிலத்து) நிலைபெற்ற குடிகளாகிய குறவர்கள் வானத்திற் செல்லுகின்ற (நிறை கோல் வடிவமான) துலா ராசியினிடத்தில் பிரகாசிக்கின்ற இரத்தினங்களை வைத்து நிறுத்து எடை அறிதற்கு இடயான வேங்கடமே — மலரினிடத்தில் எழுந்தருளியிருப்பவனும் பக்திகொண்டு (ஆதிமூலமே என்று) கூப்பிட்ட துதிக் கையையுடைய விந்திய மலையைப் போன்ற யானையை உடையவனுமாகிய திருமால் உயிர்களைப் பாதுகாக்கும் இடம்.

24. கொல்லைக் குறவர் குளிர்மதிமா னைக்ககன
வில்லைக் குனித்தெய்யும் வேங்கடமே — கல்லை
அரிவை வடிவு ஆக்கினான் அன்னமாய் வேத
விரிவை வடி வாக்கினான் வெற்பு. 21

தினைக்கொல்லையைக் காக்கின்ற குறவர்கள் குளிர்ந்த சந்திரனிடத்து உள்ள (களங்கத் தோற்றமாகிய) மான் வடிவை, (தினைப்பயிரை மேயவருகிற மானென்று எண்ணி) வானத்திற் காணப்படுகிற வில் வடிவமான

தனுர் ராசியைக் கைவில்லாகக் கொண்டு வளைத்து அது கொண்டு அம்பு எய்ய முயலுதற்கு இடமான வேங்கடமே — (சாபத்தால்) கல்வடிவாய்க் கிடந்த அகலிகையைப் பெண் வடிவமாகச் செய்தவனும், அன்னப்பறவையின் வடிவங் கொண்டு, மிகப் பரந்ததான வேதத்தைப் பிரமனுக்குத் தெளிவாகக் கூறியருளிய திருவாக்கை உடையவனுமாகிய திருமாலினது திருமலை.

25. தேன்ஏறித் தேன்வைக்கும் திண்கழைமேல் விண்மகர
மீன்ஏறி வேள்கொடியாம் வேங்கடமே — வானேறித்
தீமுகநா கத்திருப்பார் சேவடிக்குஆ ளானவனைக்
காமுகனா கத்திருப்பார் காப்பு. 22

வண்டுகள் உயரப்பறந்து சென்று தேனைச் சேர்த்து வைக்கப்பெற்ற வலிய மூங்கிலின் மேல் வானத்திற் செல்லுகின்ற சுறாமீன் வடிவமான மகரராசி வந்து தங்குகையில் மன்மதனது துவசம் போலத் தோன்றப்பெற்ற வேங்கடமே — பரமபதத்தில் விஷ அக்கினியைச் சொரியும் முகங்களையுடைய ஆதிசேஷன் மீது ஏறி வீற்றிருப்பவரும் தமது சிவந்த திருவடிகளுக்கு அடிமைப் பட்டவர்களைக் காமம் உடையவனாகச் செல்ல விடாதவரும் ஆகிய திருமால் உயிர்களைப் பாதுகாக்கும் இடம்.

மன்மதன் சுறாமீன் வடிவத்தைக் கொண்ட கொடியை உடையவனென அறிக, அவனுக்கு வடமொழியில் ''மகரதுவஜன்'' என்றும் தென்மொழியில் 'சுறவக் கொடியோன்' என்றும் பெயர்கள் உண்டு.

26. ஒண்கொம்பின் தேன்இறால் ஊர்பிறைக்கோட்
[டால்உடைந்து
விண்கும்ப வாய்நிறைக்கும் வேங்கடமே — வண்கும்ப
கம்பத்துஆ னைக்குஅடுத்தார் கார்அரக்கர்
கம்பத்தா னைக்கடுத்தார் காப்பு. [போர்மாளக்
23

ஓங்கி விளங்குகின்ற மரக்கொம்புகளில் கட்டப் பட்டுள்ள தேன்கூண்டு (வானத்தில்) செல்லுகின்ற பிறைச் சந்திரனது வளைந்த வடிவமாகிய கொம்பு படுதலால் உடைந்து வானத்திலுள்ள குடவடிவமான கும்பராசியின் வாயளவும் (தேனைக் சொரிந்து) நிறைத்தற்கு இடமான வேங்கடமே — இயல்பிற் கொழுமையுள்ள மத்தகத்தை உடையதும் (முதலை வெளலியதனலாகிய) நடுக்கத்தை உடையதுமாகிய கஜேந்திர ஆழ்வானுக்கு அருகில் ஓடிவந்து அபயமளித்தவரும் கருநிறமுடைய இராக்கு தர்கள் போரில் இறக்க, பத்துத்தலைகளையுடையவனான இராவணனைக் கோபித்து அழித்தவருமாகிய திருமால் (உயிர்களைப்) பாதுகாக்கும் இடம்.

கம்-தலை. கும்பம் - குடம்.இரண்டு குடம் கவிழ்த் தாற் போன்ற யானைத் தலையின் உறுப்புக்குப் பெயராக வழங்கும்.

27\. கூனல்இள வெண்குருகு கோனேரி யில்விசும்புஊர்
மீன்நிழ லைக்கொத்தும் வேங்கடமே — கானகத்துப்
பொன்ஆர் உழைஎய்தார் பூங்கழலை தஞ்சம்என
உன்னா ருழைஎய்தார் ஊர். 24

(கழுத்து) வளைவையுடைய இளமையான வெண்ணிற முள்ள குருகு என்னும் நீர்ப்பறவை கோனேரி தீர்த்தத்தில் வானத்திற் செல்லுகின்ற மீன்வடிவமான மீனராசியினது நிழல் தெரிய அதனைக குத்துதற்கு இடனான வேங்க டமே — தண்டகாரண்யத்தில் பொன்னிறமாய்ப் பொருந் திய (மாரீசனாகிய) மாயமானை அம்பு எய்து வீழ்த்திய வரும் தமது திருவடித்தாமரை மலர்களையே சரண மென்று நினையாதவரிடத்தில் சென்று சேராதவருமாகிய திருமாலினது திருப்பதி.

கோன் ஏரி — வடமொழியில் சுவாமி புஷ்கரணி என வழங்கும். திருவேங்கடமலையின் மேல் திருக்கோயிலுக்கு அருகிலுள்ள பிரதானமான திவ்விய தீர்த்தம் இது.

மீனராசியின் நிழலை மீன் என்று மயங்கியதாகக் கூறியது மயக்க அணி.

28 மண்மூலம் தாஎன்று மந்திகடு வற்குஉரைப்ப
விண் மூலம் கேட்டு ஏங்கும் வேங்கடமே — ஒண்மூல
வேதத்து இருக்கு உழையார் வெய்யோன் இரண்டு
சீதந் திருக்குழையார் சேர்வு. [அனைய
25

மண்ணில் இருக்கிற கிழங்கை (உண்ணுதற்காகப்) பெயர்த்து எடுத்துக் கொடு என்னும் பொருளில் மூலம் தா' என்று பெண் குரங்கு ஆண் குரங்கை நோக்கிச்சொல்ல, வானத்தில் உள்ள மூல நட்சத்திரம் அச்சொல்லைக் கேட்டு (தன்னைப் பிடித்துக் கொடுக்கச் சொன்னதாகக் கருதி) அஞ்சிக் கலங்குதற்கு இடமான வேங்கடமே — சிறந்த பிரமாணமாக உள்ளவையும் முதல் நூலாக உள்ளவை யுமான வேதங்களின் மந்திரங்களைத் தமக்கு இடமாகக் கொண்டு அதில் பொருள் வடிவ மாகப் பொதிந்திருப்ப வரும் சூரிய மண்டலம் இரண்டு உளவாயின் அவற்றைப் போன்று மிக விளங்குகிற குளிர்ந்த ஒளியுள்ள சிறந்த திவ்விய குண்டலங்களையுடைய திருமால் சேர்ந்து தங்கும் இடம்.

29. நாலவிட்ட பொன்ஊசல் நன்னுதலார் உந்து
[தொறும்
மேல்அவிட்டம் தொட்டுஇழியும் வேங்கடமே —
[ஆலம் இட்ட
பொற்புக் களம்கறுத்தார் போர்சரிய வாணன்தோள்
வெற்புக் கள்அங்கு அறுத்தார் வீடு. 26

தொங்கவிடப்பட்டுள்ள பொன்னினாலாகிய ஊஞ்சல் அழகிய நெற்றியையுடைய மகளிர் வீசித்தள்ளி ஆட்டுந் தொறும் வானத்திலுள்ள அவிட்ட நட்சத்திரதின் மீது பட்டு இறங்குதற்கு இடமான வேங்கடமே — விஷத்தை

உட்கொண்ட பொலிவையுடைய கண்டம் கருநிறம் அடைந்தவரான சிவபிரான் யுத்தத்தில் பின்னிட பாணாசுரனுடைய தோள்களாகிய மலைகளை அப்பொழுது துணித்தவரான திருமாலினது வசிக்குமிடம்.

30. பால்நிறங்கொள் தெங்கின்இளம் பாளைவிரி
[யச்சுனையின்
மீன் இனம் கொக்கு என்றுஒளிக்கும் வேங்கடமே —
[வான்நிமர்ந்த
வெள்ளத்துக் கப்புஆலான் மெய்ப்பரம யோகியர்தம்
உள்ளத்துக்கு அப்பாலான் ஊர். 27

வெண்மை நிறத்தைக் கொண்ட தென்னை மரத்தினது இளமையான பாளை மலர, அதுகண்டு சுனை நீரிலுள்ள மீன் கூட்டங்கள் அதனைக் கொக்கென்று கருதி, அஞ்சி மறைதற்கு இடனான மேங்கடமே — வானத்தையும் கடந்து பொங்கி மேலெழுந்த பிரளயப் பெருங்கடல் வெள்ளத்தில் கிளைகளையுடையதோர் ஆலமரத்தினது இலையில் பள்ளி கொண்டிருப்பவனும் உண்மையான சிறந்த யோகப் பயிற்சியையுடைய மகான்களுடைய மனத்துக்கும் முழுவதும் எட்டாமல் கடந்துள்ளவனுமான திருமாலினது திருப்பதி. முன் இரண்டடி மயக்க அணி.

31. கொம்புஅணியும் தேமாங் குயில்கருடன் போல்கூவ
வெம்பணிகள் புற்றடையும் வேங்கடமே — வம்பு
[அணியும்
விண்ணின் ஐந்து காப்பார் மிசைவைத்தார்
உள்நினைந்து காப்பார் உவப்பு. [பத்தரைத்தம் 28

கிளைகள் அழகியனவாகப் பெற்ற இனிய மாமரத்தின் மேல் இருக்கிற குயில் என்னும் பறவை, கருடன் போலக் கூவி ஒலி செய்ய, (அதுகேட்டு) கொடிய பாம்புகள் அஞ்சிப் புற்றினுள்ளே நுழைதற்கு இடனான வேங்கடமே — வாசனையை மிகுதியாகக் கொண்ட

தேவலோகத்திலுள்ள பஞ்ச தருக்களுள் ஒன்றைச் சத்தியபாமைக்காக நிலவுலகத்திற் கொணர்ந்து காட்டிய வரும் தமது அடியார்களைத் தமது உள்ளத்தில் நினைத் துக் குறிக்கொண்டு பாதுகாப்ப வருமாகிய திருமால் திருவுள்ளம் உவந்து எழுந்தருளி இருக்கும் இடம்.

32. தெங்குஇளநீர் வீழச் சிதறுமணி யைக்கரிகள்
வெங்கனல் என்று அஞ்சிப்போம் வேங்கடமே
—பைங்கழையின்
மாண்தாரைப் பண்தழைத்தார் மாமறையோன்
[பால்தோன்றி
மாண்டாரைப் பண்டழைத்தார் வாழ்வு. 29

தென்னமரத்தினது இளநீர்க்காய்கள் விழுதலால் சிதறுகின்ற இரத்தினங்களை யானைகள் வெவ்விய நெருப்பு என்று கருதி அச்சங்கொண்டு விலகிச் செல்வதற்கு இடமான வேங்கடமே — பசிய வேய்ங்குழலின் மாட்சி மைப் பட்ட ஒழுங்காய கீதம்செழிக்க ஊதினவரும் சிறந்த ஓர் அந்தணனிடத்தில் பிறந்து இறந்த மக்களை முன்பு கிருஷ்ணாவதாரத்தில் மீட்டு அழைத்துவந்தவருமாகிய திருமால் வாழுமிடம்.

இது மயக்க அணி.

33. அங்குஅயலில் மேகம் அதிரப் பெரும்பாந்தன்
வெங்கயம்என்று அங்காக்கும் வேங்கடமே — பங்கய
[னோடு
அம்புவ னங்கள்தந்தார் அம்புயத்து மங்கையொடு
வெம்புவ னம்கடந்தார் வெற்பு. 30

அவ்விடத்து அருகில் மேகங்கள் இடிமுழங்க, பெரிய மலைப்பாம்புகள் வெவ்விய மதயானைகள் பிளிறிக் கொண்டு வருகின்றன என்று கருதி, அவற்றை விழுங்கு வதற்கு வாய்திறத்தற்கு இடமான வேங்கடமே — பிரமனுடன் அழகிய உலகங்களைத் தமது திருநாபிக்

அ.—2

கமலத்தினின்று தோன்றுவித்தவரும், தாமரைமலரில் வீற்றிருக்கிற என்றும் மாறாத இளமைப் பருவத்தை யுடைய திருமகளினது அவதாரமான சீதா தேவியுடனே வெப்பங் கொண்ட காட்டைக் கடந்து சென்றவரும் ஆகிய திருமாலினது திருமலை. இது மயக்க அணி.

34. திங்கள்இறு மாந்துலவத் தீம்பால் கவளமென்று
வெங்களிறு கைநீட்டும் வேங்கடமே — பொங்கமரில்
ஆர்த்த வலம்புரியார் ஆட்பட்டார் செய்தபிழை
பார்த்துஅ வலம்புரியார் பற்று. 31

சந்திரன் செருக்கி அருகில் வானத்தில் சஞ்சரிக்க, அதனை இனிய பாலினால் கலந்த உணவுத் திரளை என்று எண்ணி வெவ்விய மதயானை துதிக்கையை நீட்டுதற்கு இடமான வேங்கடமே — உக்கிரமான போரில் முழக்கின வலம்புரிச் சங்கை உடையவரும் தமக்கு அடிமைப் பட்டவர்கள் செய்த குற்றத்தைக் கண்டு அதற்கேற்ப அவர்கட்குத் துன்பத்தைச் செய்யாதவருமாகிய திருமால் விரும்பித் தமது இடமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் இடம்

இதுவும் மயக்க அணி.

35. அம்புலியில் வாழ்மான் அதிரும் குரற்பகுவாய்
வெம்புலியைக் கண்டு ஏங்கும் வேங்கடமே — நம்பும் [எனை
வீங்குஊத்தைக் கண்டிருப்பார் விண்ணோர் நரர்
சாம்கூத்தைக் கண்டு இருப்பார் சார்பு. [பிறந்து 32

சந்திரனிடத்தில் வாழ்கின்ற மான், கர்ச்சிக்கின்ற குரலையும் திறந்த வாயையும் உடைய கொடிய புலியைப் பார்த்துப் பயப்படுவதற்குக் காரணமான வேங்கடமே — தம்மைச் சரணமென்று நம்பிய என்னை மிக்க அசுத்த மான பிறப்பிலே திரும்பிச் செல்ல விடாத வரும் தேவர்

களும் மனிதர்களும் பிறந்து இறக்கின்றமை யாகிய கூத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவருமாகிய திருமால் சார்ந்துள்ள இடம்.

சந்திர மண்டலத்திற் காணப் படுகின்ற களங்க வடிவததை மான் என்பாரது கொள்கைபற்றி இவ் வருணனை கற்பிக்கப்பட்டது. இதில் மலையின் உயர்வு விளங்கும்.

36. கண்ணால் வெடித்த கழைமுத்தம் கார்துளைத்து
விண்ஆலி யோடுஎதிரும் வேங்கடமே — எண்ணார்
கலங்கவரும் அஞ்சனையார் கான்முளையை
சலம்கவரும் மஞ்சுஅனையார் சார்பு. [ஊர்ந்தார் 33

கணுக்களில் வெடித்த மூங்கில்களினின்று வெளிச் சிதறிய முத்துக்கள் மேகத்தைத் தொளை செய்து அந்த மேகத்தினின்று வெளிப்படுகின்ற மழைநீர்க் கட்டியுடனே கீழ்ச் சிந்துவதற்கு இடமான வேங்கடமே — பகைவர்கள் உறுதிநிலை கலங்கும்படி செல்கின்ற அஞ்சநாதேவியினது புத்திரனான அநுமானை வாகனமாகக் கொண்டு ஏறி நடத்தியவரும் நீரை நிரம்ப மொண்டு கொண்ட காளமேகத்தைப் போன்ற வருமாகிய திருமால் சார்ந்துள்ள இடம்.

சிறந்த சாதிமூங்கில் முற்றினபோது அதன் கணுக் கள் வெடிக்க அவற்றினின்று முத்துப் பிறக்குமென்றல் கவிமரபு.

37. செல்லுக்கு மேற்செல்லும் திண்ணியவேய் வாசவனார்
வில்லுக்கு வாளியாம் வேங்கடமே — எல்லுக்குள்
அந்தகா ரம்படைத்தார் ஆர்அழல்வாய் அம்பினால்
வெந்தகார் அம்புஅடைத்தார் வெற்பு. 34

மேகத்திற்கு மேலாக வளர்ந்து செல்கின்ற வலிமை யுடைய மூங்கில் (வானத்தில் தோன்றுகிற) இந்திர

தனுசுக்கு அம்புபோல் இருக்கின்ற வேங்கடமே — பகற் பொழுதினுள் இருளை உண்டாக்கினவரும் நிறைந்த அக்கினியை வாயிலுடைய அஸ்திரத்தினால் தவிப்படைந்த கருநிறமான கடலை அணைகட்டி அணைத்தவருமான திருமாலினது திருமலை.

இது தற்குறிப்பேற்ற உவமை அணி, செல்-மேகம். (வானத்திற் செல்வது என்று பொருள்படும் காரணக்குறி)

38. பொன்கமழும் கற்பகத்தின் பூங்கா வணத்துக்கு
மென்கமுகங் காலாகும் வேங்கடமே— நன்கு அமரும்
ஊர்அத் திகிரியார் ஊதும் திகிரியார்
வீரத் திகிரியார் வெற்பு. 35

காட்சிக்கு இனிய பாக்குமரங்கள் பொன்மயமானதும் வாசனை வீசுவதுமான மேல் உலகத்துக் கற்பகச் சோலையாகிய பொலிவு பெற்ற பந்தலுக்கு அழகிய கால்கள் நாட்டியவை போன்றிருக்கப் பெற்றவேங்கடமே — நன்றாகப் பொருந்திய அத்திகிரியென்னும் திருப்பதியை உடையவரும், ஊதி இசைக்கின்ற வேய்ங்குழலை உடையவரும் பகையழிக்கும் திறமுள்ள சக்கராயுதத்தை யுடையவரும் ஆகிய திருமாலினது திருமலை

அத்திகிரி — காஞ்சிபுரத்திலுள்ள பெருமாள் கோவில் என்னும் பிரதானமான தலம். திகிரி என்று மூன்று முறை வந்தது சொற்பின் வருநிலையணி.

39. தண் இலைக்கண் மூங்கில் தலைதொடுத்த
[தேன்இறால்
விண்நிலைக்கண் ணாடியாம் வேங்கடமே
—உள் நிலைக்கும்
சோதி வணம்கரியார் தூயசன காதியரும்
ஓதி வணங்கரியார் ஊர். 36

குளிர்ந்த இலைகளையும் கணுக்களையும் உடைய மூங்கிலின் உச்சியில் கட்டிய தேன்கூடு தேவர் உலகத்து

நிலைக் கண்ணாடிபோல விளங்கப்பெற்ற வேங்கடமே — அன்பர் உள்ளத்தில் நிலைபெற்றிருக்கின்ற ஒளிவடிவான வரும் திருமேனி நிறம் கருமையுள்ளவரும் திரிகரண சுத்தியையுடைய சனகர் முதலிய மகாயோகிகளும் துதித்து வணங்குதற்கு அருமையானவருமாகிய திருமாலினது திருப்பதி.

சன்காதியர் — சனகர், சனந்தனர், சனத் குமாரர் சனத் சுஜாதர். (குறிப்பு: இவர்கள் தட்சணாமூர்த்தியிடம் சின்முத்திரைக்கு விளக்கம் கேட்டவர்கள் என்று சைவபுராணங்கள் கூறுகின்றன) இவர்கள் பிரமனது குமாரர்கள்.

40. தண்கமுகின் பாளை தடங்கதிரின் செல்வனுக்கு
வெண்கவரிபோலசையும் வேங்கடமே
—ஒண்கடல்சூழ்
வண்துவரை நாட்டினான் மத்தாக வாரிதியுள்
பண்டுவரை நாட்டினான் பற்று. 37

குளிர்ந்த பாக்குமரத்தின் வெண்ணிறமான பாளைகள் மிக்க ஒளிகளைச் செல்வமாகவுடையவனான சூரியனுக்கு வெண்சாமரம் போல அசையப் பெற்ற வேங்கடமே — பெரிய கடலினாற் சூழப்பட்ட வளப்பமுள்ள துவாரகையாகிய நாட்டையுடையவனும் முற்காலத்தில் கடலில் மந்தர மலையைக் கடைகருவியாக இட்டவனுமாகிய திருமால் விருப்பி வாழுமிடம்.

41. அங்குஅதிரும் கான்யாற்று அடர்திவலை
[யால்நனைந்து
வெங்கதிரும் தண்கதிராம் வேங்கடமே
—செங்கதிர்வேல்
சேந்தன்அத்தம் ஐந்தான் திருத்தாதை
[விற்குஇளையாள்
பூந்தனத்துஅ மைந்தான் பொருப்பு. 38

அவ்விடத்து ஆரவாரிக்கின்ற காட்டாறுகளின் மிக்க நீர்த்துளிகள் தன்மேல் தெறித்தலினால் நனைந்து,

இயல்பில் உஷ்ண கிரணங்களை யுடையவனான சூரியனும் குளிர்ந்த கிரணங்களை யுடையவன் ஆதற்குக் காரண மாகின்ற வேங்கடமே — சிவந்த ஒளியையுடைய வேலா யுதத்தையுடைய சுப்பிரமணியனுக்கும் ஐந்து கைகளை யுடையவனான விநாயகனுக்கும் சிறந்த தந்தையான சிவ பெருமானுடைய வில்லுக்கு இளையவளான சீதையினது அழகிய கொங்கைகளில் விரும்பிப் பொருந்தியவனான திருமாலினது திருமலை.

(ஜனகன் குலம்) நிமிகுலத்தில் சிவதனுசு முன்பு வந்து சேர, பின்பு சீதை வந்து சேர்ந்ததனால் அவள் சிவபிரா னது வில்லுக்கு இளையவள் எனப்பட்டாள். இளையாள்-பின் தோன்றியவள், விற்கு-வில்லுக்கு.

42. சேண்உலவு திங்கள் எனும் சித்தசவேள்
[வெண்குடைக்கு
வேணுஒரு காம்புஆகும் வேங்கடமே
—கோணும்மனத்து
என்னைஆ ளாகத்தான் இன்னருள்செய் தான்கமல
மின்னையாள் ஆகத்தான் வெற்பு. 39

வானத்திற் சஞ்சரிக்கின்ற சந்திரனாகிய சித்தஜனான மன்மதனது வெண்கொற்றக் குடைக்கு மூங்கில் காம்பு போல் அமையப்பெற்ற வேங்கடமே — செவ்வைப்படாத மனத்தையுடைய என்னை (செவ்வைப் பட்டுத் தனக்கு) அடிமையாகும்படி தானாக இனிய கருணையைச் செய்தருளியவனும், செந்தாமரை மலரில் வாழ்கின்ற மின்னல்போல் விளங்குகிற திருமகளைக் கொண்ட திரு மார்பையுடையவனுமாகிய திருமாலினது திருமலை.

மன்மதன் காமத்திற்கு உரிய தேவன். வெண்ணிறமாய் வட்ட வடிவங்கொண்டு விளங்குகின்ற பூர்ண சந்திர மண்டலம் காதலை வளர்க்கும் தன்மையது ஆதலால் மன்மதனது வெண்கொற்றக் குடையென்று கூறப்படும்.

43. தேவர்உடை ஐந்தருவின் செந்தேன் இறால்கிழிய
மீவருடை பாய்கின்ற வேங்கடமே — மூவடிமண்
போய்இரந்தார் அத்தர் புனையும் ஒருபதினாறு
ஆயிரம்தா ரத்தர் அகம். 40

தேவர்களுடைய ஐவகைக் கற்பக விருட்சங்களிற் கட்டிய செவ்விய தேன்கூடு கிழிபடும்படி தன்மேலுள்ள வரையாடுகள் தாவிப் பாயப்பெற்ற வேங்கடமே — மூன்றடி நிலத்தை (மகாபலி சக்கரவத்தியினிடத்திற்) சென்று யாசித்தவரும் பெற்ற ஒப்பற்ற பதினாறாயிரம் மனைவியரை உடையவருமாகிய திருமாலினது இருப்பிடம்.

திருமலையின் உயர்ச்சியோடு அம்மலையிலுள்ள ஆட்டின் கொழுமையும் விளங்கும்.

44. வன்குறிஞ்சி மாதர்பால் வானோர் மருந்துக்கு
மென்குறிஞ்சித் தேன்மாறும் வேங்கடமே— [நன்குஉறிஞ்சி
பேய்த்தனம்சு வைத்தார் பிறர்க்கு அமுது ஈந்து
வாய்த்தநஞ்சு வைத்தார் வரை. [ஈசனுக்கு 41

வலிய குறிஞ்சி நிலத்து மகளிராகிய குறத்தியரிடத்து தேவர்கள் அமிருதத்துக்குக் குறிஞ்சி மரத்திற் கட்டிய இனியதேனைப் பண்டமாற்றலால் கொள்ளப்பெற்ற வேங்கடமே — பேய்மகளாகிய பூதனையினது முலையை நன்றாக உறிஞ்சிப் பால் குடித்தவரும், மற்றைத் தேவர்களுக்கு அமிருதத்தைக் கொடுத்துச் சிவனுக்குப் பொருந்தின விஷத்தை உண்ணவைத்தவருமாகிய திருமாலினது திருமலை.

45. வாவுகவின் மந்திநுகர் மாங்கனிக்குக் கற்பகத்தின்
மேவுகவி கைநீட்டும் வேங்கடமே — தாவுகடல்
வேவஇலங் கைக்குஒண்தார் வீடணனை [வைத்துஒழிந்தார்
சாவவில்அங் கைக்கொண்டார் சார்பு. 42

தாவிச் செல்லும் இயல்புள்ள அழகிய பெண்குரங்கு (கைக்கொண்டு) உண்கின்ற மாம்பழத்துக்கு, கற்பக விருட்சத்தில் பொருந்திய ஆண்குரங்கு கைநீட்டப்பெற்ற வேங்கடமே — அலை பொங்கி எழும் இயல்புள்ள கடல் கொதிப்பு அடையும் படியும், பிரகாசமான ஆரத்தை யணிந்த விபீஷணனை இலங்காபுரிக்கு அரசனாக வைத்து, அவனல்லாத அரக்கர் பலரும் இறக்கும் படியும், (கோதண்டம் என்னும்) தமது வில்லை அழகிய கையில் ஏந்தியவராகிய திருமால் சாருமிடம்.

46. வெள்ளியகன் மீதே விடர்முளைத்த செங்காந்தள்
வெள்ளி அகல்விளக்காம் வேங்கடமே
—வெள்ளிஎனும்
வேதியன்நாட் டங்கெடுத்தார் மேதினியைப்
ஓதுஇயல்நாடு அங்குஎடுத்தார் ஊர். [பாதலம்என்று
43

வெண்ணிறமான வட்டப் பளிங்குக்கல்லின் மேலே அக்கற் பிளப்பிலே முளைத்தெழுந்த செந்நிறமான செங்காந்தள் மலர் வெள்ளியினாலாகிய தகழியில் ஏற்றப் பட்ட விளக்குப் போலத் தோன்றப் பெற்ற வேங்கடமே — சுக்கிரன் என்னும் அந்தணனது கண்ணைப் போக்கின வரும் பூமியைப் பாதாள மென்று பெயர் சொல்லப்படுகிற இயல்பையுடைய உலகமாகிய அவ்விடத்தனின்று எடுத்த வருமான திருமாலினது திருப்பதி.

47. அல்லிமலர்க் காந்தளின்மேல் ஆடும் சுரும்பினங்கள்
மெல்லியர்கள் கைக்கழங்காம் வேங்கடமே
—மல்லினரைப்
பண்டறைந்த வன்புடையார் பார்த்தனுக்குத்
விண்டறைந்த அன்புடையார் வெற்பு. [தத்துவநூல்
44

அக இதழ்கள் நிறைந்ததான செங்காந்தன மலரின்மேல் அசைந்து அசைந்து மொய்த்து எழுகின்ற வண்டுகளின் கூட்டங்கள் மகளிர்களால் கையிற்கொண்டு ஆடப் படுகின்ற கழற்காய் போன்று இருக்கப்பெற்ற வேங்கடமே — முன்பு மற்போர் வீரர்களைத் தாக்கி யழித்த வலிமை கெடாதவரும் அருச்சுனனுக்குத் தத்துவ சாஸ்திரமாகிய கீதையை வெளியிட்டுக் கூறி யருளிய அன்புடையவருமாகிய திருமாலினது திருமலை.

தத்துவநூல்: ஜீவாத்மா பரமாத்மா இவர்கட்கு உள்ள சம்பந்தம் கர்மம், பிறப்பு, முத்தி முதலியவற்றின் உண்மையான தன்மையை உரைத்த சாஸ்திரம்.

48. காந்தள் இரவலர்போல் கையேற்பக் கொன்றை [கொடை
வேந்தனெனப் பொன்சொரியும் வேங்கடமே— [பூந்துளவின்
கான்மடங்கா மார்வத்தார் காண விரும்பினர்பால்
நான்மடங்குஆம் ஆர்வத்தார் நாடு. 45

செங்காந்தள் மலர் யாசகர் யாசித்தற்கு ஏற்கின்ற கைபோன்று இருப்ப, கொன்றை மரம் ஈகைக் குண முடைய அரசன் (அந்த யாசகர் கையில்) பொன்னைச் சொரிவதைப் போலக் (காந்தள் மலர்மேல்) பொன்னிற மான தன்மலர்களைச் சொரிவதற்கு இடமான வேங்கடமே — அழகிய திருத்துழாயினது வாசனைமாறாத திருமார்பை உடையவரும் தம்மைச் சேவிக்க விரும்பின மெய்யடியார்களிடத்து பன்மடங்கு அதிகமாக வைக்கும் அன்புடையவருமாகிய திருமாலினது திவ்விய தேசம்.

இது உவமையணி.

49. நாகத்தின் மேற்குறவர் நன்குளறிந்த மாணிக்கம்
மேகத்தின் மின்புரையும் வேங்கடமே — மாகத்தின்
மாத்தாண்ட மண்டலத்தார் வாய்உண்டு [உமிழ்ந்துஅளந்து
காத்துஆண்ட மண்தலத்தார் காப்பு. 46

யானையின் மேல் குறஞ்சி நிலமாக்கள் நன்றாக வீசி எறிந்த மாணிக்கம் என்னும் இரத்தினங்கள் மேகத்தினிடத்துக் காணப்படுகிற மின்னல் போல விளங்குதற்கு இடமான வேங்கடமே — பெரிய வானத்தின் கண் விளங்குகின்ற சூரிய மண்டலத்தில் எழுந்தருளியிருப்பவரும் யுகாந்த காலத்தில் வாயினால் உட்கொண்டு (பிரளயம் நீங்கின பொழுது மீண்டும்) வெளிப்படுத்தி, (திருவிக்கிரம அவதாரத்தில்) திருவடியால் அளந்து, தாமான நிலையில் பாதுகாத்து, (ஸ்ரீராமாவதாரத்தில்) அரசாளப்பட்ட பூமியை உடையவரும் ஆகிய திருமால் (உயிர்களைப்) பாதுகாக்கும் இடம்.

50. செம்பதும ராகச் சிலைசூழ் பெரும்பாந்தள்
வெம்பரிதி ஊர்கோள் ஆம் வேங்கடமே — [உம்பர்உலகு
ஓதத்தின் அப்பு உறத்தான்ஓர் ஆல் இலைத்
வேதத்தின் அப்புறத்தான் வெற்பு. [துயின்றான் 47

செந்நிறமான பதுமராகக்கல்லைச் சுற்றிக் கொண்ட பெரிய மலைப்பாம்பு வெவ்விய சூரிய மண்டலத்தைச் சுற்றிக் காணப்படும் பரிவேஷம் போன்று தோன்றப் பெற்ற வேங்கடமே — பிரளய சமுத்திரத்தின் நீர் வெள்ளம் எல்லா உலகங்களையும் கவிந்து அவற்றின் மேல் சென்று பரவ (அப்பெருங்கடலில்) ஓர் ஆலிலையின் மேல் தான் யோக நித்திரை கொள்கின்றவனும் வேதங்களுக்கு எட்டாமல் அப்பாற்பட்டவனுமான திருமாலினது திருமலை.

51. கோலமணிப் பாறையில்பாய் கோடரங்கள் [செங்கதிரோன்
மேல்அனுமன் பாய்ந்தனைய வேங்கடமே —நாலுமறை
ஆய்ந்தபர தத்துவம் தான் ஆனான் குடம்ஆடல்
வாய்ந்தபர தத்துஉவந்தான் வாழ்வு. 48

அழகிய மாணிக்கப் பாறையின்மேல் பாய்கின்ற குரங்குகள் சிவந்த சூரியமண்டலத்தின் மேல் அனுமான் பாய்ந்தாற் போலத் தோன்றுதற்கு இடமான வேங்கடமே — நான்கு வேதங்களாலும் ஆராய்ந்து கூறப்பட்ட எல்லாவற்றிற்கும் மேலான உண்மைப் பொருள் தானே ஆனவனும் குடம் எடுத்து ஆடுதல் பொருந்தின கூத்தைச் செய்வதில் திருவுள்ளம் உகந்தவனுமாகிய திருமால் வாழுமிடம்.

குடக்கூத்து; இடையர்கள் செல்வச் செருக்கினால் தமது மகிழ்ச்சிக்குப் போக்குவீடாகக் குடங்களை எடுத்து மேலே எறிந்து, மீண்டும் ஏந்தி ஆடுவது ஒரு கூத்து, பஞ்சலோகங்களாலும் மண்ணாலும் குடங்கொண்டு ஆடுவதென்பர். கண்ணபிரானுக்கு அக்கூத்தில் மிகவும் பிரியம்.

52. கொம்பின் இறால் வாங்கநிமிர் குஞ்சரக்கை
[அம்புலிமேல்
வெம்பிஎழுங் கோள் அரவாம் வேங்கடமே
—தும்பிபல
போர்காதும் ஈர்ந்தார் புனைஅரக்கி மூக்கினொடு
வார்காதும் ஈர்ந்தார் வரை. 49

மரக்கொம்பிற் கட்டிய தேன்கூட்டை எடுத்தற்கு உயரத் தூக்கிய யானையினுடைய துதிக்கை சந்திர மண்டலத்தைப் பற்றுதற்கு அதன்மேல் கறுக்கொண்டு எழுகின்ற கரும் பாம்பு வடிவமான (இராகு என்னும்) கிரகம் போலத் தோன்றப் பெற்ற வேங்கடமே — பல வண்டுகள் நெருங்கி மொய்த்து ஒன்றோடு ஒன்று தாக்கப்பெற்ற (தேனினால்) குளிர்ந்த மலர் மாலையைத் தரித்த சூர்ப்பனகையினது மூக்கையும் நீண்ட காதையும் அறுத்தவராகிய திருமாலினது திருமலை.

53. வண்மைதிகழ் வெண்பளிங்கு வட்டத்தில்
[கண்துயில்மான்
விண்மதியில் மான்ஏய்க்கும் வேங்கடமே
—ஒண்மதியால்
நூலைத்தாம் ஓதுஅரனார் நோக்கஅரி யார்துளவ
மாலைத்தா மோதரனார் வாழ்வு. 50

அழகியதாக விளங்குகின்ற வெண்ணிறமான வட்ட வடிவுள்ள பளிங்குப் பாறையில் படுத்துத் தூங்குகின்ற மான் வானத்துச் சந்திரமண்டலத்தின் நடுவில் காணப்படுகிற மான்வடிவத்தை ஒத்திருக்கப் பெற்ற வேங்கடமே — சிறந்த புத்தியினால் பல நூல்களைத் தாம் ஓதிய சிவபெருமானாலும் கட்புலனாகக் கண்டு தரிசிக்கமுடியாதவரும் திருத்துழாய் மாலையணிந்த தாமோதரன் என்ற ஒரு திருநாமம் உடையவருமாகிய திருமால் வாழும் இடம்.

தாமோதர என்ற வடசொல்—தாம+உதர எனப் பிரிந்து (வெண்ணெய் களவாடினதற்கு ஒரு தண்டனையாக யசோதையால் கட்டப்பட்ட) கயிற்றை வயிற்றில் உடையவன் என்று காரணப் பொருள்படும். தாமம் — கயிறு; உதரம் — வயிறு.

சிலேடைகள்

54. காதல்இற்றுச் சார்தவர்க்கும் காமியத்தைச்
[சார்ந்தவர்க்கும்
வேதனைக்கூற் றைத்தவிர்க்கும் வேங்கடமே—
[போதகத்தை
மோதி மருப்புஒசித்தார் முன்பதினா றாயிரவர்
ஓதி மருப்பொசித்தார் ஊர். 51

(பிரபஞ்ச வாழ்வில்) ஆசை (முழுவதும்) ஒழிந்து (தன்னிடம் வந்து) சேர்ந்த முனிவர்களுக்கும் பிரமனையும்

யமனையும் விலக்குகின்றதும் பிரபஞ்ச வாழ்வுகளை விரும்பியவர்களுக்கும் துன்பங்களின் வகைகளை ஒழிக்கின்றதும் ஆன வேங்கடமே — யானையைத் தாக்கி, அதன் தந்தங்களை முறித்தவரும் முற் காலத்தில் (கிருஷ்ணாவதாரத்தில் பதினாறாயிரம் இளமங்கையருடைய கூந்தலின் நறுமணத்தை மோந்து நுகர்ந்தவருமான திருமாலினது வாசஸ்தலமாகும்.

இது செம்மொழிச் சிலேடை.

55. கேள்வித் துறவோரும் கேடுஅறஇல் வாழ்வோரும்
வேள்விக் கினமாற்றும் வேங்கடமே — மூள்வித்து
முன்பா ரதமுடித்தார் மொய்வேந்தர் வந்தவிய
வன்பா ரதம்முடித்தார் வாழ்வு. 52

ஞானக் கேள்விகளையுடைய துறவிகளும் மன்மதனால் வரும் இடையூற்றை நீக்குதற்கு இடமானதும், தீங்கில்லாமல் இல்லற ஒழுக்கத்தில் வாழ்பவர்களும் யாகத்துக்கு இனமான நற்செயல்களைச் செய்தற்கு இடமானதும் ஆன வேங்கடமே — முற்காலத்தில் தேரையும் கிரீடத்தையும் மாலையையும் உடைய வலிய அரசர்கள் வந்து (பொருது) இறக்கும்படி, கொடிய பாரத யுத்தத்தை மூட்டி நிறைவேற்றியவ ராகிய திருமாலின் வாசஸ்தலம்.

வாழ்வு என்ற சொல்லின் ஆற்றலால் திருவேங்கடம் திருமாலின் திருவுள்ளத்துக்கு மிகப் பாங்காய் யிருத்தல் விளங்கும்.

56. பொய்யாம் வினையேனைப் போல்வாரும் அன்பரும் [செய்
மெய்யாம் வழுத்தேயும் வேங்கடமே — செய்யாள்
தனத்துவசப் பொற்புள்ளார் தானவரை மோதும்
சினத்துவசப் பொற்புள்ளார் சேர்வு. 53

பொய்கலந்த தொழிலையுடைய என்னைப் போன்ற நீசர்களும், செய்த சரீரசம்பந்தத்தால் ஆகிய குற்றங்கள்

(கருமங்கள்) நீங்குதற்கு இடமானதும் உள்ளன்புடைய அடியார்களும் செய்கின்ற உண்மையான தோத்திரங்கள் பொருந்தப்பெற்றதும் ஆன வேங்கடமே— திருமகளினது தனத்துக்கு வசப்பட்ட அழகையுடையவரும் அசுரர் களைத் தாக்குகின்ற கோபத்தையுடைய கொடியான பொன்னிறமான கருடன் என்னும் பறவையை உடைய வருமான திருமால் திருவுள்ளம் உவந்து சேருமிடம்.

57. கோடல்இலா உள்ளத்துக் கோது இல் அடியவரும்
வேடரும்அங் கைவரைவெல் வேங்கடமே— மூடர்
மனம்ஆம் மனைக்கு ஒன்றார் வன்கஞ்சன் என்னும்
சினமா மனைக் கொன்றார் சேர்பு. 54

கோணுதல் இல்லாத (நேர்வழிப்பட்ட) மனத்தை யுடைய குற்றமில்லாத அடியார்களும், அவ்விடத்துப் பஞ்சேந்திரியங்களை வெல்லுதற்கு இடமானதும், வேடர் களும் அழகிய துதிக்கையையுடைய மலை போன்ற யானையை வெல்லுதற்கு இடமானதும் ஆன வேங்கடமே— மூடர்களுடைய உள்ளமாகிய வீட்டில் வந்து பொருந்தாதவரும் கொடிய கம்சன் என்கிற கோபத் தையுடைய மாமனைக் கொன்றவருமாகிய திருமால் சேருமிடம்.

58. மொய்வதன மங்கையர்கள் முன்கையும் யோகியர்கள்
மெய்வயதும் அஞ்சுகம்ஆர் வேங்கடமே— பெய்
[வளையார்
பால்திருப்பாது அஞ்சிவந்தார் பற்றினார்
[புன்பிறப்பை
மாற்றுஇருப்பா தஞ்சிவந்தார் வாழ்வு. 55

அழகுமிக்க முகத்தையுடைய மகளிரது முன்னங்கையும் அழகிய கிளி உணவு உண்ணுதற்கு இடமாகப் பெற்றதும் யோக நிட்டையில் இருக்கிற முனிவர்களுடைய உடம்பின் ஆயுளும் ஐந்து யுகமாப் பொருந்தப் பெற்றதும் ஆன

வேங்கடமே — அணிந்த வளையல்களையுடைய மகளிர் பக்கல் (மனத்தைச்) செலுத்தாமல் அச்சங்கொண்டு தம்மிடம் வந்து சரணம் அடைந்தவர்களுடைய இழிவான சன்மத்தை நீக்குகின்ற தமது இரண்டு திருவடிகளும் சிவந்திருக்கப் பெற்றவரான திருமால் வாழுமிடம்.

திருவேங்கட மலையிலுள்ள மகளிர் கையில் கிளியை வைத்துக்கொண்டு அதற்கு உணவு ஊட்டி அதனோடு கொஞ்சி விளையாடுதலும், அங்குள்ள யோகிகள் அவ் யோக பலத்தால் நீடூழி காலம் வாழ்தலும் இங்குக் குறிக்கப்பட்டன.

59. இல்லக் குறத்தியரும் யாக்கைநிலை வேட்டவரும்
மெல்லக் கிழங்கெடுக்கும் வேங்கடமே — நல்ல
புதுப்பூவை வண்ணத்தான் போர்முகத்துச் செவ்வாய்
மதுப்பூவை வள்நத்தான் வாழ்வு. 56

(தமக்குரிய) வீட்டில் இருக்கின்ற குறப்பெண்களும் மென்று தின்னும் பொருட்டுக் கிழங்குகளைத் தோண்டி எடுக்கப் பெற்றதும் உடம்பு (அழிதல் இன்றி நெடுநாள்) நிலைத்திருத்தலை விரும்பிய சித்தர்களும் மெதுவாக (நாளடைவில்) முதுமைப் பருவத்தை ஒழிக்கப் பெற்றதும் ஆன வேங்கடமே — சிறந்த புதிய அன்று மலர்ந்த காயாம்பூப் போன்ற கரியதிரு நிறத்தை உடையவனும் யுத்தகளத்தில்வந்த தனது திருவாயாகிய தேனையுடைய தாமரை மலரில் வைத்து ஊதுகின்ற மேன்மையுள்ள சங்கத்தை யுடையவனுமாகிய திருமால் வாழுமிடம்.

இல்லக் குறத்தியர் கிழங்கு + எடுக்கும் என்றும் யாக்கை நிலை வேட்டவர் கிழம் + கெடுக்கும் என்றும் பொருள்படும்படி பிரித்துக்கொள்க.

60. தேன்இயலும் கூந்தலார் செங்கரமும் மாதவத்தோர்
மேனியும் ஐயம்பொழியும் வேங்கடமே
—ஞானியர்கள்
தாம்குறிஎட்டு அக்கரத்தார் தாள்உரல்மேல் வைத்து
[வெண்ணெய்
தாங்குஉறிஎட்டு அக்கரத்தார் சார்பு. 57

தேன் பொருந்திய கூந்தலையுடைய மகளிரது சிவந்த கைகளும் (இரப்பவர்க்கு மிகுதியாகப்) பிச்சையிடப் பெற்றதும் சிறந்த தவத்தையுடைய முனிவர்களது உடம்பும் (மன்மதனது) பஞ்சபாணம் பொருந்தாது இருக்கப்பெற்றதும் ஆன வேங்கடமே — தத்துவ ஞானம் உடையவர்கள் குறிக்கொண்டு தியானிக்கின்ற எட்டு எழுத்து மந்திரத்துக்கு உரியவரும் உரலின் மேல் காலை வைத்து ஏறி வெண்ணெய் வைத்துள்ள உறியை எட்டிப் பிடித்த அழகிய கையை உடையவருமாகிய திருமால் திருவுள்ளம் உவந்து சார்ந்திருக்கும் இடம்.

61. காண்ஐயிலார் சொற்கேட்ட கந்தருவ ரும்தவரும்
வீணைஇரா கத்தைவிடும் வேங்கடமே — கோணை
இருங்குண்டை ஒட்டினான் ஏற்புஒழித்தான் கூனி
மருங்குஉண்டை ஒட்டினான் வாழ்வு 58

பார்க்கின்ற வேல்போன்ற கண்களையுடைய மகளிர் பேசுகின்ற சொற்களைச் செவியுற்ற கந்தர்வர் என்ற தேவ சாதியாரும், வீணையில் இசை வாசித்தலை ஒழியப் பெற்றதும் தவ ஒழுக்கத்தையுடைய முனிவர்களும் பயனில் செய்கைகளையும் ஆசையையும் துறக்கப் பெற்றதும் ஆன வேங்கடமே — வலிமையுடைய பெரு எருதை வாகனமாக வுடைய (கையில்) கபாலம் ஏந்தியவனான சிவபிரானது இரத்தல் தொழிலை நீக்கியருளியவனும், (கிருஷ்ணாவதாரத்தில்) கூனியினிடத்து உள்ள உண்டையைப் போக்கியவனுமான திருமால் வாழுமிடம்.

அவள் நைவக்கரை என்னும் பெயரினள். குண்டை - காளை. இராமாவதாரத்தில் மந்தரையின் முதுகில் மண் உண்டையைச் செலுத்தினான் என்றும் கொள்ளலாம்.

62. முந்நூல் மறையவர்நா மூதுஅரம்பை மாரின்நடு
மெய்ந்நூல் நலங்கவரும் வேங்கடமே
— பொய்ந்நூலால்
அச்சமயக் கத்தினார் ஆதரிக்கத் தெய்வங்கள்
வைச்சமயக் கத்தினார் வாழ்வு. 59

முப்புரி நூலைத் தரித்த பிராமணர்களுடைய நாவானது பொருள்களின் உண்மையைச் சொல்லுகிற தத்துவ சாஸ்திரங்களின் நற்பொருளை ஓதிக் கிரகித்தற்கு இடமானதும் பழமையான தேவமாதர்களினுடைய இடையானது பஞ்சு நூல் கெடும்படி பொருந்தியதும் ஆன வேங்கடமே — பொய்ம்மையைக் கூறுகிற சாஸ்திரங் களைக் கொண்டு அந்தந்த மதக்கோட்பாடுகளைப் பிதற்றும் தன்மையுள்ளவர்கள் விரும்பிக் கொண்டாடும் படி பல தெய்வங்களை உண்டாக்கி வைத்த மாயையை உடையவரான திருமால் வாழும் இடம்.

வடமும், வடத்தினுள் புரியும், புரியினுள் இழையும் மும்மூன்றாய் இருத்தல் பற்றி உபவீதத்துக்கு முந்நூல் என்று பெயர்.

63. ஓதும்மறை யோர்புறமும் உள்ளும் கலையின் அரு
மேதைஅகலாஇருக்கும் வேங்கடமே — கோதைகுழல்
சுற்றாத தாரணியார் தூயதிருத் தாள்ஊன்றப்
பற்றாத தாரணியார் பற்று. 60

வேதம் ஓதுகின்ற அந்தணர்களுடைய உடம்பும் பெறு தற்கு அரிய மான்தோல் நீங்காது இருக்கப்பெற்றதும் (அவர்களுடைய) மனமும் சாஸ்திரங்களின் நுட்பமான அறிவு பரந்திருக்கப் பெற்றதும் ஆன வேங்கடமே— ஆண்டாள் தனது கூந்தலில் சூடாத மாலையை அன்புடன்

அணிந்து கொள்ளாதவரும், பரிசுத்தமான சிறந்த தமது பாதங்களில் ஒன்றை ஊன்றி அளத்தற்கு இடம் போதாத நிலவுலகத்தை உடையவருமாகிய திருமால் விரும்பி வாழும் இடம்.

'பற்றாத தாரணியார் பற்று' என்ற அடியில் முரண் தொடையிருத்தல் காண்க.

64. நன்முலைபோல் வெண்நகையார் நாயகர்மேல் [வைத்தநெஞ்சும்
மென்முலையும் கற்புரஞ்சேர் வேங்கடமே — முன் [மலைந்து
தோற்றமா ரீசனார் தோற்றிமா யம்புரியச்
சீற்றம்ஆர் ஈசனார் சேர்வு. 61

அழகிய முல்லை அரும்பு போன்ற வெண்மையான பற்களையுடைய மகளிர் தம்தம் கணவரிடத்திற் செலுத்திய மனமும் பதிவிரதா தருமத்தின் வலிமை பொருந்தப் பெற்றதும், அம்மகளிருடைய மென்மையான தனங்களும் பச்சைக் கற்பூரம் பூசப்பெற்றதும் ஆன வேங்கடமே— முன்பு எதிர்த்துத் தோற்றோடின மாரீசன் மீண்டும் வந்து மாயை செய்ய அவனிடத்துக் கோபங் கொண்ட எல்லாவற்றுக்குத் தலைவரான திருமால் சேர்ந்திருக்கும் இடம்.

எதுகை நோக்கி முல்லை என்பது 'முலை' என இடைக்குறை விகாரமடைந்தது.

65. கூறுங் கிளிமொழியார் கொங்கையென்றும் கண் [என்றும்
வீறு மருப்பிணைசேர் வேங்கடமே — நாறும்
துளவமலர்க் கண்ணியார் தொண்டாய்த் தமக்கு
உள அமலர்க்கு அண்ணியார் ஊர். 62 [அன்பு

(கொஞ்சிப்) பேசுகின்ற கிளியின் சொற் போன்ற இன்சொற்களையுடைய மகளிரது தனங்கள் என்று பெருமையுற்ற இரட்டையான யானைத் தந்தங்களும் அவர்களுடைய கண்களின் நோக்கம் என்று சிறப்புப்

பொருந்திய பெண்மானும் பொருந்திய வேங்கடமே—பரிமளம் வீசுகின்ற திருத்துழாய் மலர்களால் ஆகிய மாலையை உடையவரும், தமக்கு அடிமையாகி, தம்பக்கல் பக்தியுள்ள, குற்றமற்ற அடியார்களுக்குச் சமீபிக்கின்ற வருமாகிய திருமாலினது வாசஸ்தலம்.

66. மாதர்அம்பொன் மேனி வடிவும் அவர்குறங்கும்
மீது அரம்பை யைப்பழிக்கும் வேங்கடமே—பூதம் [ஐந்தின்
பம்பரமா காயத்தார் பாடினால் வீடு அருளும்
நம்பரமா காயத்தார் நாடு. 63

மகளிரது அழகிய பொன்னிறமான உடம்பின் தோற்றமும் மேல்உலகத்திலுள்ள அரம்பை என்னும் தேவ மாதை இழிவு படுத்தப்பெற்றதும், அம்மகளிரது தொடையும் மேன்மையுள்ள (செழித்த) வாழைத் தண்டை வெல்லப் பெற்றதும் ஆன வேங்கடமே—பஞ்ச பூதங்களினாலாகிய சுழல்கிற பம்பரம் போல் விரைவில் நிலைமாறுவதான பெரிய உடம்பையுடைய சனங்கள் துதித்தால் அவர்கட்கு முக்தியை அளிக்கின்ற நமது தலைவரும், பரமாகாச மெனப் படுகின்ற பரமபதத்தையுடையவருமான திருமாலினது ஊர்.

திருவேங்கட மலையில் வாழும் மகளிர் அரம்பை யென்னும் தேவமாதினும் மேம்பட்ட வடிவழகையும் வாழைமரத்தண்டினும் அழகிதாகத் திரண்டு உருண்டு நெய்ப்பமைந்த தொடையையும் உடையவர் என்றவாறு.

67. கோள்கரவு கற்றவிழிக் கோதையர்கள் பொற்றாளும்
வேள்கரமும் அம்பஞ்சுஆர் வேங்கடமே—நீள்கரனார்
தூடணனார் முத்தலையார் துஞ்சஎய்து துஞ்சாரைக்
கூடு அணனார் முத்தலையார் குன்று. 64

ஆடவரை வருத்தும் தன்மையையும் (அவர்கள் மனத்தை) வஞ்சனையாகக் கவரும் தன்மையையும்

பயின்ற கண்களையுடைய மகளிரது அழகிய பாதமும் அழகிய செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப் பெற்றதும், மன்மதனது கையும் பஞ்சபாணங்கள் பொருத்தப் பெற்றதும் ஆன வேங்கடமே—பெரிய கரனும் தூஷணனும், திரிசிரசும் இறக்கும்படி அம்பு செலுத்தி உறங்காதவரான இலக்குமணனைச் சேர்ந்த தமையனாராகவுள்ளவரும், முத்துக்களையுடைய கடலிற்பள்ளி கொள்கின்ற வருமான திருமாலினது மலை.

அணனார் = அண்ணனார் : தொகுத்தல்

இராமன் வனவாசம் செய்த பதினான்கு வருடத்திலும் இலக்குமணன் தூங்காது இராமனுக்கும் சீதைக்கும் பாதுகாவலாய் இருந்தனன் ஆதலால் அவனுக்குத் 'துஞ்சார்' என ஒரு பெயர் கூறினார்.

68. கோங்கைக்கோடு ஏறிக் குலுக்கும்அரி யும்கரியும்
வேங்கைக்கோ டாதரிக்கும் வேங்கடமே—
[பூங்கைக்குள்
மெய்த்தவளச் சங்குஎடுத்தார் மேகலைவிட்டு
[அங்கைதலை
வைத்தவள்அச் சம்கெடுத்தார் வாழ்வு. 65

கோங்கு மரத்தைக் கிளைகளின் மேலேறி மிக அசைக்கின்ற குரங்கும் (அங்கிருந்து அருகிலுள்ள) வேங்கை மரத்தின் கிளையை விரும்பித் தாவிப்பிடிக்கப் பெற்றதும், யானைகளும் புலிகளுக்கு அஞ்சியோடாமல் அழிக்கப் பெற்றதும் ஆன வேங்கடமே—அழகிய திருக்கையினிடத்து உருவம் வெண்மையான சங்கத்தை ஏந்தியவரும், தனது ஆடையைப் பற்றுதலை விட்டு அழகிய கைகளைத் தன் தலைமேல் வைத்துக் கூப்பி வணங்கினவளான திரௌபதியினது பயத்தைப் போக்கிய வருமான திருமால் வாழும் இடம்.

வேங்கடமலையிலுள்ள யானைகள் புலிகட்கு அஞ்சி ஓடாமல் எதிர் நின்று பொருது அவற்றை அழிப்பன என அவற்றின் கொழுமையை விளக்கிய வாறு.

69. மாவில் குயிலும் மயிலும் ஒளிசெய்ய
மேவிப் புயல்தவழும் வேங்கடமே — ஆவிக்குள்
ஆனஅருள் தந்துஅடுத்தார் ஆன்நிரைக்காக் குன்று
வானவரு டம்தடுத்தார் வாழ்வு. 66 [ஏந்தி

மாமரத்தில் குயில்களும் ஒளித்துக் கொள்ளும் படியும் அங்கு மயில்களும் பிரகாசம் அடையும் படியும் பொருந்தி மேகம் சஞ்சரிக்கப் பெற்ற வேங்கடமே — பொருந்தின கருணையைச் செய்து எனது உயிரினுள் சேர்ந்தவரும் பசுக் கூட்டங்களைக் காக்கும் பொருட்டு (கோவர்த்தன) கிரியை எடுத்துக் குடையாகப் பிடித்து மேகங்களின் மழையைத் தடுத்தவருமான திருமால் வாழுமிடம்.

குயில்கள் மேகங்களின் வருகையைக் கண்டு வருந்திப் பதுங்குதலும் மயில்கள் மகிழ்ச்சியடைதலும் இயல்பு.

70. கானோடு அருவி கனகமும்முத் தும்தள்ளி
மீனோ எனக்கொழிக்கும் வேங்கடமே—வானோர்கள்
மேகன்அயன் அம்கொண்டுஆர் வேணிஅரன் காண்பு
காகநய னம்கொண்டார் காப்பு. 67 [அரியார்

காடுகளின் வழியாகக் ஓடிவருகின்ற நீர்ப்பெருக்குகள் பொன்னையும் முத்தையும் அலைத்தெறிந்து நட்சத்திரங்களோ என்று (காண்கின்றவர்கள்) சொல்லும்படி (பக்கங்களில்) ஒதுக்கப்பெற்ற அவ் அருவிகள் மிகுதியானதும்; (பிறவித்) துன்பத்தை எனக்குப் போக்குவதற்கு இடமானதும் ஆன வேங்கடமே, மேலுலகில் வசிப்பவர்களான தேவர்களும், மேகத்தை வாகனமாக உடையவனான இந்திரனும், பிரமனும், நீரைத் (கங்கை நதியின் வெள்ளத்தைத்) தரித்துப் பொருந்திய (கபர்த்தம் என்னும்) சடைமுடியையுடைய சிவபிரானும் காண ஒண்ணாதவரும்,

காகாசுரனுடைய கண்ணைப் பறித்தவருமான திருமால் எழுந்தருளி நின்று உயிர்களைப் பாதுகாக்கும் இடம்.

திருமலையிலுள்ள பாபவிநாசம், ஆகாசகங்கை முதலிய அருவிகள் நீராடுகிறவர்களுடைய பிறவித் துன்பங்களைப் போக்கவல்லன என்பர்.

71. கண்டடைந்த வானவரும் காந்தள் குலமலரும்
விண்டவிர்ந்து நிற்கின்ற வேங்கடமே—
[தொண்டருக்கு
வைகுந்தம் நாட்டான் மருவுருவம் ஈந்துவைக்கும்
வைகுந்த நாட்டான் வரை. 68

அத்திருமலையின் அழகைக் கண்டு அதனிடத்தில் வந்து சேர்ந்த தேவர்களும் தேவலோகத்தை நீங்கி நிற்றற்குக் காரணமானதும், சிறந்த சாதிக் காந்தட் செடிகளின் மலர்களும் இதழ்விரிந்து மலர்ந்து விளங்கி நிற்றற்கு இடமானதும் ஆன வேங்கடமே — தன் அடியார்களுக்கு, கூரிய சூலாயுதத்தை யமன் நாட்டாதபடி அருள் செய்பவனும், பொருந்திய தனது உருவத்தை அவ் அடியார்கட்குக் கொடுத்து, அவர்களை ஸ்ரீவைகுண்டம் என்னும் தனது தேசத்தில் நிலையாக வைப்பவனுமாகிய திருமாலினது திருமலை.

யமனுக்கும் அந்தர் ஆத்மாவாய் நின்று தொழில் செய்பவன் திருமாலே யாதலால் அவனது தொழிலைத் திருமாலின் மேல் ஏற்றிக் கூறினார்.

72. வாழ்அம் புலியினொடு வானூர் தினகரனும்
வேழங்க ளும்வலஞ்செய் வேங்கடமே — ஊழின்கண்
சற்றுஆ யினும் இனியான் சாரா வகையருளும்
நற்றா யினும்இனியான் நாடு. 69

(கற்பகாலம் அளவும் அழிவின்றி) வாழ்கின்ற சந்திரனுடனே ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற சூரியனும் பிரதட்சணம் செய்யப்பெற்ற, யானைகளும் வலிமை கொள்ளப்

பெற்ற வேங்கடமே — இனிமேல் யான் கருமவசத்தில் சிறிதும் பொருந்தாதபடி எனக்குக் கருணை செய்த நல்ல தாயைக் காட்டிலும் இனியவனான திருமாலினது திவ்விய தேசம்.

ஊழாவது — இருவினைப்பயன் செய்த உயிரையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி.

73. தாட்கமலப் பூஞ்சுனைக்கும் சாயகங்கள் கொய்துதிரி
வேட்கும் வடிவில்லா வேங்கடமே — வாட்கலியன்
நாவியப்பாம் பாட்டினார் நச்சுமடு வைக்கலக்கித்
தாவிஅப்பாம் பாட்டினார் சார்பு. 70

நாளத்தோடு கூடிய தாமரையை யுடைய அழகிய சுனைகளுக்கும் நீர் குறைதல் இல்லாததும் (தனக்கு அம்பு களாகிற) மலர்களைப் பறித்துக்கொண்டு திரிகிற மன்மத னுக்கும் உருவம் இல்லாததும் ஆன வேங்கடமே — வாட் படையை ஏந்திய திருமங்கையாழ்வாருடைய நாவினின்று வருகிற அதிசயிக்கத்தக்கபாடல்களையுடையவரும் குதித்து விஷத்தையுடைய மடுவைக் கலங்கச் செய்து அந்தக் காளியன் என்னும் பாம்பை ஆட்டின வருமான திருமால் சார்ந்திருக்குக்கும் இடம்.

திருமலையிலுள்ள சுனைகள் வடிவதில்லை. (வற்றுவது இல்லை; வடிவு + இல்லை) சாயகம் - அம்பு, திருமலை திருமங்கை யாழ்வாரால் பாடப்பெற்ற ஸ்தலம்.

74. ஆயும் துறவறத்தை அண்டினமுத் தண்டினரும்
வேயும் கிளைவிட்ட வேங்கடமே — தோயும்
தயிர்க்காத்தாம் கட்டுண்டார் தாரணியில் தந்த
உயிர்க்காத்து ஆங்கு அட்டுண்டார் ஊர். 71

சிறந்ததென்று நூல்களினால் ஆராய்ந்து கூறப்பட்ட சந்நியாச ஆசிரமத்தைப் பொருந்திய திரிதண்டத்தை யேந்திய முனிவர்களும் சுற்றத்தாரைப் பற்றறக்

கைவிடுதற்கு இடமானதும், மூங்கில்களும் கிளைகளை வெளிவிட்டுச் செழித்து வளர்தற்கு இடமானதும் ஆன வேங்கடமே—தோய்ந்ததயிரைக் களவு செய்து உண்டதற்காகத் தாம் கட்டுப்பட்டவரும், உலகத்தில் தம்மாற் படைக்கப்பட்ட உயிர்களைப் பாதுகாத்து அதன் பின்பு அழித்து விழுங்கியவருமான திருமாலினது ஊர்.

மூன்று மூங்கில்களை ஒருங்கு சேர்த்துக் கட்டினதாகிய திரிதண்டத்தைக் கையிற் கொள்ளுதல் வைஷ்ணவ சந்யாசிகளின் இயல்பு. துறவிகள் முக்கோல் பிடித்தல் காமம், வெகுளி, மயக்கம் என்னும் முப்பகையையும், மண்ணாசை பெண்ணாசை, பொன்னாசை யென்னும் ஈஷணாத் திரயங்களையும் வென்று அடக்கியதற்கும், சித்து, அசித்து, ஈசுவரன் என்னும் தத்துவத் திரயத்தைக் கைப்பற்றினமைக்கும் அறிகுறியாகும் என்பர்.

75. தொண்டொடுமெய் யன்புடையார் தூய்மனமும் [சந்தனமும்
விண்டொடுபொற் பாம்பணைசேர் வேங்கடமே— [தண்டொடுவாள்
கோல்அமரும் கார்முகத்தார் கோடுஆழியார் [குழையின்
கோலம்மருங்கு ஆர்முகத்தார் குன்று. 72

பணிவிடை செய்தலுடனே உண்மையான பக்தியையுடைய அடியார்களது பரிசுத்தமான உள்ளமும் திருமாலுடனே அழகிய ஆதிசேஷ சயனத்தைத் தியானிக்கப் பெற்றதும், சந்தன மரங்களும் உயர்ச்சியால் ஆகாயத்தை அளாவிய பொலிவான கிளைகள் பொருந்தப் பெற்றதும் ஆன வேங்கடமே — கதாயுதத்துடனே வாளாயுதத்தையும் அம்புகள் பொருந்திய வில்லையும் ஒலிக்கின்ற சங்கத்தையும் சக்கரத்தையும் உடையவரும், குண்டலங்களின் அழகு இரண்டு பக்கங்களிலும் பொருந்திய திருமுகத்தையுடையருமான திருமாலினது திருமலை.

இச் செய்யுளின் பின் இரண்டு அடிகளில் யமகம் அமைந்திருத்தல் காண்க. (யமகம் - மடக்கணி)

76. கிட்டும்நெறி யோகியரும் கிள்ளைகளும் தம்கூடு
விட்டுமறு கூடுஅடையும் வேங்கடமே — எட்டுமத
மாவென்று வந்தான் வரநாளை வாஇன்று
போ என்றுஉ வந்தான் பொருப்பு. 73

(முத்தியை) விரைவிற் சேரும் உபாயமான யோகத்திற் பயில்கிற முனிவர்களும், தமது சரீரத்தை விட்டு வேறு சரீரத்தில் புகப் பெற்றதும், கிளிகளும், தாம் வசிக்கிற கூண்டை விட்டு நீங்கி வீதிகளில் சேரப்பெற்றதும் ஆன வேங்கடமே—மதம் பிடித்த அஷ்டதிக் கஜங்களைச் சயித்து வந்தவனான இராவணன் (தன் எதிரில் போருக்கு) வர (அவனை உடனே எளிதில் வென்று) இன்று போய் நாளைக்கு வா என்று சொல்லி அவனிடத்து அன்பு காட்டியவனான திருமாலினது திருமலை.

எட்டு மதமா — ஐராவதம், புண்டரீதும், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீகம் எனப் பெயர் பெறும். இவற்றைக் கிழக்கு முதலாக முறையே கொள்க.

77. மட்டுவளர் சாரலினும் மாதவத்தோர் சிந்தையினும்
விட்டு மதிவிளங்கும் வேங்கடமே — கட்டுசடை
நீர்க்கங்கை ஏற்றான் இரப்புஒழிந்தான்
பார்க்கு அங்கை ஏற்றான் புதி 74 [நீள்குறள்ஆய்ப்

தேன்பெருகி வழியப் பெற்ற அம்மலையின் பக்கங்களிலும் சந்திரன் ஒளியை வீசி விளங்கப்பெற்றதும், பெரும் தவத்தையுடைய முனிவர்களது மனத்திலும் திருமாலை விஷயமாகக் கொண்ட ஞானச்சுடர் விளங்கப் பெற்றதும் ஆன வேங்கடமே—தொகுத்துக் கட்டிய சடையில் கங்கை நீரையுடைய ரிஷப வாகனனான சிவபிரானது யாசித்தலை நீக்கி யருளியவனும் பின்பு நீண்டு வளரும் தன்மையுள்ள

வாமன வடிவங் கொண்டு உலகத்தைப் பெறும் பொருட்டு அழகிய கையில் (மகாபலி தந்த நீரை) ஏற்றுக் கொண்டனுமான திருமாலினது திவ்விய தேசம்.

78. புக்கஅரு மாதவரும் பூமதுஉண் வண்டினமும்
மெய்க்கவசம் பூண்டிருக்கும் வேங்கடமே
—உய்க்களனை
அன்பதினால் ஆண்டார் அரிவையொடும்
வன்பதினால் ஆண்டார் வரை. 75 [கான்உறைந்த

அங்கு வருகின்ற அரிய பெரிய தவத்தையுடைய முனுவர்களும் சத்தியமாகிய கவசத்தைத் தரித்திருக்கப் பெற்றதும், மலர்களிலுள்ள தேனைக் குடிக்கின்ற வண்டு களின் கூட்டமும் (அம் மதுபானத்தாலாகிய மயக்கத்தால் தமது) உடம்பில் தம் வசம் தப்பிப் பரவசமாம் தன்மை யைக் கொண்டிருக்கப் பெற்றதும் ஆன வேங்கடமே— (தமது மெய்யடியாரை) ஒப்ப அடிமைத் திறம் இல்லாத என்னையும் அன்பினால் ஆட்கொண்டவரும், சீதா பிராட்டியுடனே வனத்தில் வசித்த கொடிய பதினான்கு வருஷங்களையுடையவருமான திருமாலினது திருமலை.

79. தக்கமறை யோர்நாவும் தண்சார லின்புடையும்
மிக்க மனுவளையும் வேங்கடமே — அக்குஅரவம்
பூண்டார்க்கு மால்துடைத்தார் பொங்குஓத
[நீர்அடைத்து
மீண்டுஆர்க்கு மாறுஉடைத்தார் வெற்பு. 76

தகுதியையுடைய அந்தணர்களின் நாக்கும் சிறந்த மந்திரம்உச்சாரணத்தால் பொருந்தப்பெற்றதும், குளிர்ந்த அம்மலைச்சாரல் களின் பக்கங்களும் மிகுதியான மனிதர் கள் பிரதட்சணம் செய்யப்பெற்றதும் ஆன வேங்கடமே— எலும்பு மாலையையும் சர்ப்பங்களையும் ஆபரணமாகத் தரித்த சிவபிரானுக்கு (பிரமகத்தி தோஷத்தாலாகிய) மயக்கத்தைப் போக்கியருளியவரும், பொங்குகின்ற அலை களையுடைய கடலை அணைகட்டி மறித்து, பின்பு

ஆரவாரிக்கும்படி அத்திருவணையை உடைத்தருளின வருமான திருமாலினது திருமலை.

80. நீடு கொடுமுடியும் நீதிநெறி வேதியர்கள்
வீடும் மகம் மருவும் வேங்கடமே — கோடும்
கருத்துள்அவ மாலையார் காணாமல் நின்ற
மருத்துளவ மாலையார் வாழ்வு. 77

உயர்ந்த அம்மலைச் சிகரங்களும் (வானத்திற் செல்லும்) மகநட்சத்திரம் பொருந்தப் பெற்றதும், நியாய மார்க்கத்தில் நடக்கின்ற அந்தணர்களுடைய கிருகங்களும் யாகங்கள் பொருந்தப் பெற்றதும் ஆன வேங்கடமே— நேர்மை தவறிய மனத்தில் வீண் எண்ணங்களின் வரிசை களை உடையவர்கள் (அடிமைக் கருத்தில்லாதவர்கள்) காண ஒண்ணாதபடி நின்ற நறு மணமுள்ள திருத்துழாய் மாலையை உடையவரான திருமால் எழுந்தருளியிருக்கும் இடம்.

81. சீதம்கொள் சாரலினும் சீர்மறையோர் இல்லிடத்தும்
வேதங்க ணால்வளரும் வேங்கடமே— போதன்
சிரித்துப் புரந்துடைத்தான் தேவரொடும் அண்டம்
விரித்துப் புரந்துஉடைத்தான் வெற்பு. 78

குளிர்ச்சியைப் பெற்ற அம்மலைப் பக்கங்களிலும் (வே+தம்+கணால்+ வளரும்) மூங்கில்கள் தம்முடைய கணுக்களோடு வளரப் பெற்றதும், சிறந்த அந்தணர் களுடைய வீடுகளிலும் நான்கு வேதங்களும் (ஓதப்பட்டு) வளர்தற்கு இடமானதும், ஆன வேங்கடமே — பிரமனும் நகைத்துத்திரிபுரத்தை அழித்தவனான சிவனும் மற்றைத் தேவர்களும் ஆகிய அனைவருடனே, அண்ட கோளங்களை வெளிப்படுத்தி (படைத்து), காத்து, அழிக்கும் தன்மை யனான திருமாலினது திருமலை.

வே — வேய் என்பதன் விகாரம்.

82. நன்கோடு போலும்முலை நாரியரும் சண்பகத்தின்
மென்கோடும் கற்பகம்சேர் வேங்கடமே — வன்கோடு
கூர்இருவ ராகனார் கோகனகை பூமிஎன்னும்
ஓர்இருவர் ஆகனார் ஊர். 79

அழகிய யானைத் தந்தத்தைப் போன்ற தனங்களை யுடைய மாதர்களும் பதிவிரதா தருமம் மனத்தில் அமையப் பெற்றதும், சண்பக மரத்தினது அழகிய கிளை களும் (மிக்க உயர்ச்சியால் தேவ லோகத்துக்) கற்பக விருட் சத்தை அளாவப் பெற்றதும் ஆன வேங்கடமே—வலிய கொப்பு (கோர தந்தம்) கூர்மையாக இருக்கப்பெற்ற பெரிய பன்றி வடிவான வரும், ஸ்ரீ தேவியும் பூதேவியும் என்னும் ஒப்பற்ற இருவரையும் தழுவும் திருமார்பை உடைய வருமான திருமாலினது தருப்பதி.

கோகநகை - தாமரைமலரில் வாழ்பவள்.

83. கோடு அஞ்சும் கோதையர்கள் கொங்கையினும்
[குஞ்சரத்தும்
வேடன் சரம்துரக்கும் வேங்கடமே — சேடன் எனும்
ஓர்பன் னகத்திடம்தான் உற்றான் இரணியனைக்
கூர்பல் நகத்துஇடந்தான் குன்று. 80

மலைச்சிகரம் அஞ்சும்படியான மாதர்களுடைய தனங்களிலும் மன்மதன் தனது புஷ்பபாணத்தைச் செலுத் தப் பெற்றதும், யானைகளின் மீதும் வேட்டுவன் அம்புகள் செலுத்தப் பெற்றதும் ஆன வேங்கடமே — ஆதிசேஷன் என்கிற ஒப்பற்ற தொரு பாம்பினிடத்தில் பொருந்திய வனும், இரணியா சுரனைக் கூரிய பல கைநகங்களினால் மார்பைப் பிளந்தவனுமான திருமாலினது திருமலை.

84. நாரியர்தம் கூந்தலினும் நாலும் அருவியினும்
வேரின்நறும் சாந்து ஒழுகும் வேங்கடமே—
[பாரினுளார்
அற்பசுவர்க் கத்தார் அறிவு அரியார் முன்மேய்த்த
நற்பசு வர்க்கத்தார் நாடு. 81

மாதர்களுடைய கூந்தலினின்றும் வாசனையை யுடைய நல்ல மயிர்ச்சாந்து ஒழுகப்பெற்றதும், கீழ்நோக்கி வருகின்ற நீர் அருவிகளிலும் வேரோடும் அற்ற சந்தன மரங்கள் அடித்துக் கொண்டு ஓடிவரப்பெற்றதும் ஆன வேங்கடமே — பூமியில் உள்ளவர்களாலும் இழிவாகிய சுவர்க்கலோகத்தில் உள்ளவர்களாலும் அறிய முடியாத வரும், முன்பு (கிருஷ்ணாவதாரத்தில்) மேய்த்த நல்ல பசுக்களின் தொகுதியை உடையவருமான திருமாலினது திவ்வியதேசம்.

85. மாதரார் கண்ணும் மலைச்சார லும்காமர்
வேதமாற்கம் செறியும் வேங்கடமே — பாதமாம்
போதைப் படைத்துவைத்தார் போர்வளைய
வாதைப் படைத்துவைத்தர் வாழ்வு. 82 [மாற்றரசர்

மகளிர்களுடைய கண்களும் காமநூல் வழியைப் பொருந்தப் பெற்றதும், மலைப்பக்கங்களும் அழகிய மூங்கில்கள் தமது உருவத்தால் வானத்தை நெருங்கப் பெற்றதும் ஆன வேங்கடமே—தமது திருவடிகளாகிய தாமரை மலர்களைக் (காளியன் என்னும் பாம்பின்) படத்தில் ஊன்ற வைத்தவரும், யுத்தத்தில் பகையரசர்கள் வளைந்து கொள்ள (அவர்களைத்) துன்பப் படுமாறு அழித்தவருமான திருமால் எழுந்தருளி யிருக்கும் இடம்.

86. எத்திக்கும் காம்பும் எயினரும் ஆரத்தினையே
வித்திக் கதிர்விளைக்கும் வேங்கடமே — தித்திக்கும்
காரிமா றன்பாவார் காதலித்தார் தம்பிறவி
வாரிமாறு அன்பு ஆவார் வாழ்வு 83

அம்மலையின் எல்லாப் பக்கங்களிலும் மூங்கில்களும் முத்துக்களையே உண்டாக்கி ஒளியை வீசப்பெற்றதும், வேடர்களும் மிகுதியாகத் தினையையே விதைத்துக் கதிர்களை விளையச் செய்தற்கு இடமானதும் ஆன வேங்கடமே—இனிமையான காரி என்பவரது திருக்குமாரரான

நம்மாழ் வாருடைய பாசுரத்தைப் பெற்றவரும், தம்மை விரும்பின அடியார்களுடைய பிறப்பாகிய கடல் நீங்குதற்குக் காரணமான அருளின் மயமாகுபவருமான திருமால் எழுந்தருளியிருக்கும் இடம்.

மாறன்பா — திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் நான்கு திவ்வியப் பிரபந்தங்கள்.

87. பார்ஓடு கான்யாறும் பல்களிறும் நந்தவனம்
வேரோடு அலைத்தீர்க்கும் வேங்கடமே — [கார்ஓதம்
சுட்டகரு வில்படையார் தொண்டரைமீண்டு
பட்டகரு வில் படையார் பற்று. 84 [ஏழுவகைப்

(அம்மலையினின்று) பூமியை நோக்கி ஓடி வருகிற காட்டாறுகளும் நமது தாகம் நிலைத்திருத்தலை நீக்கப் பெற்றதும், பலமதயானைகளும் பூந்தோட்டத்திலுள்ள மரங்களை வேருடன் அசைத்து இழுக்கப் பெற்றதும் ஆன வேங்கடமே-கருநிறமான கடலை வெதும்பச் செய்த பெரிய வில்லாகிய ஆயுதத்தை யுடையவரும், தமது அடியார்களை மறுபடி எழுவகைப்பட்ட பிறப்பில் தோன்றச் செய்யாதவருமான திருமால் விரும்பி எழுந்தருளியிக்கும் இடம்

எழுவகைப் பிறப்பு; தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன.

88. நங்காமர் வண்டினமும் நால்வாய் மதகரியும்
மென்கா மரமுழக்கும் வேங்கடமே — புன்காமம்
ஏவார் கழலார் எனது உளத்தில் என்தலைவை
பூவார் கழலார் பொருப்பு. 85

அழகிய சிறந்த சாதி வண்டுகளின் கூட்டமும் இனிமையான இசையை வாய்விட்டுப் பாடப்பெற்றதும், தொங்குகிற வாயையுடைய மதயானைகளும் அழகிய சோலைகளி

லுள்ள மரங்களைப் பெயர்த்து அசைக்கப் பெற்றதும் ஆன வேங்கடமே—(தமது அடியார்களை) இழிவான காமவழி யிற் செல்லவிடாதவரும், அடியவனான என்னுடைய மனத்தினின்று நீங்காதவரும், அடியேனுடைய தலையின் மேல் வைத்த தாமரை மலர்போன்ற திருவடிகளையுடைய வருமான திருமாலினது திருமலை.

89. பாம்பும் குளிர்சந்தின் பக்கத்தில் நிற்கின்ற
வேம்பும் மருத்துவக்கும் வேங்கடமே — காம்புகரம்
ஆனவரை நன்குடையார் ஆளாய்த் தொழுதுஏத்தும்
மானவரை நன்குடையார் வாழ்வு. 86

பாம்புகளும் காற்றை விருப்பி உணவாகக் கொள்ளப் பெற்றதும், குளிர்ந்த சந்தன மரங்களின் அருகில் நிற்கின்ற வேப்ப மரங்களும், (அவற்றின் சேர்க்கையால்) நறுமணம் வீசத் தொடங்கப் பெற்றதும் ஆன வேங்கடமே — தமது கையையே காம்பாகக் கொண்ட கோவர்த்தன கிரியாகிய நல்ல குடையை உடையவரும், தமக்குத் தொண்டராய், வணங்கித் துதிக்கின்ற மனிதர்களை மிகுதியாக உடைய வருமான திருமால் வாழுமிடம்.

90. சாரும் அருவிதவழ் சாரலும்செஞ் சந்தனத்தின்
வேரும் அரவம்அறா வேங்கடமே — நேரும்
மதுகையிட வர்க்கறுத்தார் மாமலரோன் சாப
மதுகையிட வர்க்குஅறுத்தார் வாழ்வு. 87

பொருந்திய நீர் அருவிகள் பெருகப் பெற்ற மலைப் பக்கங்களும், ஓசை நீங்காது இருக்கப் பெற்றதும், செந்நிற மான சந்தனமரங்களின் வேரும் பாம்புகள் நீங்காது இருக் கப் பெற்றதும் ஆன வேங்கடமே — எதிர்த்த மதுகைட பர் என்னும் அசுரர்களைக் கோபித்து அழித்தவரும் சிறந்த திருநாபித்தாமரை மலரில் தோன்றிய பிரமனது சாபத்தை வலிமையுள்ள ரிஷபத்தை யுடையவராகிய சிவபிரானுக்கு நீக்கினவருமான திருமால் வாழுமிடம்.

91. மண்மட்டுத் தாழ்சுனையும் வட்டச் சிலாதலமும்
விண்மட்டுத் தாமரைசேர் வேங்கடமே—எண்மட்டுப்
பாதம்உன்னி நைந்தார் பரமபதம் சேர்கஎன்று
போதமுன் நினைந்தார் பொருப்பு. 88

தரை அளவும் ஆழ்ந்துள்ள சுனைகளும் மலர்ந்த தேனையுடைய தாமரைமலர் பொருந்தப் பெற்றதும், வட்ட வடிவமான கல்லினிடமும் மேல் உலகத்தின் அளவும் தாவுகிற மான் பொருந்தப்பெற்றதும் ஆன வேங்கடமே— தமது திருவடியை எள்ளளவேனும் தியானித்து மனம் உருகினவர்கள் பரமபதம் அடையக் கடவர் என்று தமது அறிவினால்முன்பு எண்ணியருளிய திருமாலினது திருமலை.

92. போதா இருசுடரும் போதுதற்கும் ஓதுதற்கும்
வேதாவினால் முடியா வேங்கடமே — மாதாவின்
வீங்கு தனத்துக்குஇனியான் விம்மி அழாது
[ஆட்கொண்டான்
தாங்குதன்நத் துக்குஇனியான் சார்பு. 89

(கற்பகாலம் அளவும்) அழியாத சூரியர் சந்திரர் இருவரும் (ஆகாய வீதியில்) செல்லுவதற்கும் மூங்கில்கள் அளாவி வளர்தலால் இயலாததும், (தனது மகிமையைச்) சொல்லுவதற்கும் (நான்கு முகமுடைய) பிரமனாலும் நிறைவேறாததும் ஆன வேங்கடமே—தாயினது பருத்த தனங்களை உண்ணுதற் பொருட்டு இனிமேல் நான் ஏங்கி அழாதபடி என்னை அடிமை கொண்டவனும், கையில் ஏந்தியுள்ள தனது சங்கத்துக்கு இனியவனுமான திருமால் சார்ந்திருக்கும் இடம்.

93. பேய்க்கும்ஒரு பேய்போன்று பித்தாய்த்
[திரிவோர்க்கும்
வேய்க்கும்அணி முத்திவரும் வேங்கடமே—
[வாய்க்குஅமுதஊர்
வண்மைப்பேர் ஆயிரந்தான் மன்னினான்
தண்மைப்பேராய்இரந்தான் சார்பு 90 [மாவலிபால்

பேயின் கண்ணுக்கும் ஒரு பேய்போலத் தோன்று மாறு பெரும் பைத்தியங் கொண்டு திரிகிறவர்களுக்கும் (அங்குவந்த மாத்திரத்தால்) அழகிய மோட்சம் சித்திக்கும் படியானதும், மூங்கில்களிலும் அழகிய முத்துக்கள் மிகுதி யாகத் தோன்றப் பெற்றதும் ஆன வேங்கடமே— (உச்சரிப் பவருடைய) வாய்க்கு அமிர்தம் போன்ற இனிமை சுரக்கிற வளமான ஆயிரம் திருநாமங்கள் பொருந்தியவனும், மகாபலியினிடமிருந்து எளியனாய் (மூன்று அடி நிலத்தை) யாசித்தவனுமான திருமால் சாருமிடம்.

94. வாழ்க்கைமனை நீத்தவரும் வாளரியும் மாதங்க
வேட்கை மறந்திகழும் வேங்கடமே — தோள்கைவிழ
மாகவந்த னைக்கழித்தார் வாழ்இலங்கைப் பாதகரை
லோகவந்த னைக்குஅழித்தார் ஊர். 91

இல்லற வாழ்வைத் துறந்த முனிவர்களும் மாதர்களின் உடம்பினிடத்துக் காதலை முற்றும் ஒழித்து அதனை இகழப்பெற்றதும், கொடிய சிங்கங்களும் யானையைக் கொல்லும் விருப்பத்தோடு வீரம் விளங்கப்பெற்றதும் ஆன வேங்கடமே — பெரிய கபந்தன் என்னும அரக் கனைத் தோள்களோடு கூடிய கைகள் அற்று விழும்படி வெட்டித் தள்ளினவரும், இலங்கா புரியில் வாழ்ந்த பாவிக ளான இராவணன் முதலியோரை உலகத்தார் தம்மை வழிபட்டதற்கு இணங்கிக் கொன்றவருமான திருமாலி னது திருப்பதி.

95. கூட்டு தவத்தவரும் கோளரிக ளின்தொகையும்
வேட்டு வரம்பொழியும் வேங்கடமே — மோட்டுமதத்
தந்திக்கு அமலத்தார் தாம்பெறூஉம் வீடுஅளித்தார்
உந்திக் கமலத்தார் ஊர். 92

மேன்மேல் செய்து சேர்த்த தவத்தையுடைய முனிவர் களும் விரும்பி வரங்களைமிகுதியாகக் கொடுத்தற்கு இடமானதும், வலிமையுள்ள சிங்கங்களின் தொகுதியும் வேடர்கள் எய்கிற பாணங்கள் விலகப் பெற்றதும் ஆன வேங்கடமே — உயர்ச்சியையுடைய மதயானைக்கு

நிர்மலரான ஞானிகள் பெறுதற்கு உரிய முத்தியைக் கொடுத்தருளியவரும், திருநாபித் தாமரையை உடையவருமான திருமாலினது திருப்பதி.

96 வஞ்சப் மடித்திருப்பார் வாக்கும் கலைக்கோடும்
விஞ்ச மடித்திருக்கு ஆர் வேங்கடமே — கஞ்சப்
பிரமாநந் தத்தான் பிரபஞ்சம் மாய்த்த
பரமாநந் தத்தான் பதி. 93

வஞ்சனையை ஒழித்திருக்கின்ற அந்தணர்களுடைய வாயும் மிகுதியாக மடித்து மடித்துச் சொல்லப்படுகின்ற வேதங்கள் நிரம்பப் பெற்றதும், கலைமான் கொம்பும் மிகுதியாக வளைவோடு கூடிய முறுக்குப் பொருந்தப் பெற்றதும் ஆன வேங்கடமே — தாமரை மலரில் தோன்றிய பிரமனும் அழியத் தான், உலகங்களை அழித்த எல்லா ஆனந்தங்களிலும் மேலான பேரானந்தத்தை உடையவனான திருமாலினது ஊர்.

97. சேல்அஞ்சும் கண் மடவார் தேம்குழலும்
[கோங்கினமும்
மேலஞ்சு வர்க்கமார் வேங்கடமே — கோலம்சேர்
மாரில்அலங்கு ஆரத்தார் மற்றும்பல் பூண் அணிந்த
காரில்அலங் காரத்தார் காப்பு. 94

சேல்மீன்கள் அஞ்சி விலகத்தக்க கண்களையுடைய மாதர்களின் நறுமணமுள்ள கூந்தலும், மேன்மையான ஐந்துவகை பொருந்தப் பெற்றதும், கோங்கு மரங்களின் தொகுதியும் மேலேயுள்ள அழகிய சுவர்க்க லோகத்தை அளாவப் பெற்றதும் ஆன வேங்கடமே — அழகுபொருந்திய திருமார்பில் அசைகின்ற ஆரங்களை உடையவரும், மற்றும் பல ஆபரணங்களைத் தரித்த காளமேகம் போன்ற அழகுடையவருமான திருமால் உயிர்களைப் பாதுகாக்கும் இடம்.

அஞ்சுவர்க்கம் : முடி, குழல், கொண்டை, பனிச்சை, சுருள் என்னும் மயிர்முடியின் வகைகள்.

98. கொய்யும் மலர்ச்சோலைக் கொக்கும் பிணியாளர்
மெய்யும் வடுத்தவிரும் வேங்கடமே — நையும்
சனனாந் தகனார் தலையிலிதோள் சாய்த்த
சினநாந் தகனார் சிலம்பு. 95

பறித்தற்கு உரிய மலர்களையுடைய சோலையிலுள்ள மாமரமும் பிஞ்சுவிட்டு விளங்கப்பெற்றதும், நோயாளிகளுடைய உடம்பும் உடற்குற்றமாகிய அந்நோய் நீங்கப் பெற்றதும் ஆன வேங்கடமே — உயிர்கள் வருந்துதற்குக் காரணமான பிறப்பை ஒழிப்பவரும், கபந்தனுடைய தோள்களை வெட்டித்தள்ளின கோபத்தையுடைய நாந்தகம் என்னும் வாட்படையை யுடையவருமான திருமாலினது திருமலை.

99. நேர்க்கவலை நோயினரும் நீடுசிலை வேடுவரும்
வேர்க்கவலை மூலம்கல் வேங்கடமே — கார்க்கடல் [மேல்
தாண்டும்கா லத்துஇறப்பார் தம்மைவிழுங் கிக்கனி
மீண்டும்கா லத்திறப்பார் வெற்பு. 96 [வாய்

மிகுதியான கவலையைத் தருகிற நோயை யுடையவர்களும் வியர்வையடைய திருப்பாற் கடலிற் பள்ளி கொண்டருளுகிற ஆதிமூலப் பொருளைத் துதிக்கப் பெற்றதும், நீண்ட வில்லையுடைய வேடர்களும் வேரோடு கவலைக் கிழங்கைத் தோண்டப் பெற்றதும் ஆன வேங்கடமே — கருநிறமுடையதான கடல் பொங்கி மேல் எழுந்து பரவுகிற பிரளய காலத்தில் இறக்கிற உயிர்களை யெல்லாம் உட்கொண்டு தமது திருவயிற்றினுள் வைத்து மீளவும் வெளிப்படுத்துமாறு கொவ்வைப் பழம் போற் சிவந்த தமது திருவாயைத் திறந்து அருள்பவரான திருமாலினது திருமலை.

100. தண்தாமரைச்சுனையில் சாதகமும் வேடுவரும்
விண்டாரை நாடுகின்ற வேங்கடமே — தொண் [டாக்கி
ஏவத் தனக்குடையார் என்னைமுன் னாள்எடுத்த
கோவத் தனக்குடையார் குன்று. 97

குளிர்ந்த தாமரையையுடைய சுனையில் வாழ்கின்ற சாதகமென்னும் பறவையும் மேகத்தின் மழைத்தாரையை விரும்பி உணவாக கொள்ளப் பெற்றதும், வேடர்களும் பகைத்தவரைத் தேடப்பெற்றதும் ஆன வேங்கடமே — தாசனாக்கி அடிமை கொள்ளுமாறு என்னைத் தமக்கு உடைமையாக்கிக் கொண்டவரும் முன்னாளில் எடுத்துப் பிடித்த கோவர்த்தன மலையாகிய குடையை உடையவரு மான திருமாலினது திருமலை.

101. வாழ் அரியும் சந்தனம்தோய் மாருதமும் தாக்குதலால்
வேழ மருப்புகுதும் வேங்கடமே — நீழல் அமர்
பஞ்சவடி காட்டினான் பார் அளப்பான் போல்
கஞ்ச அடி காட்டினான் காப்பு. 98 [எவர்க்கும்

வாழ்கின்ற சிங்கங்களும் மோதியடித்தலால் யானைகளின் தந்தம் சிந்தப் பெற்றதும், சந்தன மரத்தின் மேற் பட்டு வருகிற காற்றும் மேற்படுதலால் மூங்கில்களும் நறுமணம் பொருந்தப் பெற்றதும் ஆன வேங்கடமே — நிழல் பொருந்திய பஞ்ச வடி யென்னும் காட்டிடத்தில் வசித்தவனும், உலகங்களை அளப்பவன் போல எல்லோர்க்கும் தாமரை மலர் போன்ற திருவடியைக் காட்சி தந்தருளியவனுமான திருமால் உயிர்களைப் பாதுகாக்கும் இடம்.

பஞ்சவடி : ஐந்து ஆலமரங்களின் தொகுதி.

102. எவ்விடமும் ஆறுதோய்ந்து எல்லோரும் பல்பாம்பும்
வெவ்விடரின் நீங்கிஎழும் வேங்கடமே —
[தெவ்விடைஏழ்
அட்டவன் நா கத்தணையான் ஆதிமறை நூல்
விட்டவன் ஆகத்தணையான் வெற்பு. 99 [மார்க்கம்

எல்லோரும் அம்மலையில் பல இடத்தும் உள்ள நதிகளில் முழுகி, கொடிய பிறவித் துன்பத்தினின்று நீங்கி எழப் பெற்றதும், பல பாம்புகளும் வெவ்விய மலை வெடிப்புக்களினின்று புறப்பட்டு மேலெழுந்து வரப் பெற்றதும் ஆன வேங்கடமே — பகைமையையுடைய ஏழு

எருதுகளை வலியழித்து வென்றவனும், ஆதி சேஷனாகிய சயனத்தை உடைய பழமையான வேத சஸ்திரங்களிற் கூறிய நன்னெறியை விலகினவனுடைய மனத்திற் சேராதவனும் ஆகிய திருமாலினது திருமலை.

103. பாடும் மதுகரமும் பச்சைத் தழைக்குடிலின்
வேடும் மணம்மருவும் வேங்கடமே — நீடு
மகரால யங்கடந்தார் வாழ்வசுதே வர்க்கு
மகர்ஆல யங்கள்தந்தார் வாழ்வு. 100

இசை பாடுவதுபோல ஒலிக்கின்ற வண்டுகளும் மலர்களின் நறுமணம் பொருந்தப் பெற்றதும், பசுமையான தழைகளால் அமைக்கப்பட்ட குடிசைகளில் வேடர்களும் கலியாணம் செய்யப்பெற்றதும் ஆன வேங்கடமே — நீண்ட கடலைத் தாண்டியவரும் வாழ்வையுடைய வசுதேவர்க்குப் புதல்வரானவரும், கோயில்களைத் தந்தருளியவருமான திருமால் வாழுமிடம்.

தற்சிறப்புப் பாயிரம்

104. ஆதிதிரு வேங்கடம்என்று ஆயிரம்பே ரான்இடம்
ஓதிய வெண்பா ஒரு நூறும் — கோதில் [என்று
குணவாள பட்டர் இரு கோகனகத் தாள்சேர்
மணவாள தாசன்தன் வாக்கு.

சிறப்புள்ள திருவேங்கடம் என்றும், ஆயிரம் திருநாமங்களை உடையவனான திருமாலினது இடமென்றும் சொன்ன நூறு வெண்பாக்களும் குற்றமில்லாத நற்குணங்களை உடையவரான பராசர பட்டரென்னும் ஆசாரியருடைய தாமரை மலர் போன்ற இரண்டு திருவடிகளைச் சரணமாக அடைந்த அழகிய மணவாள தாசனுடைய வாய்மொழியாம்.

திருவேங்கட மாலை முற்றிற்று.

2. திருவேங்கடத்து அந்தாதி

சிறப்புப் பாயிரம்

கட்டளைக் கலித்துறை

105. இக்குஅரை யந்திரத் துள்பட்ட
தென்ன இருவினையுள்
புக்குஅரை மாநொடி யும்தரி
யாதுஉழல் புன்பிறப்பாம்
எக்கரை நீக்கிப் படித்தாரை
அந்த இருவிரசைக்கு
அக்கரை சேர்க்கும் மணவாள
தாசன் அருங்கவியே.

அழகிய மணவாள தாசரது அருமையான பாடல்களானவை, தம்மை ஓதினவர்களைக் கரும்பானது நசுக்குகின்ற ஆலையென்னும் யந்திரத்தினுள்ளே அகப்பட்டுக் கொண்டாற்போல இருவகை வினைகளினுள்ளே (ஆன்மா) அகப்பட்டுக்கொண்டு அரைமா நொடியென்னும் (சிறிதளவு பொழுதேனும்) கவலையற்று நிற்காமல் அலைந்து திரிதற்கு இடமாகிற இழிவான பிறப்புகளாகிய மணல் மேட்டைக் கடக்கச் செய்து, அந்தப் பெரிய விரஜா நதிக்கு அக்கரையிலுள்ள பரமபதத்திற் சேர்த்துவிடும்.

இக்கு - கரும்பு.

காப்பு

106. நல்லஅந் தாதி திருவேங்
கடவற்கு நான்விளம்பச்
சொல்அவம் தாதின் வழுபொருள்
சோர்வறச் சொல்வித்தருள்
பல்லவம் தாதுஇசை வண்டார்
குருகைப் பரசமயம்
வெல்லவந்து ஆதி மறைதமி
ழால்செய்த வித்தகனே!

தளிர்களிலும் பூந்துகளிலும் இசைபாடுகிற வண்டுகள் மொய்க்கப் பெற்ற திருக்குருகூர் என்னும் திருப்பதியில் அயல் மதங்களை வெல்லுமாறு திரு அவதரித்துப் பழமையான வடமொழி வேதங்களைத் தமிழ் மொழியில் செய்தருளிய ஞான சொரூபியாய் உள்ளவனே! நல்ல அந்தாதியென்னும் பிரபந்தத்தைத் திருவேங்கடமுடையான் விஷயமாக நான் பாடுமாறு, சொற் குற்றங்களும் வினைப் பகுதிகளின் குற்றங்களும், பொருட் குற்றங்களும் சிறிதும் இல்லாதபடி சொல்லித்தருள்வாய்.

நூல்

107. திருவேங் கடத்து நிலைபெற்று
நின்றன சிற்றன்னையால்
தருவேம் கடத்துத் தரைமேல்
நடந்தன தாழ்பிறப்பின்
உருவேங் கள்தத்துக்கு உளத்தே
இருந்தன உற்றழைக்க
வருவேம் கடத்தும்பி அஞ்சல்என்று
ஓடின மால்கழலே. 1

மதத்தையுடைய யானையாகிய கஜேந்திராழ்வான் துன்பமுற்று ஆதிமூலமே என்று கூப்பிட, 'யாம் இதோ வருகிறோம்; நீ அஞ்சவேண்டா' என்று அபயவார்த்தை

சொல்லிக் கொண்டு, விரைந்து சென்ற திருமாலினது திருவடிகள் — திருவேங்கட மலையில் நிலையாகநின்றுள் ளன. சிறிய தாயாகிய கைகேயின் கட்டளையால் மரங்கள் வேகப் பெற்ற கடுஞ்சுரத்து நிலத்தின் மேல் நடந்து சென்றன, இழிந்த பிறப்பின் வடிவத்தையுடைய எங்களது ஆபத்தை நீக்குதற் பொருட்டு எங்கள் மனத்தில் வந்து எழுந்தருளியிருந்தன.

இது பாதவகுப்பு என்னும் பிரபந்தத்துறை கூறிய வாறாம். திருவேங்கடத்தில் எம்பெருமான் நின்ற திருக் கோலமாக எழுந்தருளியிருத்தலால் 'திருவேங்கடத்து நிலைபெற்று நின்றன' என்றார்.

நின்றன, நடந்தன, இருந்தன. ஓடின என்ற மாறு பட்டசொற்கள் நான்கையும் நான்கடிகளிலும் நிறுத்தினது முரண்தொடை.

108. மாலை மதிக்குஞ்சி ஈசனும்
போதனும் வாசவனும்
நூலை மதிக்கும் முனிவரும்
தேவரும் நோக்கிஅந்தி
காலை மதிக்குள்வைத்து ஏத்தும்
திருமலை கைம்மலையால்
வேலை மதிக்கும் பெருமான்
உறைதிரு வேங்கடமே. உ

அந்தி மாலைப் பொழுதில் விளங்குகின்ற பிறைச் சந்திரனைத் தரித்த தலை மயிர்முடியினையுடைய சிவபிரானும் பிரமதேவனும் தேவேந்திரனும் சாஸ்திரங் களை ஆராய்ந்தறிகிற முனிவர்களும் தேவர்களும் மாலைப் பொழுதிலும் காலைப் பொழுதிலும் தரிசித்துத் தமது அறிவில் வைத்துத் துதிக்கப்பெற்ற சிறந்த மலை எது வென்றால் — தனது கைகளாகிய மலைகளைக் கொண்டு திருப்பாற் கடலைக் கடைந்த திருமால் எழுந்தருயிருக்கிற திருவேங்கட மலையேயாம்.

109. வேங்கட மாலை அவியா
மதிவிளக்கு ஏற்றிஅங்கம்
ஆம்கடம் ஆலையம் ஆக்கி
வைத்தோம்அவன் சேவடிக்கே
தீங்குஅட மாலைக் கவிபுனைந்
தோம்இதின் சீரியதே
யாம்கட மால்ஐயி ராவதம்
ஏறி இருக்குமதே. 3

உறுப்புக்களையுடையதான எமது உடம்பைத் திருக்கோயிலாக அமைத்து, கெடாத அறிவாகிய திருவிளக்கை அங்கு ஏற்றி, திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற திருமாலை அவ்வுடம்பினுள் எழுந்தருளப் பண்ணி வைத்தோம். எமது பிறவித் துன்பங்களை அப்பெருமான் அழிக்குமாறு அப்பரமனுடைய செவ்விய திருவடிகளிலே பாமாலையாகிய பூமாலையைத் தொடுத்துச் சாத்தினோம். யாம், மதமயக்கத்தையுடைய ஐராவதம் என்னும் தேவலோகத்து அரச யானை மேல் தேவராஜனாய் ஏறி வீற்றிருக்கப் பெறுவோமாயின், அதுவும் இதைக் காட்டிலும் சிறந்தாமோ? ஆகாது என்றதுபடி.

முதல் மூன்றடிகள் உருவக அணியின் பாற்படும்.

110 இருக்குஆ ரணம் சொல்லும் எப்பொருள்
இன்பமும் எப்பொருட்கும்
கருக்கா ரணமும்நல் தாயும்நல்
தந்தையும் கஞ்சச் செல்வப்
பெருக்குஆர் அணங்கின் தலைவனும்
ஆதிப் பெருந்தெய்வமும்
மருக்கார் அணவும் பொழில்வட
வேங்கட மாயவனே. 4

இருக்கு முதலிய வேதங்களால் சொல்லப்படுகின்ற எல்லா வகைப் பொருள்களும், எல்லா வகை ஆனந்தங்களும், எவ்வகைப் பொருள்களுக்கும் உற்பத்திக் காரணமும், நல்ல

தாயும், நல்லதந்தையும், செந்தாமரை மலரில் வீற்றிருப்பவளும் ஐஸ்வரிய விருத்தி நிரம்பியவளுமான திருமகளின் கணவனும், முதன்மையான பெருமையையுடைய தெய்வமும் ஆகிய அனைத்தும் — வாசனையை உடையனவும் மேகமண்டலத்தை அளாவுவனவுமான சோலைகளையுடைய வடக்கின்கண் உள்ள திருவேங்கடமலையில் எழுந்தருளியிருக்கிற திருமாலேயாம்.

111. மாயவன் கண்ணன் மணிவண்ணன்
கேசவன் மண்ணும் விண்ணும்
தாயவன் கண்நன் கமலம் ஒப்
பான்சரத் தால் இலங்கைத்
தீயவன் கண்ணன் சிரம்அறுத்
தான்திரு வேங்கடத்துத்
தூயவன் கண்அன் புடையார்க்கு
வைகுந்தம் தூரம் அன்றே. 5

மாயையை யுடையவனும், கிருஷ்ணாவதாரம் செய்தவனும், நீலமணி போன்ற நிறமுள்ளவனும், கேசவன் என்னும் திருநாமம் உடையவனும்,நிலவுலகத்தையும் மேல் உலகத்தையும் அளந்தவனும் கண்கள் நல்ல செந்தாமரை மலர்போல் இருக்கப்பெற்றவனும்,இலங்காபுரியில் வாழ்ந்த கொடிய தறுகண்மை உடையவனான இராவணனது தலைகளைத் தனது அம்பினால் துணித்திட்டவனுமாகிய திருவேங்கடமலையில் எழுந்தருளியிருக்கிற பரிசுத்த மூர்த்தியான எம்பெருமான் பக்கல் பக்திப் பேரன்பையுடையவர்களான பாகவதர்களுக்கு முக்தியுலகமாகிய ஸ்ரீவைகுண்டம் எனப்படுகிற பரமபதம் சேய்மையுள்ளதன்று, (மிக்க சமீபத்தில் உள்ளது என்றபடி).

112. தூர இருப்புண் தரிக்கும்இக்
காயத்தைச் சூழ்பிணிகாள்
நேர்அ விருப்புண் டரர்க்கு அருள்
வான்நெடு வேங்கடத்தான்

ஈர இரும்புண்ட ரீகப்பொற்
பாதங்கள் என்உயிரைத்
தீர இரும்புஉண்ட நீராக்கு
மாறுள்ளம் சேர்ந்தனவே. 6

நேர்மையாக விளங்குகின்ற திருமண் காப்பை உடையவர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அருள் செய்பவனாகிய நெடிய திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற எம் பெருமானுடைய குளிர்ச்சியான பெரிய செந்தாமரை மலர் போன்ற பொலிவு பெற்ற திருவடிகள் எனது உயிரை முழுதும் காய்ந்த இரும்பு உட்கொண்ட நீர் போல் ஆகும்படி என் மனத்திற் சேர்ந்துவிட்டன ஆதலால் மாமிசத்தைக் கொண்ட எனது இந்த உடம்பைச் சூழ்ந்துள்ள நோய்களே! நீங்கள் என் உடலைவிட்டுத் தூரத்திற் போய்ப் பிழையுங்கள்.

113. சேர்ந்து கவிக்கும் முடிகவித்
தாய்சிறி யேன்இதயம்
சார்ந்துஉ கவிக்கும் வரம் அளித்
தாய் கொண்டல் தண்டலைமேல்
ஊர்ந்து கவிக்கும் வடமலை
யாய்பஞ்சு ஒழுக்கியபால்
வார்ந்துஉ கவிக்கும் பொழுதில்அஞ்
சேல்என்று வந்தருளே. 7

கிட்கிந்தை நகரத்தைச் சார்ந்து குரங்கினமான சுக்கிரீவனுக்கும் மகுடாபிஷேகம் செய்தவனே! சிறியவனான எனது மனத்திற் சேர்ந்து நின்று, மகிழ்விக்கின்ற வரங்களை எனக்குக் கொடுத்தருள் பவனே! மேகங்கள் சோலைகளின் மேல் தவழ்ந்து கவிந்து கொள்ளப் பெற்ற வடக்கிலுள்ள திருவேங்கட மலையில் எழுந்தருளியிருப்பவனே! பஞ்சைப் பாலில் நனைத்து அது கொண்டு பிழிந்து ஒழுக விட்ட பாலும் வழிந்து பெருக விக்கல் எடுக்கின்ற அந்திமதசை (எனக்கு) நேரும் பொழுதில்,

'அஞ்சாதே' என்று அபயவார்த்தை சொல்லிக்கொண்டு எஞ்முன் எழுந்தருளி எனக்கு நற்கதியருள்வாய்.

114. வந்திக்க வந்தனை கொள்என்று
கந்தனும் மாதவரும்
சிந்திக்க வந்தனை வேங்கட
நாதபல் சீவன்தின்னும்
உந்திக்க வந்தனைச் செற்றாய்
உனக்குஉரித் தாயபின்னும்
புந்திக்குஅ வம்தனைச் செய்து ஐவர்
வேட்கை பொரும என்னையே. 8

(அடியோம்) வணங்க அவ்வணக்கத்தை அங்கீகரிப்பாய் என்று பிரார்த்தித்து, முருகக் கடவுளும் பெருந்தவம் உடையவரான முனிவர்களும் தியானிக்க (அவர்கட்குப்) பிரத்யட்சமாக வந்து தோன்றினாய். திருவேங்கட மலைக்குத் தலைவனே! பல பிராணிகளையும் தின்கிற வயிற்றையுடைய கவந்தன் என்னும் அரக்கனைச் கொன்றவனே! எனது உயிர் உனக்கு உரியதான பின்பும் பஞ்சேந்திரயங்களின் சம்பந்தமான ஆசை எனது அறிவுக்கு அபாயத்தைச் செய்து, என்னைத் தாக்கி வருத்தும். (இது என்ன அநீதி என்றபடி).

தலைவனைப் பிரிந்து, மாலைப் பொழுதுக்கும் அன்றிற் குரலுக்கும் ஆற்றாது வருந்தும் தலைவிக்குத் தோழி இரங்கல்

115. பொருதரங் கத்தும் வடத்தும்
அனந்த புரத்தும் அன்பர்
கருதுஅரங் கத்தும துயில்வேங்
கடவகண் பார்த்தருள்வாய்
நிருதர்அங் கத்து நிறம்போல்
வரும் அந்தி நேரத்துஅன்றில்
ஒருதரம் கத்தும் பொழுதும்
பொறாள்என் ஒருவல்லியே. 9

மோதுகின்ற அலைகளை யுடைய திருப்பாற் கடலிலும், ஆலிலையிலும், திருவனந்தபுர மென்னும் திவ்விய தேசத்திலும், அடியார்கள் தியானிக்கின்ற திருவரங்கமென்னும் திருப்பதியிலும் பள்ளிக்கொண்டு யோக நித்திரை செய்தருள்கின்ற திருவேங்கட முடையானே! இராக்கதர்களுடைய உடம்பின் நிறம்போல் இருண்டு கறுத்துப் பயங்கரமாய் வருகிற அந்திமாலைப் பொழுதில் அன்றில் பறவை ஒருதரம் கத்துகிற பொழுதள வேனும் என்னுடைய தனித்த பூங்கொடி போன்ற இம்மங்கை சகிக்கமாட்டாள். ஆதலால் இவள் பக்கல் கடாட்சம் வைத்து அருள் செய்வாயாக.

தோத்திரப் பிரபந்தங்களில் அகப் பொருள் கிளவித் துறைகளை இடையிடையே கூறுதல் கவிசமய மாதலை இலக்கியங்கள் கொண்டு உணர்க. சிற்றின்பம் கூறும் வகையால் பேரின்பத்தைக் காட்டி நாட்டுதல் என்பர். அன்றில் என்பது ஒரு பறவை. அது எப்போதும் ஆணும் பெண்ணும் இணைபிரியாது நிற்கும் கணப் பொழுது ஒன்றை ஒன்று விட்டுப் பிரிந்தாலும் அத்துயரத்தைப் பொறாமல் ஒன்றையொன்று இரண்டு மூன்று தரம் கத்திக் கூவி அதன் பின்பும் தன் துணையைக் கூடாவிடின் உடனே இறந்து படும்.

அன்றிலை வட நூலார் கிரவுஞ்சம் என்பர்.

தலைவனைப் பிரிந்து தலைவி கடலோடு புலம்பல்

116. ஒருமாது அவனி ஒருமாது
செல்வி உடனுறைய
வரும்ஆ தவனின் மகுடம்வில்
வீச வடமலைமேல்
கருமா தவன்கண்ணன் நின்பால்
திருநெடுங் கண்வளர்கைக்கு
அருமா தவம்என்ன செய்தாய்
பணிஎனக்கு அம்புதியே. 10

கடலே! ஒரு மனைவியான பூதேவியும் மற்றொரு மனைவியான ஸ்ரீதேவியும் தன்னுடன் இருக்கவும், உதய மாகி வருகின்ற சூரியன் போலக் கிரீடமானது ஒளியை விசவும், வடக்கின்கண் உள்ள திருவேங்கடமலையின் மீது வாழ்கிற கரிய திருமேனியை உடைய மாதவன் என்றும் கிருஷ்ணன் என்றும் திருநாமங்களையுடைய திருமால் உன்னிடத்தில் அழகிய நீண்ட திருக்கண்களை மூடி நித்திரை செய்வதற்காக நீ அரிய பெரிய எவ்வகைத் தவத்தைச் செய்தாய்? எனக்குச் சொலவாய்,

அம்புதி - கடல்.

117. அம்பரம் தாமரை பூத்துஅலர்ந்
 தன்ன அவயவரை
அம்பரந் தாமரை அஞ்சன
 வெற்பரை ஆடகமாம்
அம்பரம் தாம்அரை சூழ்ந்தாரை
 வாழ்த்திலர் ஐம்புலனாம்
அம்பரம் தாம்மரை போல்திரி
 வாரை அகல்நெஞ்சமே. 11

கடலினிடத்துச் செந்தாமரை மலர்கள் தோன்றி மலர்ந் தாற்போன்ற திருமேனி உறுப்புக்களை உடையவரும், அழகிய பரமபதத்துக்கு உரிய வரும், பொன்மயமான ஆடையை (பீதாம்பரத்தை)த் தாம் இடையில் உடுத் துள்ள வருமாகிய திருவேங்கட முடையானைத் துதியா தவர்களாய் ஐம்புலன்களாகிய வெட்ட வெளியிலே தாவு கின்ற மான்கள் போலத் துள்ளியோடித் திருபவர்களான கீழ்மக்களை, மனமே! விட்டு நீங்குவாயாக.

அம்பரம் - கடல்; மேகம்.

தலைவி தோழியர்க்கு அறத்தொடு நிற்றல்

118. நெஞ்சுஉகந் தத்தை உமக்குஉரைத்
தேன்இற்றை நீடுஇரவுஒன்று
அஞ்சுஉகம் தத்தை விளைக்கும்என்
ஆசைஅது ஆம் இதழ்சொல்
கிஞ்சுகம் தத்தை அனையீர்இங்கு
என்னைக் கெடாதுவிடும்
விஞ்சுகந் தத்தை விளைக்கும்
துழாய்அண்ணல் வேங்கடத்தே. 12

வாயிதழும் சொல்லும் முறையே முருக்க மலரையும் கிளி கொஞ்சிப் பேசும் பேச்சையும் ஒத்திருக்கப் பெற்றவர் களே! என்மனம் விரும்பியதை உங்கட்குச் சொல்லுகின் றேன். இன்றைத் தினத்து நீண்ட இராத்திரி ஒன்றுமே ஐந்து யுகமாக வளர்ந்து துன்பத்தை மிகுவிக்கின்றது. அது நான் கொண்ட காதலின் காரியமாம். இனி நீங்கள் என்னை இங்கேயே வைத்திருந்து கெடுத்திடாமல் மிக்க நறுமணத்தை வீசுகின்ற திருத்துழாய் மாலையைத் தரித்த தலைவனுடைய திருவேங்கடமலையினிடத்தே (என்னைக் கொண்டு போய்ச்) சேர்த்திடுங்கள்.

'இனி யான் எம்பெருமானது நிரந்தர அனுபவம் பெற்று உய்யுமாறு என்னை நீங்கள் அவன் உகந்தருளின திருப்பதியில் கொண்டுபோய்ச் சேர்த்திடுங்கள்' என்று வேண்டுதல், இதற்கு உள்ளுறை பொருள்.

119. வேங்கடத்து ஆரையும் ஈடேற்ற
நின்றருள் வித்தகரைத்
தீங்குஅடத் தாரைப் புனைந்தேத்தி
லீர்சிறி யீர்பிறவி
தாம்கடத் தாரைக் கடத்தும்என்று
ஏத்துதிர் தாழ்கயத்துள்
ஆம்கடத் தாரை விலங்கும்அன்
றோசொல்லிற்று ஐயம்அற்றே. 13

(அறிவு ஒழுக்கங்களில்) சிறியவர்களே! எல்லாரையும் (பிறவிப் பெருங்கடலின்று) கரையேற்றிப் பாதுகாத்தற் பொருட்டு, திருவேங்கடமலையில் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளி இருக்கின்ற ஞான சொரூபியான எம்பெரு மானை உங்கள் பிறவித் துன்பங்களை அவன் அழிக்கு மாறு மாலைகளைச் சாத்தித் துதிக்கின்றீர் இல்லை. மற்று தங்கள் பிறவியைத் தாங்கள் விலக்கிக்கொள்ள மாட்டாத சிறு தெய்வங்களை ஈடேற்றுவீராக என்று சொல்லிப் பிரார்த்தித்துத் துதிக்கிறீர்கள். ஆழ்ந்த தடாகத்தில் முதலைவாயில் அகப்பட்டுக் கொண்ட மதநீர்ப் பெருக்கை யுடைய மிருகசாதியாகிய யானையும் அல்லவோ சந்தேகம் (தீர்ந்து) ஸ்ரீமந் நாராயணனை ஆதிமூலமே என்று கூப்பிட்டு) உண்மைப் பொருளை உணர்த்திற்று.

120. ஐயா துவந்தனை நாயேனை
அஞ்சன வெற்பன்என்றும்
கையாது உவந்தனை நின்னையல்
லால்கண் ணுதல்முதலோர்
பொய்யாது வந்துஅனை யார்முகம்
காட்டினும் போற்றிஉரை
செய்யாது வந்தனை பண்ணாது
வாக்கும்என் சென்னியுமே. 14

ஐயனே! அஞ்சநாத்ரி என்னும் ஒரு பெயரையுடைய திருவேங்கடத்தில் எழுந்தருளி இருக்கின்றவனே! இரு வினைத் தொடர்பு உடையேனாகிய நாய்போற்கடைப் பட்டவனான என்னை எக்காலத்தும் வெறுத்திடாதபடி மகிழ்ந்து அடியவனாக அங்கிகரித்தாய், உன்னை அல்லா மல் சிவன் முதலிய தேவர்கள் மெய்யாக வந்து, பிரத்யட்ச மாகி அவர்களுடைய முகத்தை வலியக் காட்டினாலும் எனது வாயும் தலையும் முறையே அவர்களைத் துதித்து உரைத்தல் செய்யாது; வணங்காது.

துவந்தனை-இருவினைத் தொடர்பு உடையவனாகிய என்னை.

தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆற்றாமை கண்ட செவிலித்தாய் இரங்கல்

121. சென்னி யில்அங்கை குவிக்கும்
உயிர்க்கும் திகைக்கும்நின்னை
உன்னி இலங்குஐயில் கண்ணுறங்
காள்உயர் வீடணனை
மன்னி இலங்கையில் வாழ்கஎன்ற
வேங்கட வாணமற்றுஓர்
கன்னி இலம்கைக்கில் நின்பேர்
கருணைக் கடல்அல்லவே. 15

(அறிவு ஒழுங்களினால்) உயர்ந்த விபீடணனை நிலை பெற்று இலங்காபுரியில் அரசனாய் வாழ்வாயாக என்று சொல்லி முடிசூட்டி அனுக்கிரகித்த திருவேங்கட மலையில் வாழ்பவனே! (உன்னைக் கூடிப்பிரிந்த இந்த எமது மகள்) உன்னைக் குறித்துத் தன் தலையின்மேல் அழகிய கைகளைக் கூப்பிவைத்துத் தொழுவாள்; பெருமூச்சு விடுவாள். மோகித்துக் கிடப்பாள்; உன்னையே சிந்தித் தலால் பிரகாசிக்கின்ற வேலாயுதம் போன்ற கண்களை மூடித் துயில் கொள்ளாள். (நாங்கள் இவளையன்றி) வேறொரு பெண்ணை உடையோம் அல்லோம். ஆதலால் நீ இவளை வெறுத்து விடுவையானால் நினது பெயர் தயாசிந்து என்பது தகுதியுடையது ஆகாது.

தாயாசிந்து - கருணைக்கடல். கைக்கில் - வெறுத்து ஒதுக்கு வாயானால்.

122. கடமா மலையின் மருப்புஒசித்
தாய்க்கு கவிநடத்தத்
தடமாம் அலைவற்ற வாளிதொட்
டாய்க்கென் தனிநெஞ்சமே
வடமா மலையும் திருப்பாற்
கடலும்வை குந்தமும்போல்
இடமாம் அலைவுஅற்று நின்றும்
கிடந்தும் இருப்பதற்கே. 16

மதத்தையுடைய பெரிய மலைபோன்ற குவலயா பீடம் என்னும் யானையினது தந்தங்களை ஒசித்திட்டவனும் வானர சேனைகளை நடத்தி அழைத்துக்கொண்டு இலங்கைக்குச் செல்லுதற் பொருட்டுப் பெரிதான கடல் வற்றுமாறு ஆக்னேய அஸ்திரத்தைப் பிரயோகித்தவனுமான உனக்கு வடக்கின்கண் உள்ள சிறந்த திருமலையான வேங்கட மலையும் திருப்பாற் கடலும் ஸ்ரீவைகுண்டமும் (நிற்றற்கும் கிடத்தற்கும், இருத்தற்கும் தனித்தனி இடமாதல்) போல எனது மனம் ஒன்று தானே ஸ்திரமாக நின்ற திருக்கோலமாகவும், சயனத்திருக்கோலமாகவும் வீற்றிருந்த திருக்கோலமாகவும் எழுந்தருளி இருத்தல் என்ற மூன்றுக்கும் ஒருங்கே உரிய இடமாம்.

123. இருப்பது அனந்தனில் எண்ணல்இல்
வைகுந்தத்து என்பர்வெள்ளிப்
பருப்பதன் அம்தண் மலரோன்
அறிகிலர் பார்அளந்த
திருப்பதன் நந்தன் மதலைநிற்
கும்திரு வேங்கடம்என்
பொருப்பு அதுஅனந்தல் தவிர்ந்துயிர்
காள்தொழப் போதுமினே. 17

சேதனர்களே! எம்பெருமான் அரசு வீற்றிருக்கின்றது சிந்தித்தற்கும் இயலாத ஸ்ரீவைகுண்டத்தில், ஆதிசேஷனாகிய திவ்விய சிங்காதனத்தின் மீது என்று சொல்வர். அத்திருக்கோலத்தை வெள்ளி மலையாகிய கைலாசத்தில் இருப்பவனான சிவனும், அழகிய குளிர்ந்த தாமரை மலரில் தோன்றியவனான பிரமனும் கண்டறியும் தரம் உடையவர் அல்லர். அது நிற்க உலகங்களை அளந்த திருவடிகளை உடையவனும் நந்தகோபன் வளர்த்த குமாரனுமான திருமால் நின்ற திருக்கோலமாக எழுந்தருளியிருக்கும் இடமான திருவேங்கடம் என்ற மலையைச் சோம்பல் ஒழிந்து வணங்குதற்கு வாருங்கள்.

திருப்பதி யாத்திரை சென்று, திருவேங்கட முடையானைச் சேவித்து வாழ்வு பெறுதற்கு அனைவரையும் உடன் அழைக்கிறார்.

அனந்தல் - சோம்பல்.

124. போதார்அ விந்த வரையும்
புகாஅண்ட புற்புதத்தின்
மீதுஆர இந்த வினைதீர்க்க
வேண்டும்விண் மண்ணுக்கெல்லாம்
ஆதார இந்தளம் தேன்பாடும்
வேங்கடத்து அப்பநின்பொற்
பாதார விந்தம்அல் லால்அடி
யேற்குஒரு பற்றுஇல்லையே. 18

விண் உலகத்துக்கும் மண் உலகத்துக்கும் மற்றெல்லா உலகங்கட்கும் ஆதாரமாய் உள்ளவனே! வண்டுகள் இந்தளம் என்னும் பண்ணைப் பாடுதற்கு இடமான சோலைகள் சூழ்ந்த திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற சுவாமி! உனது பொலிவு பெற்ற திருவடித் தாமரை மலரேயன்றித் தாசனான எனக்கு வேறொரு பற்றுக்கோடு இல்லை. பிரமர்கள் அழியும் அளவும் ஒடுங்குதல் இல்லாத நீர்க்குமிழிகள் போன்ற அண்ட கோளங்களுக்கு மேலே உள்ளதான பரமபதத்தில் யான் சென்று சேருமாறு என்னால் ஈட்டப்பட்ட இக்கருமங்களை யெல்லாம் நீயே ஒழித்தருளவேண்டும்.

புற்புதம் - நீர்க்குமிழி. சுவாமி என்று வட மொழியிலும் அப்பன் என்று தென்மொழியிலும் திருவேங்கட முடையானுக்குத் திருநாமம் வழங்கும். அடியேன்+கு= அடியேற்கு.

தலைவனைப் பிரிந்த தலைவியின் வருத்தங்கண்டு ஆற்றாளான தோழி, சந்திரனை நோக்கி இரங்கிக் கூறல்

125. பற்றி இராமல் கலைபோய்
வெளுத்துடல் பாதிஇரா
வற்றி இராப்பகல் நின்கண்
பனிமல்கி மாசடைந்து
நிற்றி இராக மொழிச்சியைப்
போல்நெடு வேங்கடத்துள்
வெற்றி இராமனை வேட்டாய்கொல்
நீயும்?சொல் வெண்மதியே! 19

வெண்ணிறமான சந்திரனே! ஓரிடத்தில் நிலைத்துத் தங்கி இராமல் எங்கும் உழன்று, ஒளி மழுங்கப்பெற்று அல்லது உடல் மெலிதலால் ஆடை சோரப்பெற்று, நிறம் வெளுத்து, வடிவம் பாதியும் இராதபடி தேயப்பெற்று, இரவிலும் பகலிலும் உனது கண்கள் நீர் நிரம்பப்பெற்று, மாசு அடைந்து (களங்கமுற்று) இசைப்பாட்டுப்போல் இனிய சொற்களை உடையவளான இத்தலைமகளைப் போன்று நிற்கிறாய். அவள் போலவே நீயும் உயர்ந்த திருவேங்கடமலையில் எழுந்தருளியிருக்கிற சயத்தை யுடைய இராமனாய் அவதரித்தவனான திருமாலை விரும்பினையோ? சொல்வாய்.

126. மதிஆ தவன்கதிர் மின்மினி
போல்ஒளிர் வைகுந்தம்தா
மதியாது அவன்தர வாழ்ந்திருப்
பீர்வட வேங்கடவன்
மதியா தவன்கடத் துள்தயிர்
வாய்வைத்த மாயப்பிரான்
மதியா தவன்உரங் கீண்டான்
கழல்சென்னி வைத்திருமே. 20

குடத்தில் வைத்திருந்த கடையாத கட்டித் தயிரை உண்டருளிய மாயையையுடைய பெருமானும், தன்னை மதியாதவனான இரணியாசுரனுடைய மார்பைக் கைந்நகத்தால் இடந்தவனுமான வடக்கின்கண் உள்ள திருவேங்கட மலையையுடையானது திருவடிகளில் தலையை வைத்து வணங்குங்கள். அங்ஙனம் வணங்கு வீராயின் அதன் பயனாக, சந்திரன் சூரியன் என்ற இரு சுடர்களின் ஒளியும் மின்மினிப் பூச்சி போல் ஆகும்படி விளங்குகின்ற ஸ்ரீவைகுண்டத்தைக் காலதாமதம் செய்யாமல் அப்பெருமான் உங்கட்குக் கொடுத்தருளப் பெற்று நீங்கள் அங்கு என்றும் நிலையாக வாழ்வீர்கள்.

127. இருபது மந்தரத் தோளும்
இலங்கைக்கு இறைவன்சென்னி
ஒருபதும் அந்தரத் தேயறுத்
தோன் அப்பன் உந்தி முன்னாள்
தருபது மம்தர வந்தன
நான்முகன் தான்முதலா
வருபது மம்தரம் ஒத்தபல்
சீவனும் வையமுமே. 21

இலங்காபுரிக்கு அரசனான இராவண னுடைய மந்தரமலை போன்ற இருபது தோள்களையும், பத்துத் தலைகளையும் ஆகாயத்தே அறுத்திட்டவனான திரு வேங்கடமுடையானுடைய திருநாபி ஆதிகாலத்திற் பூத்த தாமரை மலர் படைக்கப் பிரமன் முதலாக வருகின்ற பதுமம் என்னும் தொகை அளவினவான பல பிராணி வர்க்கங்களும் உலகங்களும் தோன்றின.

வையம் - (பொருள்களை) வைக்கும் இடம்.

பதுமம் - தாமரை; கோடா கோடி; ஒருபெருநிதி.

நரசிம்ம மூர்த்தியின் பேருரு

128. வையம் அடங்கலும் ஓர் துகள்
வாயு ஒருதிவலை
செய்ய மடங்கல் சிறுபொறி
மாருதம் சிற்றுயிர்ப்பு
துய்ய மடங்கல்இல் ஆகாயம்
தான்விரல் தோன்றும்வெளி
வெய்ய மடங்கல் வடிவான
வேங்கட வேதியற்கே. 22

பயங்கரமான நரசிங்க வடிவமாகிய திருவேங்கட மலையில் எழுந்தருளியிருப்பவனும் வேதங்களினால் எடுத்து உரைக்கப் படுபவனுமான எம்பெருமானுக்குப் பூமி முழுவதும் ஒரு தூசியாம். ஜலம் முழுவதும் ஒரு நீர்த்துளியாம். செந்நிறமான அக்கினி முழுவதும் சிறிய ஓர் அனற்பொறியாம். காற்று முழுவதும் சிறிய ஒரு மூச்சாம். சுத்தமானதும் மடங்குதல் இல்லாது பரந்தது மான ஆகாயம் முழுவதும் விரல்களின் இடையே தோன்று கின்ற சிறிய வெளியிடமாம்.

இரணியனைச் சங்கரித்தற்பொருட்டு நரசிங்க வடிவங் கொண்ட திருமால் விசுவரூபமாய் வளர்ந்த வடிவத்தின், பெருமையை எடுத்துக் கூறினார். இச்செய்யுளில் பஞ்ச பூதங்களும் முறை பிறழாமல் சொல்லப்பட்டது.

129. வேதா வடமலை வெங்காலன்
கையில் விடுவித்தென்னை
மாதா வடம்அலை கொங்கையுண்
ணாது அருள் மண்அளந்த
பாதா வடம்அலை மேல்துயின்
றாய்கடல் பார்மகட்கு
நாதா வடமலை யாய்அலர்
மேல்மங்கை நாயகனே. 23

பூமியை அளந்த திருவடியை யுடையவனே! பிரளயப் பெருங்கடலில் ஆலிலையின்மீது பள்ளி கொண்டு யோக நித்திரை செய் பவனே! கடல் சூழந்த நிலவுலகத்தின் அதிதேவதையான பூமிப் பிராட்டிக்குத் தலைவனே! வடக்கிலுள்ள திருவேங்கட மலையில் எழுந்தருளியிருப்பனே! அலர்மேல் மங்கைப் பிராட்டிக்குக் கணவனே! என்னைப் பிரமனும் பாசத்தால் கட்டி வருத்துகிற கொடிய யமனும் என்கிற இவர்களது கைகளினின்று விடுதல் பண்ணி, யான் இனி ஒரு தாயினது ஆரங்கள் புரளப் பெற்ற தனங்களின் பாலை உண்ணாதபடி கருணை செய்வாய்.

பிறப்பு இறப்பு இல்லாது செய்யவேண்டுகிறார்.

பத்மாவதி-வடமொழி; அலர்மேல் மங்கை-தென்மொழி.

திருமாலே பரம்பொருள்

130. நாயக ராத்திரி யும்சில
தேவர்க்கு நாண்இலைகொல்
தூயக ராத்திரி மூலம்எ
னாமுனம் துத்திப்பணிப்
பாயக ராத்திரி மேனியம்
மான்பைம்பொன் வேங்கடவன்
தீயக ராத்திரி சக்கரத்
தாற்கொன்ற சீர்கண்டுமே. 24

பரிசுத்தமான யானை ஆதி மூலமே என்று கூப்பிடுவதற்கு முன்னமே (வெகு விரைவில் என்றபடி) புள்ளிகளையுடைய படமுள்ள ஆதிசேஷனாகிய சயனத்தையும் இருள்போலும் கரிய திருமேனியையும் உடைய தலைவனும் பசும் பொன் விளையும் திருவேங்கடமலையில் எழுந்தருளியிருப்பவனான எம்பெருமான் அந்த யானையைக் கௌவியிருந்த கொடிய முதலையைச் சுழற்றிவிட்ட சக்கராயுதத்தினால் கொன்ற சிறப்பைப் பார்த்திருந்தும் கடவுளர் என்று திரிகின்ற வேறு சில தேவர்களுக்கு வெட்கமில்லையோ?

1. நாயகரா (க)த்திரியும்
2. தூய கரஅத்திரி
3. பணிப் பாயக ராத்திரி மேனி அம்மான்
4. திய கராத் திரிசக்கரத்தால்

என இவ்வாறு பிரித்துப் பொருள் கொள்க.

131. கண்ட வன்அந்தரம் கால்எரி
நீர்வையம் காத்து அவைமீண்டு
உண்ட வன்அம் தரங் கத்துஉறை
வான்உயர் தந்தைதமர்
விண்ட வன்அந்தர மேலவன்
வேங்கட மால்அடிமை
கொண்ட அனந்தரத்து உம்பேர்
நினைக்கவும் கூற்று அஞ்சுமே. 25

ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண் என்ற ஐம் பெரும் பூதங்களையும் படைத்தவனும், அவற்றைக் காத்து, பின்பு கற்பாந்த காலத்தில் உட்கொண்டு தன் வயிற்றில் வைத்தருளியவனும், அழகிய திருப்பாற் கடலிற் பள்ளி கொண்டிருப்பவனும், சிறந்த தந்தையும் மற்றை உறவினரும் இல்லாத வனும், பரமபதத்தில் எழுந்தருளி யிருப்பவனும் ஆகிய திருவேங்கடமலையில் வாழ்கின்ற திருமாலுக்கு நீங்கள் அடிமை செய்தலை மேற்கொண்ட பின்பு உங்கள் பெயரை நினைத்தற்கும் யமன் அஞ்சுவான்.

அனைவரையும் அஞ்சுவிப்பவனான யமன் திருமால் அடியார்க்கு அஞ்சுவன். ஆதலால் நீங்கள் எம்பெருமானுக்கு அடிமை பூண்டு உய்யக் கடவீர் என்று உலகத்தவர்க்கு உபதேசித்த படியாம்.

1. அந்தரம் — ஆகாயம்
2. அம்தரங்கத்து — அழகிய திருப்பாற்கடலில்
3. அந்தர மேலவன் — பரமபதத்தில் உள்ளவன்
4. அனந்தரத்து — பின்பு

132. அஞ்சுஅக் கரவட மூலத்தன்
போதன் அறிவரிய
செஞ்சக் கரவட வேங்கட
நாதனைத் தேசத்ததுள்ளீர்
நெஞ்சக் கரவட நீக்கிஇன்
றேதொழும் நீண்மறலி
துஞ்சக் கரவடம் வீசும்அக்
காலம் தொழற்கரிதே. **26**

நாட்டில் உள்ளவர்களே! பஞ்சாட்சர மந்திரத்துக்கு உரியவனும் ஆலமரத்தின் அடியில் வீற்றிருந்தவனுமான சிவபிரானும் பிரமதேவனும் அறிதற்கு அரியவனான சிவந்த சக்கராயுதத்தையேந்திய வடதிருவேங்கட முடையானை மனத்திலுள்ள வஞ்சனையை ஒழித்து இப்பொழுதே நீங்கள் வணங்குங்கள். ஏனென்றால் பெரிய வடிவமுடைய யமன் நீங்கள் இறக்கும்படி தன் கையிற் கொண்ட பாசக்கயிற்றை உங்கள் மேல் வீசும் அந்த அந்திம காலத்தில் வணங்குதற்கு இயலாது.

1. அஞ்சு அக்கரம் - பஞ்சாட்சரம்
2. செஞ்சச்கரம் - சிவந்த சக்கராயுதம்
3. கரவடம் - வஞ்சனை
4. கரவடம் - கைப்பாசக்கயிறு

133. தொழும்பால் அமரர் தொழும்வேங்
கடவன் சுடர்நயனக்
கொழும்பா லனைஒரு கூறுடை
யான்நந்த கோபன் இல்லத்து
அழும்பாலன் ஆகிய காலத்துப்
பேய்ச்சி அருந்து நஞ்சைச்
செழும்பால் அமுதென்று உவந்தாற்குஎன்
பாடல் சிறக்கும்அன்றே. **27**

நெருப்புக் கண்ணைக் கொழுமையுள்ள நெற்றியில் உடையனான சிவபிரானைத் தனது திருமேனியில் ஒரு பாகத்தில் (வலப்பக்கத்தில்) கொண்டவனும், நந்த கோபனுடைய திருமாளிகையில் அழுகின்ற குழந்தையாய்த் தான் வளர்ந்த காலத்தில் பேய்மகளாகிய பூதனை ஊட்டிய விஷத்தைச் செழித்த பாலாகிய உணவென்று விரும்பி உட்கொண்டவனுமான அடிமைத் தன்மையால் தேவர்கள் வணங்கப் பெற்ற திருவேங்கட மலையின் தலைவனுக்கு என்னுடைய கவியும் சிறந்ததாகும் அன்றோ.

134. சிறக்கும் பதந்தரு வார்திரு
வேங்கடச் செல்வர்செய்ய
நிறக்கும் பதம்தொழுது உய்யளண்
ணிர்நெறி யில்பிழைத்து
மறக்கும் பதந்தியும் சேலும்
அசுணமும் வண்டினமும்
பறக்கும் பதங்கமும் போல்ஐவ
ரால் கெடும் பாதகரே. 28

கோபகுணத்தையும் மத்தகத்தையும் உடைய யானையும் மீனும் அசுணமென்ற பறவையும் வண்டு வகைகளும் பறக்கின்ற விட்டிற் பறவையும் போல் நன்னெறியினின்றும் தவறிப்பஞ்சேந்திரியங்களால் அழிந்து போகின்ற தீவினையுடையவர்களே! நீங்கள் சிறந்த பரமபதத்தைத் தம் அடியார்க்குத் தந்தருள்பவரும் திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கின்றவரும் எல்லாச் செல்வங்கட்கும் உரியதலைவருமான எம்பெருமானுடைய சிவந்த நிறம் அமைந்த திருவடிகளை வணங்கி ஈடேறுமாறு நினையுங்கள்.

1. யானை — பரிசத்தால் அழியும் (யானை பிடிப் போர் பெண்யானையைக் கொண்டு பிடிப்பர்).
2. மீன் — ரசத்தால் அழியும்— தூண்டிலுள்ள தசை.

3. அசுணம் — சப்தத்தால் அழியும். வேடர்கள் முதலில் இசையைப் பாடிப் பின்னர் கொடிய பறையைக் கொட்டிப் பிடிப்பர்.

4. வண்டு — கந்தத்தால் அழியும், தாமரைமலர் குவியும் போது அகப்பட்டுக்கொள்ளும். (கந்தம்—வாசனை).

5. விட்டில் — ரூபத்தால் அழியும்; விளக்கொளியில் விழுந்து மாளும்.

135. பாதம் அராவுறை பாதாளத்
தூடு பகிரண்டத்துப்
போதுஅமர் ஆயிரம் பொன்முடி
ஓங்கப் பொலிந்துநின் றாய்
நீதமர் ஆனவர்க்கு எவ்வாறு
வேங்கடம் நின் றருளும்
நாத!ம ராமரம் எய்தாய்முன்
கோவல் நடந்ததுவே. 29

திருவேங்கட மலையில் நின்ற திருக்கோலமாக எழுந்தருளியிருந்து (எல்லா உயிர்கட்கும்) அருள்புரிகின்ற தலைவனே! ஏழு மராமரங்களை அம்பெய்து துளைத்தவனே! திருவடிகள் பாம்புகள் வசிக்கின்ற பாதாள லோகத்திலும் சூட்டிய மலர்கள் பொருந்திய அழகிய ஆயிரம் திருமுடிகள் இவ் அண்டகோளத்தின் மேன் முகட்டுக்கு வெளியிலும் வளர்ந்து நின்ற விசுவரூபத்தில் விளங்கி நின்றவனான நீ முற்காலத்தில் நினது அடியார்களான முதல் ஆழ்வார்களுக்குக் காட்சி கொடுத்தற் பொருட்டு திருக்கோவலூரில் அவர்கள் இருந்த இடத்திற்கு நடந்து சென்றது எங்ஙனமோ?

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற மூவரும் முதலாழ்வார்கள் எனப்படுவர்.

136. நடைக்குஅலங் கார மடவார்
விழிக்கு நகைக்குச் செவ்வாய்க்கு
இடைக்குஅலங் கார முலைக்குஇச்சை
யான இவன் என்றுஎன்னை
படைக்கலங் காணத் துரந்தே
நமன் தமர் பற்றும்அன்றைக்கு
அடைக்கலம் காண் அப்ப னே அலர்
மேல்மங்கை அங்கத்தனே. 30

சுவாமி! அலர்மேல்மங்கைப் பிராட்டியைத் திருமேனியில் (திருமார்பில்) உடையவனே! அழகுகளையுடைய இளமங்கையரது நடையழகுக்கும் கண்ணழகுக்கும் புன் சிரிப்பின் அழகுக்கும் சிவந்தவாயின் அழகுக்கும் இடையின் அழகுக்கும் புரளுகின்ற ஆரங்களை யணிந்த தனங்களின் அழகுக்கும் விரும்பி ஈடுபட்ட இவன் என்று என்னை நினைத்து யமதூதர்கள் ஆயுதங்களை யான்கண்டு அஞ்சும்படி என்மீது பிரயோகித்து என்னைப் பிடித்துக் கொண்டு போகும் அந்த அந்திம காலத்தில் என்னைப் பாதுகாத்தற் பொருட்டு நான் இன்றைக்கே உனக்கு அடைக்கலப் பொருள் ஆகிறேன் காண். காண்—தேற்றம்.

137. அங்கம் அலைக்கும் வினையால்
அலமர வோஉனக்கும்
அம்க மலைக்கும் அடிமைப்பட்
டேன் அரவு ஆனபரி
அங்க! மலைக்குடை யாய்அக்க
ராவுடன் அன்றமர்செய்
அங்க மலைக்குமுன் நின்றருள்
வேங்கடத்து அற்புதனே! 31

ஆதிசேஷனாகிய கட்டிலையுடையவனே! கோவர்த்தன மலையைக் குடையாகக் கொண்டு பிடித்தவனே! அந்த முதலையுடனே அக்காலத்தில் போர் செய்த அவயவங்களையுடைய மலைபோன்றதான யானைக்கு

எதிரில் சென்று நின்று அதனைப் பாதுகாத்தருளிய திருவேங்கடமலையில் எழுந்தருளியிருக்கின்ற ஆச்சரிய மான குணஞ் செயல்களை உடையவனே! உடம்பை வருத்துகிற தீவினையினால் வருந்துதற்காகவோ உனக்கும் (உனது மனைவியான) அழகிய திருமகளுக்கும் யான் அடிமைப் பட்டேன்.

138. அற்பர தத்து மடவார்
கலவியும் ஆங்கவர்கள்
நல்பர தத்து நடிப்பதும்
பாடலும் நச்சிநிற்பார்
நிற்பர தத்துக் கதிர்தோயும்
வேங்கடம் நின்றருளும்
சித்பர தத்துவன் தாள்அடைந்
தேன்முத்தி சித்திக்கவே. 32

சிற்றின்பத்தையுடைய இளமகளிரது சேர்க்கையையும் அவ் இளமங்கையர் நல்ல பரதசாஸ்திரமுறைப்படி நர்த்தனம் செய்வதையும், அவர்கள் பாடுகின்ற இசைப் பாட்டையும் விரும்பி நிற்கின்ற பேதையர் நிற்க, நான் அவர்களோடு சேராமல், பரமபதம் எனக்கு வாய்க்கும்படி தேரின்மேல் ஏறிவருகின்ற சூரியன் தவழப்பெற்ற திருவேங்கடமலையில் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளி யிருந்து கருணை செய்கிற ஞானமயமான பரதத்துவப் பொருளாகிய திருமாலினது திருவடிகளைச் சரண மடைந்தேன்.

139. சித்திக்கு வித்துஅது வோஇது
வோஎன்று தேடிப்பொய்ந்நூல்
கத்திக்கு வித்தபல் புத்தகத்
தீர்கட் டுரைக்க வம்மின்
அத்திக் குஇத்தனை யும்உண்ட
வேங்கடத்து அச்சுதனே
முத்திக்கு வித்தகன் என்றே
சுருதி முறையிடுமே. 33

வீடு பேற்றிற்கு மூலம் அப்பொருளோ இப்பொருளோ என்று ஆராயத் தொடங்கி, பொய்யான பரசமய நூல்களைத் தொண்டை நோகக் கதறிப்படித்து, தொகுத்த பல புத்தகங்களை உடையவர்களே! மோட்ச சாதனமான பரம்பொருள் இன்னதென்ற உண்மைப் பொருளை யான் உறுதியாகச் சொல்ல அது கேட்டு உய்ய வாருங்கள். கடல் சூழ்ந்த உலக முழுவதையும் பிரளயகாலத்தில் உட்கொண்டு அருளிய திருவேங்கட மலையில் எழுந்தருளி யிருக்கின்ற திருமாலே வீடு பேற்றுக்குச் சாதகமான ஞான சொரூபி என்றே வேதங்கள் பலமுறை வற்புறுத்திக் கூறி முழங்குகின்றன.

சரணம் அடைந்தவர்களைக் கைவிடாதவன் என்றும் அழிவில்லாதவன் என்றும் பொருள் படுகிற 'அச்சுதன்' என்ற திருநாமத்தால் குறித்ததும் இச்சந்தர்ப்பத்திற்கு ஏற்கும்.

140. முறையிடத் தேச இலங்கைசெற்
றான்முது வேங்கடத்துள்
இறைஇடத் தேசங்கு உடையான்
இனிஎன்னை ஆண்டிலனேல்
தறையிடத் தேஉழல் எல்லாப்
பிறவி தமக்கும்அளவு
உறையிடத் தேய்ந்திடும் இவ்அந்தி
வானத்து உடுக்குலமே. 34

உலகத்தவர் பலரும் குறைகூறி வேண்ட இலங்கையில் உள்ள அரக்கர்களை அழித்தவனும் இடக்கையில் சங்கத்தை உடையவனுமாகிய பழமையான திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற பெருமான் அவனை நான் சரணம் அடைந்த பின்பும் என்னை ஆட்கொள்ளாமல் விடுவன் ஆனால் நிலவுலகத்தில் யான் மாறிமாறிப் பிறந்து திரியும் பலவகைப்பட்ட பிறப்புக்களுக்கெல்லாம் உறையிட்டுத் தொகை செய்தற்கு மாலைப் பொழுதில்

வானத்தில் விளங்குகின்ற இந்த நட்சத்திர கூட்டம் எல்லாம் (போதாது) குறைந்திடும்.

141. உடுக்கும் உடைக்கும் உணவுக்கு
மேஉழல் வீர் இனிநீர்
எடுக்கும் முடைக்குரம் பைக்குஎன்செய்
வீர்இழி மும்மதமும்
மிடுக்கும் உடைக்குஞ் சரந்தொட்ட
வேங்கட வெற்பர்அண்ட
அடுக்கும் உடைக்கும் அவரடி
காண்மின் அனைவருமே. 35

உடுத்துக் கொள்ளும் ஆடையையும் உண்ணும் உணவையும் தேடிப் பெறுவதற்காகவே அலைகின்றவர்களே! இனிமேலும் நீங்கள் எடுக்க வேண்டிய முடை நாற்றத்தையுடைய உடம்புகளை (பிறப்புகளை) ஒழிப்பதற்கு என்ன உபாயம் செய்வீர்கள்? ஒழுகுகின்ற மூன்று வகை மத நீரையும் வலிமையையும் உடைய யானையைத் (கஜேந்திராழ்வானை) தொட்டருளிய திருவேங்கட மலையை யுடையவரும் அண்டகோளங்களின் வரிசைகளை யெல்லாம் சங்கார காலத்தில் அழிக்கின்ற வருமான எம்பெருமானுடைய திருவடிகளை நீங்கள் எல்லாரும் தரிசியுங்கள்

தரிசித்தால் இனிப்பிறவி எடாமல் முத்திபெற்று உய்வீர் என்பது குறிப்பு.

142. வரும்மஞ்சு அனவன் ஒருவனை
யேஉன்னி வாழ்த்தும்தொண்டர்
கருமம் சனனம் களைந்துய்ய
வேண்டில் கருதிற்றெல்லாம்
தரும்அஞ் சனவெற்பன் தாள்தா
மரையைச் சதுமுகத்தோன்
திருமஞ் சனம்செய் புனல்காணும்
ஈசன் சிரம்வைத்ததே. 36

அடியார்களே! ஊழ்வினையினால் ஆகிற பிறப்புக்களை (நீங்கள்) ஒழித்து வாழவேண்டு வீராயின் (மழைபொழிய) வருகிற நீர்கொண்ட காளமேகத்தைப் போன்றவனான ஒப்பற்ற திருமாலையே தியானித்துத் துதியுங்கள். அடியார்கள் நினைத்த பொருள்களையெல்லாம் அவர்கட்குக் கொடுத்தருள்கிற திருவேங்கடமுடையானாகிய இந்த ஸ்ரீமந் நாராயணனுடைய தாமரை மலர்போன்ற திருவடியை நான்கு முகங்களை உடையவனான பிரமன் திருமஞ்சனம் செய்த தீர்த்தமன்றோ சிவபிரான் தலையில் தரித்தது?

143. சிரம்தடி வான்இவ னோஎன்று
அயன்வெய்ய தீயசொல்லக்
கரம்தடி வான்தலை கவ்வப்பித்
தேறலின் கண்ணுதலோன்
இரந்துஅடி வீழத் துயர்தீர்த்த
வேங்கடத்து எந்தைகண்டீர்
புரந்துஅடி யேனைத்தன் பொன்னடிக்
கீழ்வைக்கும் புண்ணியனே. 37

எனது தலையைக் கொய்பவன் இவனோ என்று பிரமன் கொடிய தீச்சொற்களைக் கூறி இகழ (சிவபெருமானது) கை தசையையுடைய பெரிய (பிரமனது) தலையைக் கொய்திட (அதுபற்றி) பைத்தியங் கொண்டதனால் நெருப்புக்கண்ணை நெற்றியில் உடையவனான அச்சிவபிரான் பிச்சை ஏற்றுவந்து திருவடிகளில் விழுந்து வணங்க, அவனது துன்பத்தைப் போக்கியருளிய திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் அன்றோ தாசனான என்னைப் பாதுகாத்து, தன்னுடைய அழகிய திருவடியில் வைத்தருளும் பரிசுத்த மூர்த்தியாவான்.

144. புண்ணியம் காமம் பொருள்வீடு
பூதலத் தோர்க்களிப்பான்
எண்ணிஅம் காமன் திருத்தாதை
நிற்கும் இடம் என்பரால்
நண்ணிஅங்கு ஆம்அன் பரைக்கலங்
காத்திரு நாட்டிருத்தி
மண்இயங் காமல் பிறப்பறுத்து
ஆளும் வடமலையே. 38

விரும்பி அவ்விடத்து வந்து சேர்கின்ற பக்தர்களை எக்காலத்தும் நிலைகலங்குதல் இல்லாத சிறந்த இடமாகிய பரமபதத்தில் இருக்கவைத்து, மீண்டும் நிலவுலகத்தில் உழலாதபடி அவர்களுடைய பிறப்பையொழித்து அவர்களை ஆட்கொள்கின்ற வடக்கின்கண் உள்ள திருமலையாகிய திருவேங்கடத்தை—அழகிய மன்மதனது சிறந்த தந்தையான திருமால் அறம் இன்பம் பொருள் வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் நிலவுலகத்தில் வாழ்கிற மக்களுக்குக் கொடுத்தருள நினைத்து எழுந்தருளி நிற்கிற இடம் என்று சொல்லுவர் ஆன்றோர்.

உறுதிப் பொருள் நான்கையும் செய்யுள் நோக்கி முறை பிறழ வைத்தார்.

145. வடம்அலை அப்பன் னகம்சேர்ந்
தவன்இடை மங்கைகொங்கை
வடம்அலை யப்பன் அரும்போகம்
துய்த்தவன் மாயன்கண்ணன்
வடமலை அப்பன் அருள்போற்றி
ஐவர் மயக்குகர
வடம்அலை யப்பன் னிருநாமம்
நாவின் மலக்குவனே. 39

(பிரளயப் பெருங்கடலில்) ஆலிலையிலும் திருப்பாற் கடலில் ஆதிசேஷனாகிய அந்தப் பாம்பினிடத்திலும்

படுத்துக் கண்வளர்ந்தவனும், இடையர் சாதிப் பெண்ணான நப்பின்னைப் பிராட்டியினது தனங்களில் அணிந்த ஆரங்கள் அசையும்படி சொல்வதற்கரிய (அளவிறந்த) இன்பத்தை அனுபவித்தவனும், அற்புத சக்தி யுள்ளவனும், கிருஷ்ணாவதாரம் செய்தவனுமான திருவேங்கடமுடையானது திருவருளைத் துதித்து, பஞ்சேந்திரயங்கள் மனத்தை மயங்கச் செய்கிற வஞ்சனை ஒழியுமாறு அப்பெருமானுடைய பன்னிரண்டு திருப்பெயர் களையும் நாவினால் யான் விடாமற் சொல்வேன்.

பன்னிரண்டு நாமங்களாவன:—

1.	கேசவன்	7.	திருவிக்கிரமன்
2.	நாராயணன்	8.	வாமனன்
3.	மாதவன்	9.	ஸ்ரீதரன்
4.	கோவிந்தன்	10.	ரிஷிகேசன்
5.	விஷ்ணு	11.	பத்மநாபன்
6.	மதுசூதனன்	12.	தாமோதரன்

146. மலங்கத் தனத்தை உழன்றீட்டி
மங்கையர் மார்பில்வடம்
அலங்கத் தனத்தை அணையநிற்
பீர்அப்பன் வேங்கடத்துள்
இலங்கத் தன்அத்தை மகன்தேரில்
நின்றெதிர் ஏற்றமன்னர்
கலங்கத் தனத்தைக் குறித்தோனை
மேவக் கருதுமினே! 40

மனங்கலங்க செல்வத்தைப் பலவிடத்தும் அலைந்து சேர்த்து இளமகளிரது மார்பில் அணிந்துள்ள ஆரங்கள் புரளும்படி அவர்களது கொங்கையைத் தழுவ முயன்று நிற்பவர்களே! சுவாமியும், திருவேங்கட மலையில் எழுந் தருளி விளங்குகின்ற தலைவனும், அத்தை முறையான குந்தியின் குமாரனாகிய அருச்சுனனது தேரில் (பாகனாய்)

நின்று, எதிரில் பகைத்து வந்து நின்ற அரசர்கள் நடுங்கும் படி தனது (பாஞ்ச சன்யமென்னும்) சங்கத்தை ஊதி முழக்கினவனுமான எம்பெருமானைச் சரணடைய நினையுங்கள்.

இச் செய்யுளின் முன் இரண்டடி யமகம் (யமகம் - மயக்கணி) பின் இரண்டடி திரிபு. (திரிபு - வேறுபாடு; விகாரம்.)

அனன்னிய கதித்துவம்

147. கருத்துஆ தரிக்கும் அடியேனைத்
தள்ளக் கருதிக்கொலோ
திருத்தாது அரிக்கும்ஐ வர்க்கிரை
யாக்கினை செண்பகத்தின்
மருத்தாது அரிக்கும் அருவிய
றாவட வேங்கடத்துள்
ஒருத்தா தரிக்கும் படிஎங்ங
னே இனி உன்னைவிட்டே. 41

சண்பக மலர்களினுடைய வாசனையுள்ள மகரந்தப் பொடிகளை அரித்துக் கொண்டு வருகிற நீர் அருவிகள் எந்நாளும் இடைவிடாது பெருகப் பெற்ற வடக்கின்கண் உள்ள திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற ஒப்பற்ற கடவுளே! மனத்தில் உன்னையே விரும்புகிற தாசனான என்னை (உன் பக்கல் சேர்த்துக் கொள்ளாமல்) தள்ளிவிட எண்ணியோ (ஆட்கொண்டு) சீர்திருத்தாமல் கெடுக்கின்ற பஞ்சேந்திரியங்களுக்கு என்னை உணவாக்கி விட்டாய், இனி நான் உன்னையன்றி உய்யும் வகை எவ்வாறோ?

அனன்னிய கதித்துவம் — அதாவது — திருவேங்கட முடையானை யன்றி வேறொரு ரட்சகனை யின்றி இருப்பது.

148. உன்னைக் கரிய மிடற்றன்
அயன்முதல் உம்பரெல்லாம்
பொன்னைக் கரியொத்த போதும்ஒவ்
வார்புகழ்க் கோசலையாம்
அன்னைக் குஅரியமுத்தே அப்பனே
உன்னை யன்றிப்பின்னை
முன்னைக் கரியளித் தாய்க்குவ
மான மொழியில்லையே. 42

கீர்த்தியையுடைய கௌசல்யையாகிய தாய்க்கு அருமையான முத்துப் போன்ற குமாரனே! திருவேங்கட முடையானே! கரியானது பொன்னை ஒத்த போதிலும் நீல கண்டனான சிவன் பிரமன் முதலிய தேவர்கள் அனைவரும் உன்னை ஒக்க மாட்டார்கள். ஆதலால் முன்பு கஜேந்திராழ்வானைப் பாதுகாத்தவனான உனக்கு உன்னையே உவமானமாகக் கூறுவதன்றி வேறோர் உவமானம் கூறும் வகை இல்லை.

கோசலை — தட்சண கோசலத்தரசன் மகள் (தத்திதாந்த நாமம்) தசரதன் — உத்தர கோசலத்து மன்னன்.

149. இல்லைக்கண் டீர்இன்பம் துன்பம்கண்
டீர்கண்ட ஏந்திழையார்
சொல்லைக்கண்டு ஈரமுது என்னும்தொண்
டீர்தொல் அசுரன் நிறம்
கல்லைக்கண் டீரவத் தைத்திரு
வேங்கடக் காவலனை
மல்லைக்கண் தீர்தரத் தேய்த்தானை
வாழ்த்துமின் வாழுகைக்கே. 43

கண்ணுக்கு இலக்காகிய தரித்த ஆபரணங்களை யுடைய மகளிரது சொற்களை இனிமையினால் கற்கண்டு என்றும் குளிர்ந்த அமிருதம் என்றும் சொல்லுகிற அவர் களுக்குத் தொண்டு பூண்டு ஒழுகுபவர்களே! அது உண்மை

யான இன்பம் இல்லையென்று அறிவீர்கள். பலவகைத் துன்பமே உண்டென்று அறிவீர்கள். இனி நீங்கள் பேரின்ப வாழ்வு பெறுகைக்காகப் பழமையான இரணியாசுரனுடைய மார்பைக் கீண்ட அழகிய சிங்கமூர்த்தியானவனும் மல்லர்களைக் கண கெடும்படி தேய்த்தவனுமான திருவேங்கட முடையானைப் பல்லாண்டு பாடித் துதியுங்கள்.

கண் தீர்தர—கண்ணோட்டம் இல்லாமல் எனினுமாம்.

150. கைத்தனு மோடுஇசை வெற்பெனக்
காணவெவ் வாணன்என்னும்
மத்தன் நு மோடுஇகல் செய்வன்என்
றேவந்து வையுறுவேல்
அத்தனும் மோடியும் அங்கியும்
ஓடஎன் அப்பனுக்குப்
பித்தனும் ஓடினன் அங்கத்துத்
தான்என்றும் பெண்ணன் என்றே. 44

கையிலேந்திய வில்லானது உயர்ச்சி பொருந்திய மலைபோலத் தோன்றக் கொடிய பாணாசுரன் என்கிற உன்மத்தன் 'உம்முடனே போர் செய்வேன்' என்று வீரவாதம் கூறிக் கொண்டே கண்ணபிரானுடன் போருக்கு வந்த போது எம்பிரானாகிய அத் திருவேங்கட முடையானுக்கு முன் கூர்மை மிக்க வேலாயுதத்தை யோந்திய கையை உடையவனான முருகக் கடவுளும், துர்க்கையும், அக்கினியும் தோற்று ஓடப் பித்தனாகிய சிவனும் உடம்பில் தான் எப்போதும் பெண்ணை உடையவன் என்று சொல்லிக்கொண்டு ஓடினான்.

151. பெண்ஆக்கு விக்கச் சிலைமேல்
ஒருதுகள் பெய்தபொற்றாள்
அண்ணாக்கு விக்கல் எழும்போது
எனக்கருள் வாய்பழிப்பு

நண்ணாக்கு விக்கச்சு இளமுலைப்
பூமகள் நாயகனே
எண்ஆக்கு விக்கக் குழலூதும்
வேங்கடத்து என்கண்ணனே! 45

யாதொரு நிந்தனையும் அடையாத குவிதலை உடையனவும் கச்சணிந்தனவும் என்றும் இளமை மாறாதனவுமான தனங்களை உடையவளும் செந்தாமரை மலரில் வாழ்பவளும் ஆகிய திருமகளுக்குக் கணவனே! மிகப் பலவான பசுக்களை ஒருங்கு சேர்த்தற் பொருட்டு, புள்ளாங்குழலை ஊதியருளிய திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற எனது கண்ணபிரானே! (ஒரு கல்லை அகல்யையென்னும்) பெண்ணாகச் செய்விக்குமாறு அக்கல்லின் மேல் ஒரு தூளியை இட்ட நினது அழகிய திருவடிகளை, உள் நாக்கிலிருந்து விக்குள் உண்டாகும் போது (அந்திம காலத்தில்) அடியேனுக்குத் தந்தருள்வாய்.

'திருவடியே வீடாயிருக்கும்' என்ற கோட்பாடு பற்றி 'தாள் எனக்கு அருள்வாய்' என்றனர் என்க.

152. கண்நனை யேன்நெஞ்சு உருகேன்
நவைகொண்டென் கண்ணும்நெஞ்சும்
புண்அனை யேன்கல் அனையேன்என்
றாலும்பொற் பூங்கமலத்
தண் அனை யேநல்ல சார்வாக
வேங்கடம். சார்ந்துமணி
வண்ணனை யேயடைந் தேற்குஇல்லை
யோதொல்லை வைகுந்தமே. 46

(பக்தி மிகுதியால் ஆகிற ஆனந்தக் கண்ணீரினால்) கண்கள் நனையப் பெறுகிறேன் இல்லை. மனம் உருகப் பெறுகிறேன் இல்லை. அவைகளைக் கொண்டு எனது கண்ணும் மனமும் முறையே புண்களுக்கு ஒப்பானவன் ஆயினேன். கல்லுக்கு ஒப்பானவன் ஆயினேன். இங்ஙனம்

ஆனாலும் அழகிய செந்தாமரைப் பூவில் வீற்றிருக்கின்ற தண்ணளியையுடைய தாயான பெரிய பிராட்டியாரையே நல்ல துணையாகக் கொண்டு, திருவேங்கட மலையை அடைந்து நீலமணிபோலும் திருநிறம் உடையவனான எம்பெருமானையே சரண்புக்கவனாகிய எனக்கு அநாதியான பரமபதம் கிடையாமற் போகுமோ? நிச்சயமாய்க் கிடைக்கும் என்றபடி.

பக்தி வசப் படுதலால், ஆகும் மெய்ப்பாடுகளினால் குறைவுற்றிருந்தாலும் பிராட்டி புருஷாகாரமாகப் பெருமாள் பக்கல் சரண் புக்கது பழுதுபடாது பரகதி பெறுவிக்கும் என்பதாம்.

153. வைகுந்தம் ஆய விழிமாதர்
 வேட்கையை மாற்றிஎன்னை
வைகும்தம் ஆய வினை நீக்
 கியமுத்தர் மாட்டிருத்தி
வைகுந்தம் மாய ஒசித்தாய்
 வடதிரு வேங்கடவா
வைகுந்த மாயவ னேமாசி
 லாதஎன் மாமணியே. 47

குருந்த மரம் அழியும்படி முறித்திட்டவனே! வடக்கின் கண் உள்ள திருவேங்கட மலையில் எழுந்தருளியிருப்பவனே! நீ வைகுண்டத்துக்குத் தலைவனான திருமாலே! குற்றமில்லாத எனது தலைவனான சிறந்த மாணிக்கம் போன்றவனே! கூரிய வேற்படை போன்ற கண்களையுடைய மகளிர் பக்கல் (உண்டாகிற) ஆசையை ஒழித்து என்னை, தங்கிய தமது தொகுதியான கருமத்தைப் போக்கிய முக்தர்களில் ஒருவனாக இருக்கச் செய்து வைத்தருள்வாய்.

பிரிவாற்றாத தலைவியின் துயர்கண்ட செவிலித்தாய் இரங்கல்

154. மணிஆழி வண்ணன் உகந்தாரைத்
தன்வடிவு ஆக்கும்என்றே
துணியா ழியமறை சொல்லும்தொண்
டீரது தோன்றக்கண்டோம்
பணியாழின் மென்மொழி மாலாகிப்
பள்ளிகொள் ளாமற்சங்கோடு
அணிஆழி நீங்கிநின் றாள்வேங்க
டேசனை ஆதரித்தே. 48

அன்பர்களே! நீலமணியும் கடலும் போன்ற திருநிறம் உடையவனான திருமால் தன்னை விரும்பினவர்களைத் தன்னைப் போன்ற வடிவம் உடையவராகச் செய்து விடுவான், என்றே பொருள்களைத் துணிந்து கூறுவதும் ஆழ்ந்த பொருள் உள்ளதுமான வேதம் சொல்லும், அத்தன்மை இங்குக் கட்புலனாகத் தெரியப் பார்த்தோம். (எங்ஙனமெனின்) நுனிவளைந்த வீணையின் இசை போன்ற மென்மையான சொற்களையுடைய இப்பெண் திருவேங்கடமுடையானான அத்திருமாலை விரும்பி (அவனைப் போலவே) மால் ஆகி பள்ளி கொள்ளாமல் சங்கோடு அணி ஆழிநீங்கி நின்றாள்.

கடவுளின் சாருப நிலை: கடவுளின் அருகில் வாழ்தல்.

தலைமகளுக்கு

மாலாகுதல் — ஆசைமயக்கம் உடையவளாதல்.
பள்ளி கொள்ளாமை — விரகவேதனையால் எப்போதும் படுக்கை கொள்ளாமை.

சங்கோடு அணி ஆழி நீங்கிநிற்றல் — (பிரிவுத் துயரால் உடல் மெலிந்தமை பற்றிக்) கையில்அணிந்த சங்க வளைகளும் விரலில் அணிந்த மோதிரமும் கழன்று விழப் பெறுதல்.

குறிப்பு :- திருவேங்கடமுடையான் தனது சங்கு சக்கரங்களைத் தொண்டைமான் சக்கரவர்த்திக்குக் கொடுத்து விட்டதனால் சிலகாலம் திருக்கைகளில் திருவாழி, திருச்சங்கு இன்றியிருந்தமை இதில் குறிப்பிடப் படுகிறது. இதுபற்றி 159 ஆம் பாடலிலும் குறிப்பு உள்ளது.

155 ஆதரிக் கப்பட்ட வாள்நுதல்
மங்கையர் அங்கைமலர்
மீதரிக் கப்பட்ட நின்அடி
யேவெள் அருவிசெம்பொன்
போதரிக் கப்பட்டஞ் சூழ்வேங்
கடவெற்ப போர்அரக்கர்
தீதுஅரிக் கப்பட்ட கானகத்
தூடன்று சென்றதுவே. 49

வெண்ணிறமான நீர் அருவிகள் சிவந்த பொன்னையும் மலர்களையும் அரித்துக்கொண்டுவர நீர் நிலைகள் சூழப் பெற்ற திருவேங்கடமலையை யுடையவனே! பொற்பட்டத்தையணிந்த பிரகாசமான நெற்றியை யுடைய பட்டத்து மனைவியர் அன்புசெய்யவும் அழகிய தாமரை மலர் போன்ற தங்கள் கைகளின் மீது தாங்களும் பெற்ற உனது திருவடியே அந்நாளில் (இராமாவதாரத்தில்) போர் செய்யவல்ல இராக்கதர்களால் ஆகிய தீங்கை அழிப்பதற்கு உலர்ந்த காட்டிற் சென்றது. சிறந்த நினது திருவடிகள் கானகம் சென்றனவே என்று இரங்கிக் கூறுகின்றார்.

கிள்ளை விடு தூது

156. சென்றவ னத்து அத்தை மைந்தரை
வாழ்வித்துத் தீய மன்னர்
பொன்றஅ னத்தத்தை செய்தபி
ரான்புகழ் வேங்கடத்துள்

நின்றவன் அத்தத்துஐ ஆயுதன்
பாதத்துஎன் நேசம்எல்லாம்
ஒன்றவ னத்தத்தை காள்உரை
யீர்அறம் உண்டு உமக்கே. 50

அழகிய கிளிகளே! (பன்னிரண்டு வருஷம்) வனவசாம் சென்ற காட்டினிடத்துத் தனது அத்தையான குந்தியின் புத்திரர்களாகிய பாண்டவர்களைத் (தீங்கின்றி) வாழச் செய்து, பின்பு கொடிய (துரியோதனன் முதலிய) அரசர்கள் அழியுமாறு அவர்கட்குக் கேட்டைச் செய்த பிரபுவும் திருக்கைகளில் ஐந்து ஆயுதங்களை யுடையவனுமான கீர்த்தியையுடைய திருவேங்கடமலையில் நின்ற திருக்கோலமாக எழுந்தருளியிருக்கிற எனது தலைவனுடைய திருவடிகளில் எனது அன்பு முழுவதையும் பொருந்தச் சொல்லுங்கள். உங்கட்குப் புண்ணியம் உண்டு.

தலைவனைப் பிரிந்த தலைவி இங்ஙனம் சொல்லி தலைவனிடத்துக் கிளிகளைத் தூது செல்ல வேண்டுகிறாள்.

ஐயங்கார் தமது ஆற்றாமையை ஆசாரிய மூலமாக எம்பெருமானுக்குத் தூது தெரிவித்துத் தமது துயரம் தணியக் கருதி அவர்களைத் தமக்குப் புருஷகாரமாகும் படி வேண்டுதல், இதற்கு உள்ளுறைப்பொருள்.

பறவைகட்கு இரண்டு இறகுகள் போல ஆசாரியர்க்கு ஞானமும் அனுட்டானமும் உயர்கதிச் செலவுக்கு உறுதுணை என்க.

தலைவி செவிலயர்க்கு அறத்தொடு நிற்றல்

157. உண்ட மருந்துகைக் கும்அன்னை
மீர்மதன் ஓர் ஐந்து அம்பும்
கொண்டுஅ மர்உந்துகைக் கும்குறு
காமுனம் கோவ்வைச்செவ்வாய்

அண்டம் அருந்துகைக் கும்திறந்
தான் அப்பன் போல்பரியும்
எண்த மரும்துகைக் கும்பொடி
காப்பிடும் இன்றெனக்கே 51

தாய்மார்களே! உண்ணப்படுகிற அமிருதமும் எனக்குக் கைக்கும். மன்மதனும் தனது ஒப்பற்ற ஐந்து அம்புகளையும் கொண்டு, போர் செய்வதற்கு வந்து நெருங்குவதற்கு முன்பு இப்பொழுதே எனக்கு, கோவைப் பழம் போன்ற சிவந்த வாயை அண்டகோளங்களை விழுங்குவதற்காகவும் திறந்தவனான திருவேங்கடமுடையான்போலவே உயிர்கள் பக்கல் அன்பு கொள்ளுகின்ற மதிக்கத்தக்க அடியார்கள் மிதிக்கின்ற திருவடிப் புழுதியைக் காப்பாக இடுங்கள்.

158. எனக்குப் பணியப் பணியொரு
கால் இரு காலும் நல்க
உனக்குப் பணி இங்கு இருவேம்
பணியில்என் ஓர்பணியும்
நினக்குப் பணிவித்துக் கொண்டுஉன்
பணிநீ பணித்திலைஎன்
தனக்குப் பணிவெற்பின் மீதோங்கி
நின்ற தனிச்சுடரே! 52

சேஷகிரி எனப்படுகிற திருவேஙகட மலையின்மேல் உயர்ந்து நின்ற திருக்கோலமாய் எழுந்தருளியிருக்கிற ஒப்பற்ற ஒளிவடிவமானவனே! (தலைவனான உன்னை) ஒரு தரம் வணங்குதல் (அடியவனான) எனக்கு உரிய தொழில் உனது இரண்டு திருவடிகளையும் கொடுத்தல் தலைவனான உனக்கு உரிய தொழில் இவ்வாறு குறித்த நம் இருவரது வேலைகளில் எனது தொழிலை மாத்திரம் செய்வித்துக் கொண்டு உனது தொழிலை எனக்கு நீ செய்கின்றாய் இல்லை.

யான் உன்னை ஒருகால் சரணடைந்தேன் ஆதலால் நீ எனக்கு முத்தி தந்தருள வேண்டும் என்பதாம்.

தலைவியின் பிரிவாற்றாமை கண்ட செவிலி இரங்கல்

159. தனித்தொண்டை மானிலத் தேபுரி
வார்க்குஅருள் தாள்உடையாய்!
தொனித்தொண்டை மானெடு வாய்பிளந்
தாய்துங்க வேங்கடவா!
முனித்தொண்டை மான்கையிற் சங்காழி
நல்கிஎன் மூரல்செவ்வாய்க்
கனித்தொண்டை மான்கையிற் சங்காழி
கோடல் கருமம்அன்றே. 53

பெரிய நிலவுலகத்தில் ஒப்பற்ற அடிமைத் தொழிலைச் செய்யும் மெய்யடியார்கட்கு தந்தருள்கிற பரமபதத்தை யுடையவனே! கனைக்கின்ற குரலையுடைய தொண்டை யையுடைய குதிரையினது பெரிய வாயைப் பிளந்தவனே! உயர்ந்த திருவேங்கட மலையில் எழுந்தருளியிருப்பவனே! நீ ராஜரிஷியான தொண்டை மான் சக்கரவர்த்தியின் கையில் நினது சங்கு சக்கரங்களைக் கொடுத்தருளி, புன் சிரிப்புள்ள சிவந்த வாயாகிய தொண்டைப் பழத்தை யுடையமான் போன்றவளான என் மகளது கைகளிலுள்ள சங்குவளையல்களையும் மோதிரங்களையும் கவர்ந்து கொள்ளுதல் செய்தக்க செயலன்று.

இதே கருத்து 154ஆம் பாடலிலும் வந்துள்ளது.

பிரிவாற்றாத தலைவி பிறைகண்டு வருந்தல்

160. கருமாத வாஇருந்து ஆவன
செய்தென் கருத்திருளைப்
பொரும்ஆ தவாவிருந் தாவனத்
தாய்பொற் சவரிஎன்னும்

ஒருமாதுஅ வாலிருந் தாவனக்
காஉயர் வேங்கடத்தெம்
பெருமாத வாஇரும் தாவுஅனல்
ஏயும் பிறைக் கொழுந்தே. 54

கரிய நிறமுள்ள மாதவன் என்னும் திருநாமத்தை உடையவனே! எனது மனத்தில் வந்து வீற்றிருந்து எனக்கு ஆகவேண்டிய நன்மைகளைச் செய்து, அக இருளாகிய அஞ்ஞானத்தை மோதி ஒழித்தற்கு உரிய சூரியனாய் உள்ளவனே! பிருந்தாவனத்தில் விளையாடினவனே! உத்தம குணமுள்ள சபரி என்கிற ஒரு பெண்ணுக்கு விரும்பப்பட்ட விருந்தினன் ஆனவனே! அழகிய சோலைகள் உயர்ந்திருக்கப் பெற்ற திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற எமது தலைவனே! இளம்பிறையானது கெடாத, பெரிய, தாவி எரிகின்ற நெருப்பை ஒத்துச் சுடுகின்றது.

இது சந்திர உபாலம்பனத்தின் பாற்படும். அதாவது விரக நோய் கண்ட தலைவி சந்திரனை நிந்தித்தல். கூடினாரை மகிழ்விக்கும் தன்மையதான பிறை பிரிந்து நிற்கிற என்னை இங்ஙனம் தவித்திடாதபடி விரைந்து வந்து வரைந்தருள்வாய் என்பது குறிப்பு.

161. பிறைமாலை யால்ஒரு பேதைநைந்
தாள்அந்தப் பேதைக்குநின்
நறைமாலை தாஎன்று மானிடம்
பாடிய நாவலர்காள்!
நிறைமாலை அற்றுக் கவிமாலை
யால்நினை யீர்திருவெள்
ளறை மாலை வேங்கடத் தேயுறை
மாலை அரங்கனையே. 55

பிறைச் சந்திரனது தோற்றத்தையுடைய மாலை பொழுதினால் ஒரு பெண் மெலிவுற்றாள். அப்பெண்ணுக்கு உன்னுடைய வாசனையுள்ள பூமாலையைக் கொடு

என்று மனிதர்களின் மேற் கவிபாடிய புலவர்களே! நீங்கள் உங்கள் மனத்தில் நிறைந்த மயக்கத்தை நீக்கிப் பாமாலை கொண்டு திருவெள்ளறையில் எழுந்தருளியிருக்கிற பெரியோனும் ஸ்ரீ ரங்கநாதனும் ஆகிய திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானையே கருதிப் பாடுவீராக.

திருவெள்ளறை — சோழ நாட்டுத் திருப்பதிகளில் ஒன்று

162 அரங்கம், குடந்தை, குருகூர்
குறுங்குடி அட்டபுய
கரப்கண்ண மங்கை நறையூர்
கடல்மல்லை கச்சிகண்ண
புரம்கண்டி யூர் தஞ்சை மாலிருஞ்
சோலைபுல் லாணிமெய்யம்
தரங்கம் பரம பதம்வேங்க
டேசற்குத் தானங்களே. 56

அரங்கம், குடந்தை, குருகூர், குறுங்குடி, அட்டபுய கரம், கண்ணமங்கை, நறையூர், கடல்மல்லை, கச்சி, கண்ணபுரம், கண்டியூர், தஞ்சை, மாலிருஞ்சோலை, புல்லாணி, மெய்யம் தரங்கம் (திருப்பாற்கடல்) பரமபதம், (ஸ்ரீ வைகுண்டம்) என்பன திருவேங்கடமுடையானுக்கு உரிய தலங்களாம்.

இதில் பதினேழு திவ்விய தேசங்கள் கூறப்பட்டுள்ளன.

163. தானஅல் நாக மருப்புஒசித்
தானுக்குத் தான்உகந்தது
ஆனவல் நாக முடியில்நின்
றானுக்குத் தாள்வணங்காத்
தானவன் ஆகம் இடந்தானுக்கு
ஆள்என்று தன்னைஎண்ணாத்
தான்அவ னாக நினைந்திருப்
பார்க்குஎன் றும்தான் அவனே. 57

மதத்தையுடைய இருள் போன்ற (கருநிறமுள்ள) (குவலயா பீடம் என்ற) யானையின் தந்தங்களை ஒடித்தவனும், தான் விரும்பிய இடமான வலிய திருவேங்கட மலையினது சிகரத்தில் நின்ற திருக்கோலமாக எழுந்தருளியவனும், தனது திருவடிகளை வணங்காத அசுரனான இரணியனது மார்பைப் பிளந்தவனுமான எம்பெருமானுக்கு அடிமையென்று தன்னை நினையாமல் ஜீவாத்மாவாகிய தானே அப்பரமாத்மாவாக நினைத்திருக்கிற விபரீத ஞானிக்கு எப்பொழுதும் அப்பெருமான் பயன் படாதவனே யாவான்.

நகம் — மலை நாகம் என்பது மலையில் வாழும் யானையைக் குறித்தது, இது யகமச் செய்யுள்.

164. தானவர் ஆகம் தடிவார்
வடமலைத் தண்ணந்துழாய்
ஞானவ ராகர் தரும்அண்டம்
யாவையும் நண்ணிஅவர்
கால்நவ ராக விரல்தோறும்
அத்திக் கனியின்வைகும்
வானவ ராக இருப்பார்
அவற்றுள் மசகங்களே. 58

அசுரர்களுடைய உடம்பைத் துணிப்பவரான திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற குளிர்ந்த அழகிய திருத்துழாய் மாலையையுடைய ஞான வராக மூர்த்தியான எம்பெருமான் படைத்த அண்ட கோளங்கள் எல்லாம் அவருடைய திருவடிகளின் புதிய செந்நிறமாகத் தோன்றுகின்ற விரல்கள் தோறும் அத்திப் பழங்கள் (அம்மரத்தில் ஒட்டிக் கிடத்தல்) போல, பொருந்தித் தங்கும் (அவ் அண்டங்களில்) தேவர்களாக விளங்குபவர்கள், அவ்வத்திப் பழங்களில் மொய்த்துக் கிடக்கின்ற கொசுகுகள் போல்வர்.

இதனால் எம்பெருமானது விராட் சொரூபத்தின் பெருமையையும் மற்றைத் தேவர்களின் சிறுமையையும் உணர்த்தினார் நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பினுள் சிறந்த தேவர்களை மசகங்கள் என்றதனால் மற்றை உயிர்களின் இழிவுதானே விளங்கும்.

பாங்கி வெறி விலக்கிச் செவிலியர்க்கு அறத்தோடு நிற்றல்

165. மசகம் தரம்என லாய்நிலை
யாவுடல் வாழ்உயிரை
அசகம் தரவல்ல தோஅன்னை
மீர்அண்டம் உண்டுஉமிழ்வா
ரிசகந் தரவண்ணர் வேங்கட
வாணர் இலங்கையர்கோன்
தெசகந் தரம்அறுத் தார்திருப்
பேர்சொல்லும் தீங்கறவே. 59

தாய்மார்களே! கொசுவுக்குச் சமானமென்று சொல்லத் தக்கதாய் நிலையில்லாத தாகிற உடம்பில் விதி வசத்திற்கேற்ப வாழ்கிற உயிரை ஆட்டின் தலையானது கொடுக்க வல்லதோ? (அன்று என்றபடி) இனி நீங்கள் இத் தலைவிக்கு நேர்ந்துள்ள துன்பம் ஒழியுமாறு அண்ட கோளங்களை வயிற்றினுள் கொண்டு பிறகு வெளிப் படுத்தியவரும், தாமரை பூத்ததொரு மேகம் போன்ற வடிவம் உடையவரும், இலங்காபுரியில் வாழ்ந்த இராக்க தர்க்கு அரசனாகிய இராவணனது பத்துத் தலைகளையும் துணித்திட்டவருமான திருவேங்கடத்து உறைவாரது திரு நாமங்களைச் சொல்லுங்கள்.

வாழ்நர் என்பது வாணர் என மருவிற்று. திருமாலாகிய தலைமகனால் நேர்ந்த நோய்க்கு அவனது நாமசங்கீர்த்தனம் ஒழியப் பரிகாரம் இல்லை என்றாள்.

ஐயங்காரது தன்மையை அறிந்த அன்பர்கள் விளக்கிக் கூறும் வார்த்தை இதற்கு உள்ளுறைப் பொருள்.

ஆட்டைப் பலியிடுவதால் இந்நோய் நீங்காது என்பதாம்.

166. தீங்கட மால் அத்தி முன்னின்று
காலிப்பின் சென்றகொண்டல்
வேங்கட மால்கழ லேவிரும்
பார்விலை மாதர்மலம்
ஆங்கட மால்செய மாலாய்
அவர்எச்சில் ஆகம்நச்சித்
தாங்கள்த மால்அழி வார்இருந்
தாலும் சவப்பண்டமே. 60

(முதலையினால் ஆகிய) தீமையை அழிக்குமாறு (கஜேந்திராழ்வானாகிய) பெரிய யானையின் எதிரிலே வந்து நின்று, (கிருஷ்ணாவதாரத்தில்) பசுக்களை மேய்த்தற் பொருட்டு அவற்றின் பின்னே போன நீர் கொண்ட காளமேகம் போன்றவனான திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கின்ற திருமாலினது திருவடிகளையே விரும்பாதவர்களாய், வேசையருடைய அசுத்தம் நிறைந்த பாண்டம் போன்ற உடம்பு மயக்கத்தைச் செய்ய அவர்கள் பக்கல் மோகங்கொண்டு அவர்களுடைய எச்சிலாகிய உடம்பை விரும்பி, தாங்கள் தங்கள் குணக் கேட்டினாலேயே அழிவார்கள். (இறவாமல் உலகத்தில்) உயிர் வாழ்ந்திருந்தாலும் பிணமாகிய பொருளே யாவர்.

பகவத் விஷயத்தில் ஈடுபடாமல், விஷயாந்தரத்தில் ஈடுபட்டவர்களுடைய சன்மம் வீண் என்பதாம். தம்மால் என்பது தமால் எனச் செய்யுளில் குறைந்து வந்தது.

167. பண்டை இருக்கும் அறியாப்
பரம பதத்து அடியார்
அண்டை இருக்கும் படிவைக்கும்
அப்பனை அண்டத்துக்கும்

தண்தை யிருக்கும் மலர்ந்தசெவ்
வாயனைத் தான்வணங்கா
மண்டை யிருக்கும் விடுமோ
சனன மரணமுமே. 61

பழமையான வேதங்களும் முழுதும் அறிய மாட்டாத தனது உலகமாகிய ஸ்ரீ வைகுண்டத்தில் நித்திய முக்தர் களாகிய அடியார்களின் அருகில் இருக்கும்படி வைத்திருக் திருவேங்கடமுடையானும் (பிரளய காலத்தில்) உலகங் களை விழுங்குவதற்கும் (கிருஷ்ணாவதாரத்தில்) குளிர்ச்சி யான தயிரை உண்ணுவதற்கும் திறந்த சிவந்த திருவாய் மலரை உடையவனுமான எம்பெருமானைத் திருவடி தொழாத தலையையுடையவர்களாகிய உங்களுக்கும் பிறப்பும் இறப்பும் நீங்குமோ? நீங்கா என்றபடி.

168. மரணம் கடக்குஞ் சரநீங்க
வாழ்வித்து வல்லரக்கர்
முரண் அங்கு அடக்கும் சரவேங்
கடவகண் மூடிஅந்தக்
கரணங் கடக்குப் சரமத்து
நீதரு கைக்கெனக்குன்
சரணம் கடக்கும் சரண்வேறு
இலைதந்து தாங்கிக்கொள்ளே. 62

மதத்தையுடைய யானை (முதலையினால்) இறத்தலை ஒழியும்படி அக்கஜேந்திராழ்வானை உயிர்வாழச் செய்து வலிய இராக்கதர்களுடைய பலத்தை அக்காலத்தில் (இராமாவதாரத்தில்) அடக்கிவிட்ட அம்புகளையுடைய வனே! திருவேங்கடமுடையானே! கண்கள் இருண்டு மனம் அழியும்படியான எனது அந்திம தசையில் நீ எனக்கு அளித்தற்கு உனது திருவடியன்றி வேறு புகலிடம் இல்லை. அதனை அளித்து என்னை ஏற்றுக்கொள்.

169. தாங்குஅடல் ஆழி வளைதண்டு
வாள்வில்லில் தானவரை
ஈங்குஅட வீசிக் குறித்தடித்துத்
துணித்து எய்துகொல்லும்
பூங்கடல் வண்ணன் நிலைகிடை
வந்தது போக்கிருப்பு
வேங்கடம் வேலை அயோத்திவெங்
கானகம் விண்ணுலகே. 63

(தனது திருக்கைகளில்) ஏந்திய வலிமையையுடைய சக்கரமும், சங்கமும், கதையும், வாளும், வில்லும் ஆகிய பஞ்சாயுதத்தால் முறையே அசுரர்களை இவ்வுலகத்தில் அழிக்குமாறு சுழற்றி வீசியும், ஊதி முழக்கியும், அடித்தும், அறுத்தும், அம்பெய்தும் சயிக்கும் தன்மையனான அழகிய கடல் போன்ற திருநிறமுடைய திருமால் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளியிருக்கிற இடமும் பள்ளி கொள்கிற இடமும் வந்து திரு அவதரித்த இடமும் நடந்து சென்ற இடமும், வீற்றிருக்கின்ற இடமும் முறையே திருவேங்கட மலையும், திருப்பாற்கடலும், அயோத்தியா புரியும், வெவ்விய காடும், பரமபதமுமாம்.

அயோத்யா என்ற வட சொல் பகைவரால் போர் செய்து வெல்லமுடியாததென்று காரணப்பொருள்படும். இதுமுறை நிரல்நிறைப் பொருள்கோள்.

170. உலகம் தரவுந்தி பூத்திலை
யேல்சுடர் ஓர் இரண்டும்
இலகுஅந் தரமும் புவியும்எங்
கேஅயன் ஈசன்எங்கே
பலகந் தரமும் உணவும்எங்
கேபல் லுயிர்ளெங்கே
திலகம் தரணிக்கு எனநின்ற
வேங்கடச் சீதரனே! 64

பூமிக்குத் திலகம்போல அழகு செய்து நின்ற திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற திருமாலே! நீ உலகங்களைப் படைக்க, திருநாபித் தாமரை மலர்ந்து இராயாயின் (சூரிய சந்திரராகிய) இருசுடர்களும் அவை விளங்கு இடமான ஆகாயமும், பூமியும் எவ்விடத்தே தோன்றும்? பிரமனும் சிவனும் எவ்விடத்தே தோன்றுவர்? பல மேகங்களும் (அவற்றாலாகிற) உணவுகளும் எவ் விடத்தே தோன்றும்? பலவகைப் பிராணி வர்க்கங்கள் எங்கே தோன்றுப்?

உலகம் — லோகம் என்ற வடசொல்லின் விவகாரம். இதனைத் தமிழ் மொழியே என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். ஸ்ரீதரன் — திருமகளை (மார்பில்) தரிப்பவன்.

171. சேவார் கழலை இரண்டையும்
செப்பென்று தீங்குஉளவி—
னாவார் கழலைப் பயில்செங்கை
யார்நலம் பேணும் ஐவர்
ஆவார் கழல் ஐ இரண்டாம்
அவத்தையின் அன்றெனக்குன்
பூவார் கழலை அருள்அப்ப
னே அண்ட பூரணனே. 65

திருவேங்கட முடையானே! அண்ட முழுவதிலும் வியாபித்து நிறைந்திருப்பவனே! கழற்சிக்காயை ஆடுகிற சிவந்த கைகளையுடையவர்களான மகளிரது சீ ஒழுகு கின்ற கழலைக் கட்டியாகிய தனம் இரண்டையும் கிண்ணங்கள் என்று புனைந்துரைத்து, அவர்களிடத்து உள்ளனவான தீமைகளை விசாரித்து அறியாதவர்களாய். அவர்களுடைய இன்பத்தை விரும்புகிற பஞ்சேந்திரியங் கள் தம்தமது ஆற்றல் ஒழியப் பெறுகிற பத்தாம் அவத்தையாகிய மரணம் நேர்கிற அந்நாளில் எனக்கு உனது தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தந்தருள்.

ஐயிரண்டு அவத்தைகளாவன : நினைவு, பேச்சு, இரங்கல், வெய்துயிர்த்தல், வெதுப்பு, துய்ப்பன தெவிட்டல், அழுங்கல், மொழிபல பிதற்றல், மிகுமயக்கு, இறப்பு என்ற மன்மத பாண அவஸ்தைகள் பத்து.

மன்மத அவஸ்தை பத்து: காட்சி, அவா, சிந்தனை, அயர்ச்சி, அரற்றல், நாண்ஒழித்தல், திகைத்தல், மோகம், மூர்ச்சை, இறந்து படுதல் எனக்கூறவும் படும்.

172 பூரணன் ஆரணன் பொன்னுலகு
ஆளி புராரிகொடி
வாரணன் ஆர்அணன் வாழ்த்தும்
பிரான்வட வேங்கடத்துக்
காரணன் ஆர்அணங்கு ஆனா
இறைவிகண வன்மண்ணேழ்
பாரணன் நாரணன் என்பார்க்கு
நீங்கும் பழுது அவமே. 66

எங்கும் நிறைந்தவன்; பிரமனும், பொன் மயமான சுவர்க்க லோகத்தை அரசாள்பவனான இந்திரனும் திரிபுரசங்காரம் செய்தவனான சிவனும் துவசத்தில் கோழி வடிவை உடையவனான சுப்பிரமணியனும் அவனுக்குப் பொருந்திய தமையனான விநாயகனும் பல்லாண்டு பாடித் துதிக்கிற பிரபு வடக்கின்கண் உள்ள திருவேங்கட மலையில் எழுந்தருளியிக்கிற (அனைத்துக்கும்) காரணமானவன்; தன்னை விட்டு நீங்காத தலைவியாகிய அருமையான திருமகளுக்குக் கணவன்; ஏழுவகை உலங்களையும் உண்டவன்; நாராயணன்; என்று கருதிச் சொல்பவருக்கு அவர்கள் முன்பு செய்த தீவினைகள் எல்லாம் பயன்தராதனவாய் ஒழியும்.

173. பழுத்தெட்டி போன்ற நடுச்செல்வர்
பின்சென்று பல்செருக்கால்
கொழுத்துள்ள் தினைஅளவு எண்ணம்அற்
றீர்குவடு ஏறிமந்தி

கழுத்துஎட்டி அண்டர் பதிநோக்கும்
வேங்கடக் காவலனை
எழுத்துஎட்டி னால்எண்ணி ஏத்தீர்
பரகதி ஏறுதற்கே. 67

பழுத்த எட்டிமரம் போன்ற (பிறர்க்குப் பயன் படாத) (பரம்பரையாக அமைந்த செல்வம் அன்றி) இடையிலே வந்த செல்வத்தை யுடையவர்களின் பின்னே தொடர்ந்து சென்றும், பலவகைச் செருக்குக்களினாற் கொழுத்தவர்களாகியும் எள்ளளவு தினையளவு ஏனும் (கடவுளைப் பற்றின) சிந்தனை இல்லாதவர்களே! மேலுள்ளதான பரமபதத்தில் ஏறிச் சென்று சேர்தற் பொருட்டு பெண் குரங்குகள் சிகரத்திலேறிக் கழுத்தைத் தூக்கி மேலுள்ள தேவலோகத்தை எட்டிப் பார்க்கப் பெற்ற திருவேங்கடமலையில் எழுந்தருளியிருக்கிற சுவாமியை எட்டெழுத்து மந்திரத்தைக் கொண்டு தியானித்துத் துதியுங்கள்.

174. ஏறுகடாவுவர் அன்னம்
கடாவுவர் ஈர்இருகோட்டு
ஊறுகடாமழை ஓங்கல்
கடாவுவர் ஓடுஅருவி
ஆறுகடாத அமுதெனப்
பாய அரிகமுகம்
தாறுகள் தாவும் வடவேங்
கடவரைத் தாழ்ந்தவரே. 68

நதிகளாக விரைந்து செல்லுகிற நீரருவிகள் கடுக்காத இன்சுவையுடைய) அமிருதம் போல, பாய்ந்துவர (அவற்றிற்கு அஞ்சி) குரங்குகள் பாக்குமரக் குலைகளின் மேல் தாவியேறப் பெற்ற வடக்கின்கண் உள்ள திருவேங்கட மலையில் எழுந்தருளியிக்கிற பெருமானை வணங்கினவர்கள் ரிஷபத்தை வாகனமாகக் கொண்டு ஏறி நடத்துவர்; அன்னப் பறவையை வாகனமாகக் கொண்டு

ஏறி நடத்துவர். நான்கு தந்தங்களையுடையதும் மேன்மேற் சுரக்கின்ற மதநீர்ப் பெருக்கை உடையதுமான மலைபோன்ற ஐராவத யானையை ஏறி நடத்துவர்.

திருவேங்கடமுடையானை வணங்கினவர் அதன் பயனாக மறுமையில் ருத்திரபதவி, பிரம பதவி, இந்திர பதவிகளை அடைவர் என்பதாம்.

175. தாழ்ந்தஅ ருக்கம் தருஒக்கு
மோபல தாரகையும்
சூழ்ந்தஅ ருக்கன் சுடர்ஒக்கு
மோதொல் அரக்கரென்று
வாழ்ந்தவ ருக்கம் களைந்தான்
வடமலை மால்அடிக்கீழ்
வீழ்ந்த வருக்குஅன் பருக்கொப்ப
ரோஅண்டர் மெய்த்தவரே. 69

இழிவான எருக்கஞ் செடியானது பெரிய மரத்துக்கு ஒப்பாகுமோ? பல நட்சத்திரங்களும் சுற்றிலும் பரவுகின்ற சூரியனது ஒளிக்கு ஒப்பாகுமோ? (ஒப்பாகா; அவை போல) தேவர்களும் உண்மையான தவத்தையுடைய முனிவர்களும், பழமையான இராக்கதர்கள் என்று பிரசித்தி பெற்று வாழ்ந்த கூட்டங்களை யெல்லாம் வேரோடு அழித்தவனான திருவேங்கடத்து உறைவானது திருவடிகளில் வீழ்ந்து வணங்கின அடியார்கட்கு அன்பு பூண்டு ஒழுகுபவர்க்கு ஒப்பாவரோ? (ஆகார் என்றபடி.)

பாகவதர்க்கு அடிமை பூண்டவர் தேவரிஷிகணங்களினும் மேம்பட்டவரென அவர்கள் மகிமையை எடுத்துக் கூறியவாறாம்.

மெய்த்தவம் — பழுது படாத தவம்; கூடா ஒழுக்கம் ஒழிந்த தவம்.

176. மெய்த்தவம் போர்உக வெஞ்சொல்இ
ராமன்வில் வாங்கிவளைத்து
உய்த்தஅம் போர்உகம் நாலும்செய்
தோர்உயர் வேங்கடத்து
வைத்தஅம் போருகப் பூவார்
கழலை மறைமனுநூல்
பொய்த்தவம் போர்உக வார்காமம்
வேட்டுப் புரளுவரே. 70

உண்மையாகச் செய்த தவம் யுத்தத்தில் பழுதுபட்டு ஒழியுமாறு கடுஞ் சொற்களைப் பேசி வந்த பரசுராமனுடைய வில்லை (அவன் கையிலிருந்து தம்கையில்) வாங்கி வளைத்து எய்த அம்பையுடையவரும் நான்கு யுகங்களையும் செய்தவருமான திருமால் உயர்ந்த திருவேங்கடமலையில் வைத்து நின்ற தாமரை மலர் போன்ற திருவடிகளை வேதங்களையும் மனுதர்ம சாஸ்திரத்தையும் பொய்யென்று கூறுகிற வம்புப் பேச்சை உடையவர்கள் விரும்பாதவர்களாய் சிற்றின்பத்தை விரும்பிப் புரண்டு வருந்துவர்.

இதனால் ஆவேச அவதாரத்தினும் அம்ச அவதாரத்துக்கு உள்ள ஏற்றம் விளங்கும்.

177. புரண்டுஉதிக் கும்உடற் கேஇதம்
செய்பொருள் ஆக்கையின்நால்
இரண்டுதிக் கும்தடு மாறுநெஞ்
சேஇனி எய்வதும்வா
திரண்டுஉதிக் கும்அரன் வேள்அய
னார்முதல் தேவர்எல்லாம்
சரண்துதிக் கும்படி மேல்நின்ற
வேங்கடத் தாமத்தையே. 71

நிலை நில்லாது மாறிமாறித் தோன்றும் தன்மையுள்ள உடம்புக்கே நன்மையைச் செய்கிற செல்வத்தைச் சம்பாதித்தற்காக, எட்டுத்திசைகளிலும் திரிந்து உழல்கின்ற எனது மனமே! இனி, நெற்றிக்கண்ணின் நெருப்பி

னால் எரிக்கும் தன்மையுள்ள சிவனும் சுப்பிரமணியனும் பிரமதேவரும் முதலிய தேவர்கள் எல்லாரும் ஒருங்கு கூடி தனது திருவடிகளைத் தோத்திரம் செய்யும்படி திரு வேங்கட மலையின்மேல் நின்ற திருக் கோலமாக எழுந் தருளியிருக்கிற ஒளிவடிவமுள்ள கடவுளை அடை வோம் வா.

புரண்டு உதித்தல் — இறப்பதும் மீண்டும் பிறப்பதும் ஆதல். யாக்கை நிலையாமையை விளக்குகிறார்.

பிரிவாற்றாத தலைவி தோழியரை நோக்கி இரங்கிக் கூறல்

178. தாம்மத்து அளைவெண்ணெய் உண்டஅந்
நாள் இடைத் தாயர்பிணி
தாமத் தளைஉவந் தார்வேங்க
டாதிபர் தாமரைப்பூந்
தாமத் தளைமணி யோடணி
மார்பில்நல் தண் அம்துழாய்
தாமத்து அளைவதுஎன் றோமட
வீர்என் தடமுலையே. 72

மடமையை உடையவர்களே! மத்துக்கொண்டு கடைந்து எடுக்கப்பட்ட வெண்ணெயைத் தாம் களவு செய்து விழுங்கிய அந்த நாளிலே, வளர்த்த தாயாரான யசோதை பிராட்டி கட்டின கயிற்றினாலாகிய கட்டை விரும்பி ஏற்றுக் கொண்டவரான திருவேங்கட முடையானுடைய தாமரை மலரை இடமாக உடைய வளான திருமகளையும் கௌஸ்துபம் என்னும் இரத்தினத் தையும் அணிந்த திருமார்பில் தரித்த சிறந்த குளிர்ந்த அழகிய திருத்துழாய் மாலையில் எனது பெரிய தனங்கள் பொருந்துவது எந்நாளோ?

தலைவனைப் பிரிந்த தலைவி, இனித்தலைவனது சேர்க்கை நேர்வது எக்காலமோ என்று இரங்கிக் கூறினாள். இது யமகச் செய்யுள்.

179. தடவி கடத்தலை வேழமுன்
நின்றன சாடுஉதைத்துப்
புடவி கள்தத்துஅலை யீரேழ்
அளந்தன பூந்திருவோடு
அடவி கடத்தலை வேட்டன
வேங்கடத்து அப்பன்புள்ளைக்
கடவி கடத்தலை நெய்யுண்ட
மாதவன் கால்மலரே. 73

கருடப் பறவையை வாகனமாகக் கொண்டு ஏறி நடத்துபவனும் குடத்தில் வைத்திருந்த நெய்யை அமுது செய்த மதுகுலத்துத் தோன்றியவனுமான திருவேங்கடமுடையானுடைய தாமரைமலர் போன்ற திருவடிகள் பெரிய மாறுபாடுற்ற தலையை உடைய யானையின் முன்னிலையில் சென்று நின்றன, சகடாசுரனை உதைத்துத் தள்ளி, பாய்ந்து வருகின்ற அலைகளையுடைய கடல் சூழ்ந்த பூமி முதலிய உலகங்கள் பதினான்கையும் அளந்தன. தாமரை மலரில் வாழ்கின்ற திருமகளின் அவதாரமான சீதாபிராட்டியுடனே வனத்தைக் கடப்பதை விரும்பி நடந்தன.

இது இந்நூலின் முதற்செய்யுள் போன்ற பாதவகுப்பு.

180. கானகம் உண்டுஅதில் போம்என்னின்
நீங்கிக் கடும்பிணிகாள்
தேனக முண்டகத் தாள்வேங்
கடேசனை சென்றுஇரக்கும்
போனக முண்டவெண் நீற்றான்
அயனொடும் பூமியொடும்
வானகம் உண்ட பெருமானை
இன்றுஎன் மனம்உண்டதே. 74

(பல இடங்களிலும்) சென்று யாசித்துப் பெறும் பிச்சை உணவைக் கொள்கிற பிரமகபாலத்தை யேந்திய வெண்ணிறமாகிய விபூதியைத் தரித்தவனான சிவனும்

பிரமனும் ஆகிய இருமூர்த்திகளோடும் நிலவுலகத்தையும் மேலுலகங்களையும் ஆகிய அனைத்தையும் பிரளய காலத்தில் உட்கொண்டருளிய பெருமையை யுடைய வனான தேனைத் தனது அகத்தே யுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளையுடைய திருவேங்கடமுடையானை இப்போது எனது மனம் உட்கொண்டது. ஆதலால் கொடிய நோய்களே! நீங்கள் என்னை விட்டு நீங்கி, காடு உளது அதிற் செல்லுங்கள்.

112 ஆம் செய்யுள் போலவே இச்செய்யுள் வியாதி களை முன்னிலைப் படுத்திக் கூறியது.

எம்பெருமான் எல்லா நோய்க்கும் மருந்தாவன் என்பது போதரும்.

181. மனம்தலை வாக்குற எண்ணி
வணங்கி வழுத்தும்தொண்டர்
இனம்தலைப் பெய்தனன் ஈதன்றி
யேஇமை யோரும்எங்கள்
தனம்தலை வாஎனும் வேங்கட
வாண தடங்கடலுள்
நனந்தலை நாகணை யாய்அறி
யேன்அன்பும் ஞானமுமே. 75

தேவர்களும், 'எங்கட்குச் செல்வம் போன்றவனே! எங்கள் தலைவனே!' என்று துதிக்கப்பெற்ற திருவேங்கட முடையானே! பெரிய திருப்பாற் கடலில் பரந்த இட முள்ள ஆதிசேஷனாகிய சயனத்தை உடைவனே! மன மும் தலையும் வாக்கும் ஆகிய திரிகரணங்களாலும் தகுதியாக முறையே எண்ணி, வணங்கி, வழுத்தி உனது அடியார் களுடைய கூட்டத்தோடு சேர்ந்தேன். இதுவேயல்லாமல் ஞான பக்திகளின் தன்மையை அடியேன் அறிகிறேன் இல்லை.

இது முறை நிரல் நிறைப் பொருள் கோள்.

182. ஞானக்கண் தா கனவு ஒக்கும்
பவந்துடை நஞ்சிருக்கும்
தானக்கண் டாகனற் சோதிஎன்று
ஏத்தும் வன் தாலமுடன்
வானக்கண் தாகன வண்ணாஎன்று
ஓதுஒலி வந்தடையா
ஈனக்கண் டாகனற்கு ஈந்தான்
பரகதி என்னப்பனே. 76

'விஷம் தங்குகின்ற இடமாகிய கழுத்தை உடைய வனே! அனற் பிழம்பின் வடிவம் ஆனவனே! எனக்கு ஞான மாகிய கண்ணைக் கொடு. கனாத் தோற்றத்துக்கு ஒப்பான பிறப்பை (எனக்கு) ஒழித்தருள்வாய்.' என்று சொல்லி சிவபிரானைத் துதிக்கிற வலிய நாவினுடன் கூடி, வானத்தில் தாவிச் செல்லுகிற மேகம் போன்ற நிறத்தை உடையவனே!' என்று திருமாலைத் துதித்துச் சொல்லும் ஓசை தன் செவிகளில் வந்து நுழையப் பெறாத இழிவை யுடைய கண்டாகர்ணன் என்னும் பூத கணநாதனுக்கும் எனது தலைவனான திருவேங்கடமுடையான் பரம பதத்தைத் தந்தருளினான்.

முதலில் சிவபக்தியோடு, விஷ்ணு துவேஷமும் மேலிட்டிருந்த கண்டாகர்ணன் பின்பு சிவனால் முத்திபெற மாட்டடது கண்ணபிரானால் பெற்றனன் என்பது வரலாறு.

183. என் அப்பன் ஆகத்துப் பொன் நூலன்
வேங்கடத்து எந்தைதுயில்
மன் அப்பன் நாகத்துக்கு அஞ்சல்என்
றான்பல் மணிசிதறி
மின்னப்பல் நாகத்துப் பாய்ந்தான்
கதையன்றி வெவ்வினைகள்
துன்னப் பல்நாகத்துப் பொய்ந்நூல்
புகாஎன் துளைச்செவிக்கே. 77

எனது சுவாமியும், திருமார்பில் பொன்னினால் ஆகிய பூணூலைத் தரித்தவனும், சயனித்துத் துயில் பொருந்து தற்கு இடமாகிற கடலையுடையவனும், 'ஆதிமூலமே' என்ற யானைக்கு 'அஞ்சாதே' என்று சொல்லி அபய மளித்து, அதனைப் பாதுகாத்தவனும், பலமுடிகளிலும் உள்ள பலமாணிக்கங்கள் தெறித்து, மின்னல் போல விளங்கும்படி பற்களையுடைய காளியன்' என்னும் பாம்பின் மீது வலியப் பாய்ந்திட்டவனுமான திருவேங் கடமலையில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானுடைய திவ்விய சரித்திரங்கள் என் காதுகளிற் செல்லுமே யல்லா மல் கொடிய தீவினைகள் நெருங்க (பரசமயத்தாரது) பலநாக்குகள் கத்துதலையுடைய பொய்யான சமய நூல்களின் பொருள்கள் எனது செவித் தொளைகளில் நுழையா.

பரசமயத்தார் - வேற்று மதத்தினர்.

நாரைவிடு தூது

184. செவித்தலை வன்னியின் சூடுஉண்ட
வேய்இசை தீப்பதும்யான்
தவித்தலை வன்மயலும்தமர்
காப்பும் தமிழ்க்கலியன்
கவித்தலை வன்திரு வேங்கடத்
தான்முன் கழறுமின்பொன்
குவித்துஅலை வந்து உந்து கோனேரி
வாழும் குருகினமே! 78

அலைகள் பொன்னைக் கொழித்துக் கொண்டு வந்து கரைகளில் மோதப் பெற்ற கோனேரியில் வாழ்கிற நாரை களின் கூட்டங்களே! நெருப்பிற் சுடப்பட்ட மூங்கிலினால் ஆகிற புள்ளாங் குழலின் இசைப் பாட்டு எனது காதுகளின் இடத்தைச் சுடுவதையும் யான் விரகதாபங் கொண்டு வருந்துகிற வலிய எனது மோகத்தையும், பாங் கியர் செவிலியர் முதலிய உற்றார்பாதுகாக்கும் வகையை யும் தமிழ்மொழியில் தேர்ந்த திருமங்கையாழ்வார் பாடிய

பாட்டுக்களுக்குத் தலைவனான திருவேங்கடமுடையானது முன்னிலையிற் சென்று சொல்லுங்கள்.

185. குருகூரர் அங்க மறைத்தமிழ்
மாலை குலாவும்தெய்வ
முருகுஊர் அரங்கர் வடவேங்
கடவர்முன் னாள் இலங்கை
வருகூரர் அங்கம் துணித்தார்.
சரணங்கள் வல்வினைகட்கு
இருகூர்அ ரங்கள்கண் டீர்உயிர்
காள்சென்று இரவுமினே. 79

பிராணிகளே! (திருமங்கையாழ்வார் அருளிச்செய்த ஆறு பிரபந்தங்களாகிய ஆறு) அங்கங்களையுடைய நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு தமிழ்வேதமாகிய பாமாலைகளில் பொருந்திய தெய்வத் தன்மையுள்ள நறுமணம் வீசப்பெற்ற திருவரங்க நாதரும், முற்காலத்தில் இலங்காபுரியில் வந்து சேர்ந்த கொடியவர்களான இராக்கதர்களுடைய உடம்புகளைச் சேதித்தவருமான வடவேங்கடமுடையானது திருவடிகள் வலிய இருவினைகளையும் அறுத்தற்கு இரண்டு கூரிய வாள் விசேடங்களாம் எம்பெருமான் பக்கல் சென்று உங்கள் வினைகளை அறுக்குமாறு அத்திருவடிகளைப் பிரார்த்தியுங்கள்.

கண்டீர் — தேற்றம். நம்மாழ்வார் பிரபந்தங்கள் திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி (இவைநான்கு வேதங்களின் சாரம் என்பர்.)

திருமங்கையாழ்வார் பிரபந்தங்கள் பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், சிறிய திருமடல், பெரியதிருமடல், திரு எழுகூற்றிருக்கை (இவை ஆறும் நம்மாழ்வாரது நான்கு பிரபந்தங்கட்கு அங்கம் என்பர்).

சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருத்தம், ஜோதிஷம், கல்பம் என்ற ஆறுசாஸ்திரங்களும் நான்கு வேதங்கட்கு அங்கங்கள் ஆகும்.

186. இரணிய நாட்டன் இரணியன்
ஈர்ஐந் தலையன்கஞ்சன்
முரணிய கோட்டின் நகத்தின்
சரத்தின்முன் தாளின்துஞ்சத்
தரணியில் குத்தி இடந்துஎய்து
உதைத்தவன் சர்ப்பவெற்பன்
அரணிய கேழல் அரிரா
கவன்கண்ணன் ஆகிவந்தே. 80

சேஷகிரி என்று ஒரு பெயர் பெற்ற திருவேங்கடமலையில் எழுந்தருளியிருப்பவனான திருமால் அரண்போல அடுத்தவர்களைக்காக்குந் தன்மையுள்ள வராகமூர்த்தியும். சிங்கப் பிரானும் இராமனும், கிருஷ்ணனும் ஆகிவந்து (முறையே) இரணியாட்சனும், இரணியனும், பத்துத் தலைகளை உடையவனான இராவணனும், கம்சனும் வலிமையுள்ள கொம்பினாலும், நகங்களினாலும் அம்புகளாலும், முந்தி நீட்டிய காலினாலும் இறக்கும்படி (அவர்களை) பூமியிலே குத்தியும், பிளந்தும், தொடுத்தும் உதைத்தவன் ஆவன்

இது நிரல்நிறையணி.

187. வந்தித் துஇருக்கு மறைபோற்றும்
வேங்கட வாண! மலர்
உந்தித் திருக்குங் குமம் அணி
மார்பஉன் வஞ்சனையும்
புந்தித் திருக்கும் வெகுளியும்
காமமும் பொய்யும்விட்டுச்
சிந்தித் திருக்குமது எக்காலம்
யான்உன் திருவடியே. 81

இருக் முதலிய வேதங்கள் வணங்கித் துதிக்கப் பெற்ற திருவேங்கட மலையில் வாழ்பவனே! திருநாபித்தாமரை மலரையும் திருமகளோடு குங்குமச் சாந்தை அணிந்த திருமார்பையும் உடையவனே! யான் மனத்தில் அடங்கிய வஞ்சனைகளையும் அறிவின் மாறுபாட்டையும்

கோபத்தையும் சிற்றின்ப விருப்பத்தையும் பொய்யையும் ஒழித்து உனது திருவடிகளைத் தியானித்திருப்பது எப்பொழுதோ?

188. திருவடி வைக்கப் புடவிபற்
றாதுஅண்டம் சென்னிமுட்டும்
கருவடி வைக்கலந்து ஆற்றாஎண்
திக்குய கடல் மண்கொள்வான்
பொருவடி வைக்கனல் ஆழிப்
பிரான்புனல் ஆழிகட்டப்
பெருவடி வைக்கண்ட அப்பன்எவ்
வாறுஅடி பேர்ப்பதுவே. 82

போர் செய்கின்ற (பலவகைப் படைக்கலங்களில்) தேர்ந்தெடுத்த கூர்மையான அக்கினியைச் சொரிகிற சக்கர ஆயுதத்தையுடைய தலைவனும், சமுத்திரத்தை அணைகட்டிக் கடப்பதற்காக (அக்கடலின்) நீர்வற்றுதலை அடையும்படி செய்த சுவாமியுமான திருவேங்கடமுடையான் (திரு விக்கிரம அவதாரத்தில்) ஒரு திருவடியை வைப்பதற்கே பூமி முழுவதும் இடம் போதாதாயிற்று, அப்பெருமானது திருமுடியோ அண்ட கோளத்தின் மேன்முகட்டைத் தாக்கியது. எட்டுத்திக்குகளும் அவனது கருநிறமான திருமேனிபொருந்துதற்கு இடம் போதாவாயின. இங்ஙனம் பெருவடிவனான அத்திருமால் கடல் சூழ்ந்த நிலவுலகத்தில் மூன்றடியிடம் அளந்து கொள்வதற்காகத் திருவடிகளை எடுத்து வைப்பது எப்படியோ?

189. பேரானைக் கோட்டினைப் பேர்த்தானை
வேங்கடம் பேணும்துழாய்த்
தாரானைப் போதனைத் தந்தானை
எந்தையைச் சாடிறப்பாய்ந்து
ஊரானை மேய்த்துப்புள் ளூர்ந்தானைப்
பஞ்சவர்க்கு உய்த்துநின்ற
தேரானை நான்மறை தேர்ந்தானைத்
தேரும் நும் தீதுஅறுமே. 83

பெரிய குவலயாபீடம் என்னும் யானையினது தந்தங்களைப் பெயர்த்து எடுத்தவனும், திருவேங்கடமலையை விரும்பித் தங்கும் இடமாகக் கொண்ட திருத்துழாய் மாலையையுடையவனும், பிரமனைப் படைத்தவனும், எமது தலைவனும், சகடாசுரன் முறியும்படி தாவியுதைத்து ஊரிலுள்ள பசுக்களை மேய்த்துக் கருடப் பறவையை வாகனமாகக் கொண்டு ஏறி நடத்தியவனும், பஞ்சபாண்டவருள் ஒருவனான அருச்சுனனுக்குச் செலுத்தி நின்ற தேரையுடையவனும், நான்கு வேதங்களாலும் ஆராயப்பட்டவனுமான திருமாலை (முழுமுதற் கடவுளாக) அறிந்து தியானித்துத் துதியுங்கள். அங்ஙனம் செய்தால் உங்கள் துன்பங்கள் எல்லாம் நீங்கும். இது முரண் தொடை.

190. அறுகு ஊடு கங்கை தரித்தான்
அயன் அழைத் தாலும் இச்சை
அறுகூடு மால் அடி யார் அடிக்
கேஅப்பன் வேங்கடவன்
மறுகு ஊடு மாதர் எறிபூண்
எறிக்கும் மதில் அரங்கன்
மறுகூடு நம்மை மருவாமல்
வாழ்விப்பன் மாமனமே! 84

சிறந்த எனது மனமே! முடியிற் சூடிய அறுகம் புற்களின் இடையே கங்கா நதியைத் தரித்தவனான சிவனும், பிரமனும் (வலியவந்து உன்னைத் தம்மிடத்திற்கு) அழைத்தாலும் (அவர்கள்பக்கல்) விருப்பங் கொள்ளாது ஒழிவாய். திருமாலினது அடியார்களின் திருவடிகளிலேயே சேர்வாய். (அங்ஙனம் சேர்ந்தால்), (தம் கணவரோடு) பிணங்கிய மகளிர் கழற்றி எறிந்த ஆபரணங்கள் எடுப்பார் இல்லாமல் வீதிகளில் கிடந்து ஒளி வீசப்பெற்றதும் மதில்கள் சூழ்ந்ததுமான திருவரங்கத்தை உடையவனாகிய சுவாமியான திருவேங்கடமுடையான் இவ்வுடம்பு நீங்கியபின் மற்றொரு உடம்பிற் சேராதபடி நம்மை வாழச் செய்வன்.

சிவபூஜைக்கு உரிய பத்திர புஷ்பாதிகளில் அறுகம் புல்லும் ஒன்றாதல் காண்க.

191. மாமன்அங் காந்தவல் வாய்ப்புள்ளை
ஏவ மடித்துப்பித்தன்
நாமனம் காந்தஅன்று ஓடஎய்
தோன்நறும் பூங்கொடிக்குத்
தாமன்அம் காந்தன் திருவேங்
கடத்துஎந்தை தாள்களில்என்
தீமனம் காந்தம் கவர்ஊசி
போல்என்று சேர்வதுவே? 85

மாமனான கம்சன் திறந்த வலிய வாயையுடைய பகாசுரன் என்னும் பறவையை அனுப்ப, அதனைக் கொன்று, சிவன் தனது நாவிற்பொருந்திய நீர் வற்றுமாறு அக்காலத்தில் (பாணாசுர யுத்தத்தில்) ஓடும்படி அம் பெய்தவனும், பரிமளமுள்ள தாமரை மலரில் வாழ்கின்ற கொடி போன்ற பெண்ணுக்கு (திருமகளுக்கு) இருப்பிட மானவனும், அழகிய கணவனுமான திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானுடைய திருவடிகளில் எனது கொடிய மனமானது காந்தத்தினால் கவரப் பட்ட ஊசி போலச் சேர்ந்து பற்றுவது எப்பொழுதோ?

192. சேரும் மறுக்கமும் நோயும்
மரணமும் தீவினையின்
வேரும் அறுக்க விரும்பிநிற்
பீர்வட வேங்கடத்தே
வாரும் மறுக்க அறியான்
எவரையும் வாழஅருள்
கூரும் மறுக்க மலைஅணி
மார்பன்கைக் கோதண்டனே. 86

கரும கதியால் வந்து அடைகின்ற மனக்குழப்பங்களையும் வியாதிகளையும், மரணத்தையும், கொடிய கருமத்தின் மூலத்தையும் ஒழிப்பதற்கு விருப்பங்கொண்டு நிற்ப

வர்களே! நீங்கள் வடக்கின்கண் உள்ள திருவேங்கட மலையினிடத்தே வாருங்கள். அங்கு எழுந்தருளியிருக்கிற (ஸ்ரீவத்சமென்னும்) மறுவையும் இலக்குமியையும் கொண்ட (வலத்திரு) மார்பையுடையவனும், கையில் வில்லையுடையவனுமான திருமால் தன்னைச் சரணம் அடைந்தவர் எத்தன்மையராயினும் அவரை விலக்க அறியான். தனது அடியவர் அனைவரையும் இனிது வாழு மாறு கருணை புரிவன்.

அடியார்களின் பிழைகளைப் பாராட்டாது பொறுத்து ஆட்கொண்டருளுதற்குப் புருஷாகாரமாகிற திருமகள் எப்பொழுதும் விட்டுப் பிரியாமல் உடன் இருக்கப் பெற்றவன் ஆதலால் அனைவரையும் மறாது அருள் செய்வன் என்பதாம்.

193. கோதண்டத் தான்நத்தன் வாள்கதை
நேமியன் கோலவட
வேதண்டத் தான்அத்தன் இன்னிசை
யான்மண்ணும் விண்ணும்உய்ய
மூதண்டத் தானத்து அவதரித்
தான்எனில் முத்திவினைத்
தீதுஅண்டத் தான்அத் தனுஎடுத்
தான்எனில் தீநரகே. 87

வில்லையுடையவனும், சங்கத்தை உடையவனும், வாளையும் கதையையும் சக்கரத்தையும் உடையவனும், அழகிய வடமலையான திருவேங்கடத்தை இடமாக உடையவனும், எல்லா உயிர்கட்கும் தலைவனும் இனிமை யான வேய்ங்குழலின் இசையை யுடையவனுமான திருமால் நிலவுலகத்திலுள்ள மனிதர் முதலியோரும் மேல் உலகத்தி லுள்ள தேவர் முதலியோரும் துன்பந் தவிர்ந்து வாழ்வ தற்காகப் பழமையான அண்டத்துக்கு உட்பட்ட இடங் களில் திரு அவதாரம் செய்தான் என்று மெய்ம்மை யுணர்ந்து கூறினால் பரமபதம் கிடைக்கும். (அத்திருமால்)

ஊழ்வினையின் தீமை வந்து தொடர, தான் அந்தந்தத் தேகத்தை எடுத்துப் பிறந்தான் என்று உண்மை உணராது கூறினால், கொடிய நரகமே நேரும்.

194. நரகம் அடங்கலும் சென்றுஎய்த்த
பாவிக்கு நாரியர்மேல்
விரகம் அடங்கமெய்ஞ் ஞானம்
வெளிசெய வீடுபெற
உரகம் மடங்க நடித்தபொற்
றாள்இன்றுஎன் உச்சிவைப்பாய்
வரக மடம்கயல் ஆனாய்
வடமலை மாதவனே. 88

சிறந்த ஆமையும் மீனுமாய்த் திரு அவதரித்தவனே! திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற திருமாலே! நரகங்கள் அனைத்திலும் போய் வருந்திய பாவியான எனக்கு மகளிர் விஷயமாக உண்டாகின்ற ஆசை நோய் தணியவும் தத்துவ ஞானம் தோன்றவும், பரமபதம் கிடைக்கவும் காளியன் என்னும் பாம்பு தலை மடங்கும் படி நடனம் செய்த நினது அழகிய திருவடிகளை இப்பொழுதே எனது சிரசின் மேல் வைத்தருள்வாய்.

195 மாதிரம் காதல் மனைவாழ்க்கை
என்றெண்ணி வான்பொருட்கு
மாதிரம் காதம் பலவளை
வீர்இன்னும் மைந்தன்என்றோர்
மாதுஇரங் காத படிவணங்
கீர்அரி மாவொடுகைம்
மாதிரங் காதுஅமர் செய்கின்ற
சேட மலையினையே. 89

விருப்பத்துக்கு இடமான மனையாளோடு கூடி இல்லத்து வாழ்தலை மிக்க நிலையுள்ளதென்று நினைத்து (அந்த இல்லற வாழ்வுக்கு உபயோகமாக) மிக்க செல்வத்தை ஈட்டுதற் பொருட்டு, திக்குகள் தோறும் அநேக காததூரம் சுற்றி அலைபவர்களே! இன்னமும்

உங்களைப் புத்திரனென்று ஒரு பெண் அன்பு செய்யாத படி (இனியாயினும் பிறப்பற்று முத்தி பெறுமாறு) சிங்கங்களோடு யானைகள் பின் வாங்கமல் போர் செய்யப் பெற்ற சேஷகிரி எனப்படுகிற திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானை வணங்குங்கள். இது பிறிதின் நவிற்சியணி.

196. மலையின் அரக்கர் உடன்றுஎழுந்
தார்என்று மாமறைநூல்
கலையி னர்அக்க ருடன்இந்தி
ராதியர் காட்டச்செய்யும்
கொலையி னர்அக்க ருடன்ஏறும்
வேங்கடக் குன்றர்என்றால்
உலையின் அரக்குஅ ருள்தந்தில
ரேனும்என் உள்அவர்க்கே. 90

சிறந்த வேத சாஸ்திரங்களாகிய கல்வியில் தேர்ந்த பிரமதேவரும் எலும்பு மாலையைத் தரித்தவரான சிவபிரானுமாகிய இரு மூர்த்திகளுடன் இந்திரன் முதலிய தேவர்கள், 'மலைகள் போல இராக்கதர்கள் உக்கிரங் கொண்டு ஓங்கினார்கள்' என்று சொல்லி முறையிடச் செய்த (அவ் இராக்கத) வதத்தையுடையவரான அந்தக் கருட னாகிய வாகனத்தின் மேல்ஏறியருள்கிற திருவேங்கட மலையை உடையவர் என்று சொன்னால், அவர் என் பக்கல் கருணை புரியாராயினும், அவர் விஷயத்தில் என் மனம் உலைக்களத்தில் இட்ட அரக்காம் (நெகிழ்ந்து உருகும்).

தோழி, தலைமகனை ஏதங்கூறி இரவு வரல் விலக்கல்

197. உள்ளம்அஞ் சாய்வலி யாய்வலி
யார்க்கும் உபாயம்வல்லாய்
கள்ளம்அஞ்சு ஆயுதம் கைவரும்
ஆயினும் கங்குலினில்

வெள்ளமஞ்சு ஆர்பொழில் வேங்கடக்
குன்றினில் வீழ்அருவிப்
பள்ளம்அம் சாரல் வழிவரில்
வாடும்இப் பாவையுமே. 91

நீ (எதற்கும்) மனம் அஞ்சுகின்றாய் இல்லை. வலிமையையுடையாய். வல்லமை உடையவர்க்கும் உபாயங் கற்பிக்கும்படி உபாயம் வல்லை; களவும், பஞ்சாயுதங்களும் உனக்குப் பழக்கமாயுள்ளன. ஆயினும் இரவில் வெள்ளையாகப் பொழிகின்ற மேகங்கள் தங்குகிற சோலைகளையுடைய திருவேங்கட மலையில் விழுகிற அருவிப் பெருக்கையுடைய பள்ளங்களோடு கூடிய அழகிவ மலைப் பக்கத்து வழியாக நீ வந்தால் (நினது வரவை மகிழ்ச்சியோடு எதிர்பார்ப்பவளான) இப்பெண்ணும் வருந்துவள்.

198. பாவை இரங்கும் அசோதைக்கு
முத்துப் பதுமச்செல்விக்கு
ஏவை இரண்டுஅன்ன கண்மணி
நீலம் இருசரணப்
பூவை இரந்தவர்க்கு இன்ப
வளம்புல் அசுரர்க்கு என்றும்
மாவை யிரம்திரு வேங்கடத்து
ஓங்கும் மரகதமே. 92

திஷ்வேங்கட மலையின் மீது உயர்ந்து தோன்றுகிற மரகத ரத்தினம் போல விளங்கும் திருமேனி நிறத்தையும் ஒளியையும் உடைய பரம் பொருளானது — சித்திரப் பிரதிமைகளும் (இவ்வகையழகு எமக்கு இல்லையே யென்று) இரங்கும் படியான (கட்டழகுடைய)யசோதைக்கு (அருமையால்) முத்துப் போலும்; தாமரை மலரில் வீற் றிருக்கின்ற செல்வத் தலைவியான திருமகளுக்கு (அருமை யால்) இரண்டு அம்புகளைப் போன்ற கண்களில் உள்ள

கருவிழி போலும்; உபய திருவடித் தாமரை மலர்களைப் பிரார்த்தித்தவர்கட்கு, பேரின்பப் பெருக்காம், இழிகுண முடைய அசுரர்கட்கு எப்பொழுதும் பெரும் பகையாம்.

இதில் பஞ்ச ரத்தினங்களின் பெயர் அமைந்திருப்பது காண்க.

புய வகுப்பு

199. மரகதத் தைக்கடைந்து ஒப்பித்தது
ஒத்தன வாழ்த்தினர்தம்
நரகதத் தைத்தள்ளி வைகுந்தம்
நல்கின நப்பின்னையாம்
விரகதத் தைக்கு விடையேழ்
தழுவின வேங்கடவன்
குரகதத் தைப்பிளந் தான்தோள்கள்
ஆகிய குன்றங்களே. 93

குதிரை வடிவாய் வந்த கேசி என்னும் அசுரனை வாய் பிளந்து அழித்தவனான, திருவேங்கட முடையானுடைய புயங்களாகிய மலைகள் — மரகதமென்னும் பச்சை இரத்தினத்தைக் கடைந்து ஒப்பனை செய்தாற் போன்றன. தம்மை வாழ்த்திய மெய்யடியார்களுடைய நரக துன்பங்களை ஒழித்து, அவர்கட்குப் பரமபதத்தைக் கொடுத்தன. நப்பின்னை பிராட்டியாகிய ஆசை நோயால் தவிக்கப் பட்டவளான பெண்ணை மணஞ் செய்தற் பொருட்டு ஏழு எருதுகளைத் தழுவி வலியடக்கின. இதுபுய வகுப்பு. குன்றங்கள் கடைநிலைத் தீவகம்.

200. குன்றுகள் அத்தனை யும்கடல்
தூரக் குவித்துஇலங்கை
சென்றுக ளத்துஅனை வோரையும்
மாய்த்துத் திருச்சரத்தால்

அன்றுகளத்தனை அட்டானை
அப்பனை ஆய்மகள்தோள்
துன்றுக ளத்தனை ஏத்தவல்
லார்க்குஇல்லை துன்பங்களே. 94

மலைகளை எல்லாம் கடல் தூர்ந்திடும்படி (வானரங்களைக் கொண்டு கொணர்ந்து) ஒருங்குசேர்த்து, அணை கட்டி, அதன் வழியாகப் போய், இலங்கா புரியைச் சார்ந்து, போர்க்களத்தில் அரக்கர்கள் எல்லாரையும் கொன்று, சிறந்த அம்பினால் (பிரம்மாஸ்திரத்தால்) அந்நாளில் வஞ்சகனான இராவணனைக் கொன்றவனும், இடைச் சாதி மகளான நப்பின்னையினது கைகளால் தழுவப்பட்ட கழுத்தை உடையவனுமான திருவேங்கட முடையானைத் துதிக்க வல்லவர்கட்கு எவ்வகைத் துன்பமும் உளவாகா.

201. துன்பம் களையும் சனனம்
களையும் தொலைவுஅறுபேர்
இன்பங் களையும் கதிகளை
யும் தரும் எங்கள் அப்பன்
தன்பங்கு அளையும் படிமூ
வரைவைத்துத் தாரணியும்
பின்புஅங்கு அளையும் இழுதும்உண்
டானுடைப் பேர்பலவே. 95

(பிரமன், சிவன், இலக்குமி என்ற) மூன்றுபேரை, தனது திருமேனியின் பாகங்களில் பொருந்தும்படி வைத்து, கற்பாந்த காலத்தில் பூமியையும் பிறகு கிருஷ்ணாவதாரத்தில் அவ்விடத்தில் (திருவாய்ப்பாடியில்) தயிரையும் நெய்யையும் அமுது செய்தவனான எமது திருவேங்கட முடையானுடைய பல திருநாமங்கள் தம்மைச் சொன்னவர்களுடைய கிலேசங்களை ஒழிக்கும், பிறப்பை வேரோடு

அழிக்கும், முடிவில்லாத பேரின்பங்களையும் சிறந்த பதவிகளையும் தரும்.

ஸ்ரீமன் நாராயணன் தனது திருமேனியில் திருநாபியில் பிரமனையும், வலப்பக்கத்தில் சிவனையும், திருமார்பில் திருமகளையும் வைத்திருத்தலைக் குறித்தார்.

தலைவனைப் பிரிந்த தலைவி கடலை நோக்கி இரங்கிக் கூறல்

202. பலகுவ ளைக்குள் சிலகஞ்சம்
போலும் படிவ அப்பன்
நலகுவ ளைக்கு முன் உண்டான் நின்
மாட்டும் நணுகிலனோ
உலகு வளைக்கும் கடலேநின்
கண் முத்து உகுத்துஇரங்கி
இலகு வளைக்குலம் சிந்தித்துஞ்
சாய்இன்று இராமுற்றுமே. 96

உலகத்தைச் சூழ்ந்திருக்கிற கடலே! உனது கண்களினின்று முத்துப் போன்ற நீர்த்துளிகளைச் சொரிந்து (உன்னிடத்தினின்று முத்துக்களைச் சிந்தி) புலம்பி (ஒலித்து) விளங்குகின்ற கைவளைகளின் வரிசையைக் கீழே சிந்தி (விளங்குகின்ற சங்குகளின் கூட்டத்தை வெளியே சிதறி) இன்றை இராப்பொழுது முழுவதும் தூங்குகின்றாய் இல்லை (அமைதி கொண்டிருக்கின்றாயில்லை); ஆதலால் பல நீலோற் பல மலர்களின் இடை இடையே சில செந்தாமரை மலர்கள் பூத்தன போன்ற திருமேனியை உடைய சுவாமியான (கிருஷ்ணாவதாரத்தில்) வெண்ணெயை உண்பதற்கு முன்னே (கற்பாந்த காலத்தில்) நல்ல பூமியை விழுங்கியவனுமான தலைவன் (என்னிடத்திற் போலவே) உன்னிடத்திலும் வந்து சேர்ந்திலனோ?

நீடித்து வந்த தலைவனோடு தலைவி ஊடிப் பேசுதல்

203. முற்றிலைப் பந்தைக் கழங்கைக்கொண்
ஓடினை முன்னும்பின்னும்
அற்றிலை தீமை அவைபொறுத்
தோம்தொல்லை ஆலின்இளங்
கற்றிலை மேல்துயில் வேங்கட
வாஇன்றுஉன் கால்மலரால்
சிற்றிலைத் தீர்த்தற் குப்பெரு
வீட்டினைச் செய்தருளே. 97

முற்காலத்தில் (பிரளய காலத்தில்) இளமையான ஆலங்கன்றினது இளந்தளிரின்மேல் பள்ளிகொண்டு யோக நித்திரை செய்த திருவேங்கட முடையானே! முன்னமும் நீ எம்முடைய சிறு முறத்தையும் பந்தையும் ஆடுதற்குரிய கழற்காய்களையும் எடுத்துக் கொண்டு ஓடினாய். பின்பும் எம் பக்கல் தீங்கு செய்தலை ஒழிந்தாய் இல்லை. அப் பொல்லாங்குகளை யெல்லாம் பொறுத்திட்டோம். இப்போது உன்திருவடித் தாமரையினால் (யாம் மணல் கொண்டு விளையாட்டாக அமைத்த) சிறு வீட்டைச் சிதைத்தற்கு ஈடாகப் பெரியதொரு வீட்டை (எமக்குக்) கட்டிக் கொடுப்பாய்.

204. அரும்பாத கன்பொய்யன் காமுகன்
கள்வன் அருள்சிறிதும்
அருபாத கல்நெஞ்சன் ஆறாச்
சினத்தன் அவாவில்நின்றும்
திரும்பாத கன்மத்தன் ஆனேற்குச்
சேடச் சிலம்பமர்ந்த
திரும்பாத கஞ்சம் தரில்அது
காண்உன் திருவருளே. 98

(போக்குதற்கு) அரிய பாவங்களை உடையவனும், பொய் பேசுபவனும், சிற்றின்ப விருப்பமுடையவனும்,

களவு செய்பவனும், கருணையென்பது சிறிதேனும் தோன்றப் பெறாத கல்லைப் போன்ற கடின சித்தம் உடையவனும், தணியாக் கோபம் உள்ளவனும், ஆசையி னின்று மீளாத கருமத்தை உடையவனும் ஆகிய எனக்குத் திருவேங்கட மலையில் எழுந்தருளிப் பாததண்டைகள் ஒலிக்கப் பெற்ற (நினது) திருவடித் தாமரை மலர்களைக் கொடுத்தால் அதுவன்றோ உனது மேலான கருணையாம், காண்ப—தோற்றம்.

தீக்குணம் தீச்செயல்களுக்கெல்லாம் கொள்கலமான என்னை உன் திருவடிக்கு ஆளாக்கிக் கொள்ளுதலே நினது திருவருட்குச் சிறப்பு என்பதாகும்.

205. திருமந் திரமில்லை சங்குஆழி
இல்லை திருமண் இல்லை
தருமம் திரம் ஒன்றும் செய்தறி
யீர்செம்பொன் தானவனை
மருமம் திரங்கப் பிளந்தான்
வடமலை வாரம்செல்லீர்
கருமம் திரண்டதை எத்தால்
களையக் கருதுதிரே. 99

(பேதை மக்களே! உங்கள் பக்கல்) பெரிய திருமந்திரம் எனப்படுகிற எட்டெழுத்து மகாமந்திரம் இல்லை, சங்க சக்கர முத்திரை இல்லை; திருமண்காப்பும் இல்லை. எம்பெருமானைச் சரண் அடைதலாகிய சரணாகதி தருமத்தை நிலையாகச் சிறிதும் செய்து பயின்றீர் இல்லை. சிவந்த பொன்னின் நிறமுள்ள இரணியாசுரனை மார்பு வருந்த (நரசிங்க மூர்த்தியாய்ப்) பிளந்திட்டவனான எம்பெருமானுடைய திருவேங்கட மலையின் அடிவாரத் திலேனும் சென்றீர் இல்லை. (இத்தன்மையரான நீங்கள்) உங்கள் ஊழ்வினை தொகுதிப்பட்டுள்ளதை எவ்வாற்றால் நீக்க நினைக்கிறீர்கள்?

206. கருமலை யும்மருந் தும்கண்ணும்
ஆவியும் காப்பும்அவன்
தரும்அலை உந்திய பேரின்ப
வெள்ளமும் தாய்தந்தையும்
வருமலை யும்திருப் பாலாழி
யும்திரு வைகுந்தமும்
திருமலை யும்உடை யான்எனக்கு
ஈந்த திருவடியே. 100

பொருந்திய திருக்கடல் மல்லை யென்கிற ஸ்தலத்தையும், திருப்பாற்கடலையும், பரமபதத்தையும், திருவேங்கட மலையையும் (தனக்குத் தங்குமிடமாக) உடையவனான. எம்பெருமான் அடியேனுக்கு அருளிய சீர் பாதங்கள் — அடியேனுக்குப் பிறவி நோயை ஒழிக்கிற மருந்தும், கண்ணும், உயிரும், பாதுகாவலும், அவன் பரமபதத்தில் தந்தருளும் அலைகளை எறிகிற பேரானந்தப்பெருக்கும் தாய் தந்தையருமாம்.

தற்சிறப்புப் பாயிரம்

207. மட்டளை தண்டலை சூழ்வட
வேங்கட வாணனுக்குத்
தொட்டுஅளை உண்டபி ரானுக்குஅன்
பாம் பட்டர் தூயபொற்றாள்
உள்தளை உண்ட மணவாள
தாசன் உகந்துஉரைத்த
கட்டளை சேர்தரு அந்தாதி
நூறு கலித்துறையே.

பட்டர் என்ற ஆசாரியருடைய பரிசுத்தமான அழகிய திருவடிகளில் பக்தியினால் ஆகிய சம்பந்தம் பெற்ற அழகிய மணவாள தாசன் விரும்பிப் பாடிய சிறந்த

அந்தாதிப் பிரபந்த வடிவமான நூறு கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களும் வெண்ணெயைக் கையினால் எடுத்து அமுது செய்த பிரபுவான வாசனை நிறைந்த சோலைகள் சூழ்ந்த வடக்கின்கண் உள்ள திருவேங்கட மலையில் வாழ்கிற எம் பெருமானுக்குப் பிரியமாம்.

இச் செய்யுள் நூலாசிரியர் தாமே தம்மைப் பிறன் போலும் பாயிரங் கூறியது.

3. அழகர் அந்தாதி

சிறப்புப் பாயிரம்

208. திருகுஅவி மங்கை மணவாள
வள்ளல்செந் தேன்துளித்து
முருகுஅவிழ் தென்திரு மாலிருஞ்
சோலை மலை முகுந்தற்கு
இருகவின் தாள்களில் சூடும்அந்
தாதியின் ஈர்ஐம்பதில்
ஒருகவி கற்கினும் ஞானமும்
வீடும் உதவிடுமே.

சிறந்த கவியாகிய திருமங்கை நாட்டில் திருஅவதரித்த அழகிய மணவாளதாசர் என்னும் வண்மைக்குணமுடைய வர், செந்நிறமான தேன்சிந்தி வாசனை வீசப்பெற்ற அழகிய திருமாலிரும் சோலைமலையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிற திருமாலுக்கு அழகிய இரண்டு திருவடிகளில் சாத்திய இந்த அந்தாதி யென்னும் பிரபந்தமாகிய பாமாலையிலுள்ள நூறு செய்யுள்களுள் ஒரு செய்யுளைக் கற்றாலும் அக்கற்றவர்க்கு அக்கல்வி யானது நல்லுணர்வையும் பரம பதத்தையும் தவறாது கொடுக்கும்.

சிறப்புப் பாயிர இலக்கணங்களுள் ஆக்கியோன் பெயரும் நூற்பெயரும், நுதலிய பொருளும். பயனும் இச்செய்யுளில் விளங்குதல் காண்க.

காப்பு

209. அங்கத் தமிழ்மறை ஆயிரம்
பாடி அளித்து உலகோர்
தங்கட்கு வீடுஅரு ளும்புரு
டோத்தமன் தண்வகுளத்
தொங்கல் பராங்குசன் தாள்இணை
மாலிரும் சோலைமலைச்
சங்கத்து அழகர் அந் தாதிந
டாத்தத் தலைக் கொள்வனே.

ஆறு அங்கங்களையுடைய தமிழ்வேதமாகிய ஆயிரம் பாசுரங்களைப் பாடிக் கொடுத்து உலகத்தார்க்கு முத்தியைத் தந்து அருள்கிற புருஷசிரேஷ்டரும் குளிர்ச்சியான மகிழம் பூமாலையைத் தரித்த பராங்குசன் என்னும் திருநாமம் உடையவரான நம்மாழ்வாருடைய உபய பாதத்தைத் திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளியிருப்பவரும் தமிழ்ச் சங்கத்துக்குத் தலைவருமாகிய அழகரது விஷயமாக யான் பாடும் அந்தாதிப் பிரபந்தத்தை இடையூறு இன்றி நடத்துதற்பொருட்டுத் தலை மேற்கொண்டு வணங்குவேன்.

இங்ஙனம் வணங்கியதனால், தொடங்கிய தொழில் இனிது முடியும் என்பது கருத்து.

நூல்

210. நீராழி வண்ணனைப் பாலாழி
நாதனை நின்மலனைச்
சீராழி அங்கைத் திருமகள்
கேள்வனைத் தெய்வப்புள்ளூர்
கூராழி மாயனை மால்அலங்
காரனைக் கொற்றவெய்யோன்
ஓராழித் தேர்மறைத் தானை எஞ்
ஞான்றும் உரைநெஞ்சமே. 1

எனது மனமே! நீர் மயமான கடல் போலும் கரிய நிற முடையவனும், திருப்பாற் கடலிற் பள்ளிகொண்டிருக்கிற தலைவனும், குற்றமற்றவனும், சிறந்த மோதிரங்களைத் திருவிரல்களில் அணிந்த அழகிய கைகளையுடைய இலக்குமியின் கணவனும், தெய்வத்தன்மையையுடைய சிறந்த பறவையாகிய கருடனை வாகனமாகக் கொண்டு ஏறி நடத்துகிறவனும், கூரிய சக்கராயுதத்தை வலக்கையில் ஏந்தியவனும், விசித்திர சக்தியை உடையவனும், வெற்றியையுடைய சூரியனது ஒற்றைச் சக்கரத்தை யுடைய தேரை மறைத்திட்டவனுமான பெருமை பொருந்திய அழகனை எப்பொழுதும் துதிசெய்வாய்

211\. உரைமாற்றம் உண்டுஎன் பொறிஐந்தும்
உன்னிடத்து அன்றிஉண்ணும்
இரைமாற்ற வேண்டும் இதுவேஎன்
விண்ணப்பம் என்அப்பனே!
உரைமாற்று அளவுஅற்ற பொன்உடுத்
தாய்வில் எடுத்திலங்கை
வரைமாற் றலரைச் செற்றாய் அழ
காகரு மாணிக்கமே. 2

எனது சுவாமி! உரைகல்லில் உரைத்து நோக்கி உணரத்தக்க மாற்றின் அளவுகடந்த (மிகச்சிறந்த) பொன்மயமான ஆடையை (பீதாம்பரத்தை) உடுத்துக் கொண்டுள்ளவனே! கோதண்டத்தைக் கையிலேந்தி (அது கொண்டு அம்பு தொடுத்துப் பொருது) இலங்காபுரி யிலுள்ள மலைபோலும் வலிய பகைவர்களான இராவணாதி ராட்சசர்களை அழித்திட்டவனே! அழகனே! கருநிறம் உடையதொரு மாணிக்கம் இருந்தால் அது போன்ற நிறத்தையும் ஒளியையும் உடையவனே! அடியேன் உன்பக்கல் சொல்லும் சொல் ஒன்று உளது· அது யாதெனில் எனது ஐம்பொறிகளும் உன்னிடத்தே யன்றிப் பிற இடங்களில் அனுபவிக்கிற விஷயங்கள் ஆகிற

ஆகாரத்தை நீக்கியருள வேண்டும். இதுவே அடியேன் செய்யும் விண்ணப்பம்.

212. மாணிக் கநகம் புரைமேனி
மா லுக்கு வார்சடையோன்
பாணிக் கனகம் பலிஒழித்
தானுக்குப் பச்சைத்துழாய்
ஆணிக் கனக முடியலங்
காரனுக்கு அண்டம்எல்லாம்
பேணிக்கு அனகனுக் குப்பித்தர்
ஆனவர் பித்தர் அன்றே. 3

மாணிக்க மயமானதொரு மலையை ஒத்த திரு மேனியையுடைய திருமாலும் நீண்ட கபர்த்த மென்னும் சடையை உடையவனான சிவபிரானது கையிலே ஒட்டிக் கொண்ட பெரிய பிரம கபாலத்தைக் கொண்டு இரக்கிற பிச்சையை நீக்கியருளியவனும், அண்ட கோளங்கள் எல்லாவற்றையும் விரும்பிப் பாதுகாப்பவனும், தோஷ மில்லாதவனுமாகிய பசுமையான திருத் துழாய் மாலையைத் தரித்த ஆணிப் பொன்னாலாகிய கிரீடத்தை யுடைய அழகப் பிரான் விஷயமாகப் பக்திப் பித்துக் கொண்டவர் மற்றை விஷயங்களிற் காதற்பித்துக் கொண் டவர்போல் இகழத்தக்கவர் அல்லர்

213. பித்துஅரும் பாநின்ற நெஞ்சனை
வஞ்சனைப் பேருலகோர்
கைத்து அரும் பாவி எனும்கடை
யேனைக் கடைக்கணியாய்
முத்தரும் பாரும் தொழும்அழ
காவண்டு மூசும்துழாய்ப்
புத்தரும்பு ஆர்முடி யாய்அடி
யாரைப் புரப்பவனே! 4

முத்திபெற்றவர்களும் இவ்வுலகத்தவர்களும்வணங்கப் பெற்ற அழகனே! வண்டுகள் மொய்க்கப் பெற்ற திருத்

துழாயின் புதிய அரும்புகள் பொருந்திய திருமுடியை உடையவனே! அடிமைப்பட்டவர்களைப் பாதுகாத்து அருள்பவனே! விஷயாந்தரங்களில் ஆசைப் பித்து உண்டாகின்ற மனத்தை உடையேனும் வஞ்சகமுடையேனும் பெரிய உலகத்தில் உள்ளார் பலரும் வெறுத்து 'கொடிய பாவி இவன்' என்று இகழ்தற்கு உரிய கடைப்பட்டவனுமாகிய என்னைக் கடாட்சித்து அருள்வாய்.

214. புரந்தரன் ஆம்எனப் பூபதி
யாகிப் புகர்முகமாத்
துரந்துஅரசு ஆளில்என் நல்குரவு
ஆகில்என் தொல்புவிக்கு
வரம்தர மாலிருந் சோலைநின்
றார்க்குஎன் மனத்தினுள்ளே
நிரந்தர மாய்அலங் காரர்க்குஇங்கு
ஆட்பட்டு நின்றபின்னே. 5

பழமையான நிலவுலகத்தில் உள்ளவர்களுக்கு வேண்டும் வரங்களைக் கொடுத்தருளுதற் பொருட்டுத் திருமாலிரும் சோலை மலையில் எழுந்தருளி நின்றவராகிய அழகருக்கு இவ்விடத்தில் (இம்மையில்) இடைவிடாமல் எப்பொழுதும் என் மனப்பூர்வமாக யான் அடிமைப்பட்டு நின்ற பின்பு 'இவன் இந்திரனே யாவன்' என்று அனைவரும் சொல்லும்படி அரசனாகிச் செம்புள்ளிகள் உள்ள முகத்தையுடைய பட்டத்து யானையை ஏறி நடத்தி அரசாண்டால் என்ன? வறுமைப் பட்டால் என்ன?

215. நின்றபி ராணன் கழலும்முன்
னேநெஞ்ச மேநினையாய்
சென்றபி ராயம்வம் பேசென்ற
தால்திரு மங்கைகொங்கை
துன்றுஅபி ராமனைச் சுந்தரத்
தோளனைத் தோளின்மல்லைக்
கொன்றபி ரானை அடைந்தடி
யாரொடும் கூடுகைக்கே. 6

மனமே! இதுவரை கழிந்த ஆயுள் முழுவதும் வீணே போய்விட்டது. இனியாயினும் உடலில் நின்ற உயிர் அவ்வுடலை விட்டு நீங்குவதற்கு முன்னே — திருமகளுடைய தனங்களை நெருங்கித் தழுவுகிற அழகனும், அழகிய திருத்தோள்களையுடையவனும், புஜபலத்தால் மல்லர்களைக் கொன்ற உபகாரனுமான எம்பெருமானைச் சரணமடைந்து அவனுடைய அடியவர்களோடும் சேர்வதற்குக் கருதுவாய்.

216. கூடுகைக் கும்சர மத்துஅடி
யேற்குக் கொடியவஞ்சச்
சாடுஉகைக் கும்சர ணந்தர
வேண்டும் தடத்துஅழுந்தி
வாடுகைக் குஞ்சரம் காத்தீர்விண்
வாழ்கைக்கும் வாள் அரக்கர்
வீடுகைக் கும்சரம் கோத்தீர்
விடைவெற்பின் வித்தகரே! 7

தடாகத்தில் முதலையின் வாய்ப்பட்டு மூழ்கி வாட்டமடைந்த துதிக்கையையுடைய யானையை அங்குச் சென்று காத்தருளியவரே! தேவர்கள் வாழும் படியாகவும் கொடிய இராக்கதர்கள் அழியும் படியாகவும் இராமாவதாரத்தில் அம்புகளை தொடுத்திட்டவரே! ரிஷபகிரியாகிய திருமாலிருஞ் சோலையில் எழுந்தருளியிருக்கிற ஞான சொரூபியே!— உடம்பை உயிர் வெறுத்து நீங்கும் படியான அந்திம காலத்தில் நுமக்கு அடிமைப் பட்டவனான எனக்குக் கொடுமையான வஞ்சனைக் கருத்துக்களை அடித்துத் தள்ளுவதற்காக உமது திருவடிகளைத் தந்தருள வேண்டும்.

பாங்கி வெறிவிலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடு நிற்றல்

217. வித்தகர் உம்பர்க்கு அரசா
னவரும் விதியும்கங்கை
மத்தக ரும்பர வும்அலங்
காரர் மழைகொண்டகார்
ஒத்தக ரும்பரஞ் சோதியர்
நாமம் உரைத்தன்னைமீர்
இத்தக ரும்பர தெய்வமும்
கூத்தும்விட்டு ஏத்துமினே. 8

தாய்மார்களே! நீங்கள் இந்த ஆட்டுக் கடாப்பலியை யும் வேறு தெய்வத்தை வழிபடுதலையும் வெறியாட்டு ஆட்டுவித்தலையும் ஒழித்து, ஞான சொரூபியும், தேவ ராஜனான இந்திரனும் பிரமனும் கங்கையைத் தரித்த சிரசை உடையவரான சிவபிரானும் துதித்து வணங்கி வழிபடப் பெற்ற அழகரும், நீர்கொண்ட காளமேகம் போன்ற கருமையான சிறந்த ஒளியை உடையவருமாகிய எம்பெருமானுடைய திருநாமங்களைச் சொல்லி அப் பெருமானைத் துதியுங்கள்.

தோத்திரப் பிரபந்தங்களில் அகப்பொருள் கிளவித் துறைகளை இடை இடையே கூறுதல் கவி சமயமாதலை இலக்கியங் கொண்டு உணர்க.

218. ஏத்துமின் பத்தியி னால்எட்டு
எழுத்தும் இணையடிக்கே
சாத்துமின் பத்திரத் தண்ணம்
துழாய்மதி தாங்கிக்கஞ்சம்
பூத்துமின் பத்தி செயும்பச்சை
மாமுகில் போலழகர்
காத்துமின் பத்தி விருத்தியும்
வைப்பர் கருணை செய்தே. 9

இனிமையான பக்தியோடு எட்டு எழுத்துக்களையும் உச்சரியுங்கள். குளிர்ந்த அழகிய துளசி தளங்களை அப்பெருமானுடைய உபய திருவடிகளில் சமர்ப்பியுங்கள். இங்ஙனம் செய்வீரானால் சந்திர மண்டலத்தை மேலே சுமந்து தாமரை மலர்கள் (தன்னிடத்தே) பூக்கப்பெற்று மின்னல்கள் ஒழுங்காகத் தோன்றபெற்ற பசுமையான பெரியதெரு மேகம் (உண்டானால் அது) போன்ற திரு மேனியை உடைய அழகர் அருள் கூர்ந்து உன்னைப் பாதுகாத்தும் பேரின்பத்தில் நிலைநிறுத்தியும் பரமபதத்தில் வைத்தருள்வர்.

பத்திரம்—(தன்னையிட்டு அருச்சிபவருக்கு) மங்களத்தைத் தருகின்ற துழாய் எனினும் அமையும்.

219. செய்தவர் ஆக வருந்தியும்
தீர்த்தத் துறைபடிந்தும்
கைதவர் ஆகமம் கற்றும்என்
ஆம்கடற் பார்மருப்பில்
பெய்தவ ராகனை மால் அலங்
காரனைப் பேரிலங்கை
எய்தவ! ராகவ! என்றுஏத்த
நீங்கும் இருவினையே. 10

செய்கின்ற தவத்தை உடையவராக (உடலும் உள்ளமும்) வருந்தியும் புண்ணிய தீர்த்தங்களின் படித்துறைகளில் நீராடியும் வஞ்சகர்களான பிறமதத்தவர்களுடைய ஆகம நூல்களை ஓதியுணர்ந்தும் யாது பயனுண்டாம்? கடல் சூழ்ந்த பூமியைக் கோட்டில் ஏந்திய வராக அவதாரம் செய்தவனான பெருமையுள்ள அழகனைப் பெரிய இலங்காபுரியை அம்பெய்து அழித்தவனே! ரகு குலத்தில் அவதரித்தவனே! என்று துதிக்க அதனால் நல்வினை தீவினை என்னும் இருவினைகளும் ஒழியும்.

தலைவியின் ஆற்றாமையைத் தோழி தலைவனுக்குக் கூறல்

220. வினைக்கும் மருந்துஅரிக் கும்பிணி
மூப்புக்கும் வீகின்றவே
தனைக்கும் மருந்தன்ன தாளழ
காசெய்ய தாமரைஅங்
கனைக்குப் அருந்துஅமு தேஅரு
ளாய்நின்னைக் காதலித்து
நினைக்கும் அருந்ததி தன்னுயிர்
வாழ்க்கை நிலைபெறவே. 11

(தன்னைச் சரணம் அடைந்தவர்களுடைய) இருவினைகளாகிய நோய்களை ஒழிப்பதற்கும் (மருந்துகளுக்குத்தாம் வசப்பட்டு அழியாமல்) எவ்வகை மருந்தையும் (தமது ஆற்றலால்) பயன்படாது அழியும்படி செய்கிற (மிகக் கொடிய) வியாதிகள், கிழத்தனம் என்னும் இவற்றை ஒழிப்பதற்கும், மரண வேதனையைப் போக்குவதற்கும் (பிணி, பசி, மூப்பு, மரணத் துன்பங்களை நீக்க வல்ல) தேவாமிருதத்தைப் போன்ற திருவடிகளை யுடைய அழகனே! செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற அழகிய பெண்ணான திருமகளுக்கும் நுகர்தற்கு உரிய அமிருதமாயுள்ளவனே! உன்னை விரும்பி (எப்போதும் உன்னையே) நினைத்துள்ள அருந்ததி போன்றவளான இம்மங்கையினுடைய உயிர்வாழ்வு நிலைபெறும்படி கருணை செய்வாய்.

221. நிலையாமை யான உடலும்
உயிரும் நினைவும்தம்மில்
கலையாமை யானம் கலக்கும்முன்
னேகங்கை வைத்தசடைத்
தலையாம்ஐ ஆனனன் தாமரை
யான்தொழும் தாள்அழகன்
அலையாமை ஆனவன் மாலிரும்
சோலை அடைநெஞ்சமே. 12

மனமே! நிலைத்திராமல் அழியும் தன்மையுள்ள உடம்பும் உயிரும், சிந்தனையும், தம் நிலையினின்று கலையப் பெற்று (இறந்து), சுடுகாட்டை அடைவதற்கு முன்னே, கங்காநதியைத் தரித்த சடைமுடியோடு கூடிய தலையையுடைய ஐம்முகனாகிய சிவபிரானும் தாமரை மலரில் தோன்றியவனான பிரமனும் வணங்கப் பெற்ற திருவடிகளையுடைய அழகனும் திருப்பாற்கடலில் கூர் மாவதாரம் எடுத்தவனுமாகிய எம்பெருமானுடைய திருமாலிருஞ் சோலை மலையைச் சேர்வாய்.

222. நெஞ்சம் உருக்கும் உயிர் உருக்
கும்தொல்லை நீள்வினையின்
வஞ்சம் முருக்கும் பவமுருக்
குப்வண் துழாய்அழகர்
கஞ்ச முருக்கு மலர்வாய்த்
திருநண்பர் கஞ்சனுக்கு
நஞ்சம் உருக்கு வளை ஆழி
அன்னவர் நாமங்களே. 13

தாமரை மலரில் வீற்றருக்கின்ற பலாசம் பூப்போன்ற (சிவந்த) வாயையுடைய திருமகளுக்கு மனம் ஒத்த அன்புடைய கொழுநராய், அப்பெரிய பிராட்டியாரை என்றும் விட்டு விலகாதவரும், கம்சனுக்கு விஷமானவரும், திருமேனி நிறத்தால் நீலோற்பல மலரையும் கடலையும் போன்றவருமான செழிப்பான திருத்துழாய் மாலையைத் தரித்த அழகருடைய திருநாமங்கள் மனத்தை உருகச் செய்யும். உயிரை நெகிழப் பண்ணும். தொன்று தொட்டு வருகிற நீண்ட கருமங்களின் வஞ்சனையை அழிக்கும், அவர்களுடைய பிறப்பை ஒழிக்கும்.

இது திருநாம மகிமை கூறியது.

223. நாமங்கள் ஆவி நழுவும்
தனையும் நவின்றவரைத்
தாம்அங்கு அளாவி மனத்துள்வைப்
பார்தண் டலையின்அகில்

தூமங்கள் ஆவி மணம்நாறும்
 மாலிருஞ் சோலையன்பர்
சேமம்க ளாவின் கனிஅனை
 யார்பதம் சேருவரே. 14

(அழகருடைய) திருநாமங்களை உயிர் உடலை விட்டு நீங்கும் அளவும் உச்சாரணம் செய்து, அப்பெருமானைத் தாம் அவ்விடத்தில் அடைந்து பற்றித் தம் மனத்திற் கொண்டு தியானிப்பவர்கள் சோலைகளில் குளங்கள் அகிற் புகைகளின் நறுமணம் வீசப்பெற்ற திருமாலிரும் சோலை மலையில் எழுந்தருளியிருக்கிற அன்புடையவரும் பாதுகாப்பாய் உள்ளவரும் களாப் பழத்தை ஒத்தவருமாகிய அப்பெருமானுடைய திருவடிகளைச் சேர்வார்கள்.

224. சேராத காத நரகுஏழ்
 தலைமுறை சேர்ந்தவர்க்கும்
வாராதுஅ காதம் வசைபிணி
 பாவம் மறிகடல்முன்
தூராத காதங்கள் தூர்த்தானை
 மாலிரும் சோலையில்போய்
ஆராத காத லுடன்பணி
 வீர்என் அழகனையே. 15

அடங்காத அன்புடனே திருமாலிருஞ் சோலை மலைக்குச் சென்று முன்பு இராமாவதாரத்தில் அலைகள் மடங்கி அடிக்கப் பெற்ற கடலில் தூர்க்கப்படாத அநேக காத தூரம் அளவும் நிரப்பி அணை கட்டியவனான எனது தலைவனாகிய அழகப் பெருமானை வணங்குங்கள், அங்ஙனம் வணங்கினால் ஏழுதலைமுறை உங்களைச் சேர்ந்தவர்களுக்கும் தகுதியற்ற கொடிய நரகங்கள் தொடர மாட்டா. ஆழமான பழிப்பும் நோயும் தீவினையும் நேரிடாது.

காதம் — ஏழரை நாழிகை வழித்தூரம்.

பாங்கி விடு தூது

225. அழக்கன் றியகருங் கண்ணிக்குக்
கண்ணி அளித்திலரேல்
வழக்குஅன் றி முன்கொண்ட வால்வளை
கேளும் மறுத்ததுஉண்டேல்
குழக்கன் றின் பின்குழல் ஊதுஅலங்
காரர்க்குக் கோதைநல்லீர்
சழக்குஅன் றில் வாய்பிளந் தால்உய்ய
லாமென்று சாற்றுமினே. 16

பூமாலை போலும் மெல்லியலாரான மாதர்களே! கண்ணீர் விட்டு அழுதலினால் கன்றிப்போன கருமையான கண்களையுடைய இம்மகளுக்காக, தலைவர் தமது மாலையைக்கொடா ராயின், நியாயமாக அன்றி முன்பு இவளிடமிருந்து வலியக் கவர்ந்து கொண்ட ஒள்ளிய வளையல்களைத் தரும்படி கேளுங்கள் அவற்றையும் தாராது அவர் தடைசொல்வது உண்டானால் இளமையான கன்றுகளின் பின்னே புள்ளாங்குழலை ஊதிச் சென்ற அழகப்பிரானாகிய அத்தலைவர்க்கு குற்றத்தை யுடைய அன்றிற் பறவையின் வாயைக் கிழித்து விட்டால்தான் இவள் பிழைத்தல் கூடும் என்று சொல்லுங்கள்.

பிரிந்த காலத்தில் கைவளை கழலுமாறு இவட்கு நேர்ந்த உடல் மெலிவு இனித் தணிந்து அவ்வளை கழலாத வண்ணம் மகிழ்ச்சியால் உடல் பூரிக்கும்படி மீண்டு வந்து இவளோடு கலந்திடுமாறு அத்தலைவனை வற்புறுத்துங்கள் என்றபடி.

தலைமகளது மடல் ஊர்தல் துணிவை தோழி செவிலிக்கு உணர்த்தல்

226. சாற்றுக் கரும்பனைக் கூற்றுஎன்னும்
ஆசைத் தமிழ்மலயக்
காற்றுக்கு அரும்பறை யும்கண்
படாள்அலங் காரற்குஅண்டர்

ஏற்றுக்கு அரும்புஅனை யக்கொங்கை
யாள்கொண்ட இன்னலுக்கு
மாற்றுக் கரும்பனை அல்லாது
வேறு மருந்தில்லையே. 17

இம்மங்கை, ரசமுள்ள கரும்பை வில்லாக உடையவ னான மன்மதனை யமனென்று சொல்வாள். எல்லரா லும் விரும்பப்படுவதும் தமிழ்வளர்ந்த இடமான பொதிய மலையினின்று தோன்றுவதுமான தென்றற் காற்றுக்கு அது சிறியதாக வீசும் போதெல்லாம் வருந்து வாள். நள்ளிரவிலும் துயில் கொள்ளாள், ஆகவே தேவர் களில் சிங்கம் போன்றவனாகிய அழகப் பிரான் விஷய மாகக் கோங்கு அரும்பை ஒத்த தனங்களையுடையவளான இவள் கொண்ட துன்பத்துக்குப் பரிகாரம் கரிய பனை மடலை ஊர்தலே யல்லாமல் வேறு எப்பரிகாரமும் இல்லை போலும். இரக்கம் இல்லையோ? என வினாவு மாம்.

இம்மடல் திறம் ஆடவர்க்கே பெரும்பாலும் உரியது· அளவுக்கு விஞ்சின ஆசையின் மிகுதியால் மகளிர்க்கும் சிறு பான்மை வரும்.

227. மருந்துஉவந் தார்தொழும் மாலிருஞ்
சோலை மலையழகர்
அருந்துவம் தாரணி என்றுஅயின்
றார் அடல் ஆயிரவாய்
பொருந்துவந்து ஆர்பணிப் பாயார்
விதுரன் புதுமனையில்
விருந்து உவந் தார்அடி யார்க்குஇல்லை
நோயும் வெறுமையுமே. 18

பூமியை உண்போம் என்று திருவுள்ளங் கொண்டு உண்டு அருளியவரும் வலிமையை யுடையதும் ஆயிரம் வாய்கள் பொருந்தியதும் காற்றை உணவாகக் கொள்வது மான ஆதிசேஷன் என்னும் பாம்பாகிய சயனத்தை

உடையவரும், விதுரனது புதியமாளிகையில் விருந்தினராக வந்தருளியவருமாகிய அமிருதத்தை விரும்பி உண்ட வரான தேவர்கள் வணங்கப் பெற்ற திருமாலிருஞ் சோலை யில் எழுந்தருளியிருக்கிற அழகருடைய தொண்டர்களுக் குப் பிணியும் தரித்திரமும் ஒரு நாளும் உளவாகா.

எம்பெருமான் திருவடிக்கு ஆட்படுதலின் பயன் கூறியவாறு. அவனடியார் அவனருளால் எல்லாச் செல்வ மும் நிறைந்து அரோக திடகாத்திரமாய் வாழ்வர் என்க.

தலைமகள் இளமைக்குச் செவிலி இரங்கல்

228. வெறுத்தவ ரைக்கஞ்ச னைச்செற்
றுளார்விடை வெற்பர்வெங்கண்
கறுத்தவ ரைக்குஅஞ்சல் என்றுவந்
தார்கன காம்பரத்தைப்
பொறுத்தஅ ரைக்குஅஞ் சனமேனிக்கு
ஆவி புலர்ந்துருகிச்
சிறுத்தவ ரைக்கஞ்சம் கூப்பும்என்
பேதைக்குஎன் செப்புவதே. 19

கம்சனையும் மற்றும் தம்மைப் பகைத்தவர்களான பல கொடியவர்களையும் கொன்றிட்டவரும், கொடிய கண் களையுடைய கரிய மலைபோன்ற யானைக்கு 'அஞ்சாதே' என்று சொல்லி அபயமளித்து எதிரில் வந்தருளியவரும், ரிஷபகிரியில் எழுந்தருளியவருமாகிய அழகருடைய பொன் மயமான பீதாம்பரத்தைத் தரித்த திருவரையின் அழகைக் குறித்தும், மைபோலும் கரிய திருமேனி நிறத்தைக் குறித் தும், ஈடுபட்டு உயிர்வருந்திக் கரைந்து உத்தம இலக்கண மாகிய ரேகைகளையுடைய சிறிய தாமரை மலர் போன்ற கைகளைக் குவித்துத் தொழுகின்ற எனது மிக்க இளமைப் பருவமுடைய வளான பெண்ணின் நிலைமையைக் குறித்து யான் யாது சொல்வது? ஒன்றும் சொல்லத் தரமில்லை என்றபடி,

அஞ்சல் - அஞ்சாதே. அல் ஈற்று எதிர்மறை வியங்கோள் வினைமுற்று.

229. செப்போ தனம்செழும் துப்போசெவ்
வாய்என்று சேயிழையார்க்கு
ஒப்பு ஓ தநஞ்சுரு கித்திரி,
வீர்கனல் ஊதைமண்விண்
அப்புஓ தனம்என்று அமுதுசெய்
தார்அலங் காரர் பொற்றாள்
எப்போது அனந்தல் தவிர்ந்து ஏத்த
நீங்கள் இருக்கின்றதே. 20

கொங்கைகள் பொற்கலசங்களோ? சிவந்த வாயானது செழுமையான பவழமோ? என்று செம்பொன் ஆபரணம் அணிந்தவர்களான மாதர்களின் உறுப்புக்களுக்கு உவமை எடுத்துச் சொல்வதில் மனம் நெகிழ்ந்து கரைந்து, வீணே திரிகின்றவர்களே; நீங்கள் அக்கினியும், காற்றும், நிலமும், ஆகாயமும், நீரும் ஆகிய ஐம்பெருங்பூதங்களை உணவாக உட்கொண்டவராகிய அழகருடைய அழகியதிருவடிகளைத் தாமச குணம் ஒழிந்து துதிக்க இருப்பது எக்காலத்தோ!

செய்யுள் நோக்கி ஐம்பூதங்களை முறை பிறழ வைத்தார். அனந்தல் - தூக்கம், சோம்பல். இங்கு தமோ குணத்தைக் குறித்தது.

230. இருக்குஅந் தரத்துஅனை வோர்களும்
ஓதி இடபகிரி
நெருக்கம் தரத்தனை ஏத்தநின்
றானை நிறுத்ததுப்பின்
உருக்கந் தர்அத்தனைத் துன்புஒழித்
தானை உலகம் உண்ட
திருக்கந் தரத்தனை அல்லாது எண்
ணேன்ஒரு தெய்வத்தையே. 21

மேல்உலகத்திலுள்ள எல்லாத் தேவர்களும் வேதவாக்கியங்களைச் சொல்லி, திருமாலிருஞ் சோலை மலையிலே நெருக்கம் உண்டாகுமாறு வந்து திரண்டு தன்னைத் துதிக்க நின்றவனும், நிறம் விளங்கப் பெற்ற சிறந்த பவழம் போன்ற வடிவு நிறத்தையுடைய முருகக் கடவுளுக்குத் தந்தையாகிய சிவபிரானை இரத்தல் துன்பம் ஒழியும்படி செய்தருளியவனும், உலகங்களை அமுது செய்த அழகிய கண்டத்தையுடையவனுமான ஸ்ரீமந் நாராயணனை யல்லாமல் வேறொரு தெய்வத்தை யான் கருதேன்.

231. தெய்வம் பலஅவர் நூலும்
பலஅவை தேர்பொழுதில்
பொய்வம் புஅலஎன்று தோன்றும்புல்
லோர்கட்குப் போதநல்லோர்
உய்வம் பலனும் அவனேஎன்று
ஓதி உணர்வர்நெஞ்சே!
கொய்வம்பு அலர்சொரி யும்சோலை
மாமலைக் கொண்டலையே. 22

மனமே! (உலகத்தில்) தெய்வங்கள் பல இருக்கின்றன. அத்தேவர்களைப் பற்றிய ஆகமங்களும் பல இருக்கின்றன. அந்நூல்கள் ஆராயுமிடத்து பொய்ம்மை யுடையனவும் பயனற்றவையும் அல்லவென்று (உண்மை என்று) பயனுள்ளவை என்று அற்பர்களுக்குத் தோன்றும்; ஞானத்தை உடைய நல்லவர்களோ, 'உய்யக்கடவோம்; பயனாகின்றவனும் அழகப் பிரானே' என்று எண்ணி விரும்பிப் பறிக்கத்தக்க வாசனையுள்ள மலர்கள் சிந்தப் பெற்ற திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளியிருக்கிற நீர்கொண்ட மேகம் போன்றவனான அழகனையே துதித்துத் தியானிப்பார்கள்.

நெஞ்சே! நீ புல்லோர் வழியிற் புகுதாது. நல்லோர் நெறியில் நிற்பாய் என்று குறித்தபடி.

குறிப்பு :—புல்லோர் தமது ஆராய்ச்சிக் குறைவினால் பற்பல தேவதாந்தரங்களையும் அவரைப் பற்றிய பொய் நூல்களையும் உண்மையென்று நம்பி, பாராட்டிப் பழுதே பல பகலும் போக்குவர். (பொய்அல - உண்மை யென்று நப்பி) (வம்பு அல-பயனுள்ளவை என்று நம்பி) என்று கூர்ந்து கவனித்தல் வேண்டும்.

232. கொண்டுஅலை யாநிற்கும் ஐம்புலக்
கோள்மக ரங்களின் ஈர்ப்பு
உண்டுஅலை ஆர்பிற விக்கடல்
மூழ்குவர் உத்தமனைத்
தண்டலை ஆர் திரு மாலிருஞ்
சோலைத் தனிச்சுடரைப்
புண்தலை யால்வணங் கார்அணங்கு
ஆர்வினை போகஎன்றே. 23

(உலகத்துப் பேதைகளாய் உள்ளவர்கள்) (மனத்தைத் தம் வசமாகக்) கொண்டுவருந்தி நிற்கிற ஐம்புலன்களாகிய வலிய சுறாமீன்களினால் இழுக்கப்பட்டு, பலவகைச் சஞ்சலங்கள் பொருந்திய பிறப்புத் துன்பமாகிய அலைகள் பொருந்திய கடலில் மூழ்குவார்கள். புருஷோத்தமனும குளிர்ச்சியான இடத்தையுடைய சோலைகள் நிறைந்த திருமாலிரும் சோலை மலையில் எழுந்தருளியிருக்கின்ற ஒப்பற்ற தேஜோ ரூபியுமான எம்பெருமானை, துன்பம் நிறைந்த தம் கருமங்கள் ஒழிவனவாக என்று தசை பொருந்திய தங்கள் தலையைக் கொண்டு நமஸ்கரிக்க மாட்டார்கள். இந்த அஞ்ஞானிகளுடைய தீவினை இருந்தபடி என்னே! என்று இரங்கியவாறாம்.

233. என்றுஉ தரம்கலந் தேன்அற்றை
நான்றுதொட் டு இற்றைவரை
நின்று தரங்கிக்கின் றேற்குஅருள்
வாய்நெடும் காங்கடந்து

சென்று தரங்கக் கடல்தூர்த்து
இலங்கையில் தீயவரைக்
கொன்று தரம்குவித் தாய் சோலை
மாமலைக் கோவலனே. 24

நெடிய காட்டை (தண்ட காரணியத்தை) நடந்து கடந்து அப்பாற் சென்று, அலைகளையுடைய கடலை (மலைகளைக் கொண்டு) நிரப்பி அணைகட்டி, இலங்காபுரியிலுள்ள கொடியவர்களான அரக்கர்களைக் கொன்று (அவர்கள் உடலை) மலையாகக் குவித்தவனே! திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளியிருக்கின்ற ஆயனே! எப்பொழுது தாயின் வயிற்றில் வந்து புகுந்தேனோ அன்றைத் தினம் தொடங்கி இன்றை நாள் அளவும் இடைவிடாது அலைகின்றவனாகிய எனக்கு (இனியாயினும் அங்ஙனம் அலையாதபடி) கருணை செய்வாய்.

நான்று—ஞான்று என்பதன் முதற் போலி.

கோவலன் என்ற பெயர் பெருமானுடைய சௌலப்பியத்தைக் காட்டும். சௌலப்பியம்-சுலபமாந் தன்மை; எளிமை.

இனி, கோவ லன்—உயிர்களைக் காக்க வல்லவனுமாம்

234. கோவலன் பார்ப்புடன் கேகயம்
சூழ்குளிர் சோலைமலைக்
காவலன் பாற்கடல் கண்துயில்
மால்அலங் காரன்என்றே
பாவல்அன் பால்பணி வார்அணி
வானவர் ஆகிமறை
நாவலன் பார்ப்பதி நாதன்நண்
ணாப்பதம் நண்ணுவரே. 25

•ஆயனாய் வளாந்தவன். குஞ்சுகளுடனே மயில்கள் சூழப்பெற்ற குளிர்ந்த திருமாலிருஞ் சோலைமலைக்குத்

தலைவன். திருப்பாற்கடலில் யோகநித்திரை கொண்டருள்கிற பெருமை பொருந்திய அழகன்' என்று சொல்லிக் கொண்டே பரவுதலையுடைய மிக்க பக்தியினால் அப்பெருமானை வணங்குபவர்கள் மறுமையில் அழகிய முக்தர்களாகி வேதம் வல்ல நாவையுடையவனான பிரமனும் பார்வதி நாயகனான சிவ பிரானும் அடைய மாட்டாத பரமபதத்தை அடைவார்கள்

'நண்ணாப்பதம் நண்ணுவர்' என்ற இடத்து தொடை முரண் தோன்றுதல் காண்க.

பாத வகுப்பு

235. நண்இன நாக முடிமேல்
நடித்துஎன்னை நாசம்அறப்
பண்ணின நாகமும் பாரும்
அளந்தன பண்டுதம்பி
மண்ணினன் ஆக வனம்போ
யினவளர் சோலைமலைக்
கண்இனன் ஆகம் கரியான்
சிவந்த கழல்இணையே. 26

ஓங்கி வளர்ந்த திருமாலிருஞ் சோலை மலையில் உதித்த சூரியன் போல விளங்குகின்றவனும் திருமேனி கறுத்துள்ளவனுமான அழகப் பிரானுடைய செந்நிறமாயுள்ள உபய பாதங்கள்—காளியன் என்னும் பாம்பினது நெருங்கித் தொகுதியாய் உள்ள தலைகளின் மேல் நடனஞ் செய்து என்னை அழியாது உய்யும்படி செய்தருளின; மேல் உலகத்தையும் பூமியையும் அளந்தருளின; முன்பு இராமாவதாரத்தில் அடுத்த தம்பியான பரதாழ்வான் நிலவுலகத்து அரசாட்சிக்கு உரியவன் ஆகுமாறு தாம் வனவாசம் செய்தன

பாத வகுப்பு என்னும் பிரபந்தத்துறை கூறியவாறாம். 303 ஆம் எண் செய்யுளும் இதுபோன்றது. நாகமும்

(வானுலகு) பாரும் அளந்தது திருவிக்கிரம அவதாரத்தில்; இவ்வரலாற்றால் கொடியவரை அடக்குவதற்கு வேண்டிய தந்திரம் வல்லவன் என்றவாறு. இனன் - இனம் என்பதின் இறுதிப்போலி.

தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கல்

236. கழலப் புகுந்த வளை அறி
யார்என் கருத்தறியார்
அழலப் புகன்றுஒறுப் பார்அன்னை
மார்அறு காற்சுரும்பு
சுழலப் புனைந்த துழாய்மார்பர்
மாலிருஞ் சோலை என்னார்
தழல்அப் புவர்என் தனங்களி
லேசந்த னங்கள்என்றே. 27

என் தாய்மார்கள் என் கைகளினின்று கழன்று விழத் தொடங்கிய வளையல்களின் தன்மையை உணரார். என் மனத்திற் கொண்ட காதலை உள்ளபடி உணரார். என் மனம் கொதிக்கக் கடுஞ் சொற்களைக் கூறி வருத்துவார்கள். ஆறுகால்கள் உள்ள வண்டுகள் சுழன்று மொய்க்கும் படி தரித்த திருத்துழாய் மாலையை உடைய திருமார்பினரான அழகரது திருமாலிருஞ் சோலை மலை யென்று ஒரு தரமேனும் சொல்லார், சந்தனக் குழம்பு வகைகள் என்று சொல்லி என்தனங்களின்மேல் நெருப்பை வாரிப் பூசி நிரப்புவார்கள்.

237. தனத்துக்கு அராவிய வேல்விழிக்கு
ஏக்கற்று தையலரால்
தினம்துக் கராகித் திரிவார்
பலர்,சிலர் செங்கமல
வனத்துக் கராசலம் காத்தாற்குச்
சோலை மலையில் நின்ற
கனத்துக்கு அராவணை யாற்குஎம்பி
ராற்குஉள்ளம் காதலரே. 28

மகளிரது கொங்கை அழகிற்கும், அரத்தினால் அராவிக் கூர்செய்யப்பட்ட வேலாயுதம் போன்ற கண்களின் அழகுக்கும் ஏங்கி, அம்மாதர்களின் தொடர்பினால் எந்நாளும் துன்பம் உடையவர்களாய் வீணே அலைபவர்களோ உலகத்தில் பலராவர். உலகத்தில் சிலர்தாம் செந்தாமரை மலர்கள் மலர்ந்த தடாகத்தின் நீரினிடத்துக் கஜேந்திர ஆழ்வானைப் பாதுகாத்து அருளியவனும், திருமாலிருஞ் சோலை மலையில் நின்ற திருக்கோலமாக எழுந்தருளியிருக்கிற காளமேகம் போன்றவனும், ஆதிசேஷனைச் சயனமாக உடையவனுமாகிய எம்பெருமான் விஷயத்தில் மனத்தில் விருப்பமுடையவர் ஆவர்.

238. காதலைப் பத்தினி மேல்வைத்த
நீசக் கருநிருதன்
மாதலைப் பத்தியை மண்ணில்இட்
டாய்நின்னை வாழ்த்தித்தொண்டர்க்கு
ஈதலைப் பத்தியைச் செய்வோர்கள்
வாழும் இடபவெற்பா!
தீதுஅலைப் பத்தியங் கித்திரி
வேற்குஅருள் செய்தருளே. 29

ஆசையை அறக் கற்புடைய நின்மனைவியான சீதாபிராட்டியினிடத்து வைத்த கீழ்மகனான இராவணன் என்னும் கரிய அரக்கனுடைய பெரிய தலை வரிசையைத் துணித்துத்தரையில் தள்ளியவனே! பேரன்பினால் உன்னை வாழ்த்தி நினது அடியவர்களுக்கு வேண்டுவன கொடுத்தலையும் அவர்கள் பக்கல் பத்தியையும் செய்பவர்கள் இனிது வசிக்கும் இடமான ரிஷபகிரியில் எழுந்தருளியிருப்பவனே! தீவினை வருத்தக் கலங்கி அலைபவனான எனக்குக் கருணை செய்தருள்வாய்.

239. அருள்தரு மம்கை விடாதுஏத்தும்
அன்பருக்கு அன்பர்எல்லில்
இருள்தரும் அம்கை எறிஆழி
யார்இசைக் கின்னரரும்

கெருடரும் மங்கைய ரும்வாழ்
இடப கிரியில் கல்லா
முருடரும் அங்கு அயல் எய்தில்அன்
றேஅவர் முத்தர் அன்றே. 30

கருணையையும் அறத்தையும் விடாமல் தம்மைத் துதிக்கின்ற அடியார்களிடத்தில் அன்புடையவரும், பகற்பொழுதில் சூரியனை மறைத்து இருளை உண்டாக்கிய அழகிய தம் திருக்கையால் எறிந்த சக்கரா யுதத்தை உடையவருமான எம்பெருமானது இசை பாடு தலில் வல்ல கின்னரர்களும் கருடர்களும் (அத் தேவசாதி யாருடைய) மாதர்களும் வாழும் இடமான திருமாலிருஞ் சோலை மலையின் சமீபத்தில், கல்வி அறிவில்லாத மூடர் கள் வந்தாலும் அப்போதே அவர்கள் முக்தர்கள் ஆவரன்றோ.

இடபகிரிக்கு அருகில் சென்றால் கல்லாத மூடர் உட்பட அனைவரும் முக்த ஆத்மாக்களாவர் என்பதாம்.

அங்கு - அசை. அயல் என்பது ஐயல் என முதற்போலி பெற்றது; திரிபு நயத்துக்காக. 'அங்கையல்' என்ற மூலத் தைப் பிரித்துக் காட்டப்பட்டது.

240. முத்தர்அன் றேநின் கழல்ஒரு
கால்கை முகிழ்க்கப்பெற்றோர்
பித்தர்அன்றேநினக் கேபித்தர்
ஆகில் பிரமன் கம்கை
வைத்துஅரன் தேய்துயர் தீர்த்தாய்நின்
சோலை மலைமருவும்
பத்தர்அன் றேபரி வால்என்னை
ஆளும் பரமர்களே. 31

பிரமனது தலையைக் கையில் வைத்துக் கொண்டு சிவபிரான் வருந்திய துன்பத்தை ஒழித்தருளியவனே! உன் திருவடிகளை ஒருதரம் கைகூப்பித் தொழப் பெற்ற

வர்கள் அப்பொழுதே முக்திபெற்றவராவர். உன் விஷய மாகவே பக்திப்பித்து ஏறியவர்களாயின் அவர்கள் பித்துடை யாரேன்று இகழத்தக்கவர் ஆகார். உனது திருமாலிருஞ் சோலை மலையை அடைந்திருக்கிற அடியார்கள் அன்றோ அன்பினால் என்னை ஆட் கொள்ளும் மேலோராவர்.

241. பரந்தா மரைத்திரு மாலிருஞ்
சோலைப் பரமரைக்கால்
கரம்தா மரைஅன்ன கார்நிறத்
தாரைக் கடல்கடக்கும்
சரம்தாம் மரைதிரி கான்போய்
இலங்கைத் தலைவன்பத்துச்
சிரம்தாம் அரைக்கணத்து எய்தாரை
எய்தற்குத் தேர்மனமே! 32

மனமே! பரமபதத்தை யுடையவரும், திருமால் இருஞ் சோலை மலையில் எழுந்தருளியிருக்கிற தலைவரும், திருவடிகளும் திருக்கைகளும் தாமரை மலர்களை ஒத்திருக் கப் பெற்ற காளமேகம் போன்ற திருமேனி நிறத்தை யுடையவரும் தாவுகின்ற மான்கள், சஞ்சரிக்கப் பெற்ற வனத்தில் வாசமாகச் சென்று பின்பு சமுத்திர ராசனை வென்ற ஆற்றலையுடைய அன்பினால் இலங்கை அரச னான இராவணனுடைய பத்துத்தலையும் தாம் அரைக் கணத்தில் துணித்துத் தள்ளியவருமாகிய எம்பெருமானைச் சரண மடைதற்குத் துணிவு கொள்வாய்.

என்று நெஞ்சை நோக்கி இதம் உரைத்தவாறு.

242. தேராய் இரவு பகல்இரை
தேடுவை தீமைநன்மை,
பாராய் இரங்குவை பாவைய
ரால்பண்டு மாவலிபால்

சோராய் இரந்த வனைத்திரு
மாலிருஞ் சோலைநின்ற
பேர்ஆ யிரம்உடை யாளைநெஞ்
சேயென்று பேணுவையே. 33

மனமே! நீ ஆராய்ந்து தெளியாயாகி, இராத்திரியும் பகலும் உணவை நாடித் திரிகின்றாய்; தீவினைகள் இன்னவை யென்றும் நல்வினைகள் இன்னவை யென்றும் நோக்குகின்றாய் இல்லை. மாதர்கள் காரணமாக உருகு வாய். உன்னொரு காலத்தில் மகாபலி சக்கரவர்த்தியினி டத்தில் கபடமாய் யாசித்தவனும், திருமாலிருஞ்சோலை மலையில் நின்ற திருக் கோலமாய் எழுந்தருளியிருக்கின்ற ஆயிரம் திருநாமங்களை உடையவனுமான எம் பெருமானை எக்காலத்தில் விரும்பித் தியானிப்பாயோ!

இங்ஙனம் தம் மனத்தை நோக்கி இரங்கிக் கூறுகின்ற வகையால் உலகத்தார்க்கு அறிவுறுத்தியவாறாம்.

தலைவி தனது வேட்கை மிகுதியைக் கூறல்

243. பேணிக் கவித்த வரைக்குடை
யாய்பெரி யோர்பதின்மர்
ஆணிக் கவித்தமிழ் மாலைகொண்
டாய்அழ காகரிய
மாணிக் கவித்தக மாமலை
யேவண் துளவுக்கு அல்லால்
பாணிக்கு அவித்து அடங் காதுவெங்
காமப் படர்கனலே 34

(ஆக்களிடத்தும் ஆயர்களிடத்தும்) அன்பு கொண்டு எடுத்துப்பிடித்த கோவர்த்தன மலையாகிய குடையை உடையவனே! (அறிவு ஒழுக்கங்களில்) பெரியவர்களான பத்து ஆழ்வார்களுடைய சிறந்த தமிழ்ப் பாமாலை களாகிய திவ்வியப் பிரபந்தங்களை ஏற்றுக் கொண்ட வனே! அழகனே! ஞானத்தையுடைய கருநிறமானதொரு

மாணிக்க மயமாகிய பெரியமலை போன்றவனே! எனது வெவ்விய காதலாகிய மேன் மேற் பரவுகின்ற நெருப்பானது வளப்பமுள்ள நினது திருத்துழாய் மாலைக்குத் தணியுமேயன்றி நீரினால் தணிக்கப்பட்டு அடங்கிவிட மாட்டாது.

நினது திருத்துழாய் மாலையைத் தந்தருள்வையாயின் எனது மையல் நோய் தணியும் என்பதாம். மதுரகவியாழ்வார், ஆண்டாள் ஆகிய இருவர் நீங்கலாக மற்றப் பத்து ஆழ்வார்களைக் குறித்துள்ளார்.

பிரிவு ஆற்றாத தலைவி சந்திரனை நோக்கி இரங்கிக் கூறல்.

244. படராகு வால்குவி யக்குழல்
ஊதிய பாலர்ஐயம்
அடராகு வாகனன் தாதைக்குஇட்
டார்அலங் காரர்துழாய்க்கு
இடராகு வார்பலர் காண்தமி
யேனை எரிப்பதுஎன் நீ
விடராகு வாய்கொண்டு உடல்சுட்டுக்
கான்றிட்ட வெண்திங்களே. 35

விஷயத்தையுடைய ராகு என்னும் பாம்பினால் வாயிற் பெய்து கொள்ளப்பட்டு அதன் உடம்பைச் சுடுதலால் (பொறுக்கமாட்டாமல்) உமிழ்ந்து விடப் பெற்ற வெண்மையான சந்திரனே! மேய்தற்குப் பல இடங்களில் பரவிச் சென்றுள்ள பசுக்கள் தொகுதியாக ஓரிடத்தில் வந்து சேரும்படி இன்னிசை யமைய வேய்ங் குழலை ஊதிய ஆய்ப்பிள்ளையாய் வளர்ந்தவரும், பிச்சையேற்றலால் வருந்திய பெருச்சாளியை வாகனமாக உடையவான விநாயகனது தந்தையாகிய சிவபிரானுக்குப் பிச்சையிட்டவருமாகிய அழகரது திருத்துழாய் மலையைப் பெறுதற்கு ஆசை கொண்டு துன்பம் அடைபவர்

உலகத்தில் பலர் உளர் அன்றோ? என்னை ஒருத்தியை மாத்திரம் நீ எரிப்பது ஏனோ?

நிலவினால் வருந்தும் தலைவியின் தளர்ச்சியைக் கண்ட பாங்கி இரங்கல்

245. திங்கள் அப் பாநின்ற செந்தீக்
கொழுந்தின் செழுஞ்சங்குபோ
லுங்களப் பாவை உருகுவது
ஓர்கிலர் உம்பர்எல்லாம்
எங்களப் பாஎமைக் காவாய்
எனஉலகு ஈர்அடியால்
அங்குஅளப் பான்வளர்ந் தார்சோலை
மாமலை ஆதிபரே. 36

தேவர்கள் அனைவரும் 'எங்கள் இறைவனே! எங்களைப் பாதுகாத்தருள்வாய்' என்று பிரார்த்திக்க' உலகங்களை இரண்டு அடிவைப்புகளால் அளவிடுமாறு அப்போது வளர்ந்து அருளியவராகிய திருமாலிருஞ் சோலை மலைக்குத் தலைவரான அழகா, செழுமையான சங்கு போலும் கழுத்தை யுடைய அழகிய இத்தலைவி சந்திரன் பூசி இடுகின்ற அக்கினிச்சுவாலையினால் (நிலாவினால்) கரைந்து வருந்துவதை அறிகின்றார் இல்லை. அறிவாராயின் உடனே மீண்டும் வந்து இவளை வெளிப்படையாக மணம் புரிந்து அருள்வர் என்பது தாற்பரியம்.

246. ஆதிஅ ராவில் துயில் அலங்
காரர் அழகர்அன்பாம்
வேதியர் ஆவுதி வீற்றிருப்
பார்அண்ட மீதிருக்கும்
சோதியர் ஆவின்பின் போந்தாரை
அன்றித் தொழேன்உடலைக்
காதிஅ ராவினும் பொன்மா
மகுடம் கவிக்கினுமே. 37

ஆதிசேஷன் மேல் பள்ளிகொண்டு யோக நித்திரை செய்கின்ற அலங்காரர் என்றும் அழகர் என்றும் திரு நாமம் உடையவரும், தம்மிடத்து அன்பு கொண்ட அந்தணர்களுடைய ஆகுதிகளில் வீற்றிருப்பவரும், அண்ட கோளத்துக்குப் புறம்பே மேலுள்ளதான பரமபதத்தில் எழுந்தருளியிருக்கிற ஒளி வடிவமானவரும், பசுக்களை மேய்த்தற்கு அவற்றின் பின்னே சென்ற வருமாகிய எம்பெருமானை அல்லாமல் மற்றொருவரை என் உடம்பைக் கூறு செய்து அராவி வருத்தினாலும் பொன் மயமான பெரிய கிரீடத்தை எனக்குச் சூட்டினாலும் வணங்கமாட்டேன்.

ஆவுதி - ஆகுதி; ஓமத்தியில் நெய்விடுதல்.

247. கவித்தானை மன்னற்கு நட்பாய்
முடிகவித் தானை அன்று
புவித்தானை வற்றப் பொழிசரத்
தானைப் பொருது இலங்கை
அவித்தானை மாலிருஞ் சோலைநின்
றானை அழகனைமுன்
தவித்துஆனை வாஎன வந்தானைப்
பற்றினென் தஞ்சம் என்றே. 38

வானர சேனைகளையுடைய வானரராசனான சுக்கிரீவனுக்கு நண்பனாகி, அவனுக்கு முடிசூட்டி வைத்தவனும், அந்நாளில் பூமி தேவிக்கு ஆடையாகிய கடல் தவிக்கும்படி பிரயோகிக்கத் தொடங்கிய ஆக்நேய அஸ்திரத்தை உடையவனும், போர் செய்து இலங்கா புரியை அழித்திட்டவனும், திருமாலிருஞ் சோலை மலையில் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளியிருக்கின்றவனும், முன்னொரு காலத்தில் கஜேந்திர ஆழ்வான் தவித்து வருந்தி வந்தருள் என்று அழைக்க அதனருகில் வந்தருளியவனுமான அழகனைச் சரணமென்று அடைந்தேன்.

248. தஞ்சம் தனம்என்று தேடிப்புல்
லோர்தைய லார்கடைக்கண்
வஞ்சம் தனம் கொள்ள வாளா
இழப்பர் மதிஉடையோர்
செஞ்சந் தனப்பொழில் மாலிருஞ்
சோலைத் திருநெடுமால்
நெஞ்சம் தனக்குஉவப் பாகநல்
காநிற்பர் நேர்படினே. 39

அற்பர்கள் செல்வமே ரட்சகமென்று கருதி, முயன்று அதனைச் சம்பாதித்து, மாதர்களுடைய கடைக்கண்களின் வஞ்சனையும் அவரது கொங்கைகளின் பொலிவும் கவர்ந்து கொள்ள, வீணாக அப்பொருளை இழந்து விடுவார்கள். நல்லறிவு உடையவர்களோ தமக்குப் பொருள் கிடைத்தால், அதனைச் சிவந்த சந்தன மரங்களின் சோலையையுடைய திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளியிருக்கிற மகாவிஷ்ணுவின் திருவுள்ளத்துக்கு உகப்பு உ.ண்டாகும்படி உபயோகிப்பார்கள்.

249. நேராய ஏதனை நெஞ்சிடந்
தாய்நெடும் சோலைமலைக்
காராய! வேதனை முன்படைத்
தாய்நின் கழற்குத்தொண்டென்(று)
ஆராய வேதனைப் புன்பிறப்பு
ஓயும் அவாவழியின்
பேராய வேதனை இல்உழைப்
போரும் பிழைப்பர்களே. 40

தனக்கு எதிராய் நின்ற குற்றத்தையுடையவனான இரணியனை மார்பைப் பிளந்தவனே! நெடிய திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளியிருக்கிறவனும் கரியதிரு நிற முடைய இடைப்பிள்ளையாய் வளர்ந்தவனும் ஆனவனே! படைத்தற்கடவுளான பிரமனை முன்பு சிருஷ்டித்தவனே! உனது திருவடிக்குத் தாம்

அடிமையென்று ஆராய்ந்து உணரவே இழிவான பிறப்பு வகைகள் எத்தனையுண்டோ அத்தனையும் ஒய்ந்து விடும், ஆசை வழியால் பெரிய தொகுதியான துன்பங்களைத் தருகின்ற சம்சார பந்தத்தில் அகப்பட்டு வருந்து பவர் களும் உய்வார்கள்.

தலைவி தோழியர்க்கு அறத்தொடு நிற்றல்

250. பிழைத்தலை யான்எண்ணிப் பேசுகின்
றேன்இப் பிணிமற்றொன்றால்
மழைத்தலை வார்குழ வீர்தணி
யாது வருணனைமுன்
அழைத்துஅலை அங்குஅடைத் தார்அலங்
காரர் அலங்கல்நல்கீர்
முழைத்தலை நின்று மலயா
நிலம்வந்து மோதும் முன்னே. 41

சிரசில் மேகம் போன்ற நீண்ட கூந்தலை உடையவர் களே! நான் பிழைக்கும் வழியை ஆராய்ந்து சொல்லு கின்றேன் இந்தக் காதல் நோய் வேறொரு பரிகாரத்தால் அடங்காது மலயமாருதமாகிய தென்றல் காற்று அம்மலைய பர்வதத்தினது குகையிடத்திலின்று வந்து தாக்குவதற்கு முன்னமே, வருணனை எதிரில் வரவழைத்து கடலை அப்பொழுது அணை கட்டி அடைத்தவரான அழகருடைய மாலையைக் கொணர்ந்து கொடுங்கள்.

அவனது பிரசாதமான திருத்துழாய் இந்நோய் தணித் தற்கு ஏற்ற பசுமருந்தாகிய சஞ்சீவி மூலிகை என்ற வாறு.

251. மோது ஆகவந்தனை மூட்டுஇலங்
கேசன் முடிந்து விண்ணின்
மீதாக வந்தனை வில்லெடுத்
தேவிடை வெற்பில் நின்ற

நாதா! கவந்தனைச் செற்றாய்
உனையன்றி நான்மறந்தும்
தீதாக வந்தனை செய்யேன்
புறஞ்சில தேவரையே. 42

ரிஷப கிரியாகிய திருமாலிருஞ் சோலைமலையில் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளியிருக்கிற தலைவனே! கவந்தன் என்கிற இராக்கதனைக் கொன்றிட்டவனே! தாக்கிச் செய்வதான போரை வலிய உண்டாக்கி நடத்திய இலங்கா புரிக்குத் தலைவனான இராவணன் இறந்து மேலுலகத்தில் சேரும்படி, கோதண்டத்தைக் கையில் எடுத்து வந்தாய். உன்னையன்றி வேறுசில தேவர்களை நான் மறந்தாயினும் தீமை நிகழுமாறு வணங்கமாட்டேன்;

குறிப்பு: இவர்களை ''மறந்தும் புறந்தொழா மாந்தர்' என்பர்.

252. தேவரை யாதல் மனிதரை
யாதல் செழுங்கவிதை
நாவரை யாமல் நவிலுகிற்
பீர்நம்மை ஆளும்செம்பொன்
மேவுஅரை யானை இருஞ்சோலை
வேங்கடம் மெய்யம்என்னும்
மாவரை யானை ஒருவனை
யேசொல்லி வாழுமினே. 43

பிற தேவர்களைக் குறித்தாவது மனிதர்களைக் குறித்தாவது நாவினால் வரையறை கொள்ளாமல் செழுமையான பாடல்களைப் பாடித்துதிப்பவர்களே! நம்மை அனைவரையும் அடிமையாகக் கொண்டுள்ள மாற்றுயர்ந்த பொன்மயமான ஆடையாகிய பீதாம்பரம் பொருந்திய திருவரையையுடையவனும் திருமாலிருஞ் சோலை திருவேங்கடம் திருமெய்யம் என்னும் பெரியமலைகளைத்தான் எழுந்தருளியிருக்கும் இடமாகக் கொண்டவனுமாகிய ஸ்ரீமந் நாராயணன் ஒருவனையே கவிபாடித் துதித்து, பேரின்ப வாழ்க்கை பெற்று உய்யுங்கள்.

திருமெய்யம் — பாண்டியநாட்டுத் திருப்பதி பதினெட்டில் ஒன்று, சத்தியகிரி யென்னும் மறுபெயர் உடையது.

253. வாழும்மின் பங்கயச் சுந்தர
வல்லிம ணாளன்வெற்பைச்
சூழுமின் பந்தித்த தொல்வினை
தீர்ந்துய்யத் தொங்கல் சுற்றும்
தாழும்இன் பஞ்சணை மேல்மட
வார்தட மாமுலைக்கே
வீழும்இன் பம்கரு தித்துன்ப
யோனியில் வீழ்பவரே. 44

சுற்றிலும் பூமாலைகள் தொங்க விடப் பெற்ற இனிமையான பஞ்சுமெத்தையின் மீது இளமகளிரது பெரிய அழகிய தனங்களில் விரும்பிச் சேர்ந்து பெறுகிற சிற்றின்பத்தைக் கருதி, துன்பத்தைத் தருகிற பிறப்புக்களாகிய படுகுழியில் வீழ்பவரே! உங்கள் உயிரைக் கட்டுப் படுத்துகின்ற பழமையான கருமங்கள் நீங்கி நீங்கள் ஈடேறும்படி என்றும் அழியாமல் நிலைபெற்றிருப்பதொரு மின்னல் போன்றவளும் செந்தாமரை மலரில் வாழ்பவளும் சுந்தரவல்லியென்னும் திருநாமம் உடையவளுமாள பெரிய பிராட்டியின் கணவனாகிய அழகப்பிரானது திருமாலிருஞ்சோலை மலையைப் பிரதட்சணம் செய்யுங்கள். (சுற்றிவாருங்கள்.)

254. வீழம ராமரம் எய்தார்
மதிதவழ் வெற்பை நெஞ்சே!
தாழ்அமர் ஆடச் சமன்குறு
கான்இச் சரீர மென்னும்
பாழ்அம ராமல் பரகதி
ஏற்றுவர் பார்க்கில் விண்ணோர்
வாழ்அம ராலவதி யும்நர
காம் அந்த மாநகர்க்கே. 45

மனமே! மராமரங்கள் விழும்படி அம்பு எய்தவரான எம்பெருமானுடைய உயர்ச்சியினால் சந்திரன் தவழப் பெற்ற திருமாலிருஞ்சோலை மலையை வணங்குவாய். (அதனால் யாது பயன் எனின்) போர் செய்து வென்று உயிரைக் கவர்ந்து செல்லுதற்காக யமன் அருகில் வருதலும் செய்யான். அன்றியும் இந்த உடம்பாகிய பாழிலே பொருந்தாதபடி (மீண்டும் பிறப்பு இல்லையாம்படி அவ்வுயிரை எம்பெருமான்) பரமபதத்தில் சேர்த்தருள்வர். ஆலோசித்துப் பார்க்கு மிடத்து தேவர்கள் வாழ்கின்ற அமராவதி நகரமும் அந்த ஸ்ரீ வைகுண்ட திவ்விய நகரத்துக்கு முன்னே நரகமெனத்தக்கதாம்.

255. நகரமும் நாடும் புரந்தவர்
நண்ணல ரால்வனமும்
சிகரமும் நாடும் சிறுமை கண்
டோம் மஞ்ஞை தேன்இசைகள்
பகரமுன் ஆடும் பனிச் சோலை
வெற்பில்நிற் பார்க்குக்கஞ்சன்
தகரமுன் நாள் துகைத் தார்க்குஅறிந்
தீர்கள் சரண்புகுமே. 46

பட்டணங்களையும் தேசங்களையும் ஆண்ட அரசர்கள் பகைவர்களால் (அடித்துத் துரத்தப்பட்டுக்) காட்டையும் மலை உச்சியையும தேடிச் செல்லும் படியான எளிமையை உலகத்தில் பார்த்துள்ளோம். அறிந்தவர்களே! வண்டுகள் கீதங்கள் பாட மயில்கள் எதிரில் கூத்தாடப் பெற்ற குளிர்ந்த திருமாலிஞ் சோலை மலையில் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளியிருப்பவரும் கஞ்சன் அழியும்படி முற்காலத்தில் மிதித்தவருமான எம்பெருமானுக்கு அடைக்கலம் புகுங்கள்.

256. சரணியன் ஆகத் தனைநினைந்
தாரைத் தன் போலவைக்கும்
அரணியன் நாகத்து அணையான்
அரங்கன் அழகன் எங்கோன்

இரணியன் ஆகம் இடந்தான்
கதைஅன்றி ஈனர் தங்கள்
முரண்இயல் நாகத்தும் புன்குரல்
ஓரி முதுக்குரலே. 47

தன்னைச் சரணம் அடையத் தக்கவனாக எண்ணிச் சரணம் அடைந்தவர்களைத் தன்னைப் போலவே வைத்தருள்கின்ற பாதுகாப்பாக உள்ளவனும், ஆதிசேஷனைச் சயனமாக உடையவனும், ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருப்பவனும், எமது தலைவனும், இரணியாசுரனுடைய மார்பைப் பிளந்தவனுமான அழகப் பிரானுடைய திவ்விய சரித்திரம் அல்லாமல், இழிவான பிற சமயத்தார் தங்களுடைய மாறுபாடு பொருந்திய நாவினாற் பிதற்றுகின்ற இழிவான சொற்கள் கிழநரி ஊளையிடுகிற பெருங்குரல் போலச் செவிக்கு இன்னாததாய் வெறுக்கத் தக்கதாம்.

257. முதுவிருந் தாவனத்து ஆனிரை
மேய்த்தவர் முன்விதுரன்
புதுவிருந்து ஆனவர் மால்அரங்
காரர் பொலங்கழலாம்
மதுஇருந் தாமரைக்கு ஆளாய்
இரார்க்கு மதிநுட்பநூல்
எதுஇருந் தாலும் அதனால்
விடாஇங்கு இருவினையே. 48

பழமையான பிருந்தாவனத்தில் பசுக்கூட்டங்களை மேய்த்தவரும், முன்பு விதுரனுக்கு அதிசயிக்க தக்க விருந்தினரானவருமாகிய பெருமையுடைய அழகரது அழகிய திருவடிகளாகிய தேன் கொண்ட பெரிய தாமரை மலர்களுக்கு அடிமைப்பட்டிராதவர்களுக்கு நுண்ணறிவை உண்டாக்குகின்ற சாஸ்திரங்களில் எது பயின்று தேறப் பட்டிருந்தாலும் அச்சாஸ்திர தேர்ச்சி மாத்திரத்தால் இவ்வுலகத்தில் இருவகை வினைகளும் நீங்கமாட்டா.

தலைவி வெறிவிலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடு நிற்றல்

258. வினையாட்டி யேன்கொண்ட வெங்காம
நோய்வெறி யாட்டினும் இச்
சினை ஆட்டி னும்தணி யாது அன்னை
மீர் செய்ய பூங்கமல
மனையாட்டி நாயகன் மாலிருஞ்
சோலை மலைச்சிலம்பாற்று
எனை ஆட்டி வாரும்சொன் னேன்எந்த
நோயும் எனக்கில்லையே. 49

தாய்மார்களே! தீவினையால் ஆட்டப்படுபவளாகிய யான் அடைந்திருக்கின்ற கொடிய இந்தக் காதல் நோயானது (முருகக் கடவுளின் விஷயமாக) ஆவேசம் ஆடுவித்தலாலும் உறுப்புக்களிற் குறைவில்லாத இந்த ஆட்டைப் பலி கொடுத்தலினாலும் அடங்க மாட்டாது. அழகிய செந்தாமரை மலரைத் தான் வாழும் இடமாகக் கொண்டு ஆள்பவளான திருமகளின் கணவனாகிய திருமாலினுடைய திருமாலிருஞ் சோலை மலையிலுள்ள நூபுரகங்கை யென்னும் திவ்விய நதியிலே என்னை நீராட்டி வாருங்கள். எனக்குச் சிறிது நோயும் இராது. சொன்னேன்.

நூபுரகங்கை - சிலம்பாறு.

வண்டு விடுதூது

259. எனக்குஆ விஅங்கும் உடல்இங்கும்
ஆகி இருப்பதைசந்
தனக்கா இயங்கும் தமரவண்
டீர் சொல்லும் தத்துவநூல்
கனக்கா வியம்கவி வல்லோர்
புகழ்அலங் காரனுக்கு
வனக்கா வியங்கண்ணி மாமல
ராள்மண வாளனுக்கே. 50

சந்தனமரச் சோலைகளில் சஞ்சரிக்கும் தன்மையுள்ள ஓசையையுடைய வண்டுகளே! தத்துவசாஸ்திரங்களிலும் பெரிய காவியங்களிலும் கவி பாடுதலிலும் வல்லவரான ஆன்றோர்களால் துதிக்கப் பெற்ற அழகனும், நீரிலுள்ள நீலோற்பல மலர் போன்ற அழகிய கண்களையுடையவளான சிறந்த தாமரை மலரில் வீற்றிருக்கின்றவளாகிய திருமகளினது கணவனுமாகிய தலைவனுக்கு—எனக்கு உயிர் அத்தலைவனிடத்தும், உடம்பு மாத்திரம் இங்குமாய் இருக்கின்ற செய்தியைச் சொல்லுங்கள்.

260. மணவாளர் ஆவி நிகர்திரு
மாதுக்கு மால்அழகர்
பணவாள்அ ராவில் கண் பள்ளிகொள்
வார்திருப் பாதம் எண்ணக்
குணவாளர் ஆவிர்இன் றேஉயிர்
காள்உம்மைக் கூற்றுவனார்
நிணவாள்அ ராவி அறுக்கும்அப்
போது நினைப்பரிதே 51

உயிர்காள்! தமக்கு உயிர் போன்ற பிராண நாயகியான திருமகளுக்குக் கணவரும், பெருமையையுடைய அழகரும், படத்தையும் ஒளியையும் உடைய திருவனந்தாழ்வான் மேலே படுத்துக் கொண்டு யோக நித்திரை செய்தருள்பவரான எம்பெருமானுடைய திருவடிகளைத் தியானிக்குமாறு இப்போதே நற்குணமுடையவர் ஆவீர்கள். ஏனென்றால் உங்களை யமன் நிணந்தோய்ந்த வாளாயுதத்தைக் கூர் செய்து அது கொண்டு அறுக்கும்படியான அந்த அந்திம காலத்தில் எம்பெருமான் திருவடிகளை நினைப்பது இயலாத தாகும். இப்போதே அவனைத் தியானம் செய்ய ஆரம்பியுங்கள் என்பதாம்.

261. நினைப்பு அரி யாய்எளி யாய்உம்பர்
யார்க்கும்நின் அன்பருக்கும்
வினைப்பரி ஆனவன் வாய்பிளந்
தாய் வியன் சோலைமலை

தனைப் பரி யாநின்ற தாள்அழ
காமுன் சனனத்துள்ளும்
உனைப்பரி யாமல்அன் றோபரித்
தேன் இவ் வுடலத்தையே. 52

தேவர் எல்லார்க்கும் உன்பக்கல் பக்தியையுடைய அடியார் கட்கும் முறையே சிந்தித்தற்கு அரியவனும் எளியவனுமாய் இருப்பவனே! தீச்செயலையுடைய குதிரை வடிவாய் வந்த அசுரனது வாயைக் கிழித்தவனே. பெரிய திருமாலிருஞ் சோலை மலையானது தன்னை வசிக்கப் பெற்ற திருவடியையுடைய அழகனே! முற்பிறப்பிலும் உன்னை விரும்பிப் பக்தி செய்யாமற் போனதனால் அன்றோ இப்பிறப்பு எடுத்தேன்.

262 உடலம் புயங்கத்து உரிபோல்
விடும் அன்று உவணப்புள்ளின்
அடல்அம் புயமிசை நீவர
வேண்டும் ஐ ஆனனற்கும்
மடல்அம் புயற்கும் வரம்தரும்
சோலை மலைக்கரசே
கடல்அம் புஉயர்வரை யால்அடைத்
தாய்என்னைக் காப்பதற்கே. 53

ஐந்து முகங்களை உடையவனான சிவபிரானுக்கும் இதழ்கள் நிறைந்த தாமரை மலரில் தோன்றியவனான பிரமனுக்கும் வேண்டிய வரங்களைக் கொடுத்தருள்கின்ற திருமாலிரும் சோலை மலைக்குத் தலைவனே! கடல் நீரை உயர்ந்த மலைகளைக் கொண்டு அணைகட்டி அடைத்தவனே! பாம்பு தன் தோலை விட்டு நீங்குதல் போல உயிர் உடம்பைவிட்டு நீங்கும் அந்நாளில் என்னைப் பாதுகாத்தற்காக, கருடப் பறவையின் வலிய அழகிய தோள்களின் மேல் ஏறி நீ எழுந்தருள வேண்டும்.

புஜங்கம் என்ற வடசொல், மார்பினால் ஊர்வதென்றும், வளைந்து செல்வதென்றும் காரணப் பொருள் படும். உவணப்புள் - கருடன்.

263. காப்ப வன்அந்த மலரோனை
யும்கறைக் கண்டனையும்
பூப்பஅ னந்தரம் போக்கவைப்
பான்புனல் பார்விசும்பு
தீப்ப வனம்தரும் தெய்வ
சிகாமணி சேவடியை
நாப்ப வம்நந்தப் புகழ்வார்க்குஒப்
பில்லை நவகண்டத்தே. 54

எல்லா உலகங்களையும் காத்தல் தொழில் செய்ப வனும் அந்தப் பிரமனையும் சிவனையும் முறையே முதலிற் படைத்த தொழில் செய்யுமாறும் பின்பு (இறுதியில்) அழித்தல் தொழில் செய்யுமாறும் நியமித்து வைப்பவனும், நீர் நிலம் வானம் நெருப்பு காற்று என்னும் பஞ்ச பூதங் களையும் ஆதியில் படைத்தருளிய தேவர்கட்குச் சிரோ ரத்தினம் போன்றவனுமான அழகப் பிரானுடைய சிவந்த திருவடிகளைத் தங்கட்குப் பிறப்பு இனி இல்லையாம்படி நாவினால் துதிக்கின்ற பாகவதர்களுக்கு ஒன்பது கண்டங் களிலும் நிகராவார் எவரும் இல்லை.

இது பாகவத மகிமை கூறியது. செய்யுளாதலின் ஐம்பெரும் பூதங்கள் முறைபிறழக் கூறப்பட்டன.

264. கண்டா கனன்கண்ணன் அல்லால்
கதியின்மை கண்டடைந்தது
உண்டா கநம்பஒட் டாதுஉங்கள்
ஊழ்வினை உண்மையறிந்து
அண்டா! கனவண்ண னேஅரு
ளாய்என்று அழகனுக்கே
தொண்டுஆ கநல்நெஞ்சி னால்உரைப்
பீர்பிறர் தொண்டர்களே. 55

வேறு தெய்வங்கட்கு அடிமையாய் இருப்பவர்களே! கண்டா கர்ணன் என்பவன் ஸ்ரீ கிருஷ்ண பகவானே யல்லாமல் முக்தியளிக்கத்தக்க புகலிடம் வேறு இல்லா

மையை அறிந்து அப் பெருமானையே சரணமடைந்த செய்தி உளதாய் இருக்கவும் உங்கள் விதியானது அதனை நம்பும் படி செய்யாது இனியாயினும் நீங்கள் யதார்த்தத்தைத் தெரிந்து கொண்டு, 'இடைப் பிள்ளையாய் வளர்ந்தவனே! மேகம் போலும் கருநிறமுடையவனே! கருணை புரிவாய்' என்று அழகனுக்கே அடிமை யாகுமாறு நல்ல மனத்துடன் சொல்லுங்கள்.

265. தொண்டுபடார்திரு மாலிருஞ்
சோலையில் சோதிக்குஅன்பு
கொண்டுபடாமலர் இட்டுஇறைஞ்
சார்மடக் கோதையரைக்
கண்டுபடாமுலை தோய் அனு
ராகம் கருதிஇரா
உண்டுபடாநிற்கும் போதும்நை
வார்எங்ஙனம் உய்வதுவே. 56

(சிற்றறிவாளர்கள்) திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளியிருக்கிற பரஞ்சோதி சொரூபியாகிய அழகப் பிரானுக்கு, பக்தி கொண்டு, அடிமைப் படார். வாடாத மலர்களை (அப்பெருமான் திருவடிகளில்) இட்டு அருச்சித்து வணங்கார். இளமைப் பருவமுடைய மாதர்களைப் பார்த்துக் கச்சணிந்து அவர்கள் கொங்கைகளில் அணைகிற இன்பத்தில் ஆசையை மனத்திற் கொண்டு இராப் பொழுதில் உணவுண்டு படுத்துக்கொள்ளும்போது வருந்துவார்கள். இப்படிப்பட்டவர்கள் நற்கதி பெறுவது எவ்வாறோ?

உலகாயதர்கள் என்னும் சார்வாகர்களது கொள்கையை வெறுத்துக் கூறியது இது என்னலாம்.

266. உய்வம் தொழும்புசெய்து என்றுஇருப்
போமை உய்யாமல்ஐவர்
பெய்வம் தொழுவினைக் கேஎன்ப
ரால்பெருந் தேன்சிகரம்

தைவந்து ஒழுகும் மலையலங்
 கார சதுமுகத்துத்
தெய்வம் தொழும்தெய்வ மேஎன்கொ
 லோஉன் திருவுளமே. 57

மிகுதியான தேன் சிகரத்தைத் தழுவிக் கொண்டு பெருகப் பெற்ற திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளியிருக்கிற அழகனே! நான்கு முகங்களையுடைய கடவுளாகிய பிரமதேவனும் வணங்கப் பெற்ற முதற் கடவுளே! 'உனக்கு அடிமை செய்து வாழ்வோம்' என்று எண்ணியிருக்கின்ற எங்களை ஐம்பொறிகளாகிய பகைவர்கள் 'அங்ஙனம் வாழவொட்டாதபடி கொடிய பாவங்களில் உங்களை அகப்படுத்துவோம்' என்று கறுவிச் சொல்லுகிறார்கள். இதுபற்றி உன் திருவுள்ளக் கருத்து யாதாய் இருக்கின்றதோ?

267. திருவிளை யாடுதிண் தோள்செங்கண்
 மால்பல தேவருடன்
மருவுஇளை யான்திரு மாலிருஞ்
 சோலை மலையெனவோர்
உருவிளை யாமல் பிறப்பார்
 பலர்புகழ் ஓதிசிலர்
கருஇளை யாநிற்க வித்தாவர்
 முத்தியில் காமம்அற்றே. 58

'வீரலட்சுமி வீற்றிருந்து குலாவுவதற்கு இடமான வலிய தோள்களையுடைய சிவந்த திருக்கண்களையுடைய திருமாலும், தனக்குத் தமையனான பலராமருடனே மனம் கலந்து பொருந்திய தம்பியுமாகிய எம்பெருமானது திருமாலிருஞ் சோலை மலை' என்று ஒரு தரமேனும் சொல்லாமல் பிறந்து வருந்துபவர் உலகில் பலராவர், சிலபேரோ சிற்றின்ப ஆசை ஒழிந்து, அத்திருமலையின் மகிமையை எடுத்துச் சொல்லி, அதனால், பிறப்புக்கள் வலிகுன்ற நிற்க வீட்டு உலகத்தில் முளைக்கும் விதை யாவார்கள்.

268. காமத் தனைப்பொய் அழுக்காறு
கோபம் களவுகொலை
ஆம்அத் தனையும் உடையேனை
ஆளுங்கொல் ஆன்பொருப்பாம்
தாமத்து அனைவரும் போற்றநின்
றான்பண்டு தாமரையோன்
பூமத் தனைச்செய்த நோய்துடைத்
தான்அடிப் போதுகளே! 59

ரிஷப கிரியாகிய இடத்தில் எல்லாரும் தன்னை வணங்கும்படி நின்ற திருக்கோலமாய் எழுந்தருளி யிப்பவனும், தாமரை மலரில் தோன்றியவனான பிரமன் முன்பு (தன் தலையைக் கிள்ளிய காலத்தில், ஊமத்தம் பூவைச் சூடுபவனான சிவபெருமானுக்கு உண்டாக்கிய பிரமகத்தி தோஷத்தால் கையில் கபாலம் ஒட்டிக் கொண்டதனாலாகிய)பிச்சை எடுத்தல் துன்பத்தை,தீர்த்தருளிய வனுமாகிய எம்பெருமானுடைய திருவடித் தாகரைகளானவை சிற்றின்ப ஆசையை உடையவனும் பொய்யும் கோபமும் திருட்டுத் தனமும் கொல்லுதல் தொழிலுமாகிய அவ்வளவு தீங்கு உடையவனான என்னைப் பாதுகாத்து அருளுமோ?

269. போதுஅகத் தானும்வெண் போதகத்
தானும் புராந்தகனும்
தீதுஅகத் தானது தீர்தரும்
காலைத் திருஅரைசேர்
பீதகத் தாய்அழ கா அரு
ளாய்என்பர் பின்னைஎன்ன
பாதகத் தால்மறந் தோதனி
நாயகம் பாவிப்பரே. 60

தாமரை மலரைத் தான் பிறந்த இடமாக வுடையவனான பிரமனும் ஐராவதமென்னும் வெள்ளை யானையை உடையவனான இந்திரனும் திரிபுரத்துக்கு அழிவு செய்தவனான சிவனும் தம் மனத்தில் உண்டான துன்பம்

நீங்கவேண்டிய சமயத்தில், 'திருவரையிற் பொருந்திய பீதாம்பத்தை யுடையவனே! அழகனே! என் பக்கல் கருணை செய்வாய் என்று துதித்துப் பிராத்திப்பார்கள். பின்பு என்ன தீவினையினாலோ மறந்து போய் ஒப்பற்ற தலைமையைத் தமக்கு ஏறிட்டுக் கொண்டு அதற்கு ஏற்ப ஒழுகுவார்கள்.

270. பாவிக்கு அமல விரிஞ்சற்கு
இறையவர் பத்தர் தங்கள்
ஆவிக் கமலத்து வீற்றிருப்
பார் அளிப் பாடல்கொண்ட
வாவிக் கமல மண நாறும்
சோலை மலையைக்கண்ணால்
சேவிக்க, மலம் அறும்மன
மேஎழு செல்லுதற்கே 61

மனமே! தீவினை உடையவனான எனக்கும் பரிசுத்தனான பிரமனுக்கும் தலைவரும், பக்தியுள்ள அடியார்களது இதய கமலத்தில் எழுந்தருளியிருப்பவருமான எம்பெருமானது வண்டுகளின் இசைப் பாட்டைக் கொண்ட தடாகங்களின் நீர் நறுமணம் வீசப் பெற்ற திருமாலிரும் சோலை மலையைக் கண்களால் தரிசித்த மாத்திரத்தில் நமது தீவினைகள் தீரும். ஆதலால் அங்குப் போவதற்குச் சித்தமாவாய்

இது தம் நெஞ்சை நோக்கி இதம் உணர்த்திபவாறாம்.

271. செல்லுக் குவளை குழல்நாட்டம்
என்று தெரிவையர்பால்
பல்உக் குவளை முதுகுஆம்
தனையும் புன் பாட்டுரைப்பீர்
அல்லுக் குவளை உழும்பாண்டி
நாட்டை அடைந்து நுங்கள்
சொல்லுக் குஅளை உண் டார்க்குஅலங்
காரர்க்குச் சூட்டுமினே. 62

'மகளிரது கூந்தலும் கண்களும் முறையே மேகத்தையும் நீலோற்பல மலரையும் போலும்' என்று அம் மாதர் மாதர்களிடத்துப் பற்கள் விழுந்து கூன்வளைந்த முதுகை உடையராம் அளவும் இழிவான பாடல்களைப் பாடிப் புகழ்ந்து ஏங்கி நிற்பவர்களே! இனியாயினும் நீங்கள இராப் பொழுதில் சங்குகள் நிலத்தில் உழுது செல்லப் பெற்ற பாண்டிய நாட்டைச் சேர்ந்து உங்கள் சொல் மாலைகளைப் பூமியையும் வெண்ணெயையும் அமுது செய்தவராகிய அழகர்க்குச் சமர்ப்பியுங்கள்.

இது முறைநிரல் நிறைப் பொருள்கோள்.

மேகவிடுதூது

272. சூட்டுஓ திமம்சென்று சொல்லாது என்
காதலைத் தும்பியிசைப்
பாட்டுஓதி மங்கைய ரும்பணி
யார்பண்டு கல்மழைக்காக்
கோட்டுஓ திமம் எடுத் தார் சோலை
மாமலைக் கோவலனார்
மாட்டுஓ திமஞ்சினங் காள்உரைப்
பீர்மறு வாசகமே. 63

(மஞ்சு+இனங்காள்) மேகக் கூட்டங்களே! உச்சிக் கொண்டையையுடைய அன்னப் பறவையானது போய் என் ஆசை நோயை அவர்க்கு எடுத்துச்சொல்லமாட்டாது. வண்டுகளின் இசைப் பாட்டையுடைய கூந்தலையுடைய மாதர்களும் சொல்ல மாட்டார் முன்பு கல் மழையைத் தடுத்தற்காக, உயர்ந்த சிகரத்தை யுடைய கோவர்த்தன மென்னும் மலையை எடுத்துக் குடையாகப் பிடித்தவரும் திருமாலிரும் சோலை மலையில் எழுந்தருளியிருக்கிற ஆயனாருமாகிய அத்தலைவரிடத்து நீங்களாயினும் என் காதலைச் சொல்லி அவர் சொல்லும் மறுமொழியை வந்து எனக்குச் சொல்லுங்கள்.

273. வாசம் பரந்த துழாயும்என்
பாடலும் மாலைஒளி
வீசுஅம் பரம்பசும் பொன்னும்என்
வேட்கையும் வீற்றிருக்கும்
தேசம் பரம பதமும் என்
சிந்தையும் தீ வளி ஆ
காசம் பரவைமண் கண்டுண்ட
மால்அலங் காரனுக்கே. 64

நெருப்பும், காற்றும், வானமும், நீரும், நிலமும் ஆகிய ஐம்பெரும் பூதங்களை ஆதியிற் படைத்துப் பிரளய காலத்தில் விழுங்யருள்கிற பெருமையை உடைய அழகப் பிரானுக்கு நறுமணம் பரவுகின்ற திருத்துழாயும் யான் பாடும் செய்யுளும் சாத்தும் மாலையாம். மாற்று உயர்ந்த பொன்மயமான பீதாம் பரமும் யான் செய்கின்ற பக்தியும் காந்தியை வீசுகிற உடுக்கும் ஆடையாம். ஸ்ரீவைகுண்டமும் அடியேனுடைய மனமும் மிக்க சிறப்பாக எழுந்தருளியிருக்கும் இடமாம்.

274. அலங்காரன் சுந்தரத் தோளன்
அழகன் அணிமுடியில்
இலங்குஆரன் ஏறு திருவுடை
யான்எட்டு எழுத்துங்கற்றார்
கலங்கார் அனங்கன் கணையால்எச்
செல்வமுய் காதலியார்
மலங்கார் அருந்துயர் மேவினும்
ஆகுவர் வானவரே. 65

அலங்காரன் என்றும் சுந்தரத் தோளன் என்றும் அழகன் என்றும் திருநாமங்களை யுடையவனும், அழகிய முடியில் தரிக்கப் பட்டு விளங்குகின்ற பூமாலையை யுடையவனும்,திருமார்பில்ஏறி வீற்றிருக்கின்ற திருமகளை உடையவனுமான எம்பெருமானுடைய எட்டு எழுத்துக் களையும் உபதேசமாகப் பெற்று ஓதி உணர்ந்தவர்கள்

காதற் கடவுளான மன்மதனுடைய அம்புகளினால் மனங் கலங்கார். எவ்வகைப் பொருட் செல்வத்தையும் விரும் பார் பொறுத்தற்கரிய துன்பங்கள் நேர்ந்தாலும் வருந்த மாட்டார். பரம பதத்தை அடைபவர் ஆவர்.

275. வால் நவ தார்அணி சுந்தரத்
தோளன்முன் மாவலியை
தானவ தாரணி தாஎன்ற
மாயன் தராதலத்து
மீன்அவ தாரம் முதலா
னவைவினை இன்றிஇச்சை
ஆனஅது ஆர்அறி வார்அவ
ரேமுத்த ராம் அவரே. 66

ஒளியுள்ளதும் புதியதுமாகிய மாலையைத் தரித்த அழகிய திருத்தோள்களையுடையவனும், முன்பு மகாபலிச் சக்கரவர்த்தியை, "அசுரனே! நிலத்தைக்கொடு" என்று இரந்த ஆச்சரியகரமான குணஞ் செயல்களை உடையவனு மாகிய ஸ்ரீமந் நாராயணன் நிலவுலகத்தில் எடுத்த மச்சாவதாரம் முதலியவைகள் கர்மவசத்தினால் அல்லா மல் அவனது சங்கல்ப மாத்திரத்தாலேயே ஆகிய அம் மெய்ம்மையை யாவர் அறிவரோ அவர்தாம் முத்திபெறு பவர் ஆவர்.

பிரிவாற்றாது வருந்தும் தலைவியைக் குறித்துச் செவிலி இரங்கல்

276. ஆமவ ரைப்பணித்து ஆள்வார்
அழகர் அயன்உமையாள்
வாமஅ ரைப்பணி யான்பணி
பாதத்தை வாழ்த்தும்கொங்கை
ஏமவ ரைப்பணி பூணாள்சந்து
ஏந்திழையாள் உரைத்தால்
வேம்அவ ரைப்பணி யாதே
எனும் எங்கள் மெல்லியலே. 67

மென்மையான தன்மையை உடையவளாகிய எங்கள் பெண் ஆனவள் தம்பக்கல் அனுகூலராய் வருபவர்களாகிய அன்பர்களை அடிமை கொண்டு ஆள்பவராகிய அழகருடைய பிரமனும் பார்வதியைக் கொண்ட இடப் பாகத்தையும் இடையில் பாம்புக் கச்சையையும் உடையவனான சிவனும் வணங்கப்பெற்ற திருவடிகளை வாழ்த்துவாள். பொன்மலை போன்ற தனங்களின் மீது ஆபரணங்களை அணியாள். தரித்த ஆபரணங்களையுடையளான பாங்கி சமாதான வார்த்தை சொன்னால் உள்ளமும் உடலும் தவிப்பாள். சிறிதேனும் அன்பும் அருளும் இன்றி என்னை விட்டுப் பிரிந்து சென்ற அத்தலைவரது பிரஸ்தாபத்தைச் சொல்லாதே' என்று சொல்வாள்.

தலைவனைப் பிரிந்திருக்கும் காலத்தில் அணிகலம் அணிய விரும்பாமையும் தேசாந்தரம் சென்ற தலைவனது க்ஷேமத்தைக் குறித்து எப்பொழுதும் சிந்தித்தலும் கற்பு நலம் உடைய மகளிரது இயல்பு.

பிரிவாற்றாது வருந்தும் தலைவி நிலை கண்டு தோழி இரங்கல்

277. மெல்லிய லைப்பரி அங்கனை
யாரும் வெறுத்துவசை
சொல்லிஅ லைப்பர்இ யங்க ஒட்
டார்சுடர் மாமலையைப்
புல்லிஅ லைப்பரி யங்கத்தில்
ஏறும் புயல்பதின்மர்
நல்லிய லைப்பரி அம்கழல்
தாமம் நயந்தபின்னே. 68

விளங்குகின்ற பெரிய திருமாலிஞ்சோலை மலையை அடைந்து அதில் எழுந்தருளியிருப்பவனும், திருப்பாற் கடலில் ஆதிசேஷனாகிய கட்டிலில் ஏறிப் பள்ளி கொண்டருளும் மேகம் போன்றவனுமான அழகப் பிரானது பத்து ஆழ்வார்களுடைய சிறந்த தமிழ்ப் பிரபந்தங்களை

ஏற்றுக்கொண்ட அழகிய திருவடிகளிற் சாத்திய மாலையை இம்மடமகள் விரும்பிய பின்பு மென்மைத் தன்மையுடையளான இவளை அன்பு கொண்டு நடத்தி வந்த மாதர்களும் வெறுத்து பழிமொழி கூறி வருத்துவார்கள். இவள் விருப்பத்தின் படி இவளைச் செல்ல விட மாட்டார்கள்.

278. பின்இறப் பும்பிறப் பும்நரை
 மூப்பும் பிணியும் மனை
 முன் இறப் பும்பிரித் தான்இருந்
 தானவர் மூது இலங்கை
 மன்இறப் புங்கக் கணைதொட்ட
 சோலை மலையழகன்
 பொன்நிறப் புண்டரி கத்திருத்
 தாள் அன்றிப் போற்றிலமே. 69

பிறப்பையும் அதன் பின் நேரக்கூடவதான இறப்பையும் மயிர் நரைக்கப் பெறுகிற முதுமையையும் வியாதிகளையும் இவற்றிற் கெல்லாம் காரணமாய் வீட்டின் மேல் இறப்புப் போல உயிரைக் கவிந்து கொள்வதான கருமத்தையும் இயல்பில் நீக்கியுள்ளவனும், பெரிய அசுரர்களும் பழமையான இலங்காபுரியின் அரசனாகிய இராவணனும் அழியும்படி சிறந்த அம்புகளைத் தொடுத்தவனுமான, திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியிருக்கிற அழகப் பிரானது பொன் நிறமுள்ள செந்தாமரை மலர் போன்ற திருவடிகளை யல்லாமல் வேறொன்றை வணங்கோம்.

பிரிவாற்றாத தலைவி செவிலியரைக் குறித்து இரங்கல்

279. போற்றிஇ ராமஎன் னார்சோலை
 மாமலை போதவிடார்
 மாற்றிஇ ராவைப் பகல்ஆக்கி
 லார்வண் துழாய்குழல்மேல்

ஏற்றிஇ ராசத மாகவை
யாரென் இடரையெல்லாம்
ஆற்றிஇ ரார்அன்னை மார்என்னை
வாய்வம்பு அளக்கின்றதே. 70

எனது தாய்மார் (யான்கொண்ட நோய்க்குப் பரிகாரமாக) 'இராம பிரானே! வாழ்வாயாக' என்று அந்தத் தலைவன் பெயரைச் சொல்லி வாழ்த்த மாட்டார்கள். என்னை அவனது திருமாலிருஞ் சோலை மலையிற் சென்று சேரவிடார்கள். இராப்பொழுதை மாற்றிப் பகற் பொழுது ஆக்கமாட்டார்கள். அத்தலைவனுடைய செழிப்பான திருத்துழாய் மாலையைக் கொணர்ந்து என் கூந்தலின்மேல் சூட்டி மேன்மையாக வைக்கமாட்டார்கள். யான் படும் துன்பங்களை யெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். என்னைக் குறித்து வாயினால் வம்பு அளக்கின்றதே இவர்கள் தொழிலாய் இருக்கின்றது. கலவிக்கு உரிய காலமாதலால் மிகவும் வருத்தத்தைத் தருகிற இராப் பொழுதைப் பகற் பொழுதாக மாற்றுதலேனும் செய்தால் அப்போது யான் ஆறியிருப்பேன் என்பது படக்கூறினாள்.

280. அளப்பதும் அங்கையில் நீர்ஏற்
பதும்தந்து அளிப்பதும்பின்
பிளப்பதும் அங்குஜயில் வெண்கோட்டில்
கொள்வதும் பேருணவாக்
கிளப்பதும் மங்கை எனத்தோள்
புணர்வதும் கேட்கில்லையம்
வளப்பது மம்கையம் சேர்சோலை
மாமலை மாதவரே. 71

செழிப்பான தாமரைமலர்கள் தடாகங்களிற் பொருந்திய திருமாலிருஞ் சோலை வலையில் எழுந்தருளியிருக்கிற திருமகள் கொழுநரான திருமால், காலினால் அளந்து கொள்வதும், அழகிய கையில் தாரைவார்க்கும் நீரோடு

தானமாக ஏற்றுக் கொள்வதும், ஆதியிற் படைத்துப் பின்பு காப்பதும், இறுதியில் அழிப்பதும், கூரிய வெண் ணிறமான கோர தந்தத்தால் குத்தி எடுப்பதும் தமக்கு ஏற்ற சிறந்த உணவாகக் சொல்வதும், மனையாளாகக் கொண்டு தோள்களைத் தழுவுவதும் கேட்குமிடத்து பூமியையாம்.

மங்கை—பூமாதேவி. அயில் - ஐயில்; கயம் - கையம் - திரிபு நோக்கிய முதற்போலிகள். மாதவன் - மா - இலக்குமி; தவன் - கணவன்.

281. மாதவ ரால்உம்ப ரால்அறி
யார்மது ரைப்பிறந்த
யாதவர் ஆலிலை மேல்துயின்
றார் இருந் தாழ்சுனையில்
போதவ ரால்உகள் மாலிருஞ்
சோலையில் போம்பிறவித்
தீதுஅவ ரால்அன்றி எத்தேவ
ராலும் தெறல்அரிதே. 72

பெருந் தவ முடைய முனிவர்களாலும் தேவர்களா லும் உள்ளபடி அறிய வொண்ணாதவரும் வடமதுரையில் திரு அவதரித்த யதுகுலத் தோன்றலும் பிரளயப் பெருங் கடலில் ஆலிலையின் மீது கண்வளர்ந்தருளியவருமாகிய எம்பெருமானுடைய பெரிய ஆழ்ந்த சுனைகளில் மிகுதி யாக வரால் மீன்கள் துள்ளப் பெற்ற திருமாலிருஞ் சோலை மலையில் நீங்கள் சென்று சேருங்கள். பிறப்புத் துன்பம் அப்பெருமானால் அன்றி வேறு எந்தக் கடவுள ராலும் நீக்குதற்கு அருமையானதாம், என்று உலகத் தாருக்கு உணர்த்தியவாறாம்.

யது என்பவன் சந்திர வம்சத்தில் பிரசித்தி பெற்ற ஓர் அரசன். யயாதியின் குமாரன்.

282. அரியவ ரம்தந்து அயன்முத
லோர்க்குஅருள் செய்துஅவரைப்
பெரியவர் அந்தஇல் வாழ்வினர்
ஆக்கித்தம் பேர்அருளால்
கரியவர் அந்தணர் கைதொழும்
மால்அலங் காரர்வையத்து
உரியவர் அந்தரங் கத்துயர்
தீர்க்க உலாவுவரே. 73

கரிய திருநிறமுடையவரும் வேதியர்கள் கை கூப்பி வணங்கப் பெற்ற பெருமையுடைய அழகருமாகிய எம் பெருமான், பிரமன் முதலிய தலைமைத் தேவர்கட்கு (பெறுதற்கு) அரிய வரங்களைத் தந்து, கருணை புரிந்து அவர்களைப் பெருமையை உடையவர்களாகவும் முடிவில்லாத வாழ்வை யுடையவர்களாகவும் செய்து தமது பெருங்கருணையினால் நிலவுலகத்தில் தமக்கு உரியவர்களான அடியார்களுடைய மனத்துன்பங்களை நீக்குற் பொருட்டு உலாவுவர்.

283. உலகுஉதிக் கும்படி சிந்தித்துத்
தந்துஇவ் உலகில்உறும்
நலகுதிக் கும்படி நின்றபி
ரான்இடம் நானிலமும்
இலகுதிக் கும்விசும் பும்தொழ
ஓங்கி இறால்வருடை
பலகுதிக் கும்தொறும் தேன்பாயும்
சோலைப் பருப்பதமே. 74

உலகங்கள் உண்டாகுமாறு நினைத்து அவற்றைப் படைத்து, இந்த உலகத்தில் மிக்க நன்மைகள் மேன்மேற் பொங்கும்படி நின்ற உபகாரகனாகிய எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற இடம் எதுவென்றால், நிலவுலகத்தில் உள்ளாரும் விளங்குகின்ற எட்டுத்திசைகளிலும் உள்ளாரும் மேல் உலகத்தில் உள்ளாரும் வணங்கும்படி

உயர்ந்து, மலையாடுகள் பல எழும்பிப் பாயும் தோறும் தேன் கூடுகளினின்று தேன் பெருகிப் பாயப்பெற்ற திருமாலிருஞ்சோலை மலையாம்.

வருடை - மலையாடு. இறால் - தேன்கூடு.

284 பருப்பதம் தாம்மன்னி நிற்பது
பாற்கடல் பள்ளிகொள்வது
இருப்பதுஅம் தாமம்பண்டு இப்போ
துஎலாம்இள ஞாயிறன்ன
உருப்பதம் தாமதர்க்கு ஈயாமல்
அன்பர்க்கு உதவுஅழகர்
திருப்பதம் தாமரை போல்வார்
உகப்பதுஎன் சிந்தனையே. 75

இளஞ்சூரியனைப் போன்று, விளங்குகின்ற திருவுருவத்தையுடைய பரமபதத்தைத் தாமச குணம் உள்ளவர்கட்குக் கொடாமல், தம்பக்கல் பக்தியுள்ள அடியார்கட்குக் கொடுத்தருள்கிற திருவடிகள் தாமரை மலர்களை ஒத்திருக்கப் பெற்றவரான அழகப் பெருமான் முன்பு தாம் நின்ற திருக்கோலமாக நித்திய வாசம் செய்கின்ற இடம் திருமாலிருஞ் சோலை மலையாம், சயனத்திருக்கோலமாக எழுந்தருளி இருக்கின்ற இடம் திருப்பாற் கடலாம், வீற்றிருக்கின்ற இடம் அழகிய ஸ்தானமான பரமபதமாம், இப்பொழுதோ அனைத்துமாக விரும்புவது எனது மனமேயாம்.

285. சிந்திக் கல்ஆரம் கொழிக்கும்
திருச்சிலம் பாற்றழகும்
பந்திக் கலாப மயில்ஆடும்
சாரலும் பங்கயனோடு
அந்திக் கலாமதி யாற்குஅரி
யார்உறை ஆன்பொருப்பும்
வந்திக் கலாம்எனில் சந்திக்க
லாம்உயர் வைகுந்தமே. 76

முத்துக்களையும் மற்றும் பலவகை இரத்தினங்களை யும் அலைகளில் வீசி ஒதுக்குகின்ற சிறந்த நூபுர கங்கா நதியானது அழகையும் வரிசையான தோகையை யுடைய மயில்கள் கூத்தாடப் பெற்ற திருமாலிருஞ் சோலை மலையின் சாரலையும், தாமரை மலரில் தோன்றியவ னான பிரமனுக்கும் அந்திமாலைப் பொழுதில் விளங்கு கின்ற கலையையுடைய பிறைச் சந்திரனைத் தரித்தவ னான சிவபிரானுக்கும் உணர்தற்கு அரிய வரான அழகப்பிரான் நித்தியவாசம் செய்தருளப்பெற்ற ரிஷப கிரியாகிய அத்திருமால் இருஞ்சோலை மலையும் வணங்கு தல் கூடுமாயின் எல்லாப் பதவிகளிலும் உயர்ந்ததான பரமபதத்தை அடையலாம்.

இவற்றை வணங்கியவர் தவறாது திருவைகுந்தம் பெறுவர் என்பதாகும்.

286. வைதா ரையும்முன் மலைந்தாரை
யும் மலர்த் தாளில்வைத்தாய்
மொய்தாரை அத்தனைத் தீங்குஇழைத்
தேனையும் மூது உலகில்
பெய்தாரை வானின் புரப்பான்
இடபப் பெருங்கிரியாய்
கொய்தாரை வேய்ந்த திருவடிக்
கீழ்த்தொண்டு கொண்டருளே. 77

பழமையான உலகத்தில் வரையாது பொழிகின்ற மழைப் பெருக்கையுடைய மேகம் போல, வரையாது அனைவரையும் பாதுகாத்தற்கு பெரிய ரிஷப கிரியில் எழுந்தருளியிருக்கிறவனே! நீ முன்பு உன்னை நிந்தித்த வரையும் உன்னை எதிர்த்துப் போர் செய்தவரையும் தாமரைமலர் போன்றநினது திருவடியிற்சேர்த்தருளினாய், அத்தன்மையனான நீ வானத்தில் நெருங்கிய நட்சத்திரங் களின் அளவு தீவினைகளைச் செய்துள்ளேனான என்னையும் பறிக்கப்பட்ட மலர்களால் ஆகிய மாலையைத் தரித்த நின் திருவடியின் கீழ் அடிமை கொண்டருள்வாய்.

வைதார் - சிசுபாலன் முதலானோர். மலைந்தார் - தந்தவக்கிரன் முதலியோர் 'எம்பெருமானது திருவடியே வீடு' என்னும் கொள்கை இங்கு விளங்குகின்றது.

287. கொண்ட மருந்தும் கடைவாய்
வழியுகக் கோழைவந்து
கண்டம் அருந்துயர் ஆம்போதுஉன்
பாதம் கருதறியேன்
வண்டு அமரும்துள வோனேதென்
சோலை மலைக்கரசே
அண்டம் அருந்தும் பிரானேஇன்
றேயுன் அடைக்கலமே. 78

வண்டுகள் விரும்பி மொய்க்கும் திருத்துழாய் மாலையை யுடையவனே! அழகிய திருமாலிருஞ் சோலை மலைக்குத் தலைவனே! அண்ட கோளங்களை உண்ணும் எம்பெருமானே! அரிதில் வாயினுட் செலுத்தப்பட்ட பாலும் உள்ளே இறங்க மாட்டாமல் கடைவாயின் வழியாக வெளியே வழிய, கபம் நெஞ்சில் அடைத்துக் கொண்டு பொறுத்தற்கு அரிய மரண வேதனை உண்டாகும் சமயத்தில் உள்ளங் கலங்குதலால் உன் திருவடிகளை நினைக்க வல்லேன் அல்லேன், ஆதலால்,இப்போதே உன்னை நான் சரணம் அடைந்தேன்.

அடைக்கலம் - பாதுகாக்கத்தக்க பொருள்: சரணம் அடைந்தவன் என்றபடி.

288. அடைக்கலம் தானை இரந்தாள்
புகல அவள்பொருட்டால்
படைக்கலம் தானைத் தருமன்
கெடாமல்வெம் பாரதப்போர்
இடைக்கலந் தானை அலங்கா
ரனைச்சரண் என்றடைந்தேன்
முடைக்கலம் தான்நையும் அப்போது
அயர்ப்பினும் முத்திஉண்டே. 79

(கண்ண பிரானைக் குறித்து) ஆடையை இரந்து பெற்றவளாகிய திரௌபதி சரணம் என்று சொல்ல, அவள் நிமித்தமாக ஆயுதங்களையும் சேனைகளையும் உடைய தரும புத்திரன் அழியாதபடி கொடிய பாரத யுத்தத்தில் (பாண்டவ சகாயனாய் அருச்சுனன் தேரில்) சேர்ந்தவனாகிய அழகனை அடைக்கல மென்று அடைந்து விட்டேன், ஆதலால் இனி தி நாற்றமுடைய தசை நிரம்பிய தொரு பாத்திரம் போன்ற இவ்வுடம்பு தளர்ந்தழியும். அப்போது (அந்திம காலத்தில அப்பெருமானை நினை யாது) மறந்தாலும் எனக்கு மோட்சம் கிடைக்கும் எம்பெருமானைச் சரணமடைந்தவர் அந்திம காலத்தில் அவனை நினையாவிடினும் பரமபதம் பெறுவர் என்பது தாற்பரியம்.

289. உண்டுஇறக் கும்புவ னங்களை
மீள உமிழ்ந் திலையேல்
பண்டுஇறக் கும்பது மத்தோன்
புரந்தரன் பைந்தழல்போல்
கண்திறக் குப்சங் கரன்முத
லோர்களைக் கண்டவரார்
திண்திறக் குஞ்சரம் சேர்சோலை
மாமலைச் சீதரனே. 80

மிக்க வலிமையையுடைய யானைகள் பொருந்திய திருமாலிருந் சோலை மலையில் எழுந்தருளியிருக்கிற திருமாலே! நீ பிரளயகாலத்தில் வாயினுட்கொண்டு வயிற்றினுள் செலுத்திய உலகங்களை (அப் பிரளயம் நீங்கும் அளவில்) வெளிப்படுமாறு உமிழாது இருந்தனை யானால் முன்பு அழிந்து போன பிரமனும் இந்திரனும் பசுமையான (புதிதாக மூண்டு எரிகின்ற) நெருப்புப் போல நெற்றிக்கண்ணைத் திறக்கின்ற சிவபிரானும் முதலான வர்களை மீளவும் எவரும் பாரார்.

பிரிவாற்றாது வருந்தும் தலைவியின் நிலைமையைக் குறித்துத் தோழி இரங்கல்

290. சீர் அரி தாழ்பொழில் மாலிருஞ்
சோலையில் செல்வர் செங்கண்
போர் அரி தாள்புனை தார் அரிது
ஆகில் தண் பூந்துளவின்
தார் அரி தாவும் தழை அரிது
ஆகில் தழைதொடுத்த
நார் அரிது ஆகில் பிழைப்பரிது
ஆம் எங்கள் நன்னுதற்கே. 81

சிறந்த ஹரி என்னும் திருநாமம் உடையவரும் கோபத்தால் சிவந்த கண்களையுடைய போர்த்தொழில் வல்ல நரசிங்க மூர்த்தியானவருமாகிய கிளைகள் தழைத்துத் தாழ்ந்துள்ள சோலைகளையுடைய திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளியிருக்கின்ற எல்லாச் செல்வங்கட்கும் தலைவரான அழகப்பிரானது திருவடிகளில் தரித்தமாலை கிடைப்பது அரியதானால் குளிர்ச்சியான மலர்களை யுடைய அத்திருத்துழாய் மாலையில் இடை இடையே தொடுக்கப் பட்டுள்ள நறுமணத்தால் வண்டுகள் மேல் விழுந்து மொய்க்கப் பெற்ற தழையும் கிடைப்பது அரிய தானால் அத்தழை தொடுக்கப் பெற்றுள்ள நாரும் கிடைப் பது அரிதானால் அழகிய நெற்றியையுடையளான எங்கள் மங்கைக்கு உயிர்வாழ்க்கை அரியதாம்.

தலைவனோடு சம்பந்தம் பெற்ற பொருள் யாதாயினும் இந்நோய்க்குப் பரிகாரமாம் என்பது இதனாற் போந்தபொருள்.

291. நன்னுத லைப்பணி பூண்மார்பில்
வைத்துவிண் நாட்டிருப்பார்
மின்னுத லைப்பணி மேல்துயில்
வார்விடை வெற்பில்நிற்பார்

மன்னு தலைப்பணி அன்பரை
வைக்கும் மலர்அடிக்கீழ்த்
துன்னுத லைப்பணி செய்வதுஎஞ்
ஞான்றுஎன் துயர்தொலைந்தே. 82

ஆபரணங்களைத் தரிக்கின்ற திருமார்பில் அழகிய நெற்றியை உடையவளான திருமகளை வைத்துக் கொண்டு பரமபதத்தில் வீற்றிருக்கின்றவரும், மாணிக்கத்தால் விளங்குகின்ற தலைகளையுடைய ஆதிசேஷன் என்னும் பாம்பின்மீது யோகநித்திரை செய்கின்றவரும், திருமாலிஞ் சோலைமலையில் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளியிருக்கின்ற வருமான அழகரது, தம்மை வணங்குகின்ற அடியார்களை நிலைபெற்ற இடமாகிய பரம பதத்தில் வைத்தருள்கிற தாமரை மலர் போன்ற திருவடியின் கீழ், யான் எனது துன்பங்கள் நீங்கிப் பொருந்திய தலைமையான திருத் தொண்டுகளைச் செய்வது எந்நாளோ?

அழகப்பிரானுக்குக் கைங்கரியம் செய்து பேறு பெறுதலில் உள்ள அவாவினால் இங்ஙனம் கூறினார்.

292. தொலைந்துஆனை ஓதும் தொலையானை
அன்னைசொல் லான்மகுடம்
கலைந்தானை ஞானக் கலையானை
ஆய்ச்சி கலைத்தொட்டிலோடு
அலைந்தானைப் பாலின் அலையானை
வாணன்கை அற்றுவிழ
மலைந்தானைச் சோலை மலையானை
வாழ்த்துஎன் மடநெஞ்சமே! 83

அறியாமையை யுடைய எனது மனமே! கஜேந்திர ஆழ்வான் வலிமை குன்றி அழைக்கப் பெற்ற பழமையானவனும், சிறிய தாயான கைகேயியின்வார்த்தையால் முடிசூட்டும் விழா கலைந்துவிடப் பெற்றவனும், நல்லுணர்வைத் தருகின்ற சாஸ்திரங்களாற் கொண்டாடப் படுகிறவனும், இடைச்சியாகிய யசோதையினால் அமைக்

கப்பட்ட துணித் தொட்டிலோடு அசைந்தவனும், திருப்பாற் கடலைத் தான் வாழும் இடமாக உடைய வனும், பாணாசுரனுடைய கைகள் துணிபட்டு விழும்படி போர் செய்தவனுமாகிய திருமாலிருஞ்சோலை அழகப் பிரானை வாழ்த்துவாய். துணித்தொட்டில் - ஏணை.

தலைவி தோழியர்க்கு அறத்தொடு நிற்றல்

293. நெஞ்சில்அம்பு ஆற்ற முடியாது
வேள்எய்து நீள்இரவும்
துஞ்சிலம் பால்துளி யும்நஞ்சம்
ஆம் சொரி கல்மழையை
அஞ்சிலம் பால்தடுத் தார்அலங்
காரர் அடிவிளக்கும்
செஞ்சிலம் பாற்றுஅரு கேகிடத்
தீர்உயிர் தேற்றுதற்கே. 84

எனது நெஞ்சில் பாணங்களைப் பொறுக்க முடியாத படி மன்மதன் பிரயோகித்தலால் நெடிய இராக்காலம் முழுவதிலும் உறக்கம் கொள்ளுகின்றோம் இல்லை. பாலின் துளியும் எமக்கு விஷம் போன்றதாம், ஆதலால் பொழிந்த கல்மழையை அழகிய கோவர்த்தன மலையைக் கொண்டு தடுத்திட்டவராகிய அழகரது திருவடிகளைப் பிரமன் கழுவியதால் வருகிற சிறந்த சிலம்பாற்றினது சமீபத்தில் எம்மை உயிர் பிழைக்கச் செய்வதற்காகக் கொண்டு போய்ப் படுக்க வையுங்கள்.

சிலம்பாற்றுக்குச் செம்மையாவது — தன்னில் ஒரு கால் நீராடியவர்க்கும் அருவினை அனைத்தையும் தொலைத்து உயர்பதம் அளித்தல்.

294. தேற்றுவித் தால் புனல் தேற்றுநர்
போல்திரு எட்டெழுத்தால்
மாற்றுவித் தான்என் மயக்கம் எல்
லாம் மண்ணும் விண்ணும் உய்யப்

போற்றுவித் தாரப் புயல்அலங்
காரன் பொன் மேருவைப் போல்
தோற்றுவித் தார்அணி யுப்சுந்
தரத்திருத் தோள்அண்ணலே. 85

நிலவுலகத்தாரும் வானுலகத்தாரும் தாம் தாம் உய்வு பெறுவதற்காக வணங்கப் பெற்ற பெரிய மேகம் போன்றவனும், பொன் மயமான மேருமலை போல விளங்குகின்ற வண்டுகள் மொய்க்கும் மாலையைத்தரித்த அழகிய தோள்களையுடைய பெரியோனு மாகிய அழகப்பிரான் தேற்றாங் கொட்டையைக் கொண்டு நீரைத் தெளியச் செய்பவர் போல எட்டு எழுத்து மந்திரத்தைக் கொண்டு என்மதி மயக்கத்தை யெல்லாம் மாற்றி மனம் தெளியச் செய்து அருளினான்.

295. அண்ணலை வான்மதி தோய்சோலை
மாமலை அச்சுதனைத்
தண்அலை வானவ னைத்தெய்வ
நாதனைத் தாள்அடைவான்
எண்ணலை வான்பகை ஆம்ஐவ
ரோடு இசைந்து இன்னம்உடல்
புண்அலை வான் எண்ணி னாய்மன
மேஉன் புலமை நன்றே. 86

மனமே! பெருமையில் சிறந்தவனும், குளிர்ச்சியான திருப்பாற்கடலில் பள்ளிகொண்டருளுகின்ற கடவுளும், தேவர்கட்கு எல்லாம் தலைவனுமாகிய சுத்தமான சந்திரன் படியப்பெற்ற திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளியிருக்கின்ற அச்சுதன் என்னும் ஒரு திருநாமம் உடையவனான அழகப் பிரானைத் திருவடிகளில ஆசிரயிக்கும்படி நீ நினைக்கின்றாய் இல்லை. பெரும்பகைவராகிய பஞ்சேந்திரியங்களோடு கூடி, இன்னமும் உடம்பாகிய புண்ணினால் வருந்துமாறு நினைத்தாய். உனது அறிவுத்தேர்ச்சி நான்றாய் இருந்தது.

296. புலமையி லேநிமிர்ந்து அற்பரைப்
போற்றிப் பொதுமகளைக்
குலமையி லே!குயி லே!கொடியே!
யென்றும் கூர்விழியாம்
பலம்ஐயி லேஎன்றும் பாடாமல்
பாடுமின் பாவலர்காள்
நல்அமையில் ஏய்முத்தம் ஆர்சோலை
மாமலை நம்பனையே. 87

கவிபாடவல்ல புலவர்களே! நீங்கள் கல்வித் தேர்ச்சியில் சிறந்து இழிவான மனிதர்களைத் துதித்து, வேசையைச் சிறந்த மயிலே குயிலே பூங்கொடியே என்றும் அவளது கூரிய கண்கள் வலிய வேலாயுதம் போலும் என்றும் கவிபாடாமல் சிறந்த மூங்கில்களிற் பொருந்திய முத்துக்கள் நிறைந்த திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளியிருக்கிற சிறந்த கடவுளான அழகனைக் கவிபாடித் துதியுங்கள்.

மயில் — மையில், அயில் — ஐயில் என்பவை திரிபு நயம் நோக்கிய முதற் போலிகள்.

297. நம்பிநின் றேன்உன் சரணார
விந்தத்தை நல்நெஞ்சுஎன்னும்
செம்பின்இன் றேபொறித் தேன்உனக்கு
ஆள்என்று தெய்வக்குழாம்
பம்பிநின் தேசுஎறிக் கும்பதம்
காணப் பதறுகின்றேன்
கொம்பின்இன் தேன்சொரி யும்சோலை
மாமலைக் கொற்றவனே 88

பூங்கொம்புகளின்று இனிமையான தேன் பெருகப் பெற்ற திருமாலிரும் சோலை மலையில் எழுந்தருளியிருக்கின்ற யாவர்க்கும் தலைவனே! நினது திருவடித் தாமரையைக் கதியாக நம்பியிருக்கிறேன். உனக்கு நான் அடிமையென்று எனது அனுகூலமான மனமாகிய

செப்பேட்டில் இன்றைக்கே எழுதி வைத்துக்கொண்டேன். நித்திய சூரிகளுடைய கூட்டம் நெருங்கப் பெற்று நினது ஒளி விளங்கப்பெற்ற பரம பதத்தை அடைவதற்கு விரைகின்றேன்.

298. கொற்ற இராவணன் பொன்முடி
வீழக் கொடுங்கண் துஞ்சல்
உற்ற இராவணன் மாளஎய்
தோன்ஒண் பரதனுக்குச்
சொல்த விராஅணன் மாலிருஞ்
சோலை தொழுதுவினை
முற்ற இராவணம் நல்தமிழ்
மாலைமொழிந்தனனே. 89

வெற்றியையுடைய இராவணனது சொர்ண மயமான கிரீடங்கள் (அல்லது அழகிய தலைகள்) கீழே விழும்படியும், பயங்கரமான கண்களை மூடித் தூங்குதல் மிக்க இருள் போன்ற (கரு) நிறத்தை உடையவனான கும்பகர்ணன், இறக்கும் படியும் அம்பு எய்தவனும் (நற்குணங்களால்) விளங்குகின்ற பரதாழ்வானுக்குச் சொல் தவறாதபடி மீண்டு வந்தருளிய தமையனாகிய அழகப் பெருமானுடைய திருமாலிருஞ் சோலை மலையை யான் வணங்கி, என் கருமம் முழுவதும் இராத விதமாக சிறந்த தமிழ்ப் பாமாலையை அந்தப் பெருமான் மீது சொன்னேன்.

அணன் - அண்ணன் என்பதன் தொகுத்தல் விகாரம்.

299. மொழித்தத்தை கொஞ்சும் மலைஅலங்
காரன்முன் நூற்றுவரை
அழித்துஅத்தை மைந்தர்க்கு அரசுஅளித்
தோன்அடி நாள்தொடர்ந்துஎன்
உழித்தத்தைச் செய்துஅன்றிப் போகா
வினையை ஒருநொடியில்
கழித்தத்தை என்சொல்லு கேன்தனக்கு
ஆட்பட்ட காலத்திலே. 90

சொல்லழகிற் சிறந்த கிளிகள் கொஞ்சிப் பேசுவதற்கு இடமான திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளி யிருக்கிற அழகனும், முன்பு துரியோதனாதியர் நூறு பேரையும் வீமனைக் கொண்டு நாசம் செய்து தனது அத்தையான குந்தியின் குமாரர்களாகிய பாண்டவர் கட்கு அரசாட்சியைக் கொடுத்தருளியவனுமாகிய எம் பெருமான் ஆதிகாலந் தொடங்கி என்னிடத்தில் துன்பத்தைச் செய்தல் அல்லது ஒழியாத என் கருமங்களை அவனுக்கு நான் அடிமைப்பட்டபொழுதே ஒரு மாத்தி ரைப் பொழுதில் ஒழித்தருளிய திறத்தை என்னவென்று சொல்லுவேன்.

300. கால்அம் அலைக்கும் புவனங்க
ளைக்கரந் தாய்உதிரம்
கால மலைக்குமைத் தாய்அழ
காகம லத்துப் பஞ்சுஆர்
கால்அ மலைக்கும் புவிக்கும்அன்
பாஉயிர் காயம்விடும்
காலம் மலைக்கும் கடுங்கூற்றைக்
காய்ந்துஎன்னைக் காத்தருளே. 91

ஊழிக் காற்றின் உதவியால் கடல்நீர் அலைவீசிப் பொங்கி மேல்வரப்பெற்ற உலகங்களைத் திருவயிற்றில் ஒளித்து வைத்துப் பாதுகாத்து அருளியவனே! இரத் தத்தைக் கக்கும்படி மல்லர்களை நசுக்கி அழித்தவனே! அழகா செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பெற்ற திருவடிகளையுடைய குற்றமற்ற வளான திருமகளுக்கும் பூமிதேவிக்கும் அன்புள்ள கணவனே! எனது உயிர் எனது உடம்பை விட்டு நீங்கும் காலத்தில் எதிர்த்துப் பொருது நலியவரும் கொடிய யமனைச் சினந்து விலக்கி என் உயிரை நற்கதியிற் சேர்த்துப் பாதுகாத்தருள்வாய்.

301\. அருளக் கொடிஇடைப் பூமாதும்
நீயும்வந்து ஆளினும்ஆம்
இருள்அக் கொடிய நமன்வரும்
காலத்து இகழினும்ஆம்
கருளக் கொடி அழ கா அலங்
காரவன் கஞ்சன்நெஞ்சத்து
உருள்அக் குஒடிய உதைத்தாய்
எனதுயிர் உன்உயிரே. 92

கருடனது வடிவம் எழுதிய கொடியை உடைய அழகனே! அலங்காரனே! கொடிய கம்சனது நெஞ்சிலுள்ள திரண்ட எலும்பு முறியும்படி உதைத்தவனே. என்னுடைய உயிர் உனக்கு அடிமைப்பட்ட உயிரேயாம், இனி இருள் நிறமுள்ள (மிகக்கரிய) அந்தக் கொடுமையுடைய யமன் வரும் அந்திம காலத்தில் பூங்கொடி போலும் மெல்லிய இடையை யுடைய தாமரை மலரில் வாழும் பெரிய பிராட்டியும் நீயுமாக நற்கதியருளுமாறு எழுந்தருளி அவ்வுயிரை ஆட்கொண்டாலும் சரி, புறக்கணித்தாலும் சரி.

பிரிவாற்றாத தலைவி தனது நிலைமையைக் கூறுதல்

302\. உயிர்க்கும் படிக்கும்உன் ஆயிரம்
பேர்என்று ஒறுத்து அன்னைமார்
செயிர்க்கும் படிக்குநின் றேன்என்செய்
கேன்செழு ந் தேவர்களும்
அயிர்க்கும் படிக்குறள் ஆம்அழ
கா அலங் கார நெய்க்கும்
தயிர்க்கும் படிக்கும்செவ் வாய்மலர்ந்
தாய்நின்னைத் தாள்பணிந்தே 93

ஞானவளமுள்ள தேவர்களும் சந்தேகப்படும்படி குறுகிய வடிவமாகிய (வாமனாவதாரம் செய்த) அழகனே! அலங்காரனே! வெண்ணெயையும் தயிரையும் அமுது

செய்வதற்காகவும் பிரளயகாலத்தில் உலகத்தை உட்கொள்வதற்காகவும் சிவந்த திருவாய் மலரைத் திறந்து அருளியவனே! நான் உன்னைத் திருவடி வணங்கி என்னைக் குறித்து இவள் பெருமூச்சு எறிகின்றாள் நினது ஆயிரம் பெயர்களையும் எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருக்கிறாள் என்ற காரணத்தால் என்தாய்மார் வெறுப்புக் கொண்டு கோபிக்கும் நிலையில் நின்றிட்டேன்.

யாது செய்யக் கடவேன்?

திருப்பாத வகுப்பு

303. பணிபதி வாட நின்று ஆடின
நூற்றுவர் பால்சென் றன
பணிபதி னாலு புவனமும்
தாயின பாப்பதின்மர்
பணிபதி எங்கும் உவந்தன
பங்கயப் பாவையுடன்
பணிபதி மார்பன் அலங்காரன்
பொன் திருப் பாதங்களே. 94

செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற சித்திரப்பாவை போல் அழகியவளான திருமகளுடனே (கௌஸ்துபம்) என்னும் ஆபரணமும் நீங்காது பொருந்தப்பெற்ற திருமார்பை உடையவனான அழகப்பிரானுடைய பொன்மயமான ஆபரணங்களை யணிந்த திருவடிகள் — பாம்பு அரசனான காளியன் வலிமை தளரும்படி (அவன்முடிகளின் மேல்) நின்று நர்த்தனம் செய்தன. துரியோதனாதியரிடத்துச் சென்றன. (இயல்பிலே தமக்குக்) கீழ்ப்படிந்தனவான பதினான்கு உலகங்களையும் தாவியளந்தன. பத்து ஆழ்வார்களாலும் பாசுரம் பாடித் துதிக்கப் பெற்ற திவ்விய தேசங்களில் எல்லாம் விரும்பி எழுந்தருளி இருந்தன. 235 ஆம் பாடலிலும் பாத வகுப்பு கூறப் பட்டுள்ளது.

304. பாதகர் அத்தனை பேரும்
கனகனும பன்னகத்தா
லேதக ரத்தனை யற்குஅருள்
ஆளியை எட்டெழுத்துள்
ஓதுஅக ரத்தனை சுந்தரத்
தோளுடை யானைநவ
நீதக ரத்தனை சேர்ந்தார்க்குத்
தேவரும் நேர்அல்லரே. 95

இது யமகச் செய்யுள்.

தீவினை யுடையாரான அசுரர்கள் அவ்வளவு பேரும் இரணியனும் கைந்நகங்கள் பலவற்றால் பிளந்தழிய (அவ் இரணியனது) குமாரனான பிரகலாத ஆழ்வானுக்குக் கருணை செய்த நரசிங்க மூர்த்தியும் எட்டு எழுத்தில் சொல்லப்படுகிற அகரமென்னும் உயிரெழுத்தின் பொருளாய் உள்ளவனும் அழகிய திருத்தோள்களையுடையவனும் வெண்ணெயை யேந்திய கையை உடையவனுமாகிய அழகப்பிரானை சரணம் அடைந்தவர்கட்குத் தேவர்களும் சமானர் ஆகார்.

ஓம் - என்பதில் அகரம் அடங்கியிருக்கிறது என்பர்.

305. அல்லல்அங்கு ஆரையும் சேர்விக்கும்
ஐம்புல ஆசைஎன்றும்
பல்அலங் காநைந்து கோல்ஊன்றி
யும்பற்று அறாதுகண்டாய்
மல்லல்அம் காரிகை யார்மருள்
தீர்ந்து வணங்குநெஞ்சே
தொல்அலங் காரனைத் தென்திரு
மாலிருஞ் சோலையிலே. 96

மனமே! எவரையும் துன்பம் அடைவிக்கின்ற ஐம்புலன்களிற் செல்லுகின்ற ஆசையானது எந்நாளும் பற்கள் அசையப் பெற்று உடல்தளர்ந்து (நடக்க வலிமையில்லாமல்) கோலை யூன்றும்படியானாலும் தொடர்ச்சி

நீங்காது; ஆதலால் அழகு வளமுள்ள மாதர்கள் பக்கல் உண்டாகிற மோகம் நீங்கி, அநாதியான அழகனை அழகிய திருமாலிருஞ் சோலை மலையில் வணங்குவாய், கண்டாய் - தேற்றம்.

ஐம் பொறிகளின் வழியாக ஐம்புலன்களை அனுபவிப்பதில் உண்டாகின்ற ஆசையானது மிக்க கிழத்தனத்திலும் எப்போதும் நீங்காது. ஆதலால் அதற்கு முடிவில்லை ஆகவே அதில் விருப்பம் வைத்துப் பெண்ணாசை கொண்டு மயங்குதல் இன்றித் திருமாலிருஞ் சோலையழகனை வணங்கி உய்யும் வழியை நாடுவாய் என்று தம் நெஞ்சத்துக்கு நல்லறிவு உணர்த்திய வாறாம்.

பிரிவு ஆற்றாத தலைவி நிலையைக் குறித்துப் பாங்கி இரங்கல்

306. சோலையில் லாமையில் சேர் திரு
மாலிருஞ் சோலைநின்றான்
வேவையில் ஆமையில் வேடங்கொண்
டான்புயம் மேவப்பெறாச்
சேல்ஐயில் ஆம்மை இ லங்குகண்
ணாள் அவன் தெய்வத்துழாய்
மாலையி லாமையில் மாலைஉற்
றாள் அந்தி மாலையிலே. 97

சோலைகளைத் தமக்கு இருப்பிடமாகக் கொண்டு மயில்கள் தங்கி வசிக்கப் பெற்ற திருமாலிருஞ் சோலை மலையில் நின்ற திருக் கோலமாக எழுந்தருளியிருக்கின்றவனும் திருப்பாற் கடலில் ஆமை போல வடிவங்கொண்டு அவதரித்த வனுமான அழகப் பிரானுடைய தோள்களைத் தழுவப் பெறாத சேல்மீனும் வேலாயுதமும் போன்ற மையிடப் பெற்று விளங்கும் கண்களை உடையவளான இம்மங்கை அத்தலைமகனது தெய்வத்தன்மை பொருந்திய

திருத்துழாய்மாலை கிடைக்கப் பெறாமையால் அந்தி மாலைப்பொழுதில் மயக்கத்தை அடைந்தாள்.

மையில் - மயில், முதற் போலி, ஐயில் - அயில், முதற் போலி.

கலவிக்கு உரியகாலமான இரவின் தொடக்கத்தில் தம்தம் துணையைக் கருதி வந்துசேரும் விலங்குகளையும் மக்களையும் கண்டு தலைவி விரக வேதனை மிகுதலால் 'அந்தி மாலையிலே மாலையுற்றாள்' என்றார்.

பிரிவாற்றாது வருந்தும் தலைவி நிலையைத் தலைவனுக்குப் பாங்கி கூறல்

307 மாலைக்கு அரும்பு சிறுகால்
துகைக்க வருந்தும் எங்கள்
ஆலைக் கரும்புதன் ஆசைஎல்
லாம் சொல்லில் ஆயிரம்தோட்டு
ஓலைக்கு அரும்புண் தொடமுடம்
ஆம்மதி ஊர்குடுமிச்
சோலைக் கரும்புய லேஅரு
ளாய்உன் துளவினையே. 98

(அடியில்) உராய்தலால் அடி தேய்ந்திடுமாறு சந்திர மண்டலம் தவழ்ந்து செல்லப்பெற்ற சிகரத்தையுடைய திருமாலிருஞ் சோலைமலையில் எழுந்தளியிருக்கின்ற காள மேகம் போன்றவனே! மாலைப் பொழுதில் மந்தமாக வீசுகின்ற இளந் தென்றற்காற்று வருத்து தலால் வருந்துகின்ற ஆலையில் அகப்பட்ட கரும்பு போன்றவளான எங்கள் தலைவியினது ஆசைமுழுவதையும் சொல்லி வருவதானால் (அதனை எழுதுமிடத்து) ஆயிரம் பனை ஓலைக்கு (எழுதுதலால்) அரிய புண்ணாகும். (இங்ஙனம் இருத்தலால்) நினது திருத்துழாய் மாலையை இவட்குத் தந்தருள்வாய்.

308. துளவுஇலை ஆர்பொன் அடிமுடி
சூட்டித்தொண்டு ஆக்கிஎன்னை
வளவிலை யாக்கொண்ட நீகை
விடேல்மங் கலகுணங்கள்
அளவுஇல்ஐ யாஅலங் கார
சமயிகள் ஆய்ந்தவண்ணம்
உளஇலை ஆய்உரு வாய்அருவு
ஆய ஒருமுதலே. 99

திருக் கல்யாண குணங்கள் அளவின்றி மிகப் பெற்ற சுவாமி! அழகனே! பற்பல சமயத்தார் ஆராய்ந்தவாறு (அவர்களால்) உள்ளன வென்று கூறப்படும் பொருள்களும், இல்லையெனப்படும் பொருள்களும், உருவப் பொருளும் அருவப்பொருளும் ஆகின்ற ஒப்பற்ற முதற் பொருளே! துளசிதளங்கள் பொருந்திய நினது திருவடிகளை என் சிரமேல் வைத்து என்னை அடிமையாக்கி நல்ல விக்கிரயப் பெருளாகக் கொண்ட நீ கை விடாதே.

309. ஒருபால் அமரர் ஒருபால்
முனிவர் உடன்இருந்துஎன்
இருபார் வையும் கொண்டு உவப்பதென்
றோஇட பக்கிரிக்கும்
பொருபாற் கடற்கும் அயோத்திக்கும்
பொன்துவ ராபதிக்கும்
நிருபா! வை குந்தமும் நீவீற்
றிருக்கின்ற நீர்மையுமே. 100

திருமாலிருஞ் சோலை மலைலக்கும் (அலைகள்) மோதப் பெற்ற திருப்பாற் கடலுக்கும், திரு அயோத்திக்கும், அழகியதிருத்துவாரகைக்கும் தலைவனே! ஸ்ரீவைகுண்டத்தையும அதில் நீ எழுந்தருளியிருக்கிற அழகையும் ஒரு பக்கத்தில் நித்திய சூரிகளுடனும் மற்றொரு பக்கத்தில் முக்தர்களுடனும் (யான்) கூடியிருந்து எனது இரண்டு கண்களையும் கொண்டு சேவித்துப் பரமானந்த மடைவது எந்நாளோ?

இது இப்பிரபந்தத்தின் ஈற்றுச் செய்யுள் ஆதலால் இதில் தமது முச்கியமான பிரார்த்தனையை வெளியிட்டு அவ்வளவோடு இப்பிரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்.

தற்சிறப்புப் பாயிரம்

310. அலங்கார ருக்குப் பரமச்
சுவாமிக்கு அழகருக்குக்
கலங்காப் பெருநக ரம்காட்டு
வார்க்குக் கருத்து அன்பினால்
நலங்காத சொல்தொடை அந்தாதி
யைப்பற்ப நாபப்பட்டன்
விலங்காத கீர்த்தி மணவாள
தாசன் விளம்பினனே.

அலங்காரர் என்றும் பரமசுவாமி யென்றும் அழகர் என்றும் திருநாமங்களை உடையவரும் அழிவில்லாத பெருமையுடைய ஸ்ரீவைகுண்ட நகரத்தைத் (தமது அடியார்கட்கு வாழும் இடமாகக்) காண்பித்தருள்பவரு மாகிய எம்பெருமான் விஷயமாக மனத்திற் கொண்ட மெய்யன்பினால், (காலபேதத்தால்) வாடுதல் இல்லாத சொன்மாலையாகிய இந்த அந்தாதிப் பிரபந்தத்தை ஸ்ரீமந் நாராயணனது திரு அவதாரமான பெரிய பட்டரை (ஆசிரயித்து அவரை விட்டு) நீங்காது இருத்தலாகிய புகழையுடைய அழகிய மணவாள தாசன் விண்ணப்பஞ் செய்தான்.

பத்மநாபன்—தாமரை மலரை நாபியில் உடையவன். இச் செய்யுள், நூலா சிரியர் தாமே தம்மைப் பிறன் போலும் பாயிரம் கூறியது.

அழகர் அந்தாதி முற்றிற்று.

4. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி

சிறப்புப் பாயிரம்

311. ஏற்றமண வாளர் இசைத்தார்அந் தாதிவெண்பா
தோற்றம்கேடு இல்லாத தொல்மாலைப் —
[போற்றத்
திருப்பதியாம் நூற்றெட் டினையும்சே விப்போர்
கருப்பதியா வண்ணம்உண்டாக.

திருப்பதி - திருமால் அர்ச்சாவதார ரூபியாய் எழுந்தருளிருக்கும் திவ்வியதலம். திருப்பதி என்பது அத்தலங்களையும் அவற்றில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்களையும் குறிக்கும்.

நூற்றெட்டுத் திருப்பதிகளையும் சேவிப்பவர்கள் தமக்கு மீண்டும் (தாயின்) கருப்பத்தில் பொருந்தாத விதம் உண்டாகுமாறு (மீண்டும் பிறப்பின்றி முத்தியைச் சேருமாறு) பிறப்பும் இறப்பும் இல்லாத பழமையாகிய திருமாலைச் சொல்லித் துதிக்கும்படியாக, சிறப்பினையுடைய அழகிய மணவாள தாசர் என்பவர் வெண்பாவினாலாகிய நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியைப் பாடியருளினார். இதற்குத் தனியன் என்று பெயர்.

ஆழ்வார்கள் காப்பு

312. பொய்கைபூ தன்பேயார் பொன்மழிசைக்
[கோன்மாறன்
செய்ய மதுரகவி சேரர் பிரான் — வையகம்எண்
பட்டர்பிரான் கோதைதொண்டர் பாதப்
[பொடிபாணன்
கட்டவிழ்தார் வாட்கலியன் காப்பு.

பொய்கையாழ்வாரும், பூதத்தாழ்வாரும், பேயாழ்வாரும், திருமழிசையாழ்வாரும், நம்மாழ்வாரும், செம்மையுடைய மதுரகவியாழ்வாரும், குலசேகராழ்வாரும், உலகத்தவரால் நன்கு மதிக்கப் பெற்ற பெரியாழ்வாரும் ஆண்டாளும், தொண்டர் அடிப்பொடியாழ்வாரும், திருப்பாணாழ்வாரும் (அரும்புகளின்) முறுக்கு விரிந்த மாலையைத் தரித்த வாட்படையை ஏந்திய திருமங்கையாழ்வாரும் நமக்குக் காப்பாவர்.

நம்மாழ்வார்

313. பிறவாத பேறு பெறுதற்குஎஞ் ஞான்றும்
மறவாது இறைஞ்சுஎன் மனனே! — துறவாளன்
வண்குருகூர் வாவி வழுதிவள நாடுடைய
தண்குருகூர் நம்பிதிருத் தாள்.

எனது மனமே! பற்றின்மை உடையவரும் (பற்றற்றவரும்) அழகிய நீர்வாழ் பறவைகள் உலாவப் பெற்ற நீர் நிலைகள் சூழ்ந்த பாண்டிவள நாட்டிலுள்ள குளிர்ந்த திருக்குருகூரில் திரு அவதரித்த பெரியவருமான நம்மாழ்வாரது திருவடிகளை மீண்டும் பிறவாமையாகிற இலாபத்தை அடையும் பொருட்டாக எப்பொழுதும் மறவாமல் வணங்குவாயாக.

உடையவர்

314 முன்னே பிறந்திறந்து மூதுலகில் பட்டஎல்லாம்
என்னே மறந்தனையோ என்நெஞ்சே! —
[சொன்னேன்
இனிஎதிரா சன்மங்கள் இன்றுமுதல் பூதூர்
முனிஎதிரா சன்பேர் மொழி.

எனதுமனமே! இதற்கு முன்பு பிறப்பு இறப்புகளை அடைந்து பழமையாகிய இவ்வுலகில் அனுபவித்த கஷ்டங்களை எல்லாம் மறந்துவிட்டாயோ! என்ன விபரீத புத்தி! கூறுகின்றேன். (அதாவது) இன்று தொடங்கி ஸ்ரீபெரும் பூதூரில் திருஅவதரித்த துறவியாகிய யதிராஜனது திருநாமத்தைச் செல்லுவாய். (நீ அவ்வாறு சொல்வையாயின்) பிறப்புக்கள் இனி (உனக்கு) உண்டாகமாட்டா.

கூரத்தாழ்வான்

315. முக்காலம் இல்லா முகில்வண்ணன் வைகுந்தத்து
எக்காலம் செல்வான் இருக்கின்றேன் — தக்கார்எண்
கூரத்தாழ் வான் அடியைக் கூடுதற்கு
போரத்தாழ் வானசடம் போட்டு? [நாய்அடியேன்

நாய்போல் கடைப்பட்டவனாகிய நான் மிகவும் இழிவையுடையதாகிய இவ்வுடம்பை இங்கு விட்டு விட்டு பெரியோர்களால் நன்கு மதிக்கப் பெற்ற கூரத்தாழ்வானது திருவடிகளைச் சேர்தற்கு மூன்று காலங்களும் இல்லாததாகிய காளமேகம் போன்ற திருநிறமுடைய திருமாலினது ஸ்ரீ வைகுண்டத்தில் எந்நாளில் சென்று சேரப் போகின்றேன்?

பராசர பட்டர்

316. நான்கூட்டில் வந்தஅன்றே நான்அறியா நன்மை [எல்லாம்
தான் கூட்டி வைத்தநலம் தான்கண்டீர் — [ஆம்கூட்டம்
சிட்டருக்கு வாய்த்த திருஅரங்கன் இன்னருளால்
பட்டருக்கு ஆட்பட்ட பயன்.

திரள் திரளாக உள்ள பெரியோர்கட்குப் பொருந்தி யிருக்கின்ற ஸ்ரீரங்கநாதன் தனது இனிமையான கிருபை யினால் நான் இந்தச் சரீரத்தில் வந்து பிறந்த அப்பொழுதே என்னால் அறியப்படாத நல்வினைகளை எல்லாம் தான் உண்டாக்கிய நன்மையென்பது ஸ்ரீ பராசர பட்டருக்கு சீடனாக அமையப் பெற்றதாகிய பயனாகும்.

பண்டிதரைக் குறிக்கின்ற 'பட்டர்' என்ற பொதுப் பெயர் சிறப்பாக இவர்க்கு இட்டு வழங்கப்பெற்றது

திவ்விய தேசங்களின் தொகை

317. ஈர்இருப தாம்சோழம் ஈர்ஒன்ப தாம்பாண்டி
ஓர்பதின்மூன் றாம்மலைநாடு ஓர்இரண்டாம் — [சீர்நடுநாடு
ஆறோடீர் எட்டுத்தொண்டை அவ்வடநாடு
கூறுதிரு நாடுஒன் றாக் கொள். [ஆறிரண்டு

சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பதாகும். பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டாகும். மலைகள் நிறைந்த சேர நாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றாகும். சிறப்புப் பொருந்திய நடுநாட்டுத் திருப்பதிகள் இரண் டாகும். தொண்டைநாட்டுத் திருப்பதிகள் இருபத்தி ரண்டாகும். தூரத்திலுள்ள வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டாகும். சிறப்பித்துச் சொல்லப்படுகிற

பரமபதம் என்ற திவ்விய லோகம் ஒன்றாகும். இவ்வாறாக (திருமாலின் திருப்பதிகள் நூற்றெட்டு என்பதை) அறிந்து கொள்வாயாக.

நூல்

சோழநாட்டுத் திருப்பதிகள் — 40

1. திருவரங்கம் பெரிய கோயில்

318. சீர்வந்த உந்தித் திசைமுகனால் அல்லாதுஎன்
சோர்வந்த சொல்லில் சுருங்குமோ — ஆர்வம்
ஒருவரங்கங்கு ஓயில் உகந்தவரை ஆள்வான்
திருவரங்கம் கோயில் சிறப்பு? 1

ஒருத்தர் அந்தந்த விஷயங்களில் ஆசை ஒழிந்தால் அவ்வாறு பற்றற்ற அன்பரை விரும்பி அடிமை கொள்பவனாகிய எம்பெருமானது திருவரங்கம் பெரியகோயில் என்னும் திருப்பதியின் பெருமையானது சிறப்புப் பொருந்திய திருமாலின் உந்திக் கமலத்திற் பிறந்த நான்கு திக்கையும் நோக்கிய நான்கு முகங்களையுடைய பிரமதேவனால் அல்லாமல் எனது குற்றம் பொருந்திய சொற்களில் அடங்குமோ?

இது திருச்சி கோட்டைக்கு வடமேற்கில் 5 கி. மீ. தூரத்தில் உள்ளது.

2. திருவுறையூர்

319. சிறப்புடைய செல்வத் திருப்பதிகள் போல
மறப்புடைய நாயேன் மனத்துள் — உறப்போந்து
அறந்தையா நின்ற அரங்கா! திருவாழ்
உறந்தையாய் இங்குறைந்தது ஓது. 2

மறதியை யுடைய நாய்போலக் கடைப்பட்டவனான எனது மனத்தில் நன்றாக எழுந்தருளியிருந்து, தருமத்தைப் பதியுமாறு செய்கின்ற திருவரங்க நாதனே! இலக்குமி

வாழ்கின்ற திருவுறையூர் என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளி இருப்பவனே! நீ பெருமைபெற்ற செல்வம் நிறைந்த திவ்விய க்ஷேத்திரங்கள் போல இந்த என்மனத்தில் நித்திய வாசம் செய்வதற்குக் காரணத்தைக் கூறியருள்வாய்.

இது திருச்சிக் கோட்டைக்கு மேற்கில் 1½ கி. மீ. தூரத்தில் உள்ளது.

3. திருத்தஞ்சை மாநகரம்

320. ஓதக்கேள் நெஞ்சே! உனக்குமிது நன்றெனக்கும்
மேதக்க நன்மையினி வேறில்லை — போதப்
பெருந்தஞ்சை மாமணியைப் பேணி வடிவம்
பொருந்தஞ்சை மாமணியைப் போற்று. 3

மனமே! நான் சொல்வதை நீ கேட்பாயாக; (கேட்டால்) நான் சொல்லுகின்ற இவ்விஷயம் உனக்கும் நன்மையை உண்டாக்கும். எனக்கும் மிக்க நன்மையை உண்டாக்குவது இதனினும் வேறொன்று இல்லையாம். அது யாதெனில், பெரிய திருத்தஞ்சையென்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளிய மாணிக்கம் போன்ற கடவுளை நன்றாக விரும்பித் துதித்து அப்பெருமானது திருமேனியிற் பொருந்திய பஞ்சாயுதங்களையும் லட்சுமியையும் கௌஸ்துபரத்தினத்தையும் வாழ்த்துவாயாக.

இது தஞ்சாவூருக்கு வடக்கில் 5 கி. மீ. தூரத்தில் உள்ளது.

4. திரு அன்பில்

321. போற்றிசெய ஓர்குடைக்கீழ்ப் பொன்னாடும் [இந்நாடும்
நாற்றிசையும் ஆண்டாலும் நன்கில்லை — தோற்றமிலா
எந்தைஅன்பில் ஆதி இணைத்தா மரையடிக்கே
சிந்தைஅன்பி லாதார் சிலர். 4

பிறப்பில்லாத எமது தந்தையும், திரு அன்பில் என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கின்ற முழுமுதற் கடவுளுமான எம்பெருமானது இரண்டு திருவடித் தாமரைகளின் இடத்தில் தமது மனததில் பக்தியைக் கொள்ளாதவராகிய சிலபேர் (யாவரும் தமக்கு) வாழ்த்துக்கூற ஒற்றை வெண்கொற்றக் குடையின் நீழலில் பொன்னுலகமாகிய தேவ லோகத்தையும் நான்கு திக்கின் எல்லை வரையிலும் உள்ள இம்மண்ணுலகத்தையும் தனி அரசாட்சி செய்தாலும் (அதனால் அவர்க்கு யாதொரு) நன்மையும் உண்டாகாது.

இது பூதலூருக்கு வடக்கில் 13 கி. மீ. தூரத்தில் உள்ளது.

5. திருக்கரம்பனூர் உத்தமர் கோயில்

322. சிலமா தவஞ்செய்தும் தீவேள்வி வேட்டும்
பலமா நதியிற் படிந்தும் — உலகில்
பரம்பநூல் கற்றும் பயனில்லை நெஞ்சே!
கரம்பனூர் உத்தமன்பேர் கல் 5

எனது மனமே! இவ்வுலகத்தில் சில பெருந்தவங்களைச் செய்தும் ஓமாக்கினியையுடைய யாகத்தைச் செய்தும் பல சிறந்த நதிகளில் மூழ்கியும், விரிவாக நூல்களைப் படித்தும், (அவற்றால்) யாதொரு பயனும் உண்டாகாது. திருக்கரம்பனூர் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள புருஷோத்தமனது திருநாமத்தைப் பலதரம் கூறுவாயாக,

இது திருச்சி கோட்டைக்கு வடக்கு 8 கி. மீ. தூரத்தில் உள்ளது.

6. திருவெள்ளறை

323. கல்லிருந்தான் தந்தை கமலத்தோன் அக்கமலத்
தில்இருந்தான் தந்தை அரங் கேசனென்றே —
தொல்லைமறை
உள்ளறையா நின்றமையால் உள்ளமே கள்ளமின்றி
வெள்ளறையான் தாளே விரும்பு. 6

எனது மனமே! 'கைலாச மலையில் இருப்பவனாகிய சிவபெருமானது திருத்தந்தை, (திருமாலினது நாபித்) தாமரையில் தோன்றியவனாகிய பிரமனாவன், அத்தத் தாமரை மலரில் வாழ்பவனாகிய பிரமதேவனது திருத் தந்தை திருவரங்க நாதனாவன்' என்று பழமையாகிய வேதங்களில் சொல்வதனால், கபடமில்லாமல் திரு வெள்ளறை யென்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள எம் பெருமானது திருவடிகளையே விரும்பிச் சேர்வாயாக.

இது வடமொழியில் 'சுவேதாத்ரி' எனப்படும். வெண்மையான பாறைகளால் இயன்ற மலை இது திருச்சிக் கோட்டைக்கு வடக்கில் 23 கி. மீ. தூரத்தில் உள்ளது.

7. திருப்புள்ளம் பூதங்குடி

324. விரும்பினவை எய்தும் வினையனைத்தும் தீரும்
அரும்பரம வீடும் அடைவீர் — பெரும்பொறிகொள்
களம்பூ தங்குடி கொள் காயமுடை யீர் அடிகள்
புள்ளம்பூ தங்குடியிற் போம். 7

வலிய ஐம்பொறிகளைக் கொண்டதும், வஞ்சனைக் குணமும் பஞ்ச பூதங்களும் பொருத்தப் பெற்றதுமான சரீரத்தை உடையவரான மக்களே! நீங்கள் எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருப்புள்ளம் பூதங்குடி யென்னும் தலத்திற் போய்ச் சேருங்கள். (சேர்ந்த மாத்திரத்தில்) நீங்கள் விரும்பியவை எல்லாம் கைகூடும். உங்களது எல்லா வினைகளும் நீங்கும், பெறுதற்கரிய சிறந்த முத்தி உலகத்தையும் சேர்வீர்கள்.

இது கும்பகோணத்திற்கு வடமேற்கில் 10 கி. மீ. தூரத்தில் உள்ளது.

8. திருப்பேர் நகர்

325. போம்மானை எய்து பொரும்ஆனைக் கொம்பு [பறித்து
ஆம்ஆனை மேய்த்துவந்த அம்மானைத் — தாமச்
செழுந்திருப்பே ரானைச் சிறுகாலைச் சிந்தித்து
எழுந்திருப்பேற்கு உண்டோ இடர்? 8

(தனக்கு முன்னே மாயமாக) ஓடிச்சென்ற (மாரீசனாகிய) பொன்மானை அம்பு எய்து கொன்றும், யுத்தம் செய்ய வந்த (குவலயா பீடம் என்னும்) யானையின் தந்தங்களைப் பிடுங்கியும் மந்தையாகத் திரண்ட பசுக்களை மேய்த்தும் மகிழ்ந்த சுவாமியும் வளப்பமான திருப்பேர் என்னும் தலத்தில் எழுந்தருளியிருப்பவனுமான திருமாலைச் சிற்றங் சிறுகாலையில் தியானித்துக் கொண்டே எழுந்திருக்கும் எனக்குப் பிறவித் துன்பம் உள்ளதாகுமோ? (உண்டாகாது என்றபடி)

இது பூதலூருக்கு வடமேற்கில் 10 கி.மீ. தொலைவில் உள்ளது.

9. திருஆதனூர்

326. இடரான ஆக்கை இருக்க முயலார்
மடவார் மயக்கின் மயங்கார் — கடவுளர்க்கு
நாதனூர் ஆதரியார் நான்எனதுஎன் னார்அமலன்
ஆதனூர் எந்தை அடியார். 9

குற்றமற்றவனும் திரு ஆதனூர் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ளவனுமாகிய எம்பெருமானது பக்தர்கள் பலவகைத் துன்பங்கட்கு இடமாகிய தமது உடம்பு நிலைத்திருக்குமாறு முயலமாட்டார்கள்; இளமகளிரது மோகத்தில் மயங்கித் தியங்க மாட்டார்கள்; தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரனது ஊரையும் (சொர்க்க லோக இன்பத்தையும்) நம்பமாட்டார்கள். அகங்கார மமகாரச்

சொற்களையும் சொல்லமாட்டார்கள். ஆக்கை-யாக்கை என்பதன் மரூஉ.

காமதேனுவுக்குப் பிரத்யட்சமான தலமாதல் பற்றி ஆதனூர் என்று திருநாமம் ஆயிற்றுப் போலும்.

இது கும்பகோணத்திற்கு வடக்கில் 17 கி மீ. தொலைவில் உள்ளது.

10. திரு அழுந்தூர்

327. அடியாராய் வாழ்வின் அறிவிலாப் பேய்காள்!
செடியார் வினையனைத்தும் தீரும் — முடிவில்
செழுந்தூரத் தன் எனினும் செங்கண்மால் எங்கள்
அழுந்தூர்அத் தன் அணியன் ஆம். 10

புத்தியில்லாமையால் பேய் போன்றவர்களே! நீங்கள் எம்பெருமானுக்குத் தாசர்களாய் நல்வாழ்க்கையை அடையுங்கள். அவ்வாறு செய்தால் செடிபோல் அடர்ந்துள்ள (உங்களது) வினைகள் யாவும் ஒழியும். சிவந்த திருக்கண்களையுடையவனும், திரு அழுந்தூர் என்னும் திருப்பதியில் எழுந்தருளிய எங்கள் சுவாமியுமாகிய எம்பெருமான் மிக்க தூரத்தில் இருப்பவன் போலத் தோன்றினாலும் அந்திம காலத்தில் சமீபத்தில் வந்து காட்சி தந்து உங்களுக்கு நற்கதியை அளிப்பவன் ஆவான்.

இது குத்தாலத்துக்குத் தென் கிழக்கில் 3 கி. மீ தொலைவில் உள்ளது.

11. திருச்சிறு புலியூர்

328. ஆமருவி மேய்தக அரங்கரெதிர் ஆர்நிற்பார்
தாம்மருவி வாணனைத்தோள் சாய்த்தநாள் — [சேமம்
உறுபுலியூர் வன்தோல் உடையான் உடைந்தான்
சிறுபுலியூர் எந்தைமேற் சென்று. 11

திருவரங்கநாதர் தாம் பாணாசுரனைக் கிட்டி, போரில் அவனது ஆயிரம் தோள்களையும் அறுத்துத் தள்ளிய காலத்தில் அந்தப் பாணாசுரனுக்குக் காவலாக அமைந்தவனான புலியானது மேற்கொண்டுள்ள வலிய தோலை ஆடையாக உடைய சிவபெருமான் சிறுபுலியூர் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள எமது தந்தையாகிய அந்த எம்பெருமானை எதிர்த்துச் சென்று தோற்றோடினான். ஆதலால் பசுக்களை விரும்பி மேய்த்த ஸ்ரீ ரங்கநாதருக்கு முன்பாக எவர்தாம் எதிர்த்து நிற்கவல்லவர்? (எத்தேவராலும் எதிர்த்து நிற்றல் முடியாது).

எம்பெருமான் வியாக்கர பாத மகரிஷிக்கு பால் சயனமாய்ச் சேவை சாதித்த தலமாதல்பற்றி, இதற்கு 'சிறுபுலியூர்' என்று திருநாமம். (வியாக்கிரபாதர் - புலிக்கால் முனிவர்)

இது கும்பகோணத்துக்குத் தெற்கில் 15 கி. மீ. தொலைவில் உள்ளது.

12. திருச்சேறை

329. சென்றுசென்று செல்வம் செருக்குவார்
[வாயில்தொறும்
நின்றுநின்று தூங்குமட நெஞ்சமே!—இன்தமிழைக்
கூறைக்கும் சோற்றுக்கும் கூறாதே பேறாகச்
சேறைக்கு நாயகன்பேர் செப்பு. 12

செல்வத்தினால் இறுமாப்புக் கொண்டவரது வீட்டு வாசல்கள் தோறும் போய்ப்போய், அங்கங்கே நெடுநேரம் நின்று, சோர்வடைகின்ற அறியாமையையுடைய எனது மனமே! நீ இனிய தமிழ்ப்பாடலைத் துணியின் பொருட்டும் சோற்றின் பொருட்டும் மனிதரைப்பாடாமல், முத்திப் பயன் கைகூடும்படி திருச்சேறை யென்னும் திவ்விய தலத்திற்குத் தலைவனான எம்பெருமானது திருநாமத்தை பாடுவாயாக.

'திருச்சேறை' என்பது காரணப்பெயர். இதனை வடநூலார், 'பஞ்ச சார க்ஷேத்திரம்' என்பர். பஞ்ச சாரம் என்பது பெருமாள், பிராட்டி, விமானம், தீர்த்தம், தலம் என்னும் சாரமான ஐந்து பொருள்களைக் குறிக்கும் என்பர்.

இது கும்பகோணத்திற்குத் தென் கிழக்கில் 12 கி மீ. தொலைவில் உள்ளது.

13. தலைச்சங்க நாண்மதியம்

330. செப்புங்கால் ஆதவனும் திங்களும்வா னும்தரையும்
அப்பும்கா லும்கன லும் ஆய்நின்றான் — கைப்பால்
அலைச்சங்கம் ஏந்தும் அணியரங்கத் தம்மான்
தலைச்சங்க நாண்மதியத் தான் 13

கையினிடத்தில் அலைகளையுடைய கடலினிடத்துத் தோன்றிய சங்கத்தைத் தரித்துள்ள திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள சுவாமியும், திருத்தலைச் சங்க நாண்மதியம் என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளியவனுமான எம் பெருமான் சொல்லுமிடத்தில் சூரியனும், சந்திரனும், ஆகாயமும், பூமியும், நீரும், காற்றும், நெருப்பும் ஆகி நிற்பவன் ஆவன்.

சிறந்த சங்கத்தை யேந்திய நாண்மதியப் பெருமானை யுடைய தலமாதல் பற்றி இத்தலத்திற்கு 'தலைச்சங்க நாண்மதியம்' என்று திருப்பெயர் என்பர்.

இது சீர்காழிக்குத் தென்கிழக்கில் 32 கி. மீ. தொலைவில் உள்ளது.

14. திருக்குடந்தை

331. தானே படைத்துலகைத் தானே அளித்து நீ
தானே அழிக்கும் தளச்சியோ — வானில்
திருமகுடம் தைக்கச் சிறுகுறளாய் நீண்ட
பெருமகுடந் தைக்கிடந்தாய் பேசு. 14

(முதலில்) சிறிய வாமனாவதாரமாகி, (பின்பு) ஆகாயமுகட்டில் அழகிய கிரீடம் முட்டும்படி (திருவிக்கிரமனாகி) நீண்டு வளர்ந்தருளிய பெருமானே! உலகங்களை நீயே பிரமனாகிப் படைத்து, நீ தானே பாதுகத்து, (சிவனாகி) அழிப்பதனாலாகிய இளைப்பினாலோ திருக்குடந்தை யென்னும் தலத்தில் பள்ளி கொண்டிருக்கின்றாய். (இதன் காரணத்தைக்) கூறியருள்வாயாக.

இது கும்பகோணத்திற்கு வடமேற்கில் 3 கி. மீ. தொலைவில் உள்ளது.

15 திருக்கண்டியூர்

332. பேசவரின் தென்னரங்கன் பேரெல்லாம் பேசுகவாய்
கேசவனைக் காண்கவிழி கேட்கசெவி — ஈசனார்
உண்டி ஊர் தோறும் உழன்றிரவா மல்தவிர்த்தான்
கண்டியூர் கூப்புகஎன் கை. 15

எனது வாயானது பேசத்தொடங்கினால் அழகிய திருவரங்கனது திருநாமங்களை யெல்லாம் பேசக்கடவது; எனது கண்கள் கேசவன் என்னும் திருநாமத்தையுடைய எம்பெருமானைத் தரிசிக்கக் கடவன. எனது காதுகள் (அவனது புகழ்களையே) கேட்கக்கடவன, எனது கைகள் சிவபெருமானை ஊர் தோறும் உழன்று உணவை யாசிக்க ஒட்டாமல் (அவனது சாபத்தை) நீக்கியருளியவனுடைய திருக்கண்டியூர் என்னும் தலத்தை நோக்கி, குவித்து அஞ்சலி செய்யக்கடவன.

சிவபிரானது சாபத்தைக் கண்டனம் செய்ததுபோலச் சேவை சாதித்த இடமாதலால் இத்தலத்திற்கு. 'திருக்கண்டியூர்' என்று திருநாமம் ஆயிற்று. இதுவடமொழியில் 'கண்டக புரம்' எனப்படும்.

இது தஞ்சாவூருக்கு வடகிழக்கில் 8 கி. மீ. தொலைவில் உள்ளது.

16. திருவிண்ணகரம்
உப்பிலியப்பன் சந்நிதி

333. கையும் உரையும் கருத்தும் உனக் கேயடிமை
செய்யும் படிநீ திருத்தினாய் — ஐயா
திருவிண் ணகராளா! சிந்தையிலும் எண்ணேன்
பெருவிண் ணகராளும் பேறு. 16

தலைவனே! திருவிண்ணகரமென்னும் திருப்பதிக்குத் தலைவனே! (எனது) கைகளும், வாக்கும், எண்ணமும் (ஆகிய திரிக்ரணங்களையும்) உனக்கே அடிமை செய்யும் படி நீ திருத்தமான வழியிற் போகச் செய்தாய். (ஆதலால் இனிமேல்) பெருமை பெற்ற தேவலோகத்தை அரசாளும் செல்வத்தை ஒரு பொருட்டாக மனத்திலும் யான் நினைக்க மாட்டேன். இது தேவலோகம் போன்றது என்பர்.

மிருகண்டு முனிவர் பத்தினியினது விருப்பத்தின்படி உப்பிலலாத பிரசாதங்களையே அமுது செய்கின்றனர் என்றும அறிக.

இது கும்பகோணத்திற்குக் கிழக்கில் 4 கி. மீ. தொலைவில் உளளது.

17. திருக்கண்ணபுரம்

334. பேறு தரினும் பிறப்புஇறப்பு நோய்மூப்பு
வேறு தரினும் விடேன்கண்டாய் — ஏறுநீர்
வண்ணபுரத் தாய்என் மனம்புகுந்தாய் வைகுந்தா!
கண்ணபுரத் தாய்உன் கழல். 17

(அலைகள் கரைமேற்) புரளப் பெற்ற நீரையுடைய கடல் போன்ற கருநிறத்தைக் கொண்ட திருமேனியை உடையவனே! எனது மனத்திற் குடிபுகுந்துள்ள வனே! ஸ்ரீ வைகுண்டத்தில் எப்போதும் வாழ்பவனே! திருக் கண்ண புரம் என்னும் திவ்விய தலத்தில் எழுந்தளியிருப்ப

வனே! (நீ அடியேனுக்கு) மோட்சத்தைக் கொடுத்தாலும் அதற்கு மாறாகப் பிறப்பு இறப்பு நோய்மூப்பு ஆகிய வற்றைத் தந்தாலும் உனது திருவடிகளை விட்டு நீங்கேன்.

இது நன்னிலத்திற்குக் கிழக்கில் 7 கி. மீ. தொலைவில் உள்ளது.

18. திருவாலி

335. கழன்றுபோம் வாயுவினைக் கட்டாமல் தீர்த்தம்
உழன்று போய் ஆடாமல் உய்ந்தேன் — அழன்று
பொருவாலி காலன் பரகாலன் போற்றும்
திருவாலி மாயனையே சேர்ந்து. 18

கோபித்துப் போர்செய்த வாலிக்கு யமனாய் நின்ற வனும் திருமங்கை யாழ்வாரால் பாடித் துதிக்கப்பெற்ற திருவாலி யென்னும் திருநகரியில் எழுந்தருளியிருப்பவனு மான எம்பெருமானை உபாயமாகப் பற்றிய தனால் உடம்பிலிருந்து வெளிச் செல்லுகின்ற மூச்சுக் காற்றை அடக்காமலும் வருந்திப் பல இடங்களில் சென்று புண்ணிய தீர்த்தங்களில் மூழ்காமலும் யான் நற்கதிபெற் றேன்.

இது சீர்காழிக்குக் கிழக்கில் 10 கி. மீ. தொலைவில் உள்ளது.

19. திருநாகை

336 சேர்ந்துனக்குக் குற்றேவல் செய்திலன்என் [சிந்தையில் நீ
ஆர்ந்ததற்கோர் கைம்மாறு அறிகிலேன் — [பூந்துவரை
மன்னாகை யாழி வலவா வலம்புரியாய்!
தென்னாகை யாய் அருளிச் செய். 19

அழகிய துவாரகா புரிக்கு அரசனே! வலத்திருக்கையில் சக்கரத்தை உடையவனே! இடத்திருக்கையில் வலம்புரிச்

சங்கத்தை யுடையவனே! அழகிய திருநாகை என்னும் தலத்தில் எழுந்தருளியிருப்பவனே! உன்னைச் சரணமாக அடைந்து உனக்குச் சிறிய கைங்கரியத்தையும் செய்தேன் இல்லை அவ்வாறு இருக்கவும் அடியேனது மனத்தில் நீ நன்றாக எழுந்தருளி யிருப்பதற்கு ஒரு பிரதி உபகாரத்தை யும் அறியேன். கூறியருள் வாயாக.

நாகை — நாகப்பட்டினம் என்பதன் மரூஉ. நாகராஜனுக்குப் பிரத்யட்சமான தலமாதலால் இதற்குத் 'திருநாகை' என்று பெயர்.

இது நாகப் பட்டினத்திற்கு அருகில் உள்ளது.

20. திருநறையூர்

337\. செய்ய சடையோன் திசைமுகத்தோன்
[வானவர்கோன்
ஐயம்அறுத்து இன்னம் அறியாரே — துய்ய
மருநறையூர் வண்துழாய் மாயோன்செவ் வாயோன்
திருநறையூர் நின்றான் செயல். 20

பரிசுத்தமாகிய நறுமணமும் தேனும் பொருந்திய செழிப்பான திருத்துழாயை யணிந்த மாயோனும் சிவந்த திரு அதரத்தையுடையவனும், திருநறையூர் என்னும் திவ்விய தலத்தில் நின்ற திருக் கோலமாக எழுந்தருளி யிருப்பவனுமான எம்பெருமானது செய்கையைப்பற்றி செந்நிறமான சடையை உடைய சிவபிரானும் நான்கு திசையையும் நோக்கிய நான்கு முகங்களையுடைய பிரமனும் தேவர்கட்கு எல்லாம் தலைவனான இந்திரனும் சந்தேகத்தை ஒழித்து இன்னமும் அறியமாட்டார்கள்.

இத்தலத்தில் திருமங்கையாழ்வாருக்கு எம்பெருமான் திரு இலச்சனை பிரசாதித்தனன் என்றும் அறிக.

இது கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் 3 கி. மீ. தொலைவில் உள்ளது.

21. திருநந்திபுர விண்ணகரம்

338. செயற்கரிய செய்வோமைச் செய்யாமல் நெஞ்சே!
மயக்குவார் ஐவர் வலியால் — நயக்கலவி
சிந்திபுர விண்ணகரம் என்பர்திருச் செங்கண்மால்
நந்திபுர விண்ணகரம் நாடு. 21

மனமே! செய்வதற்கு அருமையான தொழில்களையும் செய்யவல்ல நம்மைச் செய்யவொட்டாமல் தமது வலிமையால் மயங்கச் செய்பவர்களாகிய பஞ்சேந்திரியங்கள் உன்னை நோக்கி, 'இனிமையைத் தருகின்ற சிற்றின்பத்தையே எப்போதும் நினைப்பாய்; சொர்க்கலோகத்தை அரசாட்சி செய்வாய்' என்று துர்ப்போதனை செய்வார்கள் சிவந்த திருக்கண்களையுடைய திருமாலினது நந்திபுர விண்ணகரம் என்னும் தலத்தை எப்போதும் விரும்புவாயாக.

நந்தி தேவர்க்கு இது காட்சியளித்த தலமாகும். அதனால் இப்பெயர் பெற்றது. இது 'நாதன்கோவில்' என வழங்கும். இது கும்பகோணத்திற்குத் தென்மேற்கில் 5 கி மீ. தொலைவில் உள்ளது.

22. திரு இந்தளூர்

339. நாடுதும்வா நெஞ்சமே! நாராய ணன்பதிகள்
கூடுதும்வா மெய்யடியார் கூட்டங்கள் — சூடுதும்வா
வீதிஇந்த ளத்துஅகிலின் வீசுபுகை வாசம்எழும்
ஆதி இந்தளூரான் அடி. 22

எனது மனமே! திருமாலினது திருப்பதிகளைச் சென்று தரிசிப்போம், வா. உண்மையான பக்தர்களது கூட்டங்களை போய்ச் சேருவோம் வா. தூபகலசத்தில் போடப்பட்ட அகிற் கட்டைகளினின்று வீசுகின்ற புகையினது நறுமணமானது தெருக்களில் கமழ்ந்து எழப்பெற்ற முதன்மையாகிய திரு இந்தளூர் என்னும் தலத்தில்

எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானது திருவடித்தாமரைகளைத் தலைமேற் சூடிக் கொள்ளுவோம் வா.

சந்திரன் தனது சாபம் நீங்கப்பெற்ற தலமாகும் இது. இந்தத் தலத்தை வடமொழியாளர் 'சுகந்தவனம்' என வழங்குவர்.

23. திருச்சித்திரக்கூடம்

340. அடியால் உலகெல்லாம் அன்றளந்து கொண்ட
நெடியானைக் கூடுதியேல் நெஞ்சே! — கொடிதாய
சித்திரகூடு அங்கி கொளுந்தாமுன் கோவிந்தன்
சித்திரகூ டம்கருதிச் செல். 23

மனமே! தனது திருவடிகளினால் எல்லா உலகங்களையும் முற்காலத்தில் அளந்து தன்னுடையனவாக்கிக் கொண்ட திருவிக்கிரம அவதாரம் செய்த கடவுளைச் சேர வேண்டுமென்று விரும்பினையானால், கொடுமையுள்ளதாகிய இழிகுணத்தைக் கொண்ட இந்தச் சரீரத்தை நெருப்பானது எரித்து விடுவதற்கு முன்னே கோவிந்தராஜன் எழுந்தருளியிருக்கின்ற திருச்சித்திர கூடம் என்னும் திவ்விய தலத்தை நினைத்துச் செல்வாயாக.

இங்கு உத்சவமூர்த்தி, இராமபிரான் வனவாசம் செய்கையில் சித்திரகூட பருவதத்தில் வீற்றிருந்த வண்ணமாக எழுந்தருளி இருக்கிறார். மூலமூர்த்தி திருப்பாற்கடல் நாதன் போலச் சயனத் திருக்கோலமாகிச் சிவபிரானது நடனத்தைப்பார்த்து ஆமோதித்துக் கொண்டிருக்கிறார்.

இது சிதம்பரம் கோவிந்தராசன் திருப்பதி.

24. திருச்சீராம விண்ணகரம்

341. செல்லும் தொறும் உயிர்ப்பின் செல்லும்
[இருவினையை
வெல்லும் உபாயம் விரும்புவீர்!—தொல்லரங்கர்
சீராம விண்ணகரம் சேர்மின் பின்மீளாத
ஊராம விண்ணகரம் உண்டு. 24

(உடலை விட்டு உயிர்) போகின்ற இடங்களில் எல்லாம் அவ்வுயிரின் பின்னே விடாது தொடர்ந்து செல்லுகின்ற நல்வினை தீவினை என்னும் இரண்டு வினைகளையும் கடத்தற்குத் தக்க வழியை இச்சிக்கின்றவர்களே! நீங்கள் பழைய திருவரங்க நாதனுடைய திருச்சீராம விண்ணகர மென்னும் தலத்தைப் போய்ச்சேருங்கள். அவ்வாறு சேர்ந்த பிறகு, தன்னைச் சேர்ந்தவர் திரும்பிச் செல்லுதல் இல்லாத திருநகரமாகிய அந்தப் பரமபதம் உங்களுக்குச் சித்திக்கும்.

'சீராம விண்ணகரம்' என்பது 'சீர்காழி' எனவும் வழங்கும். சக்கரவர்த்தித் திருமகன் எழுந்தருளியிருக்கின்ற சிறந்த நகரமாதல் பற்றி இத்தலத்திற்கு 'சீராம விண்ண கரம்' என்று பெயர்.

25. திருக்கூடலூர்

342. உண்டுகேட்டு உற்றுமோந்து பார்க்கும் ஐவர்க்கே
தொண்டுபட லாமோஉன் தொண்டனேன்—விண்டு
[இலங்கும்
ஆடலூர் நேமிமுதல் ஐம்படையாய், அன்புடை
கூடலூர் ராய்இதனைக் கூறு. [யாய் 25

விட்டு விட்டுப் பிரகாசிக்கின்ற வெற்றிபொருந்திய சக்கரம் முதலிய பஞ்சாயுதங்களை உடையவனே! கிருபை உடையவனே! திருக்கூடலூர் என்னும் தலத்தில் எழுந்தருளியிருப்பவனே! உனக்கே அடியவனாகிய நான் இனிய உணவுகளைச் சுவைத்தும், இனிய இசை முதலியவை களைக் கேட்டும், இன்பம் உண்டாக்கும் பொருள்களைப் பரிசித்தும், நறுமணமுள்ள பொருள்களை மோந்தும், நற் காட்சியுள்ள பொருள்களைக் கண்டும் மகிழ்கின்ற பஞ் சேந்திரியங்களுக்கே அடிமைப் படுதல் தகுதியாகுமோ?

தேவர்கள் கூட்டமாக வந்து எம்பெருமானைச் சேவிக்கும் தலமாதலால் 'திக்கூடலூர்' என்று இத்தலத் திற்குத் திருநாமம் என்பர்.

26. திருக் கண்ணங்குடி

343. கூறுபுகழ்த் தன்னடிக்கே கூட்டுவனோ இன்னம் [என்னை
வேறுபடப் பல்பிறப்பில் வீழ்த்துவனோ — தேறு [கிலேன்
எண்ணங் குடியாய் இருந்தான்நின் றான்கிடந்தான்
கண்ணங் குடியான் கருத்து. 26

எனது மனத்தைத் தான்வாழும் இடமாகக் கொண்டு அந்நெஞ்சினில் வீற்றிருத்தலையும் நிற்றலையும் சயனித்தலையும் செய்பவனும், திருக்கண்ணங்குடி என்னும் தலத்தில் எழுந்தருளியிருப்பவனுமான எம்பெருமான் அடியேனைக் கூறப்படுகின்ற கீர்த்தியையுடைய தனது திருவடிகளில் சேர்த்துக் கொள்வானோ? அன்றி இனி மேலும் மாறாகப் பலவகைப் பிறப்புக்களிலும் தள்ளி வருத்துவனோ? அவனது திருவுள்ளக் கருத்தை இன்னதென்று அறியேன் யான்.

கண்ணன் வாழ்கின்ற இடமாதலால் இத்தலத்திற்குத் திருக்கண்ணன்குடி என்று பெயர். அதுவே கண்ணங்குடி என்று வழங்குவதாயிற்று இத்தலத்தைக் குறித்து, 'உறங்காப்புளி, ஊறாக்கிணறு, காயாமகிழ், தீராவழக்கு, திருக்கண்ணங்குடி' என்று ஒரு பழமொழி வழங்கும்.

27. திருக் கண்ணமங்கை

344. கருத்தினால் வாக்கினால் நான்மறையும் காணா
ஒருத்தனை நீ நெஞ்சே! உணரில் — பெருத்த முகில்
வண்ணம அம் கை கண்கால் வனசம் திரு அரங்கம்
கண்ணமங்கை யூரென்று காண். 27

மனமே! மனத்தினாலும், வாக்கினாலும் நான்கு வேதங்களும் கண்டு அறியமுடியாத ஒப்பற்ற திருமாலை நீ அறிய விரும்பினால், அவனுக்குத் திருமேனி நிறம் பெரிய

காளமேகமாம். அழகிய திருக்கைகளும், திருக்கண்களும் திருவடிகளும் செந்தாமரை மலர்களாம். இப்பிடம் திருவரங்கமும் திருக்கண்ணமங்கையுமாம். அறிவாயாக.

28. திருக் கவித்தலம்

345. காணியும் இல்லமும் கைப்பொருளும் ஈன்றோரும்
பேணிய வாழ்க்கையும் பேருறவும் — சேணில்
புவித்தலத்தில் இன்பமும் பொங்குஅரவம் ஏறிக்
கவித்தலத்தில் கண் துயில்வோன் கால். 28

அடியேனுக்குப் பூமியும் வீடும் கையிலுள்ள திரவியமும் பெற்ற தாய்தந்தையரும் விரும்பிய நல்வாழ்வும் நெருங்கிய சுற்றத்தாரும் மறுமையிலும் இம்மையிலும் உண்டாகக் கூடிய இன்பங்களும் திருக்கவித்தலத்தில் சீறுந்தன்மையுள்ள ஆதிசேஷன் மீது ஏறித் திருக்கண் வளர்ந்தருளும் திருமாலினுடைய திருவடிகளேயாம்.

அனுமானுக்குப் பிரத்யட்சமான தலமாதலால் இத் திருப்பதிக்குத் 'திருக்கவித்தலம்' என்று பெயர் வந்தது என்பர்.

29. திருவெள்ளியங்குடி

346. கால்அளவும் போதாக் கடல்ஞாலத் தோர்கற்ற
நூல் அளவே யன்றி நுவல்வார்ஆர் — கோலப்
பருவெள்ளி யங்குடியான் பாதகஷண் மாய்த்த
திருவெள்ளி யங்குடியான் சீர்? 29

அழகிய பெரிய வெள்ளிமலையை வாழும் இடமாக உடையவனான சிவபிரானது பிரமகத்தியாகிய பாவத்தினால் நேர்ந்த இரந்துண்ணுதலை ஒழித்தருளிய திருவெள்ளியங்குடி என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானது சிறப்பை (திருவிக்கிரம அவதாரத்தில் எம்பெருமானது) ஒருதிரு வடியினால் அளவிடுவதற்கும்

போதாத கடல் சூழ்ந்த நில உலகத்தில் உள்ளவர்களில் தாம் படித்தறிந்த நூல்களின் அளவாகக் கூறுவதேயல்லாமல் முழுதும் உணர்ந்து சொல்ல வல்லவர் யாவருளர்?

(வெள்ளி)—சுக்கிராச்சாரியார். ஆண்டவன் அவருக்குத் தரிசனம் தந்த இடமாதலின் 'வெள்ளியங்குடி' என்பது காரணப்பெயர். பார்க்கவன் — சுக்கிரன். 'பார்க்கவபுரி' என்று இத்தலத்திற்கு வடமொழியில் ஒருபெயர் வழங்குதலும் காண்க.

30. திருமணி மாடக்கோயில்

347. சீரே தருங்கதியில் சேருகைக்கு நானுன்னை
நேரே வணங்கினேன் நெஞ்சேநீ — பாரில்
அணிமாடக் கோயில் அரங்கனார் நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கு. 30

மனமே! சிறப்பையே தருகின்ற முத்தி உலகத்தில் சென்று சேர்வதற்காக நான் உன்னை நன்றாகத் தொழுகின்றேன். நீ இந்நிலவுலகத்தில் அழகிய மாடமாளிகைகளையுடைய கோயிலென்று சொல்லப்படுகின்ற திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள ரங்கநாதனது திருநாங்கூரைச் சேர்ந்த திருமணிமாடக் கோயில் என்னும் திவ்விய தலத்தைத் தொழுவாயாக.

இதுமுதல் கூறப்படுகின்ற திருப்பதிகள் பதினொன்றையும் 'திருநாங்கூர்த் திருப்பதிகள்' என வழங்குவர். நாங்கூர் வடமொழியில் 'நாகபுரி' எனப்படும்.

அழகிய உப்பரிகை வீடுகள் நிறைந்த எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற தலமாதலால் இத்தலத்திற்கு, 'திருமணி மாடக்கோயில்' என்று பெயர் வந்தது போலும்.

31. திருவைகுந்த விண்ணகரம்

348. வணங்கேன் பிறதெய்வம் மால்அடியார் அல்லாக்
குணங்கேடர் தங்களுடன் கூடேன் — [இணங்கிநின்று
வைகுந்த விண்ணகரம் வாழ்த்துவேன்; ஈதன்றோ
வைகுந்த விண்ணகர வாழ்வு. 31

நான் திருமால் அல்லாத வேறு தெய்வங்களை வணங்க மாட்டேன். திருமாலினது அடியவர் அல்லாத நற்குணம் இல்லாதவரோடு சேரமாட்டேன் (திருமால் அடியாருடன்) கூடிநின்று திருவைகுந்த விண்ணகரம் என்னும் திவ்விய தலத்தைத் துதிப்பேன். இவ்வாறு அடியவருடன் கூடித்துதித்தல் அல்லவோ ஸ்ரீ வைகுண்டம் என்னும் திவ்விய நகரத்தில் உண்டாகின்ற நல்வாழ்க்கை யாவது.

ஸ்ரீ வைகுண்டத்தில் எம்பெருமான் எழுந்தருளியிருப்பது போலவே இத்தலத்தில் வீற்றிருந்த திருக்கோலமாகச் சேவை சாதித்தலால் இத்திருப்பதிக்கு 'திரு வைகுந்த விண்ணகரம்' என்று பெயர் என்பர்.

32. திரு அரிமேய விண்ணகரம்

349. வாழும் அடியார் மடநெஞ்சே! நம்மளவோ?
தாழும் சடையோன் சதுமுகத்தோன் — பாழிக்
கரிமேய வ்விண்ணகரக் காவலோன் கண்டாய்
அரிமேய விண்ணகரத் தார்க்கு. 32

அறியாமையை யுடைய மனமே! திரு அரிமேய விண்ணகர மென்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானுக்கு அடியவராக வாழ்கின்றவர்கள், நாம் மாத்திரந்தானோ? அன்று. தொங்குகின்ற சடையை யுடைய சிவபெருமானும் நான்கு முகங்களையுடைய

பிரமதேவனும், பலம் பொருந்திய (ஐராவதம் என்னும்) யானை மேல் ஏறிச் செல்லுகின்ற சுவர்க்க லோகத்துக்கு அரசனாகிய இந்திரனும் அடியவராவர்.

திரு அரி மேயவிண்ணகரம் — திருநாங்கூரில் உள்ள குடமாடு கூத்தன் சந்நிதி

33. திருத்தேவனார் தொகை

350. ஆர்க்கும் வலம்புரியால் அண்டமும் எண்திசையும்
கார்க்கடலும் வெற்பும் கலங்கினவால் — சீர்க்கும்
திருத்தேவ னார்தொகைமால் செவ்வாய்வைத்து
தருத்தேவ னார் தொகையும் சாய்ந்து. 33 [ஊதத்

சிறப்புப்பெற்ற திருத்தேவனார் தொகை யென்னும் திவ்வியதலத்தில் எழுந்தருளியிருக்கின்ற திருமால் சங்கைத் தமது சிவந்தவாயில் வைத்து ஊதுகையில் பேராரவாரஞ் செய்கின்ற அந்த வலம்புரிச்சங்கத்தினால் கற்பகத்தருவின் நிழலில் வசிக்கின்ற தேவர்களின் கூட்டமும் மூர்ச்சித்துவிழ அண்டங்களும் எட்டுத்திக்குகளும் கரிய சமுத்திரமும் அஷ்டகுல பருவதங்களும் கலங்கிப் போயின.

(பாரிசாதத் தருவை விண்ணுலகினின்று கொண்டு வருகையில் நடந்த நிகழ்ச்சி இது) இது திருச்சங்கின் மகிமை கூறியது.

தேவர்கள் சபை கூடின இடமாதலால் இத்திருப்பதிக்கு, 'திருத்தேவனார் தொகை' என்று பெயராயிற்று.

34. திருவண் புருடோத்தமம்

351. சாய்ந்த திருவரங்கம் தண்வேங் கடங்குடந்தை
ஏய்ந்த திருமா லிருஞ்சோலை — பூந்துவரை
வண்புரு டோத்தமமாம் வானவர்க்கும்
ஒண்புரு டோத்தமன்தன் ஊர் 34 [வானவானம்

தேவர்கட்கு எல்லாம் தேவனாகிய அழகிய புருஷோத்தமன் என்னும் திருமாலினது திருப்பதிகளாவன: எம்பெருமான் பள்ளி கொண்டிருக்கின்ற திருவரங்கமும் குளிர்ந்த திருவேங்கடமலையும், திருக்குடந்தையும், பொருந்திய திருமாலிருஞ் சோலை மலையும் அழகிய துவாரகையும் திருவண் புருடோத்தமமும் ஆகும்.

புருடோத்தமம் — யாவரினும் சிறந்த பெருமான் இருப்பிடம்.

35. திருச்செம்பொன் செய்கோயில்

தலைவி தனது ஆற்றாமை மிகுதியால் மடலூரத் துணிதல்

352. ஊர்வேன் மடலை ஒழிவேன் மடநாணம்
சேர்வேன் கரிய திருமாலைப் — பாரறிய
அம்பொன்செய் கோயில் அரங்கன் அணிநாங்கூர்ச்
செம்பொன்செய் கோயிலினில் சென்று. 35

உலகத்தவரெல்லாம் உணரும்படி (வெளிப்படையாக) மடப்பத்தையும் நாணத்தையும் துறந்தவளாகி, மடல் ஊர்ந்து செல்வேன். அதனாலேனும் அழகிய பொன்னினால் செய்யப் பட்ட கோயிலையுடைய திருவரங்கநாதனது அழகிய திருநாங்கூரைச் சேர்ந்த திருச்செம்பொன் செய்கோயிலென்னும் தலத்தில் சென்று அங்கு எழுந்தருளியுள்ள கருநிறமுடைய எம்பெருமானை அடைவேன்.

தோத்திரப் பிரபந்தங்களில் அகப்பொருள் கிளவித் தொகைகளை இடையிடையே கூறுதல் கவிசமயமாதலை இலக்கியங்கள் கொண்டு உணர்க.

36. திருத் தெற்றியம்பலம்

353. சென்றது காலம் திரைநரைமூப் பானஇனி
என்றுகொல் சாவறியோம் என்னெஞ்சே — [கன்றால்
உருத்தெற்றி அம்பலத்தை ஓர்விளவின் வீழ்த்தான்
திருத்தெற்றி அம்பலத்தைச் சேர். 36

எனது மனமே! நமக்கோ வாழ்நாள் பெரும்பாலும் கழிந்திட்டது. தோற் சுருக்கமும் மயிர்வெளுத்தலும் கிழத்தனமும் தோன்றியுள்ளன. இனிமேல் மரணம் என்றைக்கோ? அறிந்திலோம் ஆதலால் நமது ஆயுள் முடிவதற்குள் ஒருவிளா மரத்திலுள்ள (அசுராவேசம் கொண்ட) அழகிய பழத்தைக் கண்டு கோபித்து (அசுரா வேசங்கொண்ட) இளங்கன்றைக் கொண்டு வீசி எறிந்து வீழச் செய்தவனான திருமாலினது திருத் தெற்றியம்பலம் என்னும் திவ்விய தலத்தை இடைவிடாது தியானிப் பாயாக.

இத்தலம் சீர்காழிக்கு 8 கி. மீ. தொலைவில் உள்ளது.

தெற்றி - திண்ணை; மேட்டிடம்.

37. திருமணிக் கூடம்

354. சேராது முன்செய்த தீவினைபின் செய்வதுவும்
வாரா தினிநீ மடநெஞ்சே — நேராக்
குருமணிக்கூ டத்தானைக் கொம்புபறித் தானைத்
திருமணிக்கூ டத்தானைச் செப்பு 37

அறியாமையையுடைய எனது மனமே! எதிர்த்துச் சிறந்த இரத்தினங்கள் இழைத்துச் செய்யப்பெற்ற கூடத்திலிருந்த (குவலயா பீடம் என்னும்) பட்டத்து யானையினது தந்தங்களை வேரோடு பிடுங்கி அழித்த வனும், திருமணிக் கூடம் என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளியிருப்பவனுமாகிய திருமாலை நீ இடைவிடாது

துதிசெய்ய உதவுவாய். அவ்வாறு செய்வாய் ஆயின், நீ முற்பிறப்பிற் செய்து சேர்த்து வைத்துள்ள பாவமும் சேராது. இனி செய்கின்ற பாவமும் இனிமேல் உன்னை அணுகாது.

இத்தலம் சீர்காழிக்கு 8 கி. மீ. தூரத்தில் உள்ளது.

38. திருக்காவளம் பாடி

355. செப்பேன் மனிதருக்குஎன் செஞ்சொல் தமிழ்மாலை
கைப்பேன் பிறதெய்வம் காண்பாரை — எப்போதும்
காவளம்பா டித்திருமால் கால்தா மரைதொழுது
நாவளம்பா டித்திரிவேன் நான் 38

நான் எக்காலத்திலும் இன்சொற்கள் நிறைந்த எனது தமிழ்ப் பாமாலையை மனிதரைப்பற்றி ஒருபோதும் பாட மாட்டேன், பிற தெய்வங்களைத் தொழுகின்றவர்களை வெறுப்பேன். திருக்காவளம்பாடி யென்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியுள்ள திருமாலினது திருவடித் தாமரைகளை வணங்கி, எனது நாவினால் வளமாகக் கவிபாடிக் கொண்டு, யாதொரு கவலையும் இன்றி இனிது காலம் கழிப்பேன்.

இதனால் இந்நூலாசிரியர் மறந்தும் புறந்தொழாத தமது மாண்பைப் புலப்படுத்துகின்றார்.

இத்தலம் வைத்தீசுவரன் கோவிலுக்கு 8 கி. மீ. தூரத்தில் உள்ளது.

39. திருவெள்ளக்குளம்

356. நான்அடிமை செய்யவிடாய் நான்ஆனேன் [எம்பெருமான்
தான்அடிமை கொள்ளவிடாய் தான்ஆனான் — [ஆனதற்பின்
வெள்ளக் குளத்தே விடாய்இருவ ரும்தணிந்தோம்
உள்ளக் குளத்தேனை ஒத்து. 39

நான் (எம்பெருமானுக்குத்) திருத்தொண்டு செய்ய வேண்டுமென்று நான் பேராவல் கொண்டவன் ஆனேன். எம்பெருமான் தானும் என்னை அடிமையாகக் கொள்ள வேண்டுமென்று தான் பேராவல் கொண்டவன் ஆனான். இங்ஙனம் இருவரும் விடாய் கொண்ட பின்பு, திரு வெள்ளக் குளம் என்னும் திருப்பதியில் யாங்கள் இருவரும் மனத்தில் சர்க்கரைப் பாகையும் தேனையும் போன்று ஒன்று சேர்ந்து எங்கள் வேட்கை தணியப் பெற்றோம்.

விடாய் ஆனேன் - பேராவல் கொண்டேன்.

இத்தலம் சீர்காழிக்கு 7 கி. மீ. தூரத்தில் உள்ளது.

40. திருப்பார்த்தன் பள்ளி

357. ஒத்தமரர் ஏத்தும் ஒளிவிசும்பும் பாற்கடலும்
இத்தலத்தில் காண்பரிய என்னெஞ்சே — [சித்துணர்ந்த
தீர்த்தன்பள் ளிக்கிருந்து செப்பவெளி நின்றானைப்
பார்த்தன்பள் ளிக்குள் பணி. 40

என்நெஞ்சே! ஒன்றுகூடி நித்திய சூரிகளும் தேவர்களும் துதிக்கின்ற பேரொளி வடிவமான பரமபதமும் திருப்பாற்கடலும் இந்தப் பூமியில் காணுதற்கு அரியனவாம். ஆதலால் அவைகளை விட்டு ஜீவாத்மாவின் உண்மை நிலையை யுணர்ந்த பரிசுத்தனான பிரகலாத ஆழ்வான் பள்ளிக்கூடத்திலிருந்து (சிறுவனாயிருந்தும்) (தனது தந்தை வினவியதற்கு 'எங்குமுளன்' என்று) மறுமொழி கூற (அது கேட்டு வெகுண்டு இரணியன் தூணைத் தட்ட அதனின்று நரசிங்கமாகி) வெளித்தோன்றிய திருமாலை, திருப்பார்த்தன் பள்ளி என்னும் திவ்விய தலத்தில் சென்று வணங்குவாயாக.

இத்தலம் சீர்காழிக்கு 12 கி. மீ. தூரத்தில் உள்ளது.

இறைவன் அருச்சுனனுக்குச் சேவை சாதித்த இடம். (பார்த்தன் - பிருதையின் மகன் - தத்திதாந்த நாமம்) குந்தி - பிருதை.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகள்—18

1. திருமாலிருஞ் சோலைமலை

358. பணிந்தேன் திருமாலை பாமாலை தாளில்
அணிந்தேன் அருள்தஞ்ச மாகத் — துணிந்தேன்
திருமா லிருஞ்சோலை சேர்ந்தேன் எனக்கு
வருமால் இருஞ்சோதி வான். 41

நான் அழகன் எழுந்தருளியுள்ள திருமாலிருஞ்சோலை என்னும் திவ்விய தலத்தை அடைந்தேன். அப்பெருமானை வணங்கினேன். தமிழ்ப்பாடலினாகிய மாலையை அவனது திருவடிகளில் சூட்டினேன். அவனது திருவருளையே பற்றுக் கோடாக நிச்சயித்தேன். எனக்கு பெரிய ஒளிவடிவமான பரமபதம் கிடைக்கும்.

இத்தலம் மதுரைக்கு 20 கி. மீ. தூரத்தில் உள்ளது. 'அழகர் கோயில்' என வழங்கப்படுகிறது.

2. திருக்கோட்டியூர்

359. வான்பார்க்கும் பைங்கூழ்போல் வாளா உனதருளே
யான்பார்க்க நீபார்த்து இரங்கினாய் —
[தேன்பார்ப்பின்
ஓசைத் திருக்கோட்டி யூரானே! இன்னமும்என்
ஆசைத் திருக்குஓட்டி யாள். 42

இளவண்டுகளுடைய ரீங்கார ஓசை மிகுந்த திருக்கோட்டியூர் என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளியிருக்கும் திருமாலே! வானத்து எழுகின்ற மழையையே எதிர்நோக்குகின்ற பசிய பயிரைப் போலச் சும்மா (எப்போதும்) உன்னுடைய திருவருளையே நான் ஆதரத்

தோடு எதிர்நோக்க, நீ அதனைக் கடாட்சித்து என்மீது அருள்புரிந்தாய். இனிமேலும் எனது இவ்வுலகப் பற்றாகிய மாறுபாட்டைப் போக்கி என்னை ஆட்கொள்வாயாக.

இத்தலம் திருமயம் என்னும் இடத்திலிருந்து 35 கி.மீ தூரததில் உள்ளது.

3. திருமெய்யம்

பிரிவாற்றாத தலைவி இரங்கல்

360. ஆளாய் உனக்கன்பாய் ஆசையாய் நாணிலியாய்
வாளா மனைவிஎயன்று வாழ்வேனைக் — கேளாய்
திருமெய்ய மாயா! சிலைகால் வளைத்து
வரும்எய்ய மாயா மதன். 43

திருமெய்யம் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள ஆச்சரியமான குண சேஷ்டிதங்களை யுடையவனே! உன்னிடத்தில் அடிமைப்பட்டு, அன்புடையவளாய், ஆசை கொண்டு வெட்கமற்றவளாய் வீணாக (பெயர் மாத்திரத்தால்) மனைவி என்று வாழ்கின்ற என்னை நீ கேளாமல் புறக்கணித்து விட்டாய் அழிந்தொழியாத மன்மதன் தனது கருப்புவில்லை நாணேற்றி நுனிப்புறங்களில் வளைத்துப் பிடித்துக் கொண்டு என்மீது மலர் அம்புகளை எய்து வருத்துமாறு வருவானே! என் செய்வேன்.

சத்திய தேவதைகள் திருமாலை நோக்கித் தவஞ் செய்ததலமாதல் பற்றி, அத்திருமலை 'சத்திய கிரி' என்றும் அங்குத் தோன்றிய திருமால் 'சத்தியகிரி நாதர்' என்றும் பெயர் பெறுவர் இத்தலம் 'திருமயம்' என்றும் வழங்கப் படும்.

4. திருப்புல்லாணி

361. மதயானைக் கோள்விடுத்து மா முதலை கொன்ற
கதையால் இதயம் கரையும் — முதலாய
புல்லாணி மாலே புறத்தோர் புகழ்இருப்பு
வல்ஆணி என்செவிக்கு மாறு. 44

முழுமுதற் கடவுளாகிய திருப்புல்லாணி என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளியுள்ள திருமாலே! மதம் பெருகும் தன்மையுள்ள கஜேந்திர ஆழ்வானது (முதலை பற்றியதனாலாகிய) துன்பத்தைப் போக்கி, பெரிய அம் முதலையைக் கொன்ற வரலாற்றினால் எனது மனம் உருகும். வேறு தெய்வங்களுடைய புகழ் எனது காதுகளுக்கு விரோதமான வலிய இருப்பாணி போன்றதாம்.

இது வடமொழியில் 'தர்ப்ப சயனம்' எனப்படும். புல்லணை என்பது தமிழ். இத்தலம் இராமநாத புரத்திற்கு 10 கி. மீ. தூரத்தில் உள்ளது.

5. திருத்தண் காலூர்

தலைவனைப பிரிந்த தலைவி வாடைக்கு வருந்தி இரங்கல்

362. மாறுபட வாடையெனும் வன்கால் வந்து [என்முலைமேல்
ஊறுபட ஊர்ந்த உளைவுஎல்லாம் — மாறத்
திருத்தண்கால் ஊரான் திருத்தண் துழாயின்
மருத்தண்கால் ஊராதோ வாய்ந்து? 45

வாடை என்கிற வலிய காற்றானது எனக்கு விரோதமாக வந்து எனது தனங்களின்மீது தாபம் உண்டாகும்படி தவழ்ந்து சென்றதனால் உண்டாகிய வருத்தம் முழுவதும் அடியோடு நீங்கும்படி திருத்தண்கா என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளியிருக்கும் தலைவன் அணிந்த அழகிய

குளிர்ந்த திருத்துழாயினது வாசனை பொருந்திய குளிர்ந்த காற்றானது இனிதாகப் பொருந்தி என்மீது தவழ்ந்து வீசாதோ? தாபம் - துன்பம்.

இத்தலம் சிவகாசிக்கு 3 கி. மீ. தூரத்தில் உள்ளது.

6. திருமோகூர்

அன்னத்தைத் தூது விடுத்த தலைவி அதனைக் குறித்து ஐயுறல்

363. வாயால் மலர்கோதி வாவிதொறும் மேயுமோ
மேயாமல் அப்பால் விரையுமோ—மாயன்
திருமோகூர் வாய்இன்று சேருமோ நாளை
வருமோகூர் வாய்அன்னம் வாழ்ந்து. 46

கூர்மையுள்ள வாயையுடைய (என்னால் தூது விடுக்கப்பட்ட) அன்னப் பறவையானது தன்வாய் அலகினால் தாமரைமலர்களின் இதழ்களைக் கோதிக்கொண்டு இடைவழியிலுள்ள தடாகங்கள் தோறும் மேய்ந்து கொண்டிருக்குமோ? அவ்வாறு தன் காரியத்தைச் செய்யாமல் வாழ்ச்சி பெற்று, அப்புறம் (என் காரியத்தைச் செய்வதாக) விரைந்து செல்லுமோ? ஆச்சரியமான குணங்களையுடைய (எனது தலைவனாகிய) திருமாலினது திருமோகூரினிடத்து இன்றைக்குச் சென்று சேருமோ? (எனது நிலைமைகளைத் தலைவன் பக்கற் சொல்லிவிட்டு) நாளைக்கே திரும்பி வருமோ? அன்னத்தை ஆசாரிய அமிசம் என்பர் பெரியோர்.

இத்தலம் மதுரைக்கு 12 கி.மீ தூரத்தில் உள்ளது.

7. திருக்கூடல் (தென் மதுரை)

364. வாழ்விப்பான் எண்ணமோ வல்வினையில் இன்ன
[மெனை
ஆழ்விப்பான் எண்ணமோ அஃதறியேன்—தாழ்
பாடல்அழ கார்புதுவைப் பட்டர்பிரான் [விலாப்
கூடலழ காநின் குறிப்பு. 47 [கொண்டாடும்

இழிவில்லாத பாசுரங்களின் அழகானது பொருந்திய ஸ்ரீ வில்லிபுத்தூரில் திரு அவதரித்த பெரியாழ்வார் புகழ்ந்து பாடிய திருக்கூடல் என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளிய அழகன் என்னும் திருநாமம் உடையவனே! உனது திருவுள்ளக் கருத்து அடியேனை நல்வாழ்வு பெறும்படி திருவுள்ளமோ? (அன்றி) இன்னமும் கொடிய இருவினைகளில் அழுந்தச் செய்யும்படி திருவுள்ளமோ? அதனை இன்னதென்று தெரிந்திலேன்.

பெரியாழ்வாருக்குச் சேவை சாதித்த அப்பெருமான் அஷ்டாங்க விமானத்தின் மீது எழுந்தருளியிருக்கின்ற 'வையந்தாய பெருமான்' என்பர்.

8. ஸ்ரீ வில்லிபுத்தூர்

365. குறித்தொருவர் கொண்டாடும் கொள்கைத்தோ
[கோதை
நிறத்தவூர் விண்டுசித்தர் நீடூர் — பிறப்பிலியூர்
தாழ்வில்லி புத்தூர்என்று ஐவர்க்குத்
வாழ்வில்லி புத்தூர் வளம்? 48 [தான்இரந்தான்

ஆண்டாளின் திரு அவதாரத்தால் மேம்பாடு பெற்ற ஊரும், பெரியாழ்வார் வாழ்ந்த பெரிய ஊரும், பிறப்பு இல்லாதவனும், "தாழ்வில்லாத துரியோதனனே! புதிய ஊர்களைக் கொடுப்பாயாக" என்று பஞ்ச பாண்டவர்க்காகத் தான் தூது சென்று இரந்தவனுமாகிய திருமால் எழுந்தருளியிருக்கின்ற ஊருமான ஸ்ரீவில்லிபுத்தூரினது

செழிப்பானது ஒருவரால் நினைத்துப் பாராட்டும் தன்மையுடையதோ?

இத்தலம் வில்லி என்னும் வேடனால் நிருமிக்கப்பட்டது ஊர் ஆதலால் இப்பெயர்த்தாயிற்று.

9. குருகூர்

366. வளந்தழைக்க உண்டால்என் வாச மணந்தால்என்
தெளிந்த கலை கற்றால்என் சீசீ — குளிர்ந்தபொழில்
தண் குருகூர் வாவிச் சடகோபன் ஊர் எங்கள்
வண் குருகூர் என்னாத வாய். 49

(மரச் செறிவால்) 'குளிர்ச்சி பொருந்திய சோலைகள் சூழ்ந்த குருகு என்னும் நீர்வாழ் பறவைகள் வாழப் பெற்றுக் குளிர்ந்த நீர் நிலைகளையுடைய நம்மாழ்வார் திரு அவதரித்த தலமானது. வளப்பம் பொருந்திய எங்கள் 'திருக்குருகூர்' என்று ஒரு தரமேனும் சொல்லாத வாயானது வளமாக உணவுகளைப் புசித்தால் என்ன பயன் உண்டாகும்? முகவாசப் பொருள்களையுண்டு மணம் வீசினால்தான் என்ன பயன்? மனம் தெளிவடைவதற்கு உரிய சாஸ்திரங்களைக் கற்றால் தான் என்ன பயன்?

சீ சீ —இகழ்ச்சிகுறிப்பு இடைச்சொல்.

இத்தலம் நம்மாழ்வார் திரு அவதரித்த தலமாதல் பற்றி, 'ஆழ்வார் திரு நகரி' என்று பெயர் பெறும்

10. தொலைவில்லி மங்கலம்

367. வாயும் மனைவியர்பூ மங்கையர்கள் எம்பிராற்கு
ஆயுதங்கள் ஆழிமுதல் ஐம்படைகள்—தூய
தொலைவில்லி மங்கலம்ஊர் தோள்புருவம் மேனி
மலைவில் இமம் கலந்த வான். 50

எமது சுவாமிக்குப் பொருந்திய தேவிமார் தாமரை மலரில் வாழ்கின்ற திருமகளும் பூமிதேவியும் ஆவர். படைக்கலங்கள் சக்கரம் முதலிய பஞ்சாயுதங்களாம். திவ்விய தலம் பரிசுத்தமாகிய தொலைவில்லி மங்கலம் என்பதாம். தோளும் புருவமும் திருமேனி நிறமும் முறையே பருவதமும் வில்லும் குளிர்ச்சி பொருந்திய ஆகாசமும் போலும்.

இது முறை நிரல் நிறைப் பொருள் கோள்.

இத்தலம் ஆழ்வார் திரு நகரிக்கு 3 கி.மீ. தூரத்தில் உள்ளது.

11. ஸ்ரீவர மங்கை (வான மாமலை)

368. வானோர் முதலா மரம்அளவா எப்பிறப்பும்
ஆனேற்கு அவதியிடல் ஆகாதோ—தேன்ஏயும்
பூவர மங்கை புவிமங்கை நாயகனே
சீவர மங்கைஅரை சே. 51

தேன் நிரம்பிய தாமரை மலரில் வசிக்கின்ற சிறந்த பெரிய பிராட்டியார்க்கும் பூமிப்பிராட்டியார்க்கும் தலைவனே! ஸ்ரீவரமங்கையென்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனே! தேவர் பிறவி முதலாகத் தாவரப் பிறவி ஈறாகவுள்ள எல்லாப் பிறவிகளையும் எடுத்து வருந்திய எனக்கு (இனியாயினும்) ஒரு முடிவை ஏற்படுத்துதல் கூடாதோ?

இத்தலம் 'வானமாமலை' என்றும் 'தோதாத்திரி' என்றும் வழங்கப்படும்.

ஸ்ரீ வைகுண்டத்திற்கு $2\frac{1}{2}$ கி.மீ. தூரத்தில் உள்ளது.

12. திருப்பேரை

369. அரைசாகி வையமுழுது ஆண்டாலும் இன்பக்
கரைசார மாட்டார்கள் கண்டீர் — முரைசுஆரும்
தென் திருப்பே ரைப்பதியான் சீர்கேட்டு நாவில்
தன் திருப்பே ரைப்பதியா தார். 52 [அவன்

பேரிகை வாத்தியம் முழங்கப் பெற்ற தெற்கின்கண் உள்ள திருப்பேரையென்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளிய திருமாலினது சிறப்பைக் காதினாற் கேட்டு, அப்பிரானது (மகர நெடுங்குழைக் காதன் என்னும்) திருநாமத்தைத் தமது நாக்கினிடத்தில் திருத்தமாக உச்சரியாதவர்கள் ஒரு நாயகமாய் நிலவுலகம் முழுவதையும் அரசாட்சி செய்தாலும் பேரின்பத்திற்கு எல்லை நிலமாகிய முத்தி உலகத்தை அடைய மாட்டார்கள்.

அரைசு, முரைசு என்பன அரசு, முரசு என்பவற்றின் இடைப்போலி,

இத்தலம் ஆழ்வார் திரு நகரிக்கு 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

13. ஸ்ரீ வைகுந்தம்

தலைவியின் இளமை கண்ட செவிலி இரங்கல்

370. தார்உடுத்துத் தூசு தலைக்குஅணியும் பேதைஇவள்
நேர்உடுத்த சிந்தை நிலைஅறியேன்—போர்உடுத்த
பாவை குந்தம் பண்டுஒசித்தான் பச்சைத் துழாய்
சீவைகுந்தம் பாடும் தெளிந்து 53 [நாடும்

(முடியிற் சூட வேண்டிய) பூமாலையை (அரையில்) உடுத்திக் கொண்டு, (அரையில் அணிய வேண்டிய)

ஆடையை முடியின் மீது தரித்துக் கொள்ளுகின்ற அறிவு நிரம்பாப் பருவத்தாளாகிய இந்தப் பெண், மனத் தெளிவு கொண்டு போர் புரிதற்குச் சித்தமாய் நின்ற பெண்ணாகிய தாடகை யானவள் (தன் மீது எறிந்த) சூலாயுதத்தை முற் காலத்தில் தனது வில்லம்பை ஏவி முறித்த திருமாலினது பசுமையாகிய திருத்துழாய் மாலையை விரும்புவாள். ஸ்ரீ வைகுண்டம் என்னும திவ்விய தலத்தைப்பற்றிப் பாடல் பாடுவாள். நேர்மையாகச் சென்று கொண்டிருந்த இவளது மனம் இவ்வாறு மாறிய நிலையைப் பற்றி யான் அறியகில்லேன்.

14. திருப்புளிங்குடி

தலைவி தோழியர்க்கு அறத்தொடு நிற்றல்

371. தெளியும் பசும்பொன் சிறைக்காற்று வீச
விளியும் துயர்போய் விடுமே — எளியேற்கு
அருளப் புளிங்குடிவாழ் அச்சுதனைக் கொண்டு
கருளப்புள் இங்குவந்தக் கால். 54

ஏழையேனாகிய எனக்குத் திருவருள் புரியுமாறு திருப் புளிங்குடி யென்னும் திவ்விய தலத்தில் வாழ்கின்ற அழிவில்லாத கடவுளைத் தனது தோளின் மீது எழுந் தருளப் பண்ணிக் கொண்டு கருடாழ்வான் நான் வசிக் கின்ற இவ்விடத்து வந்தால் அப்போது, தெளிந்த பசிய பொன் மயமாகிய (அப்பெரிய திருவடியின்) இறகுகளி னின்று காற்று என்மீது வீசுதலால் (இப்போது எனக்கு நேர்ந்துள்ள) மரணத்தை உண்டாக்குவது போலும் பெருந்துயரமும் போய்விடும்.

இத்தலம் 'புளியங்குடி' எனவும் வழங்கப்படும்; ஸ்ரீ வைகுண்டத்திற்கு 3 கி. மீ. தூரத்தில் உள்ளது.

15. திருவரகுண மங்கை

பாங்கி வெறிவிலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடு நிற்றல்

372. காலமும் நோயும் கருதாத அன்னைமீர்
வேலன் வெறியை விலக்குமின்கள் — மால்ஆம்
வரகுண மங்கையன்தாள் வண்துழாய் மேல்ஆ
தரகுணம் மங்கை தனக்கு 55

(இவளது) பருவத்தையும் (இவளுக்கு இப்போது நேர்ந்துள்ள) நோயின் தன்மையையும் ஆராய்ந்து (உண்மை) அறியமாட்டாத தாய்மார்களே! (உங்கள்) பெண்ணுக்குத் திருமாலாகிய திருவரகுண மங்கை என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானது திருவடிகளிற் சாத்திய வளப்பமுள்ள திருத்துழாயின் மீது ஆசையாகிய குணம் உள்ளது. ஆதலால் வேல்மகனது வெறியாட்டை நீக்கி விடுங்கள்.

இத்தலம் ஸ்ரீ வைகுண்டத்திற்கு 2½ கி. மீ. தூரத்தில் உள்ளது.

16. திருக்குளந்தை (பெருங்குளம்)

373. தனக்குஉடலம் வேறான தன்மை உணரான்
மனக்கவலை தீர்ந்துய்ய மாட்டான் — நினைக்கில்
திருக்குளந்தை யார்உரைத்த சீர்க்கீதை பாடும்
தருக்குஉளம்தை யாமல் இருந்தால். 56

ஆராய்ந்து பார்க்குமிடத்து, திருக்குளந்தை என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளிய திருமால் திருவாய் மலர்ந்து அருளிய சிறந்த பகவத் கீதையைப் படிப்பதனால் உண்டாகிய மனக்களிப்பு ஒருவனது மனத்தில் பதியாமல் இருந்தால், அவன் ஆன்மாவாகிய தன்னைக் காட்டிலும் உடம்பு வேறுபட்டுள்ள நிலையை அறிய

மாட்டான். மனக்கவலை மாறி நற்கதியை அடைய மாட்டான்.

இக்கவி கீதையின் பெருமை பேசிற்று. இது ஸ்ரீ வைகுண்டத்திற்கு 12 கி. மீ. தூரத்தில் உள்ளது. இங்கு பெரியகுளம் உள்ளது. ஆகவே குளந்தை என்பது மரூஉ மொழி போலும்.

17. திருக்குறுங்குடி

374. தாலத்து இழிகுலத்துச் சண்டாளம் ஆனாலும்
மேலத் தவர்அதனின் மேன்மைத்தே — கோலக்
குறுங்குடி வாழ்மாயன் குரைகழற்கு ஆளாகப்
பெறுங்குடி யாய்வாழ்வார் பிறப்பு. 57

அழகிய திருக்குறுங்குடி என்னும் திவ்விய தலத்தில் நித்திய வாசம் செய்கின்ற திருமாலினது ஒலிக்கின்ற வீரக் கழலை யணிந்த திருவடிகட்கு அடிமையாகப் பெறுகின்ற சந்ததியிற் பொருந்துபவராய் வாழ்கின்றவர்களுடைய ஜன்மமானது இநநிலவுலகில் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த சண்டாள ஜன்மமே யானாலும் உயர்குடிப் பிறப்பை யுடைய அந்த முனிவரது பிறவியைக் காட்டிலும் உயர்வை உடையதாம்.

தாலம் - தலம் என்பதன் நீட்டல்.

இத்தலம் திருநெல்வேலிப் புகைவண்டிச் சந்திப்புக்கு 45 கி. மீ. தொலைவில் உள்ளது.

18. திருக்கோளூர்

375. பிறப்புஅற்று மூப்புப் பிணியற்று நாளும்
இறப்புஅற்று வாழ இருப்பீர் — புறப்பற்றுத்
தள்ளுங்கோள் ஊர்அரவில் தாமோ தரன்பள்ளி
கொள்ளும்கோ ளூர்மருவுங் கோள். 58

பிறப்பு ஒழிந்து, கிழத்தனமும் வியாதியும் நீங்கி மரணம் தவிர்ந்து எந்நாளும் (முத்தியில் நிலைபெற்று) வாழும்படி விருப்பம் கொண்டிருப்பவர்களே! (நீங்கள்) மமகாரத்தை ஒழியுங்கள். மார்பினால் ஊர்ந்து செல்லும் தன்மையதான சர்ப்ப சாதியிற் சேர்ந்த திருவனந்தாழ்வான் மீது திருமால் சயனத் திருக்கோலமாகக் கண் வளர்ந்தருள்கின்ற திருக்கோளூர் என்னும் திவ்விய தலத்தைச் சென்று சேருங்கள்.

இது மதுரகவியாழ்வார் திரு அவதரித்த தலம். இத்தலம் ஆழ்வார் திருநகரிக்கு $1\frac{1}{2}$ கி. மீ. தூரத்தில் உள்ளது.

மலைநாட்டுத் திருப்பதிகள்—13

1. திருவனந்தபுரம்

376. கோளார் பொறிஐந்தும் குன்றிஉட லம்பழுத்து
மாளாமுன் நெஞ்சே! வணங்குதியால் — கேளார்
சினந்தபுரம் சுட்டான் திசைமுகத்தான் போற்றும்
அனந்தபுரம் சேர்ந்தான் அடி. 59

எனது மனமே! (விஷயங்களில் உன்னை) இழுத்துச் செல்லும் தன்மை பொருந்திய ஐம்பொறிகளும் (தத்தமக்குரிய) வலிமை ஒடுங்கி உடம்பானது (முதுமையினால்) தளர்ச்சியடைந்து இறப்பதற்கு முன்னே, பகைவர்களாகிய அசுரர்கள் கோபித்துப் பொருதற்கு இடமாயிருந்த திரிபுரங்களை (நெற்றிக் கண்ணினால்) எரித்து அழித்தவனான சிவபெருமானும் நான்கு திசையையும் நோக்கிய நான்கு முகங்களையுடையவனான பிரமதேவனும் துதித்து வணங்கப் பெற்ற திருவனந்தபுரம் என்னும் திருப்பதியில் (சயனத்திருக்கோலமாக) எழுந்தருளியுள்ள பத்மநாபப் பெருமானுடைய திருவடிகளை வணங்குவாயாக

2. திருவண் பரிசாரம்

பிரிவாற்றாத தலைவியின் நிலை கண்ட செவிலி இரங்கல்

377. அடியும் குளிர்ந்தாள் அறிவும் குலைந்தாள்
முடிகின்றாள் மூச்சுஅடங்கு முன்னே — கடிதுஓடிப்
பெண்பரிசுஆர் அங்குப் பிறப்பித்து மீளுவார்
வண்பரிசா ரம்கிடந்த மாற்கு? 60

தலைமகள் கால்களும் குளிரப்பெற்று, அறிவும் அழியப் பெற்று மரணமடையும் தறுவாயில் இருக்கின்றாள். இவளது சுவாசம் ஒடுங்குவதற்கு முன்னே (உயிரோடு இருக்கையில்) திருவண் பரிசாரம் என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளியுள்ள திருவாழ்மார்பன் என்னும் திருமாலின் இடத்தில் விரைந்து சென்று, இப் பெண்ணின் தன்மையை விளங்கும்படி சொல்லித் தெரிவித்து, திரும்பவல்லவர் யாவர்?

இத்திருத்தலம் திருநெல்வேலிக்கு 67 கி. மீ. தூரத்தில் உள்ளது.

3. திருக்காட்கரை

378. மாற்கமும் தாம்தாம் வழிபடும் தெய்வமும்
ஏற்க உரைப்பார்சொல் எண்ணாதே —
[தோல்குரம்பை
நாள்கரையா முன்னமே நல்நெஞ்சே நாரணன்ஆம்
காட்கரையாற்கு ஆள்ஆகாய் காண். 61

எனது நல்ல மனமே! (உலகத்து மானுடரில்) அவரவர்கள் (கடவுளை யடைவதற்குக்) கைக்கொள்ளுகிற வழிகளும் அவரவர்கள் வணங்குகின்ற தெய்வங்களும் ஆகிய இவற்றிற்குப் பொருந்துமாறு வலியுறுத்திப் பேசுகின்ற அந்நிய மதஸ்தரது வார்த்தைகளை மதியாமல், உயிர்

வாழ்வதற்கென்று தோலினால் வேய்ந்த குடிசை போன்ற உடம்பின் வாழ்நாள் கழிதற்கு முன்னமே திருக்காட்கரை யென்னும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள திருமாலுக்கு அடிமைப் படுவாயாக.

இத்தலம் இடப்பள்ளிக்கு 4 கி.மீ. தூரத்தில் உள்ளது.

4. திருமூழிக்களம்

379. காண்கின்ற ஐம்பூதங் கட்கும் இருசுடர்க்கும்
சேண் கலந்த இந்திரற்கும் தேவர்க்கும் — [மாண்கரிய
பாழிக் களத்தாற்கும் பங்கயத்து நான்முகற்கும்
மூழிக் களத்தான் முதல். 62

கண்ணுக்குப் புலப்படுகின்ற பஞ்ச பூதங்களுக்கும் சூரிய சந்திரர் என்னும் ஒளியுள்ள பொருளாகிய இருவர்க்கும் வானுலகத்தில் வாழ்கின்ற தேவேந்திரனுக்கும் மற்றைத் தேவர்கட்கும் மாட்சிமையுடைய கறுத்த வலிமைகொண்ட கழுத்தையுடைய உருத்திர மூர்த்திக்கும் தாமரை மலரில் வாழ்கிஸ்ற நான்கு முகங்களையுடைய பிரமதேவனுக்குப் திருமூழிக் களமென்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளிய திருமாலே மூலகாரணமாவான்.

5. திருப்புலியூர்

தலைவி தோழியர்க்கு அறத்தொடுநிற்றல்

380. முதல்வண்ணம் ஆமே முலைவண்ணம் முன்னே
விதி வண்ணம் நீங்கி விடுமே — சதுரத்
திருப்புலியூர் நின்றான் திருத்தண் துழாயின்
மருப்புலியூர் தென்றல் வரின். 63

அழகிய திருப்புலியூர் என்னும் திவ்விய தலத்தில் நின்ற திருக்கோலமாக எழுந்தருளியிருக்கின்ற மாயப் பிரானது குளிர்ந்த திருத்துழாய் மாலையினது நறுமணத்

தைப் பொருந்தி, தவழ்ந்து செல்லும் தன்மையுடைய தென்றற் காற்றானது வந்துவீசுமாயின் (அப்பொழுது எனக்கு) தனத்தின் நிறம் (பசலைநிறம்) மாறி முன்னைய நிறமே வந்து சேரும். முற்பிறப்பிற் செய்த தீவினையின் பயனாக நேர்ந்த பிரிவுத்துயர் முழுவதும் அடியோடு போய்விடும்.

அறத்தொடு நிற்றல் — களவுப் புணர்ச்சியை அறிவுறுத்துதல். இத்தலம் குட்டநாட்டில் கொட்டாரக் கராவுக்கு 55 கி. மீ. தொலைவில் உள்ளது. கேரளமா நிலத்தைச்சேர்ந்தது.

6. திருச்செங்குன்றூர்

381. வரவேண்டும் கண்டாய் மதிகலங்கி விக்குள்
பொரவே உயிர்மாயும் போழ்து — பரமேட்டி
செங்குன்றூர் மாலே! சிறைப்பறவை மேற்கனகப்
பைங்குன்றூர் கார்போல் பறந்து. 64

பரம பதத்தில் வீற்றிருப்பவனே! திருச்செங்குன்றூர் என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளியிருக்கிற திரு மாலே! எனது அறிவு ஒடுங்கி, விக்கலானது தொந்தரவு செய்ய எனதுஉயிர் நீங்கும் அந்திம காலத்தில் இறகுகளை யுடைய கருடாழ்வான் மீது பசும்பொன்மயமான மலையின் மீது ஏறிவருகின்ற காளமேகம் போல விரைந்து எழுந்தருளிச் சேவை சாதிக்கவேண்டும்.

இத்தலம் கொட்டாரக்கராவுக்கு 50 கி. மீ. தூரத்தில் உள்ளது.

7. திருநாவாய்

382. பறந்து திரிதரினும் பாவியேன் உள்ளம்
மறந்தும் பிறிதறிய மாட்டா — சிறந்த
திருநாவாய் வாழ்கின்ற தேவனையல் லால்என்
ஒரு நாவாய் வாழ்த்தாது உகந்து. 65

தீவினையுடைய எனது மனமானது ஒரு நிலையில் நில்லாது விரைந்து அலையும் தன்மையதாயினும் மறந்தாயினும் திருமாலையன்றி வேறொரு தெய்வத்தை அறிய மாட்டாது. எனது ஒருபடிப்பட்ட நாக்கையுடைய வாயானது மேம் பட்ட திருநாவாய் என்னும் திவ்விய தலத்தில் நித்திய வாசம் செய்கின்ற திருமாலையல்லால் பிறிதொரு தெய்வத்தை விரும்பித் துதியாது.

இவர்களை 'மறந்தும் புறந்தொழாமாந்தர்' என்பர். இத்தலம் எடகுளத்துக்கு ஒரு கி.மீ. தொலைவில் உள்ளது.

8. திருவல்ல வாழ்

383. உகந்தார்க்குளஞ் ஞான்றும் உளனாய் உகவாது
இகந்தார்க்கு எஞ் ஞான்னும் இலனாய்த் — [திகழ்ந்திட்டு
அருவல்ல வாழுருவம் அல்லஎன நின்றான்
திருவல்ல வாழ்உறையும் தே. 66

திருவல்லவாழ் என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளியுள்ள திருமால் தன்னை விரும்பின மெய்யடியார் கட்கு எக்காலத்தும் உள்ளவனாகியும், தன்னை விரும்பாமல் இல்லையென்று சொல்லும் நாஸ்திகர்க்கு எக்காலத்தும் இல்லாதவனாகியும் விளங்கி 'அருவப்பொருளும் ஆகான், கண்களுக்குப் புலப்பட்டுத்தோன்றும் உருவப்பொருளும் ஆகான்' என்று கூறுமாறு இருக்கின்றான்.

இத்தலம் 'திருவல்லா' எனவும் வழங்கும்;

கொட்டாரக்கராவுக்கு 60 கி. மீ. தொலைவில் உள்ளது.

9. திருவண் வண்டூர்

384. தேவும் உலகும் உயிரும் திரிந்துநிற்கும்
யாவும் படைத்த இறைகண்டீர் — பூவில்
திருவண்வண் டூர்உறையும் தேவாதி தேவன்
மருவண்வண் டூர்துளவ மால். 67

இப்பூமியில் உள்ள திருவண் வண்டூர் என்னும் திவ்விய தலத்தில் நித்திய வாசம் செய்கின்ற தேவர்கட்கு எல்லாம் தேவனான, வாசனையுடையதும் வளப்ப முடையதும் வண்டுகள் மொய்க்கப் பெற்றதுமாகிய திருத்துழாய் மாலையை அணிந்த திருமால் (பிரமன் முதலிய) தேவர்களையும் உலகங்களையும் (அவ்வுலகங் களிலுள்ள) பிராணிகளையும் வேறாக நிற்கின்ற அசே தனப் பொருள்கள் எல்லாவற்றையும் ஆதியில் சிருஷ்டித்த கடவுளாவன்.

இத்தலம் 'திருவ முண்டூர்' எனமருவி வழங்குகின்றது. கொட்டாரக்கராவுக்கு 58 கி. மீ. தொலைவில் உள்ளது.

10. திருவாட்டாறு

385. மாலைமுடி நீத்து மலர்ப்பொன் னடிநோவப்
பாலைவனம் நீபுகுந்தாய் பண்டென்று—சாலவும் [நான்
கேட்டால் துயிலேன்காண் கேசவனே பாம்பணை
வாட்டாற்றுக் கண்துயில்கொள் வாய். 68 [மேல்

கேசவன் என்னும் திருநாமத்தை யுடையவனே! (அரசர்க்குரிய அடையாளப் பூ) மாலையையும் கிரீடத் தையும் பூணாமல் துறந்து, தாமரைமலர் போன்ற அழகிய உனது திருவடிகள் வருந்துபடி தண்டகாரணியம் முதலிய கொடுங்காட்டில் முற்காலத்தில் நீ நடந்து சென்றாய் என்று கேட்டால் நான் அடியோடு கண் துயில் கொள் ளேன். (அவ்வாறு இருக்க நீயோ) திருவாட்டாறு என்னும்

திவ்விய தலத்தில் ஆதிசேஷன் மீது கவலையின்றிக் கண் உறங்குகின்றாய்.

கேசவன் என்பது அத்தலத்து எம்பெருமான் திருநாமம் என்பர். இத்தலம் நதியாற் பெயர் பெற்றது.

11. திருவிற்றுவக் கோடு

386. வாய்த்த கருமம் இனி மற்றில்லை நெஞ்சமே!
தோய்த்த தயிர்வெண்ணெய் தொட்டுண்ட—[கூத்தன்
திருவிற் றுவக்கோடு சேர்ந்தால் பிறவிக்
கருவின் துவக்குஓடும் காண் 69

எனது மனமே! தோய்த்தபடியேயுள்ள தயிரையும் வெண்ணெயையும் களவு கொண்டு புசித்த திருவிளையாட்டையுடைய திருமாலினது திருவிற்றுவக் கோடு என்னும் திவ்விய தலத்தைச் சென்று சேர்த்த மாத்திரத்தில் பிறப்புக் காரணமான கர்ப்பத்தின் சம்பந்தம் நீங்கும். (ஆதலால்) நாம் செய்யக் கிடந்த தொழில் இனிமேல் வேறொன்று இல்லை.

'திரு வித்துவக் கோடு' என்றும் வழங்குவர்.

இத்தலம் பட்டாம்பிக்கு 1½ கி.மீ. தூரத்தில் உள்ளது.

12. திருக்கடித்தானம்

387. காண விரும்பும் என்கண் கையும் தொழவிரும்பும்
பூண விரும்பும் என்றன் புன்தலைதான்—வாணன்
திருக்குஅடித்தான் நத்தான் திகிரியான் தண்டான்
திருக்கடித்தா னத்தானைச் சென்று. 70

பாணாசுரனது மாறுபாட்டை ஒழித்தவனும் சங்கத்தை உடையவனும் சக்கரத்தை உடையவனும் கதாயுதத்தை உடையவனும் ஆகிய திருக்கடித்தானம் என்னும்

திவ்விய தேசத்தில் எழுந்தருளிய திருமாலை போய்க் கிட்டி எனது கண்கள் தரிசிப்பதற்கு விரும்பும். எனது இழிவான தலையும் (அப்பிரானது திருவடித் தாமரைகளைச்) சூடிக் கொள்வதற்கு விரும்பும்.

இத்தலம் கொட்டாரக்கராவுக்கு 63 கி. மீ. தூரத்தில் உள்ளது.

13. திருவாறன்விளை

388. சென்று புனல்மூழ்கிச் செய்தவங்கள் செய்தாலும்
வென்று புலன் ஐந்தடக்கி விட்டாலும்—
[இன்தமிழால்
மாறன் விளைத்த மறைஓதார்க்கு இல்லையே
ஆறன் விளைத்திருமால் அன்பு. 71

தீர்த்த யாத்திரையாகச் சென்று, புண்ணிய தீர்த்தங்களில் நீராடி செய்தற்குரிய சிறந்த தவங்களைச் செய்தாலும் நம்மாழ்வார் செவிக்கினிய தமிழ்ப் பாடலாகச் செய்தருளிய வேதத்தை ஓதி உணராதவர்க்குத் திருவாறன் விளை என்னும் திருப்பதியில் எழுந்தருளிய எம்பெருமானது திருவருள் உண்டாகாது.

இத்தலம் 'ஆறம்முளை' என மருவி வழங்கப்படுவது; கொட்டாரக்கராவுக்கு 62 கி. மீ. தொலைவில் உள்ளது.

நடு நாட்டுத் திருப்பதிகள்—2

1. திருவயிந்திரபுரம்

389. அன்புஅணிந்த சிந்தையராய் ஆய்ந்த மலர்தூவி
முன்பணிந்து நீர்எமக்கு மூர்த்தியரே—என்பர்
எம்ஐயிந் திரபுரத்தார்க்கு இன்தொண்டர் ஆனார்
தமைஇந் திரபுரத்தார் தாம். 72

எமது திரு வயிந்திரபுரம் என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளிய தெய்வ நாயகப் பெருமானுக்கு நல்லடியார்

ஆனவர்களைத் தேவேந்திரனது அமராவதி நகரில் வாழ்கின்ற தேவர்கள் பக்தி கொண்ட மனமுடையவராய் அவர்கள் மீது ஆராய்ந்து எடுத்த சிறந்த கற்பக மரத்தின் மலர்களைச் சொரிந்து அவர்கட்கு முன்னே வந்து நமஸ்கரித்து 'நீவிர் எங்கட்குக் கடவுள் ஆவீர்கள்' என்று கொண்டாடுவார்கள்.

ஆதிசேஷனால் பூசிக்கப்பட்ட நகரம் என்பது பொருள்.

2. திருகோவலூர்

390. தாமரையான் ஆதியாய்த் தாவரங்கள் ஈறான
சேம உயிரும் செகம்அனைத்தும் — பூமடந்தைக்கு
ஆம்கோஅ லாயுதன் பின்னா அவதரித்த
பூங்கோவல் ஆயன் பொருள். 73

தாமரை மலரில் வாழ்கின்ற பிரமன் முதலாக, தாவரப் பொருள்கள் இறுதியாகவுள்ள உலகத்து வாழ்கின்ற ஜீவராசிகளும் (அவற்றிற் கெல்லாம் இடமான) எல்லா உலகங்களுந் தாமரை மலரில் வசிக்கின்ற இலட்சுமிக்கு உகந்த தலைவனும் கலப்பையை ஆயுதமாக உடைய பலராமனுக்குத் தம்பியாகத் திருஅவதரித்தவனுமாகிய அழகிய திருக்கோவலூர் என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளிய ஆயனாரது படைப்புப் பொருள்களாம்.

இத்தலம் வடமொழியில் 'கோபாலபுரம்' என வழங்கப்படுவது. மூவர் முதலாழ்வார் முகுந்தனைத் தரிசித்த இடம். திருக்கோயிலூர்க்கு 3கி.மீ. தொலைவில் உள்ளது.

தொண்டை நாட்டுத் திருப்பதிகள்—22

1. திருக்கச்சி (அத்தி கிரி)

391. பொருளாசை மண்ணாசை பூங்குழலார் போகத்து
இருளாசை சிந்தித்து இராதே—அருளாளன்
கச்சித் திருப்பதியாம் அத்தியூர்க் கண்ணன்தாள்
இச்சித்து இருப்பதுயாம் என்று. 74

செல்வத்தினிடத்து ஆசையையும் பூமியினிடத்தில் ஆசையையும் மலரை யணிந்த கூந்தலையுடைய மகளிரது இன்பத்தில் வைக்கின்ற மனம் மேன்மேலும் இருளுவதற்குக் காரணமான பெண்ணாசையையும் மனத்தில் கொள்ளாமல் பேரருளாளனாகிய காஞ்சிபுரத்திலுள்ள திவ்விய தலமாகிய திரு அத்தியூரில் எழுந்தருளியிருக்கும் திருமாலினது திருவடிகளை யாம் உபாயமும் உபேயமுமாக விரும்பிச் சிந்தையற்றிருப்பது எந்நாளோ?

இந்திரனுக்கு வாகனமான ஐராவதம் என்னும் யானை மலை வடிவிலிருந்து இறைவனைத் தாங்குதல் பற்றி 'அத்தியூர்' என்பது காரணப்பெயர்.

2. திரு அட்ட புயங்கம்

392. என்றும் துயர்உழக்கும் ஏழைகாள் நீங்கள்இளங்
கன்றுபோல் துள்ளிக் களித்துஇரீர்—அன்றுநடம்
இட்ட புயங்கத்து இருசரண மேசரணென்று
அட்டபுயங் கத்தாற்கு ஆளாய். 75

எப்போதும் வருந்துகின்ற அறிவில்லாத மக்களே! நீங்கள், 'முற்காலத்தில் காளியன் என்னும் சர்ப்பராசன் மீது கூத்தாடிய எம்பெருமானது இரண்டு திருவடிகளே தஞ்சமாகும்' என்று உறுதி கொண்டு, திரு அட்டபுயங்கம் என்னும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள திருமாலுக்கு அடிமைப்பட்டு, இளங்கன்று போலப் பயமறியாமல் துள்ளிக் குதித்து அகமகிழ்ந்து இருங்கள்.

இத்தலத்து எம்பெருமானுக்கு எட்டுத் திருக்கைகள் உள்ளன. இத்தலம் 'அட்டபுயகரம்' எனவும் வழங்கும். சின்ன காஞ்சிபுரம் தேரடியருகில் உள்ளது.

3. திருத்தண்கா

பிரிந்து ஆற்றாளாய தலைவி தலைமகன் பக்கல் தனக்கு உள்ள அன்புறுதியைத் தோழிக்குக் கூறல்

393. ஆட்பட்டேன் ஐம்பொறியால் ஆசைப்பட்
[டேன் அறிவும்
கோட்பட்டு நாணும் குறைபட்டேன் — சேட்பட்ட
வண்காவை வண்துவரை வைத்த விளக்கொளிக்குத்
தண்காவைச் சேர்ந்தான் தனக்கு. 76

தேவலோகத்திலுள்ள வளப்பமான சோலை போலத் தழைத்த பாரிஜாத விருட்சத்தை, செழிப்பான தனது துவாரகாபுரியில் கொண்டு வந்து நாட்டிய திருத்தண்கா என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருப்பவனாகிய தீபப் பிரகாசன் என்னும் எம்பிரான் திறத்தில் அடிமைப் பட்டேன்; எனது பஞ்சேந்திரியங்களாலும் ஆசை கொண்டேன். எனது அறிவும் அப்பெருமானால் கவரப் பட்டு, நாணம் என்னும் குணமும் குறைந்து விடப் பெற்றேன்.

இத்தலத்து எம்பெருமான் திருநாமம் 'விளக்கொளி பெருமாள்.' சின்ன காஞ்சிபுரம் தேரடிக்கு அருகில் உள்ளது.

4. திருவேளுக்கை

394. தனக்குரிய னாய்அமைந்த தானவர்கோன்
[கெட்டான்
உனக்குரியன் ஆயமைந்தன் உய்ந்தான்
— நினைக்குங்கால்
வேளுக்கை ஆளரியே! வேறுதவி உண்டோஉன்
தாளுக்குஆ ளாகா தவர்க்கு. 77

திருவேளுக்கை என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளிய நரசிங்க மூர்த்தியே (உனக்கு ஆட்படாமல்) தனக்குத்தானே சுதந்திரன் என்று இருந்த (தானே தெய்வமென்று செருக்கியிருந்த) அசுர ராசனாகிய இரணியன் அழிந்து ஒழிந்தான். செருக்குக் கொள்ளாது உனக்கே அடிமையாகப் பொருந்திய அவனது குமாரனாகிய பிரகலாத ஆழ்வான் நல்வாழ்வு பெற்று ஈடேறினான். (ஆதலால்) ஆலோசிக்குமிடத்து உனது திருவடிக்கு அடிமைப்படாதவர்க்கு துணை வேறு உளதோ? இல்லை என்றபடி.

இத்தலத்து எம்பெருமான் திருநாமம் ஆள் அழகிய சிங்கர் இத் தலம் காஞ்சிபுரத்திற்கு 3 கி. மீ. தொலைவில் உள்ளது.

5. திருப்பாடகம்

395. தவம்புரிந்த சேதனரைச் சந்திரன்ஆ தித்தன்
சிவன்பிரமன் இந்திரனாச் செய்கை — உவந்து
திருப்பா டகமருவும் செங்கண்மால் தன்மார்பு
இருப்பாள் தகவுரையா லே. 78

திருவுள்ளத்தில் மகிழ்ந்து, திருப்பாடகம் என்னும் திவ்விய தலத்திற் நித்தியவாசம் செய்கின்ற சிவந்த கண்களையுடைய திருமால் தவஞ் செய்த ஆன்மாக்களை அவரவர்கள் விருப்பத்தின் படியே சந்திரனும், சூரியனும், உருத்திரனும், பிரமதேவனும், தேவேந்திரனும் ஆகச் செய்வது தனது வலத்திருமார்பில் வீற்றிருப்பவளான திருமகளினது புருஷாகார வார்த்தையாலேயாம்.

திருப்பாடகம்—பாண்டவ தூதர் சந்நிதி. பெரிய காஞ்சிபுரத்தில் உள்ளது.

புருஷாகாரம்— அருள்மொழி.

6. திருநீரகம்

396. ஆலத்து இலைசேர்ந்து அழிஉலகை உட்புகுந்த
காலத்தில் எவ்வகைநீ காட்டினாய் — ஞாலத்துள்
நீரகத்தாய் நின்னடியேன் நெஞ்சகத்தாய்
[நீள்மறையின்
வேரகத்தாய் வேதியற்கு மீண்டு? 79

இந்தப் பூமியில் திருநீரகமென்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளியிருப்பவனே! நினக்கு ஆட்பட்ட அடியேனது மனத்தில் எழுந்தருளியிருப்பவனே! நீண்ட வேதங்களால் பிரதிபாதிக்கப்படுகிற மூலப்பொருளாய் உள்ளவனே! வேதம் வல்லவனான மார்க்கண்டேயனுக்கு நீ அம்முனிவன் உனது திருவயிற்றினுள்ளே பிரவேசித்த காலத்தில் நீ ஆலிலையின் மீது பள்ளி கொண்டு பிரளய காலத்தில் அழிந்துபோன லோகங்களை எவ்வாறு மறுபடியும் காட்டியருளினாய்? இது என்ன வியப்போ!

இத்தலம் காஞ்சிபுரத்திலுள்ள உலகளந்த பெருமாள். கோயிலில் உள்ளது.

7. திருநிலாத் திங்கள் துண்டம்

397. மீண்டும் தெளியார்கள் மேதினியோர் நின் அடிப்பூப்
பாண்டரங்க மாடி படர்சடைமேல் — தீண்டிக்
கலாத்திங்கள் துண்டத்தின் மீதிருப்பக் கண்டும்
நிலாத்திங்கள் துண்டத்தானே. 80

திருநிலாத் திங்கள் துண்டமென்னும் திவ்விய தேசத்தில் இருப்பவனே! அருச்சுனன் கைலாச யாத்திரையில் உனது திருவடிகளிற் சாத்திய புஷ்பங்கள் பாண்டரங்கக் கூத்து ஆடிய சிவபெருமானது பரந்த சடையின்மீது பொருந்தி (அச்சடையின் மேல் சிவபிரான் அணிந்துள்ள) இளம் பிறைச்சந்திரனுக்கும் மேலே இருக்கக் கண்டும் மேதினியோர் மறுமடியும் (நீயே பரம்பொருள் என்ற

உண்மையை) அறியாது ஒழிகின்றனர். இது என்ன பேதைமை?

பாண்டரங்கம் - சிவபிரான் திரிபுரம் எரித்தபோது ஆடிய கூத்து. இத்தலம் பெரிய காஞ்சிபுரத்தில் ஏகாம்பர நாதர் திருக்கோவிலில் உள்ளது.

8. திருவூரகம்

398. நேசத்தால் அன்றுலகை நீர்வார்க்க வைத்தளந்த
வாசத்தாள் என்தலைமேல் வைத்திலையேல்—
[நாசத்தால்
பாரகத்துள் அன்றிநான் பாழ்நரகில்
[வீழ்ந்தென்கொல்
ஊரகத்துள் நின்றாய் உரை 81

திருவூரகமென்னும் திருப்பதியில் எழுந்தருளியிருப்பவனே! (நீ வாமனனாய்ச் சென்று இரந்தபோது தான் கொடுத்தற்கு அறிகுறியாக உனது கையில் மகாபலி) நீரை வார்த்தபோது முன்னாளில் திருவிக்கிரம அவதார காலத்தில் உயிர்களினிடத்துக் கருணையினால் மூவுலகங் களையும் அளவு கருவியாகக் கொண்டு அளந்த நறுமண முடைய தாமரை மலர் போன்ற திருவடிகளை எனது தலையின்மீது பொறித்து வைத்திடாயானால், நான் இப் பூமியில் வாழ்தலும் இல்லாமல் நாசமடைந்து பாழான நரகத்தில் வீழ்ந்தால்தான் என்ன? நீ கூறுவாய்.

இத்தலத்தில் திருமால் உரகரூபியாய்ச் சேவை சாதிப்பது பற்றி இத்திருப்பதிக்கு 'ஊரகம்' என்று திருநாமம் போலும். உரகம்- பாம்பு, இத்தலம் உலகளந்த பெருமாள் கோயில் என வழங்கப்படுகிறது. பெரிய காஞ்சிபுரத்தில் உள்ளது.

9. திருவெஃகா

399. உரைகலந்த நூல்எல்லாம் ஓதியுணர்ந் தாலும்
பிரைகலந்த பால்போல் பிறிதாம் — தரையில்
திருவெஃகா மாயனுக்கே சீர்உறாவாம் தங்கள்
உருவெஃகா உள்ளத்தி னோர்க்கு. 82

இப்பூமியில் திருவெஃகா என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளிய சொன்னவண்ணம் செய்தபெருமாளுக்கே சிறந்த சம்பந்தம் பெற்ற தமது உருவை விரும்பியறியாத மனத்தை உடையவர்க்கு உரையோடு கூடிய சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் ஓதி உணர்ந்தாலும் பிரைசேர்ந்த பாலைப் போல அவ்வறிவு திரியும் தன்மையதாய்விடும்.

எம்பெருமான் பெயர்; சொன்னவண்ணம் செய்த பெருமாள். தலத்தின்பெயர்; யதோத்காரி சந்நிதி. சின்ன காஞ்சிபுரத்தில் உள்ளது.

10. திருக்காரகம்

400. ஓராதார் கல்வி உடையேம் குணம்உடையேம்
ஆரா தனம்உடையேம் யாம்என்று — சீர்ஆயன்
பூங்கா ரகம்காணப் போதுவார் தாள்தலைமேல்
தாங்கார் அகங்காரத் தால். 83

விவேகம் இல்லாதவர்கள் யாம் நிரம்பக் கற்றிருக்கிறோம்; உயர்குடியிற் பிறந்துள்ளோம்; (நாடோறும் தவறாது) திரு ஆராதனம் செய்கின்றோம் என்று கருதி செருக்கினால் சிறப்புப் பொருந்திய ஆயர் குலத்தில் வந்து தோன்றிய திருமாலினது அழகிய திருக்காரகம் என்னும் திவ்யதலத்தைச் சேவிக்குமாறு யாத்திரை செய்கின்ற அடியார்களது திருவடிகளைத் தமது முடிக்கு அலங்காரமாகச் சூடமாட்டார்கள்.

இத்தலம் காஞ்சிபுரம் உலகளந்த பெருமான் கோயிலில் தென் பிராகாரத்தில் உள்ளது.

11. திருக்கார் வானம்

401. தாலேலோ என்று ஆய்ச்சி தாலாட்டித்
[தன்முலைப்பா
லாலேஎவ் வாறுபசி யாற்றினள்முன் — மாலே பூங்
கார்வானத் துள்ளாய் கடலோடும் வெற்போடும்
பார்வானம் உண்டாய் நீ பண்டு. 84

திருமாலே! அழகிய திருக்கார்வானம் என்னும் திவ்வியதலத்தில் எழுந்தருளி யிருப்பவனே! சமுத்திரத் தோடும் மலைகளோடும் பூமியையும் ஆகாயத்தையும் முற்காலத்தில் (பிரளய காலத்தில்) நீ அமுது செய்துஅருளி னாய். (அப்படிப்பட்ட உன்னை) கிருஷ்ணாவதாரத்தில் இடைச்சியாகிய யசோதைப் பிராட்டி தாலேலோ என்று தாலாட்டித் தனது முலைப்பாலால் எப்படிப் பசியைத் தணித்தாளோ?

இத்தலம் பெரிய காஞ்சிபுரத்தில் உலகளந்த பெருமாள் கோயிலில் உள்ளது.

12. திருக்கள்வனூர்

402. பண்டேஉன் தொண்டாம் பழஉயிரை
[என்னதென்று
கொண்டேனைக் கள்வனென்று கூறாதே —
[மண்டலத்தோர்
புள்வாய் பிளந்த புயலே உனைக்கக்சிக்
கள்வாஎன்று ஓதுவதுஎன் கண்டு? 85

(கொக்கென்னும்) பறவையினது (வடிவங்கொண்டு வந்த அசுரனது) வாயைப் பிளந்து கொன்ற நீர்கொண்ட மேகம் போன்றவனே! பூமியில் உள்ளவர்கள் அநாதிகால மாக உனக்கு அடிமைப் பட்டிருப்பதாகிய அநாதியாய் உள்ள ஆத்மாவை என்னுடையது என்று கருதியிருந்த என்னைத் திருடனென்று சொல்லவேண்டியதாக இருக்க

அவ்வாறு கூறாமல் உன்னை கச்சிக் கள்வனே என்று சொல்வது என்ன காரணங்கண்டோ?

இத்தலம் பெரிய காஞ்சிபுரம் காமாட்சியம்மன் திரிக்கோயிலில் உள்ளது.

13. திருப்பவள வண்ணம்

403. கண்டறிந்தும் கேட்டறிந்தும் தொட்டறிந்தும் [காதலால்
உண்டறிந்தும் மோந்தறிந்தும் உய்யேனே— [பண்டைத்
தவளவண்ணா கார்வண்ணா சாமவண்ணா கச்சிப்
பவள வண்ணா நின்பொற் பதம். 86

கிருதயுகத்தில் பால்போல் வெண்ணிற மானவனே! மேகத்தின் தன்மையை யுடையவனே! இயற்கையில் கருநிறமானவனே! காஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள பவள வண்ணனே! உனது அழகிய திருவடிகளைப் பக்தியோடு எனது கண்களால் தரிசித்து உணர்ந்தும் காதுகளாற் கேட்டுணர்ந்தும் மெய்யினாற் பரிசித்து உணர்ந்தும் வாயினாற் புசித்து உணர்ந்தும் மூக்கினால் மோந்து உணர்ந்தும் ஈடேறுகின்றேன் இல்லை.

'ஐம் பொறிகளாலும் ஆண்டவனாகிய உன்னை அனுபவித்திலேன்' என்று இரங்கியபடி. இத் தலம் பெரிய காஞ்சிபுரத்தில் உள்ளது.

14. பரமேச்சுர விண்ணகரம்

404. பதத்தமிழால் தன்னையே பாடுவித்துஎன் னைத்தன்
பதத்துஅடி யார்க்கேஆட் படுத்தான் — இதத்த
பரமேச் சுரவிண் ணகரான் பலஆன்
வரமேச் சுஉரல் அணைந்த மால். 87

பல பசுக்கள் ஒருங்கு திரண்டுவர அவற்றை மேய்த்து, (வெண்ணெய் களவாடியதற்காக யசோதைப் பிராட்டியால்) உரலில் பிணிப்புண்டிருந்த திருமாலாகிய தன்னடியார்க்கு நன்மை செய்கின்ற பரமேச்சுர விண்ணகர மென்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளியுள்ள பரமபத நாதன் பக்குவமாயுள்ள தமிழ்ப் பாடல்களினால் தன்னையே பாடும்படி செய்து என்னைத் தனது திருவடிகளில் தொண்டு பூண்டவர்கட்கே அடிமை யாக்கினான்.

இத்தலம் பெரிய காஞ்சிபுரத்தில் உள்ளது. 'வைகுண்டப் பெருமாள் சந்நிதி' என்று வழங்கப் படுவது.

15. திருப்புட் குழி

405. மால்வே ழமும்அரவும் மாயையும்வெற் பும்கடலும்
மேல்வீழ் படையும் விடமும் போய்ப் — பாலன்
நெருப்புஉள் குழிகுளிர நின்றதும் கேட்டு ஓதார்
திருப்புட் குழிஅமலன் சீர். 88

இரணியன் ஏவிய பெரிய மதயானைகளும், பெரும் பாம்புகளும், மாயையும், மலையும், சமுத்திரமும், மேலே விழுகின்ற வாள் முதலிய ஆயுதங்களும், விஷமும், வலி யொடுங்கிப் போய்ச் சிறுவனாகிய பிரகலாத ஆழ்வான் பள்ளத்தில் மூட்டிய நெருப்புச் சுடாமற்குளிரும் படி நின்றதைக் கேட்டிருந்தும் திருப்புட்குழி என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளிய திருமாலினது சிறப்புக்களைக் கூறமாட்டார்கள்.

இத்தலம் காஞ்சிபுரத்திற்கு மேற்கில் 12 கி. மீ. தூரத்தில் உள்ளது. 'சடாயு' என்னும் பறவை அரசைக் குழியில் இடுவது போலப் பெருமான் சேவைதருதலின் இத்தலம் இப்பெயர் பெற்றது. புள் - பறவை.

16. திருநின்றவூர்

தலைவி தோழியர்க்கு அறத்தொடு நிற்றல்

406. சீர் அறிந்து தோழிமீர் சென்று கொணர்ந்து
[எனக்குப்
போர முலைமுகட்டில் பூட்டுமினோ — நேரவுணர்
பொன்றஊர் புள்கழுத்தில் பொன்னைமா
நின்றவூர் நித்திலத்தை நீர். 89 [ணிக்கத்தை

எனதுபாங்கிமார்களே! நீங்கள் எதிர்த்துப் பொருத அசுரர்கள் அழியும்படி ஏறி நடத்துகின்ற கருடாழ்வானது கழுத்தில் பொன் போலப் பிரகாசிப்பவனும் இயற்கையில் கருமாணிக்கம் போன்ற கருநிறம் உள்ளவனுமாகிய திருநின்றவூர் என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளிய முத்துப் போன்றவனை அவனது சிறப்பை உணர்ந்து போய்க்கிட்டி, கொண்டுவந்து எனக்குத் திருப்தி உண்டாகும் படி எனது தனங்களின் உச்சியின் மீது அணியுங்கள். 'எம்பெருமான் என்னை மணக்கச் செய்வதே நீங்கள் எனக்குச் செய்யும் உபகாரமாம்'. என்பது கருத்து. இத் தலம் தின்னனூருக்கு ஒன்றரை கி. மீ. தொலைவில் உள்ளது.

17. திருவெவ்வுளூர் (திருவள்ளூர்)

407. நீர்மைகெட வைதாரும் நின்னோடு எதிர்த்தாரும்
சீர்மைபெற நின்னடிக் கீழ்ச் சேர்கையினால் —
[நேர்மைஇலா
வெவ்வுளத்த னேன்செய் மிகையைப் பொறுத்தருளி
எவ்வுள்அத்த னேநீ இரங்கு. 90

திரு வெவ்வுளூர் என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளிய தலைவனே! நீ தமது தன்மை அழிம்பபடி உன்னை நிந்தித்தவரும் உன்னோடு எதிர்த்துப் போர்

செய்தவரும் சிறப்பு அடையும்படி நின் அடிக்கீழ் சேர்தலினால் நல்லகுணமில்லாத கொடியசிந்தனையையுடைய யான் செய்த குற்றங்களையும் உனது திருவருளினாற் பொறுத்துக் கொண்டு என் திறத்தில் திருவுள்ளம் இரங்கி உனக்கு ஆட்கொள்வாயாக.

இது திருவள்ளூர் எனமருவி வழங்குகின்றது.

18. திரு நீர்மலை

408. இரங்கும் உயிர் அனைத்தும் இன்னருளால் [காப்பான்
அரங்கன் ஒருவனுமே ஆதல் — கரங்களால்
போர்மலைவான் வந்த புகழ்வாணன் காட்டினான்
நீர்மலைவாழ் எந்தைஎதிர் நின்று. 91

வருந்துகின்ற எல்லா உயிர்களையும் தனது இனிய கருணையினால் பாதுகாப்பவன் திருவரங்க நாதன் ஒருத்தனே யாவன் என்ற விஷயத்தைத் தனது ஆயிரங்கைகளினாலும் போர் செய்யும்படி வந்த பிரசித்தி பெற்ற பாணாசுரன் திருநீர்மலை யென்னும் திவ்விய தலத்தில் நித்தியவாசம் செய்கின்ற எம்பெருமானது எதிரிலே நின்று காட்டினான்.

நீரானது. அரண்போலச் சூழப் பெற்ற மலையாதல் பற்றி இத்தலம் திருநீர் மலை எனப்பெயர் பெறும்.

இத்தலம் சென்னையை அடுத்த பல்லாவரத்திறகு 5 கி. மீ. தொலைவில் மேற்கில் உள்ளது.

19. திருவிடவெந்தை

409. நின்று திரியும் பிறவியெல்லாம் நேர்வித்துக்
கொன்று திரியும் கொடுவினையார் — இன்று
வெருவிடவெந் தைக்கே விழுமியதொண் டானேன்
திருவிடவெந் தைக்கே செறிந்து. 92

நிலைத்திணைப் பொருளும், இயங்குதிணைப் பொருளும் ஆகிய எல்லாப் பிறவிகளையும் எனக்கு உண்டாக்கி என்னை மிகவும் வருத்திக்கொண்டு திரிகின்ற மிகக் கொடிய தீவினைகள் இப்போது அஞ்சியோடும் படியாக யான் திருவிட வெந்தையென்னும் திவ்விய தலத்தில் நெருங்கி, அத்தலத்தில் எழுந்தருளிய எமது சுவாமியாகிய நித்யகல்யாணப் பெருமானுக்கே சிறந்த அடியவன் ஆயினேன்.

இத்தலத்தில் எழுந்தருளிய வராகப் பெருமாள் தமது தேவியை இடப்பக்கத்தில் கொண்டிருத்தலால் இதற்குத் திருவிட வெந்தை என்று பெயர் வந்தது. இத்தலம் சென்னையை அடுத்த வண்டலூருக்கு 27 கி. மீ. தூரத்தில் உள்ளது.

20. திருக்கடல் மல்லை (மாமல்லபுரம்)

410. செறிந்த பணைபறித்துத் திண்களிற்றைச் சாடி
முறிந்துவிழப் பாகனையும் மோதி — எறிந்து
தருக்குஅடல்மல் லைக் குமைத்தான் தஞ்சமென்று
திருக்கடல்மல் லைக்குள் திரி. 93 [நெஞ்சே!

எனது மனமே! நெருங்கியுள்ள தந்தங்களைப் பிடுங்கி, (அவற்றைக் கொண்டே) வலிய (குவலயாபீடம் என்னும்) மதயானையை அடித்துக் கொன்று, அவ் யானையை நடத்துபவனான பாகனையும் இறந்து கீழ்விழும்படி அடித்துத் தள்ளிச் செருக்கையும் தேகவலிமையையும் உடைய மல்லர்களைப் பொருது கொன்றவனாகிய திருமாலே அடைக்கலமென்று அறுதியிட்டு திருக்கடல் மல்லை என்னும் திவ்விய தலத்திற் சென்று திரிவாயாக.

இது பூதத்தாழ்வார் திரு அவதாரம் செய்த தலம். இத்தலம் 'மாமல்லபுரம்' எனவும் 'மகாபலிபுரம், எனவும் வழங்கப்படும். செங்கற்பட்டுக்குக் கிழக்கே 30 கி. மீ. தொலைவில் உள்ள பழைய கடற்கரைப் பட்டினம்.

21. திருவல்லிக்கேணி

411. திரிந்துஉழலும் சிந்தைதனைச் செவ்வே நிறுத்திப்
புரிந்து புகல்மின் புகன்றால் — மருந்துஆம்
கருவல்லிக்கு ஏணியாம் மாக்கதிக்குக் கண்ணன்
திருவல்லிக் கேணியான் சீர். 94

(ஐம்புல ஆசைகளில்) சென்று அலைகிற உங்கள் மனத்தை (அவ்வாறு செல்ல ஒட்டாமல்) நேராக நிறுத்தி, திருவல்லிக்கேணி என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளிய கண்ணபிரானாகிய வேங்கட கிருஷ்ணனது கீர்த்தியை விரும்பிக் கூறுங்கள். அவ்வாறு புகழ்ந்து கூறினால், அது கருப்பமாகிய கொடிக்கு நசிக்கச் செய்யும் மருந்தாம். சிறந்த முத்தியுலகத்துக்கு ஏறிச் செல்லுதற்குரிய ஏணியாகும்.

இத்தலம் அல்லிப் பூக்களால் சிறந்து விளங்கும் தீர்த்தத்தை உடையதாதலால் இப்பெயர் பெற்றது இது சென்னைக் கடற்கரையைச் சார்ந்துள்ளது.

22. திருக்கடிகை

412. சீர் அருளால் நம்மைத் திருத்திநாம் முன் அறிபாக்
கூர் அறிவும் தந்து அடிமை கொண்டதற்கே — நேரே
ஒருகடிகை யும்மனமே! உள்ளுகிலாய் முத்தி
தரு கடிகை மாயவனைத் தான். 95

மனமே! சிறந்த திருவருளினால் நம்மை நல்வழியிற் செல்லுமாறு செய்து, நாம் இதற்கு முன்னே அறிந்திராத நுட்பமான அறிவையும் நமக்குக் கொடுத்து, நம்மை ஆட்கொண்டதற்காக, (தன்னை அடைந்தார்க்கு) நற்கதியையளிக்கும் திருக்கடிகை என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளிய எம்பெருமானை நேராக ஒரு நாழிகைப் பொழுதாவது நினைக்க மாட்டாய்.

இத்தலம் சோளிங்கபுரம் எனவும் வழங்கும், இது 'சோழ சிங்கபுரம்' என்பதன் மரூஉ. இதனைக் 'கடிகா சலம்' எனவும் வழங்குவர். கடிகா + அசலம் — சர்வகலா சாலைக்கு இடமான மலை. இதனால் பண்டு இங்கு ஒரு பல்கலைக்கழகம் இருந்திருக்க வேண்டுமென்று யூகிக்கலாம்.

வடநாட்டுத் திருப்பதிகள்—12

1. திருவேங்கடம் (திருப்பதி)

413. தானே சரணமுமாய்த் தானே பலமுமாய்த்
தானே குறைமுடிக்கும் தன்மையான் — தேன்ஏய்
திருவேங் கடம்தொழுதேம் தீயவிபூ திக்குள்
மருவேம் கடந்தனென் இவ் வாழ்வு. 96

தானே உபாயமாகியும், தானே உபேயமாகியும் தானே அடியார்களது மனக்குறையைப் போக்கி அவர் களது எண்ணத்தை ஈடேற்றும் தன்மை உடையவ னாகியும் இருக்கின்ற திருவேங்கடம் உடையானது தேன் நிறைந்த (பொழில்கள் சூழ்ந்த) திருவேங்கடம் என்னும் திவ்விய தலத்தை வணங்கினோம், அதன் பயனாக, கொடிய இந்த லீலா விபூதியில் இனிப் பொருந்த மாட்டோம்.

இத்தலம் 'திருமலை' எனவும், 'திருப்பதி' எனவும் வழங்கும்.

2. சிங்கவேள் குன்றம் (அகோபிலம்)

414. வாழ்குமரன் மேற்கனக வஞ்சகன்மேல் ஓர்முகத்தே
சூழ்கருணை யும்முனிவும் தோன்றியவால்
—கேழ்கிளரும்
அங்கவேள் குன்ற அழல்சரபத் தைப்பிளந்த
சிங்கவேள் குன்றத்தி னார்க்கு. 97

நிறம் விளங்குகின்ற அழகிய தேகத்தையுடைய மன்மதன் சாம்பலாய் அழியும்படி, (தனது நெற்றிச் கண்ணைத் திறந்து) கோபித்த (சிவபிரானது அவதாரமாகிய) சரப மென்னும் விலங்கைப் பிளந்து அழித்த சிங்கவேள் குன்ற மென்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளிய நரசிங்க பெருமானுக்கு, கடவுளின், அருளால் பெற்ற பிரகலாதன் என்னும் சிறுவனிடத்து ஒருபால் நிறைந்த பேரருளும் அவனது தந்தையான வஞ்சனைக் குணமுடைய இரணியன் மீது ஒருபால் கடுங்கோபமும் உண்டாயின.

இத்தலம் 'அகோபிலம், எனவும் வழங்கப்படும். நந்தியால்' என்னும் இடத்திற்கு 62 கி. மீ. தூரத்தில் உள்ளது.

3. திரு அயோத்தி

415. ஆர்க்கும்இது நன்றுதீது ஆனாலும் நெஞ்சேநீ
பார்க்கும் பலகலையும் பன்னாதே — சீர்க்கும்
திருஐயோத் திப்புயலைச் சீரியமெஞ் ஞானத்து
உருவைஓத் தின்பொருளை ஓர் 98

எனது மனமே! (யான் சொல்லுகின்ற) இவ்விஷயம் எல்லோர்க்கும நல்லதே, (ஒரு கால் அதனால்) தீமையே நேர்வதானாலும் நீ உலகத்தில் காணப்படுகின்ற பல வகைச் சாஸ்திரங்களையும் கண்டபடி கற்காமல், சிறந்த தத்துவஞான சொரூபியானவனும் வேதத்தின் அர்த்தமாகியிருப்பவனுமாகிய சிறப்புப் பொருந்திய திரு அயோத்தி என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளியுள்ள காளமேகம் போலக் கருநிறமுடைய இராமபிரானை தியானிப்பாயாக.

அயோத்தி — பகைவரால் போரிட்டுக் கைப்பற்ற இயலாதது, இது இராமபிரானது திரு அவதாரஸ்தலம், முத்தி தரும் நகரம் ஏழனுள் ஒன்று, அயோத்தி — ஐயோத்தி திரிபு நயங்கருதி கூறப்பட்டது.

4. திருநைமிசாரணியம்

416. ஓரறிவும் இல்லாத என்போல்வார்க்கு உய்யலாம்
பேரறிவுஉண் டேனும் பிறர்க்குஅரிது — பார்அறிய
நைம்மிசா ரண்ணியத்து நாதர்அடி யாரோடும்
இம்மிசார்வு உண்டாயி னால். 99

உலகத்தவர் அறியும்படி திரு நைமிசாரணியித்தில் எழுந்தருளிய சர்வசுவாமியினது பக்தர்களோடும் கொஞ்சமாவது சம்பந்தம் ஏற்படுமே யானால், சிறிதேனும் அறிவில்லாத என்னைப் போன்றவர்கட்கும் ஈடேறுதல் கூடும், மற்றை யோர்க்கு விசேஷஞானம் உளதாயினும் ஈடேறுதல் முடியாத காரியம் மாகும்.

நைமிசம் — நேமி விழுந்த இடம். இத்தலம் வட நாட்டில் 'நிம்சார்' என்னும் இடத்திற்கு அருகில் உள்ளது முனிவர் சிலர் தம் தவத்திற்கு உரிய இடத்தைக் குறிப்பிடுமாறு பிரமனை வேண்ட, அவன் தருப்பையால் செய்த நேமியை (சக்கரத்தை) உருட்ட அது சென்று நின்றஇடம் 'நைமிசாரண்யம்' என வழங்கப்பட்டது என்பர்.

5. திருச்சாளக்கிராமம்

417. உண்டாம் முறைமை உணர்ந்துஅடிமைப்
[பேர்பூண்டேன்
பண்டாம் குடிகுலத்தால் பன்மதத்தால்
— கொண்டாட்டால்
ஆள்அக் கிராமத்தால் அல்லற்பேர் பூணாமல்
சாளக் கிராமத்தார் தாட்கு. 100

தொன்று தொட்டு வருகிற குடியினாலும் குலத்தினாலும் பல வகையாகவுள்ள மதத்தினாலும் ஏற்றத்தினாலும் உரிமைகொண்டு வசிக்கிற தம் தமது கிராமத்தினாலும் துன்பத்திற்கு இடமாகிய பெயரை வைத்துக் கொள்ளாமல் சாளக் கிராமம் என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளியுள்ள திருமாலினது திருவடிகளோடு

பொருந்திய சம்பந்தத்தை ஆராய்ந்து தெரிந்து கொண்டு அப்பெருமானுக்கு அடியவன் என்ற பேரை வைத்துக் கொண்டேன்.

இத்தலம் நேபாள நாட்டைச் சேர்ந்தது.

6. திருவதரியாச்சிரமம்

418. தாட்குஅடிமை என்று தமைஉணராரர்க்கு [எட்டெழுத்தும்
கேட்கவெளி யிட்டருளும் கேசவனை — வேட்கையொடு
போவதுஅரிது ஆனாலும் போய்த்தொழுவோம் [நெஞ்சமே
மாவதரி யாச்சிர மத்து. 101

எனது மனமே! தனது திருவடிகட்கு அடிமைப் பட்டவர் என்று தங்களது சொருபத்தை அறியாத இவ்வுலகத்தார்க்கு திரு அஷ்டாட்சர மகா மந்திரத்தைக் காதிற்படும்படி கருணையோடு வெளியிட்ட திருமாலை யாத்திரை செய்வது வருத்தமுடையதாய் இருந்தாலும் சிறந்த பதரிகாச்சிரமம் என்னும் திவ்விய தலத்தில் பக்தி யுடன் போய் வணங்குவோம்.

இத்தலம் நாராயணன் பத்ரி விருட்சத்தின் அடியி லிருந்து நரன் என்னும் தன் சீடனுக்குத் திருமந்திரத்தை உபதேசித்த காரணத்தால் இப்பெயருடையதாயிற்று. (பத்ரி—வதரி—இலந்தை மரம்) இது இமயமலையில் உள்ளது. அதுபற்றியே 'போவது அரிதானாலும்' என்றார்.

7. திருக்கங்கைக் கரைக்கண்டம்

தேவப்பிரயாகை

419. மத்தால் கடல்கடைந்து வானோர்க்கு [அமுதுஅளித்த
அத்தா எனக்குஉன் அடிப்போதில் — புத்தமுதைக்
கங்கைக் கரைசேரும் கண்டத்தாய் புண்டரிக
மங்கைக்கு அரைசே வழங்கு. 102

(மந்தர மலையாகிய) மத்தினால் திருப்பாற்கடலைக் கடைந்து, தேவர்களுக்கு அமிருதத்தைக் கொடுத்தருளிய தலைவனே! செந்தாமரை மலரில் வாழ்கின்ற பெரிய பிராட்டியார்க்குத் தலைவனே! கங்கை நதிக்கரையில் பொருந்திய கண்டமென்னும் கடிநகரில் எழுந்தருளியிருப்பவனே! எனக்கு உனது திருவடித் தாமரையில் தோன்றுகின்ற புதிய அமிருதத்தைக் கொடுத்தருள்வாயாக.

இத் தலம் இப்போது தேவப்பிரயாகை என்று வழங்குகின்றது என்பர். இத்தலத்து நாச்சியார் திருநாமம் புண்டரீக மங்கை என்பது.

'திருக்கண்டங்கடிநகர்' என்பது இத்தலத்திற்கு உரிய மற்றொரு பெயர். இது அரித்துவாரத்திற்கு 91 கி.மீ. தொலைவில் உள்ளது.

8. திருப்பிருதி

420. வழங்கும் உயிரனைத்தும் வாரிவாய்ப் பெய்து
விழுங்கும் கவந்தன் விறல்தோட்—கிழங்கைப்
பொருப்புஇருதிக் கும்கிடந்தாற் போல்துணித்து [வீழ்த்தான்
திருப்பிருதிக்கு என்நெஞ்சே செல். 103

எனது மனமே! சஞ்சரிக்கின்ற எல்லாப் பிராணிகளையும் தனது இரண்டு கைகளாலும் ஒருசேரத் திரட்டி எடுத்து, தனது வாய்க்குள் தள்ளி விழுங்கும் தன்மையுள்ள கபந்தன் என்னும் அசுரனது வலிமையுள்ள தோள்களின் மூலபாகத்தை மலை இரண்டு பக்கத்திலும் வீழ்த்து கிடந்தது போலக் கிடக்கும்படி இராமாவதாரத்தில் வெட்டித் தள்ளிய திருமாலினது திருப்பிருதி என்னும் திவ்விய தலத்திற்கு நீ சென்று சேர்வாயாக.

இத்தலம் அரித்துவாரத்திற்கு 230 கி. மீ. தொலைவில் உள்ளது.

9. திருவடமதுரை

421. செல்வம் உயிர்உடம்பு சேர உரித்தாக்கி
வல்வினையின் நீங்குமினோ மாந்தர்காள்—
[தொல்லை
வடமதுரை யான்கழலே வாய்த்த தஞ்சம் என்று
திடமது உரை செய்தான் திறத்து. 104

மனிதர்களே! (அனைவர்க்கும்) 'எனது திருவடிகள் தாம் பொருந்திய பாதுகாப்பாகும்' என்று உறுதியாக உபதேசித்தவனும், பழமையான (முதற்கடவுளான) வடமதுரையில் பிறந்தவனுமாகிய பெருமானிடத்தில் நுமது செல்வங்களையும் பிராணனையும் உடம்பையும் ஒரு சேர உரியனவாகச் சமர்ப்பித்து, வலிய இருவினைத் தொல்லைகளினின்று நீங்குங்கள்.

இது கிருஷ்ண பகவானது திருஅவதாரதலம். முத்தி தரும் நகரம் ஏழனுள் இதுவும் ஒன்று. கண்ணுக்கு மதுரமாய் இருந்ததாலும் மது என்ற அசுரனை அழித்த இடமாதலாலும் இதற்கு மதுரையெனப் பெயர் வந்தது என்பர்.

10. திருத் துவாரகை

422. திறம்திறமாத் தாம் துய்க்கும் தீம்சுவையை நாடி
அறம்திரும்பிப் பாதகர்ஓர் ஐவர்—நறுந்துளவ
மாதுவரை யோனே மனம்துணையாக் கொண்
[டென்னைக்
காதுவர்ஐ யோமெய் கலந்து. 105

நறுமணமுடைய திருத்துழாய் மாலையைத் தரித்த பெருமை பெற்ற துவாரகை யென்னும் திவ்விய தலத்தை வாழும் இடமாகக் கொண்டவனே! மிகக் கொடிய பாதகங்களைச் செய்வதற்குக் காரணமாய் நிற்கின்ற பஞ்சேந்திரியங்கள் விதம்விதமாகத் தாம் அனுபவிப்பதற்கு உரிய இன்சுவையுள்ள பொருள்களைத் தேடிக் கொண்டு தரும

மார்க்கத்தினின்று தவறி எனது மனத்தைத் தமக்கு உற்ற துணையாகக் கொண்டு எனது உடலிற் பொருந்தி என்னை இடைவிடாது வருத்துவார்கள். ஐயோ!

துவரை—துவாரகா என்ற வடசொல்லின் சிதைவு. இதுவும் முத்தி தரும் நகரம் ஏழனுள் ஒன்று.

11. திருவாய்ப்பாடி (கோகுலம்)

423. கலந்துஅமர ரோடும் கரைகண்டா ரோடும்
பொலிந்துதிரு நாட்டுஇருக்கப் போவீர் — மலிந்த [புகழ்
அண்டர் ஆய்ப் பாடி அமலர் அடி யார்அடியார்
தொண்டராய்ப் பாடித் தொழும். 106

உலகத்தவர்களே! நிறைந்த கீர்த்தியையுடைய இடையர்கள் வாழ்கின்ற திருவாய்ப்பாடி யென்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற குற்றமற்ற கண்ணபிரானது அடியார்க்கு அடிமைப்பட்டவராய் அவரது குணங்களைப் பாடி அவரை வணங்குங்கள். அவ்வாறு வணங்கினால் அமரரோடும் முக்தர்களோடும் ஒரு சேரக்கலந்து, சிறப்புப் பெற்றுப் பரமபதத்தில் அழிவின்றி இருக்கும்படி செல்வீர்கள்.

ஆய்ப்பாடி-இடையர்கள் வசிக்கின்ற சேரியெனப் பொருள் படும். 'கோகுலம்' என்பது வடமொழிப் பெயர்.
இது வடமதுரைக்கு 7 கி.மீ. தொலைவில் உள்ளது. இது பாகவதத் தொண்டின் சிறப்புக் கூறிற்று

12. திருப்பாற்கடல்

424. தொழும்பு ஆய நான்நல்ல சூது அறிந்து [கொண்டேன்
செழும்பாய் அலைமுத்தம் சிந்தி — முழங்கும்
திருப்பாற் கடலான்தாள் சேர்ந்தார் அடிசேர்ந்து
இருப்பாற்கு அடல்ஆம் இடர். 107

எம்பெருமானுக்கு அடியவனாகிய நான் நல்ல உளவை அறிந்து கொண்டேன். அதாவது செழித்த பாய்கின்ற அலைகளினால் முத்துக்களைக் கொழித்து ஒலிக்கின்ற திருப்பாற்கடல் என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளிய திருமாலினது திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றிக் கவலையற்று இருப்பவனுக்கு, பிறவித் துன்பங்களையெல்லாம் ஒழித்தல் எளிதிற் கூடும்.

இதுவும் பாகவதத் தொண்டின் சிறப்புக் கூறிற்று. இத்தலம் வடதுருவத்தில் உள்ளதென்பர் பெரியோர்.

திருநாட்டுத் திருப்பதி—1

1. திருவைகுந்தம் (பரமபதம்)

425. இடர்உடையேன் சொல்ல எளிதோ பிரமன்
அடரும்விடை யோற்கும் அரிதே — தொடரும்
கருவைகும் தம்பிறவிக் கட்டறுத்து மீளாத்
திருவைகுந் தம்பெறுவார் சீர். *108*

(இருவினைப்பயன் காரணமாகத்) தொடர்ந்து வருவதும் கர்ப்பத் தினிடத்திற் பிரவேசிப்பதற்குக் காரணமானதுமான தமது பிறப்புத் தொடர்பை (எம்பெருமானது திருவருளால் அடியோடு) ஒழித்து, திரும்பிவருதல் இல்லாததாகிய பரமபதத்தை அடையப் பெறுபவர்களது சிறப்பானது பிரமதேவனுக்கும், போர் செய்யும் தன்மையுள்ள காளையை வாகனமாகவுடைய சிவபெருமானுக்கும் சொல்ல முடியாதது என்றால், சம்சாரத்தில் மிகவும் உழலுகின்ற யான் புகழ்ந்து கூறுதற்கு எளியதாகுமோ?

இதுவே பரமபதம் எனவும் நித்தியவிபூதி எனவும் படும். இது விண்ணுலகில் உள்ளது என்பர்.

தற்சிறப்புப் பாயிரம்

426. மண்ணில் அரங்கமுதல் வைகுந்த நாடு அளவும்
எண்ணு திருப்பதிநூற்று எட்டினையும்— [நண்ணுவார்
கற்பார் துதிப்பார் கருதுவார் கேட்டிருப்பார்
பொற்பாதம் என்தலைமேல் பூ.

நிலவுலகத்திலுள்ள திருவரங்கம் பெரிய கோயில் முதலாகப் பரமபத நாடு வரையிலும் நன்கு மதிக்கப்படுகின்ற நூற்றெட்டுத் திருமால் திருப்பதிகளையும் சென்று சேர்பவர்களும், வாயினால் சொல்லுபவர்களும், தோத்திரம் செய்பவர்களும், மனத்தினால் நினைப்பவர்களும், பிறர் சொல்லக் கேட்டிருப்பவர்களுமாகிய பரம பாகவதர்களது அழகிய திருவடிகள் நான் முடிக்கு அணியாகச் சூடும் மலர்களாகும்.

427. பதின்மர் உரைத்த பதிஒரு நூற்றெட்டும்
துதிசெய்ய அந்தாதி சொன்னாள் — அதிக
குணவாள பட்டர்இரு கோகனகத் தாள்சேர்
மணவாள தாசன் வகுத்து. 110

மிக்க நற்குணங்கள் வாய்ந்தவரான பெரிய பட்டரது தாமரை மலர் போன்ற திருவடித் தாமரைகள் இரண்டையும் தஞ்சமென்று பற்றின அழகிய மணவாளதாசன் ஆழ்வார்கள் பதின்மரும் மங்களா சாசனம் செய்தருளிய திருமாலின் நூற்றெட்டுத் திருப்பதிகளையும் தோத்திரம் செய்யுமாறு பகுத்துக் கொண்டு இந்த அந்தாதிப் பிரபந்தத்தைப் பாடினான்.

நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி முற்றிற்று.

Koviloor Digital Library

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

எண் — செய்யுள் எண்

எமது நூல்கள்

ஸ்ரீ இராமாநுஜர்
அருட்சுடர் வள்ளலார்
தமிழ் வழிபாடு
கண்ணனின் காதல் ஓவியம்
பாஞ்சாலி சபதம்
கைவல்ய நவநீதம்
செல்வப் பெட்டகம்
தில்லைத் திருநடனம்
மதுரைமீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்
கல்லாடம்
நந்திக் கலம்பகம்
தமிழ் விடு தூது
முத்தொள்ளாயிரம்
நம்பியகப் பொருள்
நன்னூல்
தமிழ் இலக்கணம்
தங்கமும் தங்க நகைகளும்
தம்மபதம்
புத்தர் போதனைகள்
டாக்டர் இராதாகிருஷ்ணன்

முல்லை நிலையம்
43, புதுத் தெரு, மண்ணடி.
சென்னை-600 001.

Printed at Ezhil Art Printers,
Madras-5.